Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ குருப்யோ நம:

குரு வழிபாட்டுப் பெருமை

குருவின் தத்துவம், உருவம், மந்திரமகிமை, வழிபாடு, கருதும்முறை, ஆசார்யசிஷ்ய இலக்கணம், தீட்சையின் விளக்கம், சிறப்பு, பெறும்பயன், ஞானஉபதேசம், உண்மைவிளக்கம், குருதட்சினை, குருவருட்பயன்கள், ஸந்தான-சமயஆசார்யர்கள் எண்மரின் வரலாறுகள் உள்ளது.

தொகுப்பாசிரியர்

சிவஶ்ரீ. விஜய. சோமசேகர சிவாசார்யார் M.A.,

வெளியீட்டு நாள் : 10-07-2024 புதன்கிழமை & இடம் : திருவான்மியூர், சென்னை.

வெளியீடு

ஸ்ரீ பாம்பன்சுவாமி கோயில் அர்ச்சகர்கள்.

சிவஶ்ரீ C. கார்த்திகேய சிவம் & C. கல்யாணசுந்தர சிவம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



ஸ்ரீ ஸுப்ரமண்ய ஸுவாமி

முருகனே! செந்தில் முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! ஒருகை முகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

CENTRE FOR SAIVA STUDIES Puducherry

உ

ஸ்ரீகுருப்யோ நம:

குரு வழிபாட்டுப் பெருமை

குருவின் தத்துவம், உருவம், மந்திரமகிமை, குருவழிபாடு,
கருதும்முறை, ஆசார்யசிஷ்ய இலக்கணம், தீட்சையின் விளக்கம்,
சிறப்பு, பெறும்பயன், ஞானஉபதேசம், உண்மைவிளக்கம்,
குருதட்சினை, குருவருட்பயன்கள், ஸந்தானஆசார்யர்கள்,
சமயஆசார்யர்கள் எண்மரின் வரலாற்றுசுருக்கம் அடங்கியுள்ள நூல்.

தொகுப்பாசிரியர்

ஆகம ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி, சைவாகமக்ஞ சூடாமணி, சைவாகம வித்வான், வ்யாகரண விசாரதர, சிவாகம ஸார்வபௌம:, சிவஸம்வித் ஸபர்யா பாராவாரீணர், சிவாகம அருட்செல்வர், ஸம்ஸ்க்ருத சேவாரத்தினம், சிவாகம வாசஸ்பதி, வாஸ்து வித்தகர், சைவாகமஸ்ரீ: , ஆகம கல்பத்ரும:, ஆகம வித்தகர், சிவாகம வித்யாரத்னம், சாக்தயாக சாம்ராட், வைதிகசைவ ரக்ஷாமணி, சிவபாத பத்மபூஷணம், சிவாகமக் கலாநிதி, சைவாகம துரந்தர:, சைவாகம பரீக்ஷாதிகாரீ, யாக ஸர்வஸாதக திலகம், சாஸ்தா உபாஸகர், அகோரசிவம் என்கிற

சிவஸ்ரீ. விஜய. சோமசேகர சிவாசார்யார் M.A.,

குருமுதல்வர். சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை–1.

வெளியீட்டு நாள் : 10-07-2024 (புதன்கிழமை) ஸ்ரீகரோதி வ்ரு ஆனி மீ 26

இடம் : திருவான்மியூர், ஸ்ரீபாம்பன் சுவாமிகள் அதிஷ்டான கும்பாபிஷேகவிழா

வெளியிட்டோர்

ஸ்ரீ பாம்பன்சுவாமி கோயில் அர்ச்சகர்கள்.

சிவஸ்ரீ சந்திரசேகர கார்த்திகேய சிவம்.

சிவஸ்ரீ சந்திரசேகர கல்யாணசுந்தர சிவம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல் வெளியீட்டுக் குறிப்பு

நூலின்பெயர், தலைப்பு	: குரு வழிப்பாட்டுப் பெருமை
நூலின் துறை	: இந்துசமய சைவாகமத் துறை
நூலின் வகை	: தொகுத்திட்ட நூல்வகை
நூலின் பொருள்	: சமயகுருநாதர் வழிபாடு
நூலின் மொழி	: ஸம்ஸ்கிருதம் & தமிழ்
நூலின் எழுத்து	: தமிழ் & தேவநாகரம்
நூலின் எழுத்து அளவு	: 11 புள்ளிகள்
நூலாசிரியர் & பதிப்பாசிரியர் & நூல்வடிமைப்பாளர்	: சிவஸ்ரீ.வி.சோமசேகர சிவாசார்யர்
நூலின் பதிப்புரிமை	: நூலாசிரியருக்கே உரியது.
நூல் அளவு	: 8.5" x 5.5"
நூலின் பக்கங்கள்	: 176 பக்கங்கள்
புத்தகத் தாள்விவரம்	: 80GSM - Maplitho Paper
வெளியீட்டு நூல்வரிசை	: 46
அட்டைப்பட விளக்கம்	: மயில் வாஹனத்தில் குஹகுருநாதர்.
முதற்பதிப்பு	: க்ரோதி வருஷ ஆனி மாஸம் 26ம் நாள் 10-07-2024 புதன்கிழமை
வெளியீட்டுவிழா	: திருவான்மியூர், ஸ்ரீபாம்பன்சுவாமி கோயில் அதிஷ்டான கும்பாபிஷேக விழா
அச்சிட்ட எண்ணிக்கை	: 500 பிரதிகள்
வெளியீட்டோர்	: சந்திரசேகரகுருக்கள் குமாரர்கள்
நிதிக்கொடை தந்தது	: C. கார்த்திகேய குருக்கள். C. கல்யாணசுந்தர குருக்கள்.
ஸமர்ப்பணம்	: சிவபாதஸ்ரீ சந்திரசேகர குருக்களுக்கு.
புத்தகத்தின் விலை	: விலை ரூ.300/-
வடிவமைப்பு-அச்சாக்கம்	: ஓம் டிஜி ஒர்க்ஸ், சென்னை-40.
புத்தகம் கிடைக்கும் இடம்	: அறக்கட்டளை & நூலாசிரியர்அகம்.
நூலைபெறத் தொடர்புக்கு	: 98402 99352 | 99402 01849

உரிமை : © இந்த புத்தகத்திலுள்ள எந்த ஒரு பகுதியையும் நூலாசிரியர் அனுமதியை எழுத்து மூலம் பெறாமல் பதிப்பிக் கூடாது.
Copyright © All reserved including the rights of reproduction in whole or in part in any form.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஞானதீப நமஸ்காரம்

(காலை மாலை இருவேளையும், தீபம்ஏற்றிவைத்து, இந்த ஸ்லோகத்தைக் கூறி நமஸ்காரம் செய்தால் சகல ஸௌபாக்யங்களும் ஏற்படும்.)

ஸுவர்ண வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
ஸுதான்ய வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
கல்யாண வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
விபூதி வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:

***

சுபம் பவது கல்யாணி! ஆயு ராரோக்ய ஸம்பத: |
சத்ருபுத்தி விநாசாய தீபஜ்யோதிர்! நமோ(அ)ஸ்து தே ||

***

கோமாதா ஸ்துதி. (பசுவணக்கத் துதிகள்)

இந்த அபூர்வமான ஸ்தோத்திரத்தைச் சொல்லி கோபூஜையைச் செய்து, பிரதக்ஷிணம் செய்தால், அளவற்ற புண்யங்களும், சகலபாக்யங்களும் ஏற்படும். இதனைக்கூறிப் பணிந்து வாசகர்கள் பயன்பெற வேண்டும்.

நமோ தேவ்யை மஹாதேவ்யை ஸுரப்யை ச நமோ நம:.
கவாம் பீஜ ஸ்வரூபாயை நமஸ் தே ஜகதம்பிகே. 1

நமோ ராதா ப்ரியாயை ச பத்மாம்சாயை நமோ நம:.
நம: கிருஷ்ண ப்ரியாயை ச கவாம் மாத்ரே நமோ நம:. 2

கல்பவ்ருக்ஷ ஸ்வரூபாயை ஸர்வேஷாம் ஸந்ததம் பரம்:
ஸுதாயை தனதாயை ச வ்ருத்திதாயை நமோ நம: 3

சுபதாயை ப்ரஸன்னாயை கோபதாயை நமோ நம:.
யசோதாயை கீர்த்திதாயை தர்மக்ஞாயை நமோநம:. 4

இதம் ஸ்தோத்ரம் மஹத்புண்யம் பக்தியுக்தச்ச யப்படேத்.
ஸ கோமான் தனவான் சைவ கீர்திமான் புத்ரவான் பவேத். 5

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ப்ராதஸ்மரணம் (காலைஇறைவணக்கம்)

ப்ராதர் நமாமி கணநாத மநாத பந்தும் –
சிந்தூர பூர பரிசோபித கண்ட யுக்மம் |
உத்தண்ட விக்ன பரிகண்டன சண்டதண்டம் –
ஆகண்டலாதி சுரநாயக ப்ருந்த வந்த்யம் || 1

ப்ரஹ்மா முராரிஸ் த்ரிபுராந்தகாரி –
பானுஸ் சசீ பூமி சுதோ புதஸ் ச |
குருஸ் ச சுக்ரஸ் சனி ராகு கேதவ: –
குர்வந்து ஸர்வே மம சுப்ரபாதம் || 2

ப்ராதஸ் ஸ்மராமி சரதிந்து கரோஜ்வலாபாம் –
ஸத்ரத்னவன் மகர குண்டல ஹாரபூஷாம் |
திவ்யா யுதோர்ஜித ஸுநீல ஸஹஸ்ர ஹஸ்தாம் –
ரக்தோத்பலாப சரணாம் பவதீம் பரேசாம் || 3

ப்ராதர் நமாமி மஹிஷாஸுர சண்டமுண்ட –
சும்பாஸுர ப்ரமுக தைத்ய விநாச தக்ஷாம் |
ப்ரஹ்மேந்த்ர ருத்ர முனி மோஹநசீல லீலாம் –
சண்டீம் ஸமஸ்த ஸுரமூர்த்தி மனேக ரூபாம் || 4

ப்ராதர் பஜாமி பவதா மபிலாஷ [3]தாத்ரீம் –
[4]தாத்ரீம் ஸமஸ்த ஜகதாம் துரிதாப ஹந்த்ரீம் |
ஸம்ஸார [3]பந்தன விமோசன ஹேது பூதாம் –
மாயாம் பராம் ஸம[4]திகம்ய பரஸ்ய விஷ்ணோ: || 5

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சைவாகம பத்ததிகளின் ஆசார்ய வந்தனம்



18பத்ததி ஆசார்ய ப்ரணதி: ஸ்ரீ குருப்யோ நம:

தூர்வாஸாப் பிங்களஸ் சைவ உக்ரஜ்யோதிஸ் ஸுபோதக:.
ஸ்ரீகண்டோ விஷ்ணுகண்டஸ் ச வித்யாகண்டஸ் ததைவ ச.
ராமகண்டோ ஞானசிவோ ஞானசங்கர ஏவச.
ஸோம சம்புர் ப்ரம்ம சம்புஸ் த்ரிலோசன சிவஸ் ததா.
அகோர சிவ ஏவா(அ)த ப்ராஸாத சிவ ஏவச.
ராமநாத சிவஸ் சைவ ஈசான சிவ ஏவச.
வாருணாக்ய சிவஸ் சைவா(அ)ஷ்டாதசா சார்ய புங்கவா:.
ஏதைர் திவ்யைர் சிவாசார்யைர் பத்ததிப் பரிபாஷிதா.
தேப்யோ நித்யம் நமோ திவ்ய தேசிகேந்த்ரேப்ய ஏவச.
ஸித்தாந்த மார்க்க தர்சிப்யோ ஆசார்யேப்யோ (அ)ஸ்து மே நதி:.

பக்தசுந்தரமூர்த்திஸ்தவ:- கேயூர குண்டல கிரீட விபூஷி தாங்கம் -
ஹஸ்தோத்பலம் கடிகரம் த்ருத ராஜவேஷம் |
ருத்ராக்ஷ ருத்ரஜப பூதி லலாட பாஜம் -
த்யாயேத் த்ரிபங்க சிவசுந்தர மூர்த்தி ரூபம் ||



சைவ ஸந்தான ஆசார்யர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலரவர்கள் பாடிய
சிதம்பர சபாநாத புராணத்துள்ள சந்தான குரவர்
முதலிய சைவ சித்தாந்த பரமாசாரியர் வணக்கம்

திருநந்தி தேவர் துதி

திருக்கயிலை மலையிலருட் கல்லால
நிழலிருந்து தேவ தேவன்
பெருக்கமுடை யாகமத்துட் பிறங்குரௌ
ரவத்தெழுந்த பீடார் ஞானஞ்
சுருக்கமறப் போதிக்க மலைவுதீர்ந்
தருளிமுதற் குருவாய்த் தோமில்
அருட்குரியர்க் கதனையளித் தருணந்தி
பெருமானுக் கடிமை செய்வாம்.

மெய்கண்ட சிவாசாரியார் துதி

மைகண்டர் வகுத்துரைத்த சிவஞான
போதமெனும் வட நூல் தன்னைக்
கைகண்டு தமிழுலக முய்யமொழி
பெயர்த்தருளிக் கலைநூல் காட்டும்
பொய்கண்ட வுளத்தினர்கா ணாதபுனி
தாத்துவிதப் பொலிவு காட்டும்
மெய்கண்ட தேவனடி யகந்தழீஇப்
பணிந்தேத்தி வினையை வெல்வாம்.

அருணந்தி சிவாசாரியார் துதி

தவமாருந் திருத்துறையூர்ச் சார்ந்தருளிப் பொய்யினைமெய்த்
தவமாகக் கொண்டுழல்முப் புறத்தினருஞ் சாய்ந்திரியச்
சிவஞான போத நூல் தமிழுலகந் தெளிந்துய்யச்
சிவஞான சித்தியருள் தேசிகனைப் பணிகுவாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மறைஞானசம்பந்த சிவாசாரியார் துதி

முரண்ட ரும்புறச் சமயநூல் முழுப்பொயென் றகற்றி
அரண்ட ருஞ்சிவ ஞான நூல் கேட்டினி தாய்ந்து
தெருண்டு நிட்டைசேர் கடந்தையூர்ச் சம்பந்த தேவன்
இரண்டு பாதமும் முடிக்கணிந் திடுக்கண்வே ரறுப்பாம்.

உமாபதி சிவாசாரியார் துதி

மூட்டு மார்க்கமாங் களைகளை யருளினால் முரணிக்
கட்ட ருட்புடை நூல்சிவந் திகழ்தரக் கண்டு
நிட்டை மேவிவீற் றிருந்தரு ளுமாபதி நிமலன்
மட்ட றாவடிக் கமலமென் மனத்தட மலரும்.

திராவிட மாபாடியகாரர் துதி

குறியமுனி யருளியமெய் வரத்தினா
லவதரித்துக் கோதில் ஞானத்
துறைசைநமச் சிவாயகுரு வருட்கடலும்
வடமொழிதென் மொழிப்போர்த் தூய
நிறைகடலு முண்டுபுனி தாத்துவித
சித்தாந்தம் நிலவப் பூமேல்
மறைமொழிமெய்ச் சிவஞான பாடியஞ்செந்
தமிழ்வகுத்த யோகி வாழி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இஷ்டதேவதாவந்தனம்



ஓம் கணேசாய நமः

குணாதீத மாத்யம் சிதானந்த ரூபம் –
சிதாபாஸகம் ஸர்வகம் ஞானகம்யம்.
முனித்யேய மாகாச ரூபம் பரேசம் –
பரப்ரஹ்ம ரூபம் கணேசம் பஜே(அ)ஹம்.

ஓம் ஷண்முகாய நமः

குந்தேந்து மந்த ஸ்மித சுந்தரா ஸ்யம் –
வந்தாரு பூதேவ வரை ருபா ஸ்யம்.
ப்ருந்தாரகா ராதி ஜனை ரசா ஸ்யம் –
வந்தே பவானீ தநயம் ஷடா ஸ்யம்.

ஓம் சங்கராய நமः

தவள மய சரீரம் ஸர்ப்ப சூலஞ் ச பாசம் –
பரசு மனல கட்கம் கேடகம் வஜ்ர ஹஸ்தம்.
அபய வரத ஹஸ்தம் பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம் –
பணி சசி ஜல மௌளிம் தேவதேவம் நமாமி.

ஓம் தக்ஷிணாமூர்த்தயே நமः

கபர்திநம் சந்த்ர கலா வதம்ஸம் –
த்ரிநேத்ர மிந்து ப்ரதிமா நநோ ஜ்வலம்.
சதுர் புஜம் ஞானத மக்ஷ சூத்ரம் –
புஸ்தாக்னி ஹஸ்தம் ஹ்ருதி பாவயேத் சிவம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் நடேசாய நம:

க்ருபா ஸமுத்ரம் சுமுகம் த்ரிநேத்ரம் –
ஜடாதரம் பார்வதி வாம பாகம்.
ஸதாசிவம் ருத்ர மனந்த ரூபம் –
சிதம்ப ரேசம் ஹ்ருதி பாவயாமி.

ஓம் லலிதாம்பாயை நம:

ஸ்ரீம் பதபூர்ண மஹா மநு ரூபே –
ஸ்ரீ சிவகாமி மஹேச்வர ஜாயே .
ஸ்ரீ குஹ வந்தித பாத பயோஜே –
ஸ்ரீ லலிதா பர மேசி நமஸ்தே.

ஓம் க்ருஷ்ணாய நம:

இந்தீவர ச்யாமள கோமலாங்கம் –
இந்த்ராதி தேவார்ச் சித பாத பத்மம்.
ஸந்தான கல்ப த்ருமம் ஆச்ரிதானாம் –
பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி .

ஓம் விஷ்ணவே நம:

மேக ச்யாமம் பீத கௌசேய வாஸம் –
ஸ்ரீவத் ஸாங்கம் கௌஸ்துபோத் பாஸிதாங்கம்.
புண்யோ பேதம் புண்டரீகாய தாக்ஷம் –
விஷ்ணும் வந்தே ஸர்வ லோகைக நாதம்.

ஓம் மஹாலக்ஷ்ம்யை நம:

ஸரஸிஜ நயனே ஸரோஜ ஹஸ்தே –
தவளதரா ம்சுக கந்த மால்ய சோபே.
பகவதி ஹரி வல்லபே மனோக்ஞே –
த்ரிபுவன பூதிகரி ப்ரஸீத மஹ்யம்.

ஓம் துர்க்காயை நம:

நமஸ்தே சரண்யே சிவே ஸாநுகம்பே –
நமஸ்தே ஜகத் வ்யாபிகே விச்வரூபே.
நமஸ்தே ஜகத் வந்த்ய பாதாரவிந்தே –
நமஸ்தே ஜகத் தாரிணி த்ராஹி துர்கே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் ஸரஸ்வத்யை நம:

சுராசுர சேவித பாத பங்கஜா–
கரே விராஜத் கமநீய புஸ்தகா.
விரிஞ்சி பத்னீ கமலாஸந ஸ்திதா–
ஸரஸ்வதீ ந்ருத்யது வாசி மே ஸதா.

ஓம் ஹயக்ரீவாய நம:

ஞானா னந்த மயம் தேவம் –
நிர்மல ஸ்படிகா க்ருதிம்.
ஆதாரம் ஸர்வ வித்யானாம் –
ஹயக்ரீவம் உபாஸ்மஹே.

ஓம் லக்ஷ்மீந்ருஸிம்ஹாய நம:

யஸ்யா (அ)பவத் பக்தஜனா (ஆ)ர்த்தி ஹந்து: –
பித்ருத்வம் அன்யேஷு அவிசார்ய தூர்ணம்.
ஸ்தம்பே (அ)வதாரம் தம் அநந்ய லப்யம் –
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே.

ஓம் மஹாசாஸ்த்ரே நம:

ஹரிவரா ஸநம் விச்வ மோஹனம் –
ஹரிததீ ச்வரம் ஆராத்ய பாதுகம்.
அரிவிம ர்தநம் நித்ய நர்த்தனம் –
ஹரிஹரா த்மஜம் தேவ மாச்ரயே.

ஓம் பைரவாய நம:

கட்கம் கபாலம் டமரும் த்ரிசூலம் –
கராம் புஜைஸ் ஸந்தததம் த்ரிநேத்ரம்.
திகம் பரம் பஸ்ம விபூஷி தாங்கம் –
நமாம் யஹம் பைரவ மிந்து சூடம்.

ஓம் ஹநுமதே நம:

அசேஷ லங்கா பதி ஸைன்ய ஹந்தா –
ஸ்ரீராம ஸேவா சரணைக கர்த்தா.
அசேஷ துக்காஹத லோக கோப்தா –
த்வஸௌ ஹநூமான் தவ ஸௌக்ய கர்த்தா.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி (உமாபதிசிவம் அருளியது)

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

திருமுறைத்துதிகள்

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத்தேவார முந்திரு வாசகமும்
உய்வைத்த ரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூர்திருத் தாள்போற்றி.

திருநாவுக்கரசர் - சிவபுரம் (6-87-1)

வானவன்காண் வானவர்க்கும் மேலானான்காண்
வடமொழியுந் தென்றமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்து மாடினான்காண்
ஐயன்காண் கையிலன லேந்தியாடுங்
கானவன்காண் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறுந்
தேனவன்காண் சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் றானே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருநாவுக்கரசர் - ஆரூர்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலு மெம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சய போற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா வென்றென்றே அலறா நில்லே.

மாணிக்கவாசகர் - கோயில் (08-21-1)

உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

மாணிக்கவாசகர் - திருப்பெருந்துறை (8-15)
(பக்திவைராக்கிய விசித்திரம்)

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே.

திருவிசைப்பா - திருமுறை-9 (சேந்தனார்)

பண் : பஞ்சமம் தாளம் : ஆதிதாளம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்பல்லாண்டு - திருமுறை-9 (சேந்தனார்)

பண்: பஞ்சமம் தாளம்: ரூபகம்

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேராமே வில்லாண்ட
கனகத்திரள் மேருவிடங்கன் விடைப்பாகன் பல்லாண் டென்னும்
பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம் - திருமுறை - 12 (சேக்கிழார்)

ராகம் : மத்யமாவதி விருத்தம்

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப்பொலிவு கண்டுஆர்தல்
உண்மையாம் எனில் உலகர் முன் வருக என உரைப்பார்.

திருப்புகழ் - இரத்தினகிரி (அருணகிரிநாதர்)

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

கந்தரனுபூதி

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிவமயம்

ஸ்ரீகுருப்யோ நம:

ஸதாசிவம் அனந்தம் ச ஸ்ரீகண்டம் புனர் அம்பிகாம் |
குஹம் விஷ்ணும் ச தாதாரம் குரூன் ஸப்த ஸமாச்ரயே ||

******

தேவாதிதேவ! ஸர்வக்ஞ! ஸச்சிதானந்தலக்ஷண! |
உமாரமண! பூதேச! ப்ரஸீத கருணாநிதே! ||

******

சிவம் சக்திம் கணாதீசம் குஹம் வாகீச்வரீம் க்ரமாத் |
தூர்வாஸஸ மஹம் வந்தே பைங்களாத்யாம்ச்ச தேசிகான் ||

******

மூலே வடஸ்ய முனிபுங்கவ ஸேவ்யமானம்–
முத்ராவிசேஷ முகுளீக்ருத பாணிபத்மம் |
மந்தஸ்மிதம் மதுரவேஷ முதார மாத்யம் –
தேஜஸ் ததஸ்து ஹ்ருதி மே தருணேந்துசூடம்||

குரு வழிபாட்டுப் பெருமை.

நூன்முகம்

உலகில் இறையருள் இன்றி எதனையும் நாம் செய்துமுடிக்க இயலாது. அந்த இறையருளுக்கு பாத்திரமாவதற்கு நமக்கு ஒரு குருவினுடைய வழிப்படுத்தல் மிகஅவசியமாகும். உலகின் வாழ்வில் சுகபோகங்களை திருப்தியாக அனுபவித்துக்கொள்வதற்கும், ஆன்மாவின் ஈடேற்றத்திற்காகவும், சிரத்தாபக்தியோடு பூஜை முதலானவற்றை செய்வதற்காகவும், அதற்கு ஒருசிறந்த வழிகாட்டித் தேவை. அவரே நமக்கு குருவாக இருந்து நல்வழிப்படுத்துவார். அந்த குருவுக்கெல்லாம் மஹாகுருவாக தனக்குவமையில்லாத தந்நிகரற்ற மேலான பரமகுருவாகத் திகழ்பவர் ஸ்ரீதட்சிணாமூர்த்தியாவார். மனிதகுலத்திற்கும், மன்னன், மக்கள், யாவருக்கும் தனக்கென்றுள்ள குருநாதர், ஸ்வகுரு எனப்படுவார். இவ்வாறே இந்திரன் முதலான தேவர்குலத்திற்கு குருவாக விளங்கி வழிகாட்டுபவர், நவகிரஹங்களில் ஒருவரான தேவோக்த சுபகிரஹமூர்த்தியான வியாழபகவான் ஆவார். அவருக்கும் எல்லா தேவர்களும் தேவர்படைகளும் முனிசிரேஷ்டர்களும் பணிந்தேத்தும் பரமகுருவாக விளங்குபவர், குமாரசுவாமிநாத குருகுஹ சுப்ரஹ்மண்ய மூர்த்தியாவார். இவர்களைப்போற்றி வழிபடுவதே அறியாமை இருள்நீக்கி ஞானஒளிநிறைந்து பேரானந்தநிலைபெற உதவுகிற உத்தம செயலாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குருவையே சிவனாக எண்ணி வழிபடுவோருக்கு ஒருநாளும் துன்பம் ஏற்படது. சிவாயநம என சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை என்பது ஔவையாரின் அருள்வாக்கு. ஷண்மதமாம் அறுசமயங்களிலும், குருவுக்கு முதன்மை அளிக்கப்பட்டிருக்கிறது. சைவவழிபாட்டுமரபில் குருவழிபாடு தனிசிறப்புடன் விளங்குகிறது. மேலும் இந்துசமயத்தில் வழிபடும்முறைகளில் திருவுருவங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அருவநிலையில் குணம்குறிகளற்ற உயர்நிலையில் உள்ள பரம்பொருளானது, அடியவர்கள் எண்ணிவழிபடவும், பூசையில் அன்புடன் செய்கிற பொருளில் அர்ப்பணிப்பை ஏற்கவும், கண்ணுக்குப்புலப்படுகிற, ஒருபுனிதவடிவில் விளங்கிஇருந்து அருள்கிறது. அவற்றுள் எல்லாதெய்வங்களும் விரும்பி உடலிடங்கொண்டு அருள்தரும் ஒரே திருவுருவம் நமது குருநாதரின் திருமேனிவடிவமே என்பது வேதாகமமுடிவு.

சிவாகமநெறிமுறையில் ஆலயாதிகளில் செய்யப்படும் தேவதைகளுக்கான பிரதிஷ்டை, பூஜை, உத்ஸவம், பிராய்ச்சித்தம், பழுதுநீக்கம், மேப்படுத்துதல் முதலிய கிரியைகளையும், அபிஷேகம், பூஜை, ஆவராணஅர்ச்சணை, நாமார்ச்சனை, பிரார்த்தனை, முதலிய பல்வகை உபசாரங்களையும், சமயத்திருப்பணித் தொண்டுகளையும், மனம் மொழி மெய்யாலே இறையோடு இணையும் தவயோகங்களையும், முப்பெருளுண்மையை உணர்த்திடும் சிவஞானம்பெறவும், உரியசெயல் களில் வழிபாடுகளில்ஈடுபடவும், முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகைநெறிகளில் ஈடுபடவும் படிப்படியானமுறையில் ஆன்மா உயர்ந்துசெல்லவும், குருவித்திருமேனியும், தெய்வத்திருவுருவங்களுமே, அடிப்படையான ஆதாரமாகத்திகழ்கின்றன. குருநாதரால் செய்யப்படுகிற தீட்சையால், பெறப்படும் மந்திரத்தாதாலேயே இவ்வுலகில் யாவரும், மந்திராதீனமாகஉள்ள தெய்வங்களின் திருவருளைப் பெறஇயலும்.

ஆன்மகோடிகளின் நன்மைக்காக, ஒரேபரம்பொருள் தனது உயர்ந்த அருவநிலையிலிருந்து ஒருபடி கீழிறங்கிவந்து, பல்வேறு திவ்யவடிவங்களையும் பெயர்களையும்தாங்கி பேரருள்செய்கிறது. அடியார்கள் தத்தமது விருப்புக்கும் தேவைக்கும் தகுதிக்கும் குணத்திற்கும் இசைந்தஉருவங்களில், இறைவனைக்கண்டறிந்து, வழிபடுவதற்கான வாய்ப்பு இந்துசமயத்தில்மட்டுமே காணப்படும் சிறப்பு அம்சமாகும்.

இறைவனின் இத்தகைய பல்வேறு வடிவங்களின் வரலாறுகளையும், தத்துவக்கருத்துகளையும், வேதாகம புராணங்களும், சமய பத்ததிநூல்களும் எடுத்துக்கூறுகின்றன. இம்மையில் உலகியல் வாழ்க்கையில் நல்லாசைகளை நிறைவேற்றிச் சுகவாழ்வுவாழ்வதற்கும், ஆன்மீக மேன்மையைப்பெற்று மறுமையில் பேரின்பப்பெருவாழ்வெனும் பரகதிப்பேறு பெறுவதற்கும், குருநாதர் எனும் வழிகாட்டிஅவசியம். சிவனாரின் மாஹேச்வர மூர்த்தங்களில், தென்முகக்கடவுளாக, ஆலமரத்தடிச்செல்வனாக, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மஹரிஷிசீடர்களுடன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரமேஷ்டியாக பரமாசார்யார்களின் தலைவராக ஞானாபதேசம்செய்து, உயிர்களுக்கு, தீக்ஷைஅளித்து அருள்கிறார்.

ஞானபூமியாகியநம் பாரதமாதா எனும் பசுவின் மடியாகவிளங்குவது தென்தமிழ்நாடாகும். தென்னாடுடையசிவனின் திருக்கோயிலில், தென்முகப்பிரம்மமான, அகோரமுகத்தில்உதித்த திருவுருவமான தட்சிணாமூர்த்தி தென்திசைக் கோஷ்டத்தில் பரமகுருவாய் இருந்து அருள்பாலிக்கிறார்.

பொதுவாக மனஅமைதிபெற தெய்வவழிபாடு முக்கியமாகிறது. இதனைக் கருத்தில்கொண்டுதான் அக்காலத்தில் மகான்களும் மன்னர்களும் ஆகமமுறைப்படி ஆலயங்களை அமைத்துத்தந்தும், அங்கு மக்கள் வழிபடவும் வழிகாட்டிச்சென்றனர். அருளாளர்களான நாயன்மார்களும் ஆசார்யர்களும் அங்கு வழிபட்டு பலஅற்புதங்களை நிகழ்த்தி, அருட்பேறுபெற்று, வழிகாட்டியுள்ளனர். அவ்வகையில் மெய்யன்பர்கள் அவர்களைப் பின்பற்றி செல்வதன்மூலம் நற்பயன் அடையலாம்.

இக்காலத்திதில் குருவைப் போற்றி வழிபடுவதும் தமதுசமய குருநாதர்களின் வரலாற்றைக் கற்பதும், ஐயத்தெளிவுபெற குருநாதர்களை நாடுவதும், சிறுவர்களுக்கு பெற்றோர் குருவின் பெருமைகளை எடுத்துக்கூறாமலும் குருவிடம் பழகவிடது வழிகாட்டாமல் வளர்ப்பதும் நாகரீகச் சீர்கேடாகி வருந்தத்தக்கதாக உள்ளது. இதனால் மக்களிடைய தெய்வீகப்பண்புகள் மனப்பான்மைகள், மனிதநேயம், சிரத்தா, பக்தி, சத்வகுணம் முதலிய குறைந்து, அசுரப்பண்புகள் மேலிடும்நிலை உருவாகும். முக்குணஅடிப்படையில் விளங்கும் மனிதகுலத்தை தஸத்வகுணத்தைப் பின்பற்றி தத்துவஉண்மைப்பொருளை அறிவித்து நல்வழிப்படுத்திட நமதுசமயம் கூறிய ஒப்பற்றசெயல் குருவழிபாடே ஆகும். சமயஅறநூல்களைக் கற்பதையும் தவிர்த்து, அறிஞர் அறிவுரைகளைக் கேட்கவும்விரும்பாது, பக்திநெறிஅறியாது தடுமாறுகின்றனர். இதற்கு குருவின்தேவையையும் பொறுமையையும் ஏற்படும்பயனையும், எடுத்துக்கூறும் சிறுநூல் பல குடும்பங்களுக்கு தேவைப்படுகிறது.

எந்தநெறியையும் பின்பற்றாமல் மனம்போகும்போக்கெல்லாம்சென்று தேஹசுகம், புலன்வழிஇன்பங்களைத் துய்ப்பதே நல்வாழ்வு எனக் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறானதாய் தாழ்வினைத் தருவதாகும். ஆதலால் பக்திநெறியை அறிவித்து முக்திநெறிஅறிவிக்கும் குருநாதரை நாடி தீட்சைபெற்று வழிபாடாற்றி இகபரஸௌபாக்யம் பெறவேண்டும் என்பதை இந்நூல் தெளிவுபடுத்துகிறது.

இந்நூலில் குருவின் தத்துவம், சிறப்புபெருமை, ஆசார்யஇலக்கணம், சிஷ்யஇலக்கணம், தீக்ஷையின்தேவை, தீக்ஷாவிளக்கம், கீதாஉபதேசம், மந்திரமஹிமை, குருவழிபாடு, சைவகுருபரம்பரை, ஸந்தானஆசார்யர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமயாசாரியர்களின் வரலாற்றுச்சுருக்கம் முதலிய தகவல்கள் திரட்டி அளிக்கபட்டுள்ளது.

60க்குமேர் தலைப்புகளின்கீழ் பரமகுருவாம் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியே, பகவத்கீதாசார்யரான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஞானகுருநாதராம் ஸ்ரீகுஹ சுப்ரம்மணியசுவாமி, தேவகுருவாகிய ஸ்ரீவியாழபகவான் இவர்களை வழிபடும்துதிகள், இவர்களது உபதேசங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 10-07-2024 புதன்கிழமை அன்று சென்னை, திருவான்மியூரில் விளங்கும், அருள்மிகு பாம்பன் குமரகுருதாசர் திருக்கோயிலின் கும்பாபிஷேகவிழாவின் பெருவேள்வி வைபவத்தின் நினைவாக அவ்வாலய அர்ச்சகரின் பெருமுயற்சியால் நிதிக்கொடையால் முதலில் வெளிவரஉள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. இந்நூல் இவரது அதிஷ்டானவிழாவில் வெளிவருவது முருகனின் திருவருளே. இக்கோயிலில் குருஅதிஷ்டானத்தில் அடியவர்களுக்கு ஞானம் ஒளி ரகுருவருளை அளித்து வரும் குஹஸ்ரீ பாம்பன்சுவாமிகள் பக்தகோடிகளின் உள்ளக் குகைகளில் குஹகுருவாய் இன்றும் விளங்கிடும் மஹாஞானசித்தராவார். இவர் முருகனின் அருளை முழுமையாய்பெற்று விளங்கிய அருணகிரிநாதரைப் போன்ற சிறந்த குமரகுருதாஸர் ஆவார்.

இவர், தஹராலயரஹஸ்ய உரையாசிரியரும், ஷண்முககவசம் முதலான பலதுதிகளையும், உபதேசங்களையும்அருளிய குரு மூர்த்தியும் ஆவார். அனாலேயே இந்நூல் குருவழியாட்டுப் பெருமை என்றபெயரில் வெளிவருகிறது. இது பெரும்புண்ணியச்செயலாகும். இந்நூலை ஆதிசைவகுலத்தே தோன்றி, ஆகமத்தைக் கற்றுணர்ந்து, இவ்வாலய குமரகுருதாஸரின் ஸ்ரீமயூரநாதரான ஸ்கந்தகுருநாதரை நாளும் அருச்சித்துவரும் ஆலயஅர்ச்சகர் சொந்தசெலவில் மிகுந்த ஆர்வத்துடன் வெளியிடுவதை உலமாரப்பாராட்டி, அவர்களது குடும்பத்தினர் இகபரஸௌபாகியங்களுடன் பல்லாண்டுவாழ்ந்திட இறையருளை வேண்டி வாழ்த்துகிறோம். இந்நூல் சிறக்க வாழ்த்துரை அணிந்துரைகளை அளித்துள்ள ஆசார்யர்களுக்கும் மெய்யன்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலை குறுகியகாலத்திலேயே சிறப்பாக அச்சிட்டுஅளித்த திரு.அ.கணேஷ் அவர்களுக்கும் நன்றிகலந்த பாராட்டுதலைத் தெரிவித்து உவகைகொள்கிறேன். இந்நூலை வெளியிட்டோரும், இந்நூலின் வாசகர்களும், குஹநேயச்செல்வர்களான பத்தகோடிகளும், குமரகுருநாதரின் திருவருளாலும், பாம்பன் சுவாமிகளின் குருவருளாலும் இகபரஸௌபாக்யங்களைப் பெற்றுய்வேணுமாய் எமது குலதெய்வத் திருவடிக்கமலங்களைப் பணிந்தேத்தி வேண்டிக்கொள்கிறேன். குஹகுருமயூரநாதப்பெருமான் அருள்புரிவாராக.

"வாழ்கசீர் அடியாரெல்லாம்"

சுபம்.

இங்ஙனம்,

வி. சோமசேகர சிவாசார்யர்

சென்னை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ அண்ணாமலையார் துணை

"சிவாகம ஞானபாஸ்கரர்" "சிவாகம செல்வர்"
"சிவாகம வாசஸ்பதி"

பட்டம். சிவஸ்ரீ சா.ஹாலாஸ்யநாத சிவாசார்யர்

அர்ச்சகம், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் – திருவண்ணாமலை

தேதி : 03.07.2024

ஆசியுரை

குரு வழிபாட்டு பெருமை

சிவாய ருத்ராய சிவா(அ)ர்ச்சிதாய
மஹாநுபாவாய மஹேச்வராய
ஸோமாய சூக்ஷ்மாய சுரேச்வராய
சோணாத்ரி நாதாய நமச்சிவாய

ந க்ஷேத்ரம் அருணாதஸ்தி நாஸ்தி தேவோருணேச்வராத்
நா(அ)பி ப்ரதக்ஷிணாத் அன்யத் வித்யதே(அ)ப்யதிகம் தப :

குரு வழிபாட்டு பெருமை எனும் நூல் குருவின் தத்துவம், மந்திர மகிமை, குரு வழிபாடு, ஆசார்யசிஷ்ய இலக்கணம், தீட்சையின் விளக்கம் போன்ற பல விஷயங்களை உள்ளடக்கிய இந்நூல் ஆன்மீக அன்பர்களுக்கு மிகவும் பயனுள்ள நூலாக அமைந்துள்ளது. இவ்வறிய நூலினை சிவஸ்ரீ விஜய சோமசேகர சிவாச்சார்யர் அவர்கள் சைவ சமயத்திற்கு தொகுத்து வழங்கியுள்ளார்கள் அவருக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

மேலும் இக்கால சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் நாம் எதிர்பார்க்கும் அனைத்து விழயங்களையும் இன் நூல் பூர்த்தி செய்கிறது. எதிர் வரும் காலங்களில் சிவஸ்ரீ விஜய சோமசேகர சிவாச்சார்யர் அவர்கள் இது போன்ற பயனுள்ள நூல்களை அளித்து நீண்ட ஆயுளுடன் பல்லாண்டு வாழ்ந்து ஆன்மீக பணி செய்திட எல்லாம் வல்ல எம் அண்ணல் ஸ்ரீ உண்ணாமுலை உடனாகிய அண்ணாமலையாரை பிராத்திக்கிறேன்.

அண்ணாமலையார் ஆசீர்வாதம்

வாழ்க பல்லாண்டு! வளர்க தங்கள் ஆன்மீக தொண்டு!!

இப்படிக்கு

S. ஹாலாஸ்யநாத சிவாசார்யர்

பட்டம். சிவஸ்ரீ சா.ஹாலாஸ்யநாத சிவாசார்யர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Śiva Śrī Dr. S.P. Sabharathnam Śivāchāryār, M.A., Ph.D
(Āgama&Thirumurai Project, Kauvai Adhinam, Hawaii, US)
(Formerly, Professor of Tamil & Philosophy)
1/1B, Karpakambal Nagar, Mylapore, Chennai 600 004

உ

திருச்சிற்றம்பலம்

வாழ்த்துரை

அருள்மிகு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் திருக்கோயில் எனத் திகழும் அருள்மிகு மயூர நாதர் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் வரும் ஆனித் திங்கள் 28ஆம் நன்னாளில் நடைபெற உள்ளது என்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அடியார்கள் அனைவரும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சிறப்பான, மங்களகரமான நிகழ்ச்சி இது.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருக்கோயில் முதன்முதல் முழுவடிவம் பெற்ற போது, மகா கும்பாபிஷேகப் பெருநிகழ்ச்சியைத் திருவருளால் சிறப்புற நடத்திவைக்கும் பேறும் பெருமையும் பெற்றவர், சகலாகம விற்பன்னர், சாஸ்த்ர சூடாமணி, அடியேனின் ஆகம ஆசான் சிவஸ்ரீ கே.ஏ. சபாரத்தின சிவாசாரியார் அவர்களே.

இத்தகைய பெருமைக்கு உரிய சிவாசாரியார் அவர்களின் அன்புக்குரிய மாணவராகத் திகழும் சிவாகம வாசஸ்பதி சிவஸ்ரீ கபாலி வைத்தியநாத சிவாசாரியார் அவர்கள் ஸர்வ ஸாதகப் பொறுப்பேற்று இந்தக் கும்பாபிஷேக வைபவத்தை நிகழ்த்த இருப்பது பெரிதும் போற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவர்களுக்கும் அவருக்குத் துணையாக நிற்கும் சிவாசாரியப் பெருமக்களுக்கும் ஸ்ரீமத் சுவாமிகளின் பரிபூரணமான அனுக்கிரகமும் ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் கூறுவது போன்று "கடவுட் சக்ரவர்த்தி" என விளங்கும் மயூரநாத சுவாமியின் பரிபூரணமான அனுக்கிரகமும் வாய்க்க வேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

உலகெங்கும் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் அடியார் பெருமக்கள் அனைவர்க்கும் அவ்வாறே குருவருளும் சுவாமியின் ஆனந்தமயமான அனுக்கிரகமும் நிறைவுற வாய்க்க வேண்டும் எனத் தில்லையம்பலப் பெருமானின் திருவடிகளையும் ஸ்ரீ சிவகாமி அன்னையின் திருவடிகளையும் ஆகம வாக்குகளாலும் திருமுறை வாக்குகளாலும் போற்றித் துதிக்கிறேன்.

அன்பு வணக்கம், அனைவர்க்கும்.

அன்பன்,

சபாரத்தினம்

Camp: Orlando, US.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிவமயம்

ஸ்ரீகுருப்யோ நம:

சிவஸ்ரீ. ஏ. வெங்கடசுப்ரமணிய சிவாசாரியார்

தலைமை அர்ச்சகர், அருள்மிகு ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில்,

மயிலாப்பூர், சென்னை – 04.

வாழ்த்துரை

ஹர ஹர நம: பார்வதீபதயே! ஹர! ஹர! மகாதேவ!

எல்லாம்வல்ல ஸ்ரீகற்பகவல்லீ ஸமேத ஸ்ரீகபாலீஸ்வரப்பெருமான் அனுக்கிரஹத்துடன், குரு வழிபாட்டுப் பெருமை என்ற நூல் ஸ்ரீபாம்பன் ஸ்வாமிகள் ஆலய மகாகும்பாபிஷேக நல்ல நாளில் வெளியிடப்படுவது மிகப்பொருத்தமானது.

திருநாவுக்கரசுசுவாமிகளைச் சொல்லவேண்டுமானால் அப்பூதி அடிகளைப் பற்றி குறிப்பிடாமல் கூறயியலாது. அதுபோல திருவான்மியூர் ஸ்ரீபாம்பன் சுவாமிகள் ஆலயம் என்றால் ஸ்ரீஅண்ணா (சந்திரசேகர்) அவர்களை குறிப்பிடாமல் இருக்கமுடியாது. ஸ்ரீஅண்ணா (சந்திரசேகர்) வாழும் காலத்தில் "குருநாதர்" "குருநாதர்" எனச்சொல்லிக் கொண்டே இருப்பார்கள். சுவாமிகள் பெயரைக்கூட சொல்லமாட்டார்கள். இன்று மஹாகும்பாபிஷேகம் ஸ்ரீஅண்ணா (சந்திரசேகர்) நம்முடன் இருந்து வழிநடத்துகிறார்கள். இது வரும்நாளில் நாம் பெருமைபடக்கூடிய க்ரந்தம். க்ரந்தத் தொகுப்பாளர் சிந்தனை சித்தர் சிவஸ்ரீ சோமசேகர அண்ணா அவர்கள், யாரை வழிபடவேண்டும், எனத்தொடங்கி நமது கடமையையும், அதனால் நமக்கு விளையும் நன்மைகளைப்பற்றியும் அழகாக தனது சொந்த பாணியில் அருமையாக விளக்கி இருக்கிறார்கள். வள்ளல் இராமலிங்கபெருமான் குறிப்பிடுவதுபோல "நால்வர் துணை எப்போதும் நமக்கு இருத்தல் வேண்டும்" என்ற முறையில் நமக்கு எல்லாம் ஞானதீபமாக சிவஸ்ரீ அண்ணா (சந்திரசேகர்) அவர்கள் வழிக்காட்டுகிறார்கள். ஸ்ரீஅண்ணா (சந்திரசேகர்) ஒருமுறை "தம்புசுவாமி யிடத்தில் குழந்தை இல்லையே என ப்ரார்த்தித்து கொண்டு இருந்தேன்". கனவில் இந்தா பிடி என்று நெற்பொரி தந்தார்கள். எனக்கு குழந்தைகள் பிறந்தனர் என்றார்கள். அவர்களே, சந்திரசேகர கார்த்திகேய சிவமும், சந்திரசேகர கல்யாணசுந்தர சிவமும் வெளியீட்டாளர்களாக அமையப்பெற்றது குருவருளே எனச் சொல்லவேண்டும். சிவஸ்ரீ அண்ணா அவரது குழந்தைகளும், இந்த நூலைப்படிப்பவர்களும், வாழ்வாங்கு வாழ்ந்து, இகபரசௌபாக்கியங்கள்பெற எல்லாம் வல்ல ஸ்ரீகற்பகவல்லீ ஸமேத ஸ்ரீ கபாலீஸ்வரப் பெருமானை பிரார்த்தனை செய்கிறோம்.

தென்னாடுடைய சிவனே ! போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா! போற்றி !

இப்படிக்கு,

ஏ. வெங்கடசுப்ரமணிய சிவாசார்யார், மயிலை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவமயம்
சிவாகம வாசஸ்பதி
சிவஸ்ரீ. S. கபாலி வைத்தியநாத குருக்கள்
தலைமை அர்ச்சகர், அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை
அருள்மிகு கபாலீச்வரர் திருக்கோயில்,
மயிலாப்பூர், சென்னை–600004.

மகிழ்வுரை

எல்லாம் வல்ல திருமயிலை ஸ்ரீகற்பகவல்லி உடனுறை ஸ்ரீ கபாலீச்வரரின் தனிப்பெரும் கருணையினாலும் திரு ஆலங்காட்டு ஈசன் ஸ்ரீஸமீசீனாம்பிகை ஸமேத ஸ்ரீரத்னஸபாபதி ஸ்வாமியின் அனுகிரகத்தாலும் நடைபெறும் திருவான்மியூர் ஸ்ரீமத்பாம்பன் குமரகுருதாச சுவாமிகளின் அதிஷ்டானத்தில் வீற்றிருக்கும் முருகப் பெருமானின் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இந்தப் புத்தகமானது இத்திருக்கோயிலின் மேனாள் அர்ச்சகர். சிவபதஸ்ரீ. சந்திரசேகர சிவாச்சாரியார் அவர்களின் நினைவாக அவர்களது திருமகன்களால் வெளியிடப்படுகிறது.

அவரதுகுமாரர் சிவ ஸ்ரீ.சி.கார்த்திகேயசிவம் அவர்கள் கும்பாபிஷேகத் திற்காக என்னிடம் பல விஷயங்களை பேசிக் கொண்டிருக்கும் பொழுது தனது இந்த அவாவினையும் தெரிவித்தார். உடனே எனக்கு நமது சிவஸ்ரீ விஜய. சோமசேகர சிவாச்சாரியார் அண்ணா அவர்களின் நினைவு தான் வந்தது.

நான் கார்த்திகேய சிவத்தை நமது புத்தக ஆசிரியர் சிவஸ்ரீ அண்ணா அவர்களிடம் அழைத்துச்சென்றேன். சிலமாதங்களுக்குமுன்புசிவஸ்ரீ அண்ணா அவர்கள் நிறைய கட்டுரைத்திரட்டுகள் இருக்கின்றன அவற்றை வெளியிட யாராவது விருப்பப்பட்டால் சொல் என்று கூறியிருந்தார்கள். அதை மனதில் கொண்டு நான் இவரை அழைத்துச் சென்றேன். ஆனால் அங்கு சென்று கேட்ட பொழுது, அண்ணா அவர்கள் அனைத்து கட்டுரைகளையும் பதிப்பிட்டு முடித்து இருந்தார்!!.

பிறகு எங்களது வேண்டுகோளுக்கு இணங்கி, தனது பல அலுவல் களுக்கு நடுவிலும், "மிக மிகக் குறுகிய நாட்களில் இவ்வளவு அற்புதமான விஷயங்களைக் கொண்ட, அதிகமான பக்கங்களை உடைய "குரு வழிபாட்டுப் பெருமை" என்ற இந்தப்புத்தகத்தை எழுதியிருக்கிறார்.

இதில் ஆகமம் வேதம் சைவ சித்தாந்தம் தோத்திர நூல்கள் சாத்திர நூல்கள் சமய நூல்கள் என்று பலவற்றையும் எடுத்தாண்டு இருக்கிறார்.

குலார்ணவம் எனும் நூல் குருமார்களை ஆறு விதமாகக் கூறுகிறது. அவை பின்வருமாறு:

प्रेरकः सूचकश्चैव वाचको दर्शकस्तथा ।
शिक्षको बोधकचैव षडेते गुरवः स्मृताः ।।

पूर्यन्ते सर्वकर्माणि जायते ज्ञानमात्मनि। என்று அனைத்து கர்மாக்களையும் பூர்த்தி செய்து ஆத்மாவிற்கு ஞானத்தை அளிக்கக்கூடிய பூஜைகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மற்றும் வழிபாடுகளில் சிஷ்யனுக்கு ஈடுபாட்டை ஏற்படுத்துபவர் "பிரேரகர் "என்றும்,

அப்படி ருசியை உடையவனுக்கு அவற்றைச் செய்வதற்கு உண்டான சரியானவழியைச் சுட்டி காட்டுபவர் "ஸூசகர்" என்றும்,

பூஜைகளுக்கு உரியபத்ததிகள் மற்றும் வழிமுறைகளை முன்னின்று சொல்லிக் கொடுப்பவர் "வாசகர்" என்றும்,

சொல்லிக் கொடுத்தவைகளை தானே செய்து காட்டிஅவற்றை சுலபமாக புரிய வைப்பவர் "தர்சகர்" என்றும்,

சிஷ்யன் ஆனவன் பூஜை உபாஸனைகளைச் செய்யும் பொழுதுபிழை ஏற்படாமல் அவைகளைச் செய்ய விதிமுறைகளைஅமைத்துத்தருபவர் "சிக்ஷகர்" என்றும்,

பூஜைகள் விழாக்கள் இவைகளின் தத்துவங்கள், உண்மை விளக் கங்களை சிஷ்யன் முழுமையாக உணரும்படிச்செய்து, தனக்குச்சமமாகவும், தன்னைவிட மேலானவனாகவும் ஆக்கி, தெய்வநிலை உணர்வு முழுவதும் உடையவனாக்கி, சிஷ்யனுக்கு கௌரவத்தை ஏற்படுத்துபவர் "போதகர்" என்றும்நமக்கு அறிவிக்கிறது.

எங்களது "குலகுரு" "சிவாகமரத்னம் "கோயம்பேடு. சிவஸ்ரீ. K.A. ஸபாரத்ன சிவாச்சாரியார் அவர்கள் இந்த ஆறு குணங்களையும் ஒருசேரக் கொண்ட குருவாகவும் ஆசார்யராகவும் இருந்தார்.

தற்போது அவர் நம்மிடம் இல்லாத குறையை "சிவாகம கல்பத்ருமம்" காஞ்சீபுரம். சிவஸ்ரீ. சாளுவ. க. ராஜப்பா சிவாச்சாரியார் அவர்களும், "ஸகலாகம பண்டிதர் "சிவஸ்ரீ. Dr. S.P. சபாரத்தின சிவாச் சாரியார் அவர்களும், "சிவாகம ஸார்வபௌம" போன்றபல பட்டங்களைத் தன்னகத்தே கொண்ட இந்நூலாசிரியரான சிவஸ்ரீ. விஜய. சோமசேகர சிவாச்சாரியார் அவர்களும், "வைதிக சைவ ரக்ஷாமணி" திருமயிலை. பிரம்மஸ்ரீ. Dr. S. அருணசுந்தர சிவாச்சாரியார் அவர்களும் தீர்த்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வணங்குதற்கும் போற்றுதலுக்கும் உரியநமது சிவாச்சாரிய குல மாணிக்கங்கள் அனைவரையும் மனம்மொழி மெய்களால் வணங்கி அடியேனையும் மகிழ்வுரை என்ற பெயரில் இந் நூலிலே இடம்பெற வைத்த நூலாசிரியர் சிவ ஸ்ரீஅண்ணா அவர்களுக்கு நன்றிகளைத் தெரி வித்துக் கொண்டு, நூல் வெளியீட்டாளர்களான சிவஸ்ரீ சந்திரசேகர. கார்த்திகேய சிவம், சிவஸ்ரீ சந்திரசேகர. கல்யாண சுந்தரசிவம் அவர்கள் இருவரையும் இப்பணிகளை எப்பொழுதும் செய்ய வேண்டும்என்று கூறி எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்

சிவஸ்ரீ. S. கபாலி வைத்தியநாத குருக்கள்.

திருமயிலை கபாலீச்வரம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவமயம்

ஸ்ரீகுருப்யோ நம:

சிவஸ்ரீ. சந்திரசேகர கார்த்திகேயன் சிவம் M.Tech.,
No 54/46. துரைசாமி தெரு, லட்சுமிபுரம் திருவான்மியூர் சென்னை 41.

வெளியீட்டாளர் உரை

"ஸதாசிவாதி ஸமஸ்த குருப்யோ நம:"

ஈஶ்வரோ குருராத்மேதி மூர்திபேதாத் விபாகினே ।
வ்யோமவத் வ்யாப்ததேஹாய தக்ஷிணாமூர்தயே நமஃ ।।

K.S.சந்திரசேகர குருக்கள் எனும் எனது தகப்பனார் சீர்காழியை அடுத்த கடவாசல் எனும் சிறியதொரு கிராமத்தில் சிவஸ்ரீ. கே. சம்பந்த குருக்கள் சகுந்தலா தம்பதியினருக்கு கனிஷ்டபுத்ரனாக பிறந்து, சிறிய வயதிலேயே குருகுலம் சென்று வேத ஆகமங்களைப்பயின்று, இளம் வயதிலேயே தனி ஒரு மனிதனாக சென்னைக்கு வந்து திருவான்மியூர் பாம்பன் சுவாமிகள் திருக்கோயிலில் அர்ச்சகப் பணியாற்றி வந்தார்.

மேலும் ஏறக்குறைய ஆண்டு 40 ஆண்டுகளுக்கு மேல் இத்திருக்கோயிலில் பணியாற்றி திருக்கோயிலுக்கு ஏனைய உதவிகளையும் உழைப்பையும் செய்து ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் மற்றும் ஸ்ரீமயூரநாதரின் மீது அலாதியான பக்தியைக்கொண்டு இருந்தார்.

பாம்பன் சுவாமிகளைத்தன்னுடைய குருநாதராக ஏற்றுக் கொண்டு தனது இறுதி மூச்சு உள்ளவரை அவருக்காகவே பாடுபட்டார்.

எப்போதும் "என் குருநாதன்" என்னைக் கைவிடமாட்டான் என்று சொல்லிகொண்டே இருப்பார்.

தான் வாழ்ந்த காலத்திலேயே இத்திருக்கோயிலுக்கு மகா கும்பாபிஷேகம் செய்து பார்க்க வேண்டும் என்று மிகவும் ஆவலுடனும் ஆசையுடனும் ஏக்கத்துடனும் இருந்தார்.

இருப்பினும் அதனைச்செய்ய இயலாமல் இறை அடி சேர்ந்தார்.

தற்போது அவரது குமாரர்களாகிய எங்களை ககொண்டு தனது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள இருக்கிறார்.

என்னுடைய வித்யா குருவான சிவஸ்ரீ கபாலி அண்ணா அவர்களின் சர்வ சாதகத்தில், தீக்ஷா குருவான சிவ ஸ்ரீ.வெங்கடசுப்பிரமணிய சிவாச்சாரியார் அவர்கள் பிரதான ஆச்சாரியமாக இருந்து நடத்தவிருக்கும் இந்த மகா கும்பாபிஷேக வைபவத்திலே எங்களது தகப்பனார் சிவஸ்ரீ K.S. சந்திரசேகர சிவாச்சாரியார் அவர்களின் நினைவாக, நமது சிவாச்சாரியப்பெருமக்களுக்கு எல்லாம் குருவாக விளங்கும் சிவஸ்ரீ. விஜய. சோமசேகர சிவாச்சாரியார் அண்ணா அவர்கள் தொகுத்து வழங்கும் "குரு வழிபாட்டுப்பெருமை" என்கின்ற நூலை வெளியீடு செய்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA/USA

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

உ

ஸ்ரீகணேசாய நம:



ஸ்ரீ சம்பந்த விநாயகர் திருவண்ணாமலை

அவ்வையார் தீவிரமான கணபதி உபாசனை செய்தவர் என்பது விநாயகர் அகவல் படித்த நம் அனைவருக்குமே நன்கு தெரியும். இந்த விநாயகரை கூட

அல்லல் போம் வல்வினை போம்
அன்னை வயிற்றில் பிறந்த தொல்லைபோம்
போகாத் துயரம் போம் – நல்ல குணம்
அதிகமாம் அருணைக் கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைத்தொழுதக் கால்.

என்று பாடி உள்ளார். இந்தப் பாடல் பழமையான நீதி நூலாக இருக்கக்கூடிய விவேக சிந்தாமணியில் இருக்கிறது. அனைத்து அல்லல்களையும் அழித்து பிறப்பு, இறப்பு என்ற இந்த ஸம்சார கடலில் இருந்து நம்மை விடிவிக்க கூடிய மிகப்பெரிய செல்வத்தை நல்க கூடியவர் இந்த செல்வ கணபதி என்று அவ்வையாரின் வாக்கில் இருந்து நமக்கு தெரிகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

லிங்காஷ்டகம் [ஆதிசங்கரர் அருளியது]

ப்ரஹ்மமுராரி ஸுரார்ச்சித லிங்கம் –
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம். [1]

தேவமுனி ப்ரவார்ச்சித லிங்கம்
காம தஹன கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம். [2]

ஸர்வஸுகந்த ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம். [3]

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம். [4]

குங்குமசந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் [5]

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்தி பிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் [6]

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் [7]

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பரமபர பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் [8]

லிங்காஷ்டக மிதம் புண்யம் யஃ படேச் சிவ ஸந்நிதௌ
சிவலோக மவாப்நோதி சிவேந ஸஹ மோததே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

श्री गुरुभ्यो नमः

शिवं शिवकरीं शक्तिं संदेशञ्च मनोन्मनीम्।
ईश्वरीं तत्सखीं गौरीं वन्दे विघ्नेश्वरं शुभम्।। शिवशक्तिभ्यां नमः।

मन्दस्मितं स्फुरित मुग्ध मुखारविन्दं -
कन्दर्पकोटि शतसुन्दर दिव्यमूर्तिम्।
आताम्र कोमलजटा घटितेन्दुरेखं-
आलोकये वटतटी निलयं दयालुम् ॥ श्री दक्षिणामूर्तये नमः।

वयं त्वां स्मरामो वरं त्वां भजामः-
वयं त्वां जगत् साक्षिरूपं नमामः
सदेकं निधानं निरालम्ब मीशं-
भवाम्बोधि पोतं शरणं व्रजामः ॥ स्वगुरवे नमः

चन्द्रार्धचूड शिखरि् प्रभव स्तनोति-
गौरी स्तनोदित पयो जलधिं निपीय ।
यो विघ्न पादप महा वनभङ्ग लीलां-
तं मत्तवारण महं शरणं प्रपद्ये।। श्रीगणेशाय नमः।

चिद्यक्तिः क्रियते मलावृतिमतां येनाऽऽत्मना मन्वहं-
स्त्रष्टा पालयिता समस्तजगतां हर्ता च यो राजते।
यस्यासीन् महिमा महानविषयो वाक् चेतसो स्सर्वदा –
तं वन्दे शिवं अम्बिकासहचरं स्वाभीष्ट संसिद्धये ॥ शिवाम्बिकाभ्यां नमः

यदीय मुद्राभिनयेन योगिनो- यदीय मौनेन च मुक्तसंशयः।
स्मिताभिरामानन मिन्दुशेखरं - भजेऽनिशं तं वटमूल वासिनम्।। दक्षिणामूर्तये नमः

या पक्व नीहारबलं विभिद्य-परं नृणां व्यञ्जयते शिवत्वम् ।
ज्ञान क्रिया रूपवती शिवस्य-शक्तिः पुरस्तात् इय माविरस्तु ।। परमगुरवे नमः

अग्राही किल ईश्वरः परशिवः तस्मात् संदेश स्स्वयं-
नादात्मा सकळाकळः प्रभु रतो ऽनन्तेश भट्टारकः।
तस्मादण्डज विष्णु वासव विधि श्रीकण्ठरुद्रास्ततः-
तत्राणा मवतारको मुनिवरो दूर्वासनामा गुरुः ।।(ज्ञानरत्नावली) दुर्वासमहर्षये नमः

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

सदाशिव मनन्तं च श्रीकण्ठं पुन रम्बिकाम्।
गुहं विष्णुं च धातारं गुरून् सप्त समाश्रये ॥ सदाशिवादि सप्तगुरुभ्यो नमः

सदाशिव समारम्भां श्रीकण्ठाचार्य मध्यमाम्।
अस्म दाचार्य पर्यन्तां वन्दे गुरुपरम्पराम्।। आदिशैवगुरुपरम्परायै नमः

न क्षेत्रं अरुणादस्ति नास्ति देवो ऽरुणेश्वरात्।
नाऽपि प्रदक्षिणा दन्यत् विद्यते ऽप्यधिकं तपः।। अरुणाचलाय नमः

नमः शर्वाय देवाय कारणत्रय हेतवे ।
निर्मलाय सदानन्द चित्स्वरूपाय शम्भवे।। ओशम्भवे नमः

शिवत्वं निर्मल यस्य शश्वद्विश्वविलक्षणम्।
तमहं सर्वदं वन्दे श्रीमदभ्र सभापतिम्।। ओं नटेशाय नमः

सर्वतः सर्वदा यस्य सन्निधिः सर्वदेहिनाम्।
सर्वार्थ साधकस्तरमै परस्मै महसे नमः।। परब्रह्मणे नमः

ओङ्कारनिलयं देवं गजवक्त्रं चतुर्भुजम् ।
पिचण्डिल महं वन्दे सर्व विघ्नोप शान्तये।। श्री गणेशाय नमः

श्रीमत्कल्प गणेशानं भजतां वाञ्छित प्रदम् ।
पार्वती हृदयाम्भोधि चन्द्रं वन्दे शिवात्मजम्।। महागणपतये नमः

गुरुं गणपतिं दुर्गां वटुकं शिव मच्युतम्।
ब्रह्माणं गिरिजां लक्ष्मीं वाणीं वन्दे विभूतये।। श्रीगुरुभ्यो नमः

सोम मानन्द सम्पूर्णं सोमार्धकृतशेखरम्।
दक्षिणाभिमुखं देवं दक्षिणामूर्तिं माश्रये।। आचार्येन्द्र परमेष्ठिने नमः

ओंकारं बिन्दुसंयुक्तं नित्यं ध्यायन्ति योगिनः।
कामदं मोक्षदं चैव ओङ्काराय नमो नमः।। प्रणवाय नमः

ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन्ति त्रया श्शिखाः।
तस्मै तारात्मने मेधा दक्षिणामूर्तये नमः।। मेधायश्शिणामूर्तये नमः

शिरस्थित सुपङ्कजे तरुणकोटि चन्द्रप्रभं-
वराभय कराम्बुजं सकलदेवता रूपिणम् ।
भजामि वरदं गुरुं किरणचारु शोभाकुलं –
प्रकाशित पदद्वया म्बुजलसत्क कोटि प्रभम्।। सद्गुरूचरणारविन्दाभ्यां नमः

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ओङ्कारः सकलागम प्रसूमर ब्रह्मोपम स्सर्वदा-
स्वच्छन्द श्शृतिसार सम्मृतवर स्वारस्य सन्तर्पितः।
ओमादि त्रितयेन यः स्वरयुतः सव्यञ्जनो यामलः
स्वान्तानादि निनादितः स दिशतु श्रेय स्सदा बिन्दुयुक्।। अम्बिकायै नमः

श्रीकान्त द्रुहिनोपमन्यु तपन स्कन्देन्द्र नन्द्यादयः –
प्राचीना गुरवोऽपि यस्य करुणा लेशाद् गता गौरवम् ।
तं सर्वादिगुरुं मनोज्ञवपुषं मन्दस्मितालङ्कृतं –
चिन्मुद्राङ्कित मुग्ध पाणिनळिनं चित्ते शिवं कुर्महे।। श्री गुरु चरणारविन्दाभ्यां नमः

वन्दे विश्वाधिकं शान्तं अनादिनिधनं शिवम्।
निष्कळं निष्कळङ्कञ्च शक्तिं ज्ञानक्रियात्मिकाम्।। शिवशक्तिभ्यां नमः

गुरवे सर्वलोकानां भिषजे भवरोगिनाम् ।
निधये सर्वविद्यानां दक्षिणामूर्तये नमः ॥

श्रीकण्ठाचार्य वन्दनम्

श्रीकण्ठ वंशोदधि पूर्णचन्द्रं - श्रीकण्ठ शास्त्रार्थविदं मुनीन्द्रम् ।
श्रीकण्ठ भावाञ्चित यज्ञसूत्रं - श्रीकण्ठ माचार्य महं भजामि ।।

शैवस्थापनाचार्याणांवन्दनम्।

ईशं शैलसुतां इभास्य शरजौ चण्डेश्वरं नन्दिनं-
नत्वा भृङ्गि रिटि त्रिषष्टि महितान् भक्तांश्च भक्त्युन्नतान् ।
श्रीकण्ठागम तत्व सौरभविदं श्री भाष्यकारं गुरुं –
शैवस्थापन धूर्वहञ्च हरदत्ताऽऽचार्यवर्यं भजे।।

अघोरशिवाचार्यस्तवः

श्री शैवागम विषृये परशिवाद्यर्थस्वरूपक्रमं -
यो विद्यातिमिरं व्यपोह्य निखिलं विद्योतयत्यादरात् ।
स्व व्याख्यान महामयूख निवहैः दीक्षाविशिष्टात्मनां -
वन्दे ऽघोरशिवाख्य देशिकरविं बोधाय तं सर्वदा ।।

आचार्याणां प्रणतिः।

श्रीमद् देशिकपादेभ्यो सशक्तिभ्यो नमोनमः ।
सदा शिष्टात्म चिद्यक्ति कारणेभ्यो नमो नमः ।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீகுருப்யோ நம:

குரு வழிபாட்டுப் பெருமை

பொருளடக்கம்

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
1.	ஞானநெறி	35
2.	குருவேதுணை	35
3.	வழிபடத்தக்கவர்கள்	36
4.	இருவகை குருமார்கள்	36
5.	மூவகை வழிபாடுகள்	36
6.	குரு இலிங்க சங்கம வழிபாடு.	36
7.	குருவழிபாடு	37
8.	மாணாக்கராவர் யாவர்?	39
9.	குருவே சிவம்.	40
10.	அடியவர் வழிபாடு)	40
11.	தீக்ஷாகுருவின் திருமேனிப்பெருமை	41
12.	குருபூசையின் தேவை	42
13.	குருவின் பெருமை	44
14.	குருவழிபாடு	46
15.	தீக்ஷா சிறப்பு	47
16.	பிரம்மோபதேசம்	50
17.	திருமுறையில் தீக்ஷை	51
18.	ஸத்குரு இலக்கணம்	54
19.	குருவின் அருஞ்செயல்	54
20.	வேதம்கூறும் ஞானதீக்ஷை	56
21.	குருகுலவாசப் பெருமை	60

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
22.	குருசிஷ்ய நியதிகள்	61
23.	சிஷ்யனின் இலக்கணம்	62
24.	சீடனுக்கு சேர்க்கையின் சிறப்பு	64
25.	குருசொல்தரும் மேன்மை	64
26.	உபதேசத்தின் உன்னதப்பயன்	65
27.	ஞானலக்ஷணம்	66
28.	ஆத்ம இயற்கைக்குணங்கள்பற்றி உபதேசம்	70
29.	அறநூல் அறிவுரை.	73
30.	அறம்பின்பற்றுதல்	78
31.	குருவம்ச கிரமம்	80
32.	மூவகை குருநாதர்கள்	81
33.	ஆகமபரம்பரா குருக்கள்	82
34.	ஆகமத்திருமடங்கள்	85
35.	ஆகம மடாதிபதிகள்	86
36.	சைவஸந்தான குருக்கள்	87
37.	சைவஆச்ரமிகள்	89
38.	சிவாகம குருவரர்களின் பூஜாலக்ஷணம்	89
39.	ஆகமக்கிரியாவிதி	90
40.	மந்திரமஹிமைகள்	91
41.	மந்திரத்தேவை	92
42.	மந்திர உபதேசத்தின் மேன்மை	94
43.	குருமூர்த்தி மஹிமை	95
44.	ஆசார்ய அதிகாரம்	97
45.	மந்திர சாஸ்த்திரங்களை குருவிடமே பயில்வது முறை	99
46.	குருவால்அறநெறி அறியும்முறை	100
47.	குருவே மும்மலம் நீக்கி முக்திதருபவர்	101

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
48.	தீட்சைவகையும் பயனும்	102
49.	நால்வகை உடற்தோற்றம்	102
50.	தீக்ஷையின் செய்முறை	103
51.	வித்யாப்யாஸம் மந்திரஸ்வீகரணம்	104
52.	சிஷ்யாபிஷேக விதி	109
53.	ஆசார்ய இலக்கணம்	110
54.	ஆசார்யருடன் பணியாற்றவல்லவர்கள்	115
55.	குருவின் பூஜாமஹிமை	116
56.	ஆசார்யர் பெருமையும் இலக்கணமும்	116
57.	குரு தேசிக சொல்விளக்கம்	118
58.	ஏற்கத்தகாத ஆசார்ய இலக்கணங்கள்.	118
59.	ஆசாரியத் தேர்வுமுறை	119
60.	யார் குரு? யாருக்கு குரு?	122
61.	பரமகுருவின் சிஷ்யர்களுடனான கோலம்.	124
62.	ஆசார்ய மஹிமை	125
63.	ஆசார்ய குருதக்ஷிணை விவரம்	126
64.	குருவின்குரு	129
65.	பரமகுருவும் கிரககுருவும்	130
66.	குருவடிவிலே தெய்வங்கள்	130
67.	குருவாய் அருளும் குமரன்	131
68.	தேவகுரு வியாழபகவான்	133
69.	தேவகுரு வழிபாடு	133
70.	ஸம்ப்ரதாய வித்யாகுருமார்கள்	134
71.	சைவஸந்தான குருக்கள்	136
72.	ஸந்தானாசாரியார் வரலாறு	137
73.	1. மெய்கண்டார் வரலாறு	138

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
74.	2 அருணந்தி சிவாசாரியர் வரலாறு	140
75.	3. மறைஞானசம்பந்தர் வரலாறு	141
76.	4. உமாபதிசிவாசாரியசுவாமிகள் வரலாறு	142
77.	சைவசமய ஆசார்யர் நால்வர்	144
78.	நால்வகை அருள்நெறிகள்	145
79.	1. தாஸமார்க்கம்	145
80.	2. புத்திர மார்க்கம்	146
81.	3. சகமார்க்கம் (தோழமைநெறி) நட்புநெறி	146
82.	4. சன்மார்க்கம்	146
83.	அறிவோம் குரு வரலாற்றை	147
84.	திருநாவுக்கரசு நாயனார்வரலாறு	147
85.	திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வரலாறு	150
86.	சுந்தரமூர்த்திசுவாமிகள் வரலாறு	152
87.	மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு	154
88.	ஆசார்யவழியாடு (குருபூசைச்செயல்)	158
89.	முடிவுரை – நமது கடமையும் பயனும்	159
90.	தட்சணாமூர்த்தி திருவருட்பா	160
91.	மயூரநாத வள்ளல் வடிவேல் முருகன் துதிப்பாடல்	165
92.	முருகன் திருப்புகழ்	170
93.	தேவகுரு பிருஹஸ்பதிக்ரஹ துதி	170

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ குருகுஹாய நம:

ஸ்ரீ ஸுப்ரமண்ய குருமூர்த்தி

பன்னிரு கரத்தாய் போற்றி, பசும்பொன் மாமயிலாய் போற்றி..
முன்னிய கருணை ஆறுமுகப் பரம்பொருளே போற்றி..
கன்னியர் இருவர் நீங்கா கருணை வாரிதியே போற்றி..
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்கும் மாமணியே போற்றி..

மூவிரு முகங்கள் போற்றி! முகம் பொழி கருணை போற்றி !
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி !
காஞ்சிமா வடிவைக்கும் செவ்வேள் மலரடி போற்றி ! – அன்னான்
சேவலும் மயிலும் போற்றி! திருக்கை வேல் போற்றி போற்றி!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீகுருப்யோ நம:

குரு வழிபாட்டுப் பெருமை

ஞானநெறி

கலைஞானம் கைவரப் பெறுதற்குரிய அனைத்து நூல்களையும் நான்மறைகள், ஆகமங்கள், புராணங்கள் ஆகியவைகளையும் நன்குணர்ந்து, அவற்றின் வழி நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவு நீங்கி, மேலாய இறை–உயிர்–தளை ஆகிய முப்பொருள் உண்மையை உணர்ந்து, அதன்பயனாக மெய்யுணர்ந்து, கற்றல் கேட்டல் சிந்தித்தல், நிட்டைகூடல் ஆகிய நான்கு படிமுறைகளின்வழி இறைவன் யாண்டும் நீக்கமற நிற்கும் நிலையை உணர்ந்து, அதனோடு இயைந்துநிற்பது ஞானநெறி ஆகும். இதன்பயனாக இறையடியைச்சேரும் வீடுபேற்றை, வீட்டுநெறியைப்பயனைப் பெறலாம் என்பது சைவசித்தாந்தம்.

குருவேதுணை

இத்தகைய ஞானநெறியை நமக்கு எடுத்துக்கூறி இறைவனை அடைய உதவுவது குருவருள் ஒன்றே ஆகும். குருவருள்இன்றி இறையருள் கிட்டாது. அறியாமையெனும் இருளால் குருடனாக உள்ள சீடனுக்கு ஞானமாகிற தூரிகையால் அறிவொளிக்கண்ணைத் திறந்துவைப்பவரே குரு எனப்படுகிறார். அவரை வணங்குதலே குருவழியாடு.

अज्ञानतिमिरान्धस्य ज्ञानाञ्जन शलाकया।
चक्षुः उन्मीलितं येन तस्मै श्री गुरवे नमः।।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வழிபடத்தக்கவர்கள்

உலகில் உயிர்களால் வழிபடத்தக்கவர் எழுவர் ஆவர். அவர்கள் 1. இறைவன் 2. தாய் 3. தந்தை 4. குரு 5. அரசன் 6. தமயன் முதலிய மூத்தோர் 7. இறையுணர்வும் நல்லொழுக்கமும் சிவத் தொண்டும் சார்ந்த அடியவர் ஆவர். இவ்வெழுவருள் குரு ஒருவராவார்.

இருவகை குருமார்கள்

இக்குருவும் இருவகைப்படுவர். ஒருவர் கலையுணர்வை வழங்குபவர் இவர் வித்யாகுரு என்று அழைக்கப்படுபவர். மற்றொருவர் உணர்வரிய மெய்ஞ்ஞானத்தை வழங்குபவர். இவர் தீட்சாகுரு என்றும், ஆசார்யர் என்றும் ஞானதேசிகர் என்றும் அழைக்கப்படுபவர். இவருக்கும்இறைவனுக்கும் வேறுபாடில்லை. ஆசார்யரே ஆண்டவனின் திருவுருவம். இதனை வேதம் ஆசார்யதேவோபவ என்றுகூறி ஆசார்யரையே தேவனாகக்கொண்டிரு என்கிறது.

மூவகை வழிபாடுகள்

குரு என்றசொல்லுக்கு, பெரியோர்கள்என்றும், தந்தைஎன்றும் பொருள் உண்டு. மிகப் பெரியது, அதிகஎடையுடையது, எழுத்தறி வித்தவன், இறையறிவித்தவன் என்று பலவகைப்பொருள் உடையது குரு எனும் சொல். சைவசமயநூல்களில் குருவழிபாடு, லிங்கவழிபாடு, ஜங்கமவழிபாடு என்பதாக முன்றுவகையில் வழியாடு கூறப்பட்டுள்ளது.

தாயும் தந்தையும் முதற் கண்கண்ட கடவுளாவர். அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்பது ஔவையாரின் அருள்வாக்கு, வேதம் மாதா பூர்வரூபம்–பிதா உத்தரரூபம் ப்ரஜா ஸந்தி:| என்று தாயே முதல் உருவம், தந்தையே அடுத்த உருவம், இவர்களால் காண்பிக்கப்படுபவரே குரு உருவம். இவ்வாறு ஒருவர் மற்றவரைக்காட்டி அருள்வர். தந்தையும் தாயும் ஆகி தான் அவன் ஞானமூர்த்தி என்கிறார் தேவாரத்தில் திருநாவுக்கரசர். மேலும் ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன்தோன்றினராய் மூன்றாய் உலகம் படைத்து உகந்தான் என்று தேவாரத்தில் கடவுளை அப்பர்சுவாமிகள் தெரிவிக்கிறார்.

குரு இலிங்க சங்கம வழிபாடு.

தாய்,தந்தை, தம்முன்னோர் ஆகியோரை அவ்வப்போதெல்லாம் வழிபட்டுவருதல் கண்கூடு. பலரும் பெற்றோரை வழிபட்டு உயர்ந்ததை வேதாகம புராணங்களால் நன்கு அறியமுடிகிறது. எண்திசைக்காவல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெய்வங்களின் அம்சமும் அன்புமனமும் கொண்டவரே அரசராவார். இன்றைய நிலையில் காணமுடிவதில்லை. அடுத்து இருக்கும் இருவருள் இறைவனைச் சிவலிங்கவடிவிலும், வித்யாகுருவைக் கல்விக் கலையுணர்வுதரும் குருவான நிலையிலும், தீக்ஷாகுருவை உணர்வரிய உயிர்க்குமெய்ஞானம்தரும் ஞானகுருவாம் நிலையிலும் வைத்து வழிபடுகின்றோம். அடுத்து இருக்கும் இறைவனின் அடியவர்களைப் சங்கமவழிபாடு என்றவகையில் வைத்து வழிபடுகிறோம். இவ்விதமாக குரு, இலிங்கம், சங்கமம், ஆகிய இம்மூவகை வழிபாடுகளும் முத்திக்கு வித்தாகும் என்று அறநூல்கள் கூறுகின்றன. இம்மூவகை வழிபாடுகளுள் இறைவழிபாடு இருவகைப்படும். அவை. ஒன்று அகவழிபாடு மற்றொன்று புறவழிபாடு, எனப்படுபவையாம்.

முதலாவதான லிங்கவழிபாடு, அருவம், அருவுருவம், உருவம் என்று மூவகை லிங்கங்களில் நிகழும். 1. சிவலிங்கம் அருவநிலை = அவ்யக்தலிங்கம், 2. முகலிங்கம் வ்யக்தாவ்யக்தலிங்கம் = அருவமும் உருவமுமுள்ளது. 3. உருவச்சிலைகளில் பலவடிவங்களில் உள்ளவை வியக்தலிங்கம் எனப்படுபவை.

அப்பாஇம் முத்திக் கழியாத காரணந்தான்
செப்பாய் அருளாலே செப்பக்கேள் – ஒப்பில்
குருலிங்க வேடமெனக் கூறில் இவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண்

கற்றா மனம்போலக் கசிந்துகசிந் தேஉருகி
உற்றாசான் லிங்கம் உயர்வேடம் பற்றாக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார்.

எனவரும் அருளாளர்களின் திருவாக்குகளால் இவ்வுண்மை அறியப்படும். இம்முவகையான குரு–லிங்க–சங்கம வழிபாடுகளில் முதலாவதான குருவழிபாடு பற்றிய சிலசெய்திகளைக் கட்டுரையாக இனி இங்கு காண்போம்.

குருவழிபாடு

குருவாவார் யார்? கல்விநெறியில் கலையுணர்வு அறிவைத் தருவோர் எவ்வாறு இருத்தல் வேண்டும்? என்பதை இலக்கணநூல்கள் எடுத்து இயம்புகின்றன. அதனை அவற்றுள் கண்டுதெளியலாம். சமயநெறியில் இறையுணர்வு மெய்ஞ்ஞானத்தை வழங்கும் குரு மூர்த்திகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை வேதசிவாகமங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பலவகையில் இலக்கணங்களால் எடுத்துக் கூறுகின்றன. தீக்ஷா விதியில் ஆசானுக்கு இருக்கவேண்டிய மனப்பக்குவத் தகுதிகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. உடலாலும், உள்ளத்தாலும், பயிற்சியாலும், யோகத்தாலும், ஒழுக்கத்தாலும், சமயஞானத்தாலும், கிரியையாலும், பலவகையில் குருவிற்கான தகுதிகள் இலக்கணமாக் கூறப்படுகின்றன. அவற்றில் ஸர்வ லக்ஷண ஹீநோ(அ)பி ஞானவான் குருரிஷ்யதே என்று கூறப்படுவதால் எந்த இலக்கணமுமில்லாதபோதும் ஞானவானே குரு எனப்படுபவனாகிறான். அந்த மெய்ஞானம் என்பது, பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களின் உன்மைநிலையை அறிந்திருத்தலே ஆகும். இதுவே முக்திதரவல்லதாகும்.

என்னை அறிவென்றான் என்னறிவில் ஆனந்தந்
தன்னை சிவமென்றான் என்னை
உன்னைப் பாரா மறைத்ததுவேபாசமென்றான் இம்
மூன்றும் ஆராய்ந்தவர் முத்தராம்.

என்பார் திருமூலநாயனார். ஆகமமே அறம் ஸநாதனதர்மம் இது நான்குபாகமாயுள்ளது, நிகரற்ற அறநூல் ஆவது.

ஞானம் க்ரியா ச சர்யா ச யோகஸ் சேதி சுரேச்வரி |
சதுஷ்பாதஸ் ஸமாக்யாத: மம தர்மஸ் ஸநாதந: ||
(சிவமஹாபுராண வாயுசம்ஹிதை).

என்கிறது வாயுசம்ஹிதை. இதில் காணும் ஸநாதனம் என்ற சொல்லுக்கு நித்யமானது, உண்மையானது, என்றுமே மாறாதிருப்பது, தொன்மையானது, எப்போதுமுள்ளது, சாச்வதமானது என்பதும் பொருளாகும். மெய்ஞ்ஞானத்தை வழங்கும் குருமூர்த்திகள் எவ்வாறு இருக்கவேண்டு மென்பதைத் தருமையாதீனக் குருமுதல்வர் அருமையாக எடுத்துக் காட்டுகின்றார். தமது நூலில் அதாவது,

தன்னை யறியார் தலைவன் தனை யறியார்
முன்னை வினையின் முடிவறியார் – பின்னைக்
குருக்கள் என்று பெயரிட்டுக் கொள்ளுவார்கள்
ஐயோ தெருக்கள் தனிலே சிலர். (சிவபோகசாரம்)

என்பது சிவபோகசாரப் பாடலாகும். இதனால் குருவாவார் யாவர்? என்பது நன்கு புலனாகும். அதாவது, அறிவுத்தகுதியாக உயிர் என்பது எது? அது எத்தகையது? அது எந்தநிலையில் இருக்கிறது? எந்தநிலைக்கு ஆளாதற்கு உரியது? என்பது பற்றித் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும். அடுத்ததாக இவ்வுயிர்கட்கு உரிய தலைவன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
யார்? அவர் தன்மை எத்தகையது? அவனுக்கும் இவ்வுயிர்கட்கும் உரிய பரம்பதியாகிய தொடர்பு என்ன? என்பன போன்ற பரம்பதியாகிய இறைவனைப் பற்றிய செய்திகளைத் தெரிந்திருத்தல் வேண்டும். மூன்றாவதாக உயிர் இறைவனை அடைவதே உறுதி எனில், அவ்வுயிர் அவ்வாறு அடையாததற்குரிய தடைகள் யாவை? அத்தடைகளை எவ்வாறு எவ்வழிகளால் அகற்றவேண்டும்? அவ்வாறு அகற்றி அவ்விறைவனை அடையுங்கால் உயிர்களுக்குக் கிடைக்கத்தகும் பேறு என்ன? என்பனவாய்செய்திகளும் தெரிந்திருத்தல் வேண்டும். இம்முப்பொருள் அறிவும் வேண்டும் என்பது முதல்படியாகும்.

அடுத்து இவ்வறிவின் பயனாக அதற்குத்தக நிற்கும்தகவும் (ஆசார அனுஷ்டானமும்) அவருக்கு அமைந்திருத்தல் வேண்டும் என்பர்.

தானல்லா தத்தனையுந் தானென் றுழலாமல்
தானெல்லா மாயதனுள் தாக்காமல் – தானெல்லாம்
ஆனோம் எனும் போதந் தாக்காமல் ஈசனிடத்(து)
ஆனோனே ஆயினவனாம். **(சிவபோகசாரம்)**

என்பது சிவபோகசாரத்துள் வரும் பிறிதொரு பாடலாகும். குருவானவர், யான், எனது, என்னும் செருக்கற்றும், உலகியல் நிலைகள் அத்துணையும் கடந்த அருளியல் நிலையில் தலைப்பட்டும் நிற்றல்வேண்டும். அத்தகைய தலைமையும், தகவும் இருப்பினும் அவற்றால் சிறிதும் முனைப்பின்றி இருத்தல்வேண்டும். இத் தகுதிஉடையாரே ஞானகுருவாவார்.

மாணாக்கராவர் யாவர்?

இனி அத்தகைய குருவினிடமாக ஞானம் பெறுதற்குரிய மாணாக்கர் இயல்பையும் வேதாகமங்கள் விளக்கியுள்ளன. இதனைத் தமிழில் சிவபோகசாரம் எனும் நூல் நன்கு விளக்குகின்றது.

அன்புமிக உண்டாய் அதிலே விவேக முண்டாய்த்
துன்பவினையைத் துடைப்பதுண்டாய் – இன்பம்
தரும் பூரணத்துக்கே தாகமுண்டாய் ஓடி
வருங் கரணர்க் குண்மை வை.
ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும்
பெருகுதவ சித்தியெல்லாம் பெற்றும் – குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச்
சித்தசல னமர்ந் தினம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பன அப்பாடலகளாகும். இவற்றுள் முனனையது மாணாக்கர்க் குரிய தகுதியையும், பின்னையது அதுபெற்றவழி இருக்கத்தகும் தகுதியையும் விளக்குகின்றன. இவ்வாறான தகுதியுடையாரன்றிக் குருவாகவும், மாணாக்கராகவும் இருப்பின்.

குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி
குருடுங் குருடுங் குழிவிழு மாறே. என்றவாறேயாம்.

உண்மை இதுவாயினும் அவரவர் வினைவழி அவரவர் வந்தனர், அவரவர் வினைவழி அவரவர் அனுபவம் என்பதே வாய்மை யாதலின் அவரவரின் புண்ணியப்பேற்றிற்கு ஏற்பவே இவையெல்லாம் வாய்க்கும்.

குருவே சிவம்.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி எனத் திருமூலதேவரும்,

பரப்பிரம்மம் சிவன் என்றும், பரசிவன் தான் என்றும்
பரஞானம் இவன் என்றும், பராபரன் தான் என்றும்
அரன் தருஞ்சீர் நிவையெல்லாம் இவனே என்றும்
அருட்குருவை வழிபடவே அவன் இவன் தான் ஆயே
இரங்கிவா ரணம் யாமை மீன் அண்டஞ் சினையை
இயல்பினொடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதாம் ஆக்குமா போல் சிவமே யார்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே. (சிவஞானசித்தியார்)

என அருள்நந்திசிவாசாரியாரும் கூறுமாற்றான், ஞானகுருவைச் சிவபரம்பொருளாகவே கருதிவழிபடவேண்டும். என்பது அறியத் தக்கதாம்.

அடியவர் வழிபாடு (ஜங்கமவழிபாடு)

நல்லொழுக்கமும், இறைவனிடத்து மனம் மொழி மெய்களால் வழிபாடு ஆற்றும் பத்திமையும், சிவத்தொண்டும், செய்துவருவோர் அடியார்களாவர். சிவலிங்கத்தைப் பூசித்துவரும், அர்ச்சகர்கள் ஜங்கமலிங்கம் எனப்படுவார்கள். அசையும் உற்சவமூர்த்திகளும் ஜங்கமலிங்கம் என்று ஆகமங்கள் கூறும். இவ்வாறாய் அடியவர்களையும் இறைவன் என்றே கருதி வழிபடல் வேண்டும். இத்தகையாரை இல்லத்திற்கு அமைத்து எழுந்தருளுவித்து உணவுஅளித்தலே மாகேசுவரபூஜை எனப்படும். நடமாடும்கோயில் எனத் திருமந்திரம் குறித்துக்காட்டுவதும் இப்பெருமக்களையேயாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தீக்ஷாகுருவின் திருமேனிப்பெருமை

கிடைத்தர்க்கரியது மானிடப்பிறவி. நமக்கு உடல்கிடைத்தது இறைவனை வழிபடுவதற்கே என்பதை பலரும் உணருவதில்லை. பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார். இறைவனடி சேராதார் என்ற திருவள்ளுவரின் திருவாக்கின்படி, இறைவனடிசேர்ந்தோரே பிறவிப்பெருங்கடலைக் கடந்தவர் ஆவர். இறைவனடிசேராதார் பிறவிக்கடலைக் கடக்காது துன்பக்கடலில் வாழ்பவர்கள் ஆவர். இதனை அருள்நந்திசிவாசாரியார், சிவஞானசித்தியாரில் கூறியுள்ளார்.

மானுடப் பிறவிதானும் வகுத்தது மணவாக் காயத்
தானிடத் தைந்துமாடும் அரன் பணிக் காக வன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் தனை அருச்சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ.

என்றபாடலால் மானுடப்பிறவி அரன்பணியாற்றிடப் பெற்றது என்கிறார். அவ்வாறு ஐந்தெழுத்தோதி அரனை அருச்சனைசெய்ய, குருவிடம் தீட்சைபெறுவது தலையாய முதல்கடமையாகிறது.தீக்ஷைஒன்றே உயிர்களுக்கு இனிபிறவாத தன்மையை முத்தியைத் தரவல்வது.

இம்மண்ணுலகில் குருவின் உடலையே தனக்கு உறைவிடமாகக் கொண்டு, குருவாய்இருந்து, அருள்நெறிகாட்டி ஆட்கொள்கிறான். இதனைத் திருஞானசம்பந்தசுவாமிகள் தனது தேவாரத்தில் கூறுகிறார்.

உரைசேரு மென்பத்து நான்கு நூறாயிர யோனிபேத
நிரைசேரப் படைத்தவற்றுள் உயிருக்குயிராய்
அங்கங்கே நின்றான்கோயில்

என்று குருவின் திருமேனியே கோயில் என்கிறார். குருஉடலையே இடமாக ஏற்று, அஷ்டமூர்த்தியான ஈசன், ஆன்மாவையே யஜமான மூர்த்தமாய் கோயில்கொண்டு, நின்று ஐந்தொழிலாற்றி அருள்கிறார். குரு அருள்செய்வதே தீட்சை எனப்படுகிறது. சிவனிடமிருந்தே தோன்றியவர்களாய், சிவனால் தீட்சைசெய்யப் பெற்றவர்களாய், சிவசிருஷ்டி ஸம்பந்தமுள்ளவர்களாய் ஆதிசைவகுலத்தில் உதித்தவர்களாய், வேதாகமங்களைக்கற்று வைதிகசைவநெறியில் வாழ்பவர்களாய், முப்போதும் எக்காலமும் சிவனின் திருமேனியைத் தீண்டி, அருச்சனைபுரிந்து, பக்குவ ஆன்மக்களுக்கு பரமுக்தியை அடைவிப்பவர்களே ஆதிசைவகுலத்து உதித்த குருக்கள் எனப்படுவர். அர்ச்சகஸ் து ஹரஸ் ஸாக்ஷாத் அநயோ ரந்தரம் நஹி என்கிறது ஆகமம் அதாவது அர்ச்சகரும் சிவனும் கண்ணில்தெரியும்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
ஒருவரே இவர்களுக்குள் வேறுபாடு இல்லை என்கிறது சிவாகமம். அனைவருக்கும் குருவாகவும், உலகநலம் கருதி செயல்படுவதற்கு அதிகாரம் படைத்தவரும், ஆதிசைவகுல ஆசார்யர்களே (சைவஆசார்யர்களே) ஆவர் என்கின்றன ஆகமங்கள். யாவரும் தத்தமது குருவின் திருவடித்தாமரைகளைத் தனது தலைமீது உள்ளதாக எண்ணுதல் மரபுமுறை. இதனையே சிரஸ் ஸ்தித ஸுபங்கஜே தருணகோடி சந்திரப்ரபம் பதத்வயம் எனப்போற்றுவர்.

ஒரு குருவிடம் சிவதீக்ஷை பெற்று, பின்பு தினமும், லிங்கத்தில் சிவபூஜை, குண்டத்தில் சிவாக்னிபூஜை, பீடத்தில் சிவனேயான தனது குருவின்பூஜை இவற்றைத் தவறாது செய்துவரவேண்டும் என்று சைவாகமங்கள் கட்டளையிடுகின்றன.

दीक्षित: कारयेत् नित्यं शिवग्निगुरुपूजनम् என்கிறது சைவாகமம்.

குருபூசையின் தேவை

எனவே ஸ்ரீகுருபாதுகாப்யாம்நம: என்றுகூறி தமது குருபாதுகையை தினமும் வணங்கிடவேண்டும் என்றும், இல்லையேல் அவரதுசெயல் யாவும் வீண்ஆகும் என்பதையும் ஆகமம் கூறும்.

गुरुपूजां बिना नाथ कोटिपुण्यं वृथा भवेत् । என்று பார்வதி கூறுகிறாள்.

சிவனிடம் பார்வதி கூறியுள்ளபடி குருபூஜை என்பது இல்லாவிடில் கோடிக்கணக்கான புண்ணியச்செயல்களும் பயனற்றவைகளாகும் என்ற கூற்றினால் தீக்ஷையின் அவசியத்தேவையை உணரலாம்.

गुरुभक्त्या च शक्रत्वं अभक्त्या शूकरो भवेत्।
गुरुभक्ते: परं नास्ति भक्तिशास्त्रेषु सर्वत:।।

என்கிற சாத்தாகமவசனத்தின்படி, ஒருவன் குருபக்தியால் இந்திரனாகவும், குருபக்தியில்லாமையால் பன்றியாகவும் ஆகிறான் என்று அறியப்படுகிறது. மேலும் ஆகமங்களில் சிறப்பாக குருபக்தி,

गुरुभक्ते: परं अन्यत् नास्ति नास्त्येव भौवने।।

மூவுலகிலும் குருபத்திக்குமேலானதொன்று இல்லவேயில்லை என்று கூறப்படுகிறது. காரணம் யாதெனில்? முக்திஅளிப்பவரும், இறையருளைப்பெறஉதவும் மூலமந்திரத்தை உபதேசிப்பவரும், குருவே ஆகிறார். நெருப்பு, இரும்பைத் தன்குணத்திற்குக் கொண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வருவதுபோல், இறைவனுடைய எட்டுகுணங்களை ஆன்மா எனும் உயிர் பெற்று சிவத்தன்மையைப்பெற்று, நிறைவடைதலுக்கு ஆசானின் அருள் உதவுகிறது. குருவின் மந்திரத்தைக் கொண்டு பயன்பெற விழையும், மந்த்ரஸாதகனுக்கு ஞானமும் செயலும் அவசியமாகிறது. ஞானம் எனும் சித், அறிவும் செயலுமாய் இருநிலையிலுமிருப்பதாகும். இதனை மிருகேருந்திராகமம் சைதன்யம் திருக்கிரியாரூபமாயிருப்பது என்பதை चैतन्यं दृक् क्रिया रूपं तदस्ति आत्मनि सर्वदा।। என்கிறது. ஞானமார்க்கத்தில் முறையே சிவனைவழிபடுவதும், இதனால் அவசியமாகிறது. ஆகாயத்தில் பறவைக்கு எவ்வாறு இரண்டு சிறகுகளாலேயே போக்கு உள்ளதோ அவ்வாறே மண்ணுலகில் மனிதகுலத்திற்கு மந்திரஉபாஸகராகிய ஸாதகனுக்கு ஞானம் கர்மம் ஆகிய இரண்டினாலுமே மோக்ஷஸித்தி ஏற்படுவதாக ஆகமங்கள் கூறுகின்றன. இதனைக்கூறும் ஆகமசான்று இதுவே.

उभाभ्या मेव पक्षाभ्यां पक्षिण: खे यथा गति:।
तथैव ज्ञानकर्मभ्यां साधकानां सदा गति:।। (तन्त्रसारे)

குருவினது மந்திரம் பயன்தந்திடுவதற்கு, சீடனுக்கு ஒழுக்கம் மிகவும் முக்கியமாகிறது. ஒருவருக்கு மந்திரஸித்தியானது, குருவினுடைய உபதேசத்திறமையாலும் அதாவது முறையான உச்சரிப்பு, பாவனாமுறை, விளக்கவுரை, இவற்றாலும் அந்த குருவினுடைய மனத்தகத்தே உள்ள இறைவனின் அருள்வழங்குதலாலும், அதாவது சீடனிடத்தில் அவருக்கு ஏற்பட்ட பெருங்கருணைமிக்க அருளாசியாலும், உபதேசிக்கப்பட்ட மந்திரத்தினுடைய மஹிமை பெருமைகளாலும், உண்மையான பத்தியினாலுமே ஏற்படுகிறது என்று குலப்ரகாசதந்த்ர நூல்தெரிவிக்கிறது.

उपदेशस्य सामर्थ्यात् श्रीगुरोश्च प्रसादत:।
मन्त्रप्रभावात् भक्त्या च मन्त्रसिद्धि: प्रजायते।। (शाक्ततन्त्रे)

மேலும் மந்திரசாஸ்த்ரம் பிறரதுஉணவுகளை ஏற்பதால் நாக்கும், பிறர்பொருளை ஏற்பதால் கைகளும், பிறர் பெண்களை விரும்புவதால் மனமும், மாசடைந்து தாழ்வடைவதால், அக்குற்றம் தீக்ஷை எனும்தீயால் பொசுக்கப்படாதவரையில், எவ்வாறு அந்தபாவிக்கு மந்திரசித்தியானது ஏற்படும்? ஏற்படாது என்பதாம்.

जिह्वा दग्धा परान्नेन हस्तौ दग्धौ परिग्रहात्।
परस्त्रीभि र्मनो दग्धं मन्त्रसिद्धिः कथं भवेत्।।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உலகில் புலன்களின் வழியில் சென்று, இறைவனை அறிய விழையாமல் தமது வாழ்வை வீணடிப்பதிலிருந்து, நம்மை விடுவித்து, சிவஞானத்தைப் போதித்து, ஆன்மாவை உய்விக்கும் குருவினாலன்றி, மற்றதால், யாரும் பிறவிப்பயனை அதாவது சிவபதத்தை அடைந்து, பேரானந்த சிவபோகத்தை அனுபவிக்கும் அருட்செல்வனாக ஆகிவிட இயலாது என்கிறது சிவஞானபோதம் எனும் நூல்.

स्थित्वा सहेन्द्रिय व्याधैः त्वां न वेत्सीति बोधितः।
मुक्त्वै तान् गुरुणा ऽनन्यो धन्यः प्राप्नोति तत्पदम्।। (शिवज्ञानबोधम्)

குருவின் பெருமை



இவ்வாறு சிவநெறிவழுவாது வாழும் ஸத்குரு ஒருவருக்கு கிடைப்பது அரிதாகும். எவ்வாறு வண்டானது பலமலர்களைத் தேடிச்சென்று, அம்மலரின் தேனைப் பெறுகிறதோ, அவ்வாறே, ஒருசீடனும், பலஆகம அறிஞர்களைநாடி ஸத்குருவைத் தமக்குத் தேர்வுசெய்து, தேன்போன்ற இத்தகைய வேதாகம விசேஷமந்திரமறிந்த ஆசான்கள் இவ்வுலகில் மிகவும் அரிது என்றும், மந்திரம் மூலிகை அறிந்தவர்களே பலருள்ளனர் என்றும் பரசுராமகல்பசூத்திரநூல் ஆகமக்ஞானகுரு பெருமையைக் கூறுகிறது. அதற்கான சான்று இதுவே.

गुरवो बहव स्सन्ति मन्त्रौषध समागमाः।
निगमागम शास्त्रोक्त मन्त्रज्ञो दुर्लभो भुवि।। (परशुरामकल्पसूत्रम्)

உலகில்வாழும் மக்கள்யாவரும், அடையவிரும்புகின்றமையால் புருஷார்த்தம் எனப்படுகிறதான, தேடப்படுகிற விரும்பப்படுகிற அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நால்வகையான பயன்களையும், அடைவதற்கு சிவபூசையைச் செய்வது ஒன்றே எளிய உரியவழி என்று சிவாகமங்கள் உறுதிபடச் சொல்கின்றன. அதற்கான சான்று.

லிங்கார்ச்சன ஸமோ தர்மோ நாஸ்த் யத்ர புவனத்ரயே| (அஜிதாகமம்)

லிங்கார்ச்சன மிதம் புண்யம் புருஷார்த்த ப்ரதம் ந்ருணாம்|

(காரணாகமம்)

அவ்வாறு அறம்செயவிரும்பி, நற்செயலான நல்லறமான சிவபூஜையை, செய்வதற்குத் தேவையான, அடிப்படையான மந்திரத்தையும், அதிகார அனுமதியையும், தீக்ஷைவாயிலாகத் தந்தருள்பவர் ஞானகுருவே ஆவார். வேறு ஒருவரும் இதைச்செய்ய இயலாது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆசார்யதேவோ பவ என்றும், ஆசார்யாய ப்ரியம் தன மாஹ்ருத்ய பிரஜாதந்தும் மா வ்யவத்ஸேத்ஸீ: என்றும் யஜுர்வேதத்தின்

आचार्य देवो भव । आचार्याय प्रियंधन माहृत्य प्रजातन्तुं मा व्यवच्छेत्सीः।

ஞானகாண்டத் தலைப்பகுதியான தைத்திரியோபநிஷத வாக்யம்,

ஆசார்யனை தேவனாக ஏற்றிடு என்றும், ஆசார்யர் பொருட்டாகத் தனக்குப் பிரியமான தனம் முதலான அனைத்தையும் அர்ப்பணித்து, மக்களாக ஏற்படும் பிறவித்தொடர்பை விலக்கிக்கொள் என்கிறது. இதனையே ஸ்ரீமத் காரணாகமநூல், ஆசார்யரின் மனதுடைய மகிழ்ச்சியை தேவனின் மனமகிழ்ச்சிக்குக் காரணமாகும் என்றும், ஆசார்யருடைய கோபத்திலிருந்து தேவனும் கோபம்கொள்கிறார் என்றும் இச்சமயநெறியில் ஐயமில்லை என்றும், எச்சரித்துக் கூறுகிறது. ஆதலால் அனைவராலும் குருவானவர் என்றென்றும் போற்றிப்பணிந்தும் புகழ்ந்தும், இயன்றபொருளை அர்ப்பணித்தும், மகிழ்விக்கத்தக்கவர் ஆகிறார் என்று அறியத்தக்கது.

ஆகமநெறிவழிபாட்டில் இடம்பெறும் அச்செயலும் மந்திர உச்சரிப்புடனேயே செய்யத்தக்கதாகும். கூறப்பட்ட சிறப்பு பீஜமந்திரத்தாலோ, காயத்ரிமந்திரத்தாலேயோ செய்யத்தக்கதாம்.

मन्त्रं विना क्रिया नास्ति कर्षणा द्यर्चनान्तिका । என்கிறது ஆகமம்.

மேலும் कार्य कारण रूपेण सर्वे मन्त्राः समुत्थिताः। என்றும் கூறும்.

ஆதலால் எவ்வகைச்செயலைத் தொடங்கும்பொழுதிலும், முதலில் மந்திரமளித்த குருவை, மனதில் எண்ணி வழிபட்டு, அனுமதிபெற்ற பின்னரே, பூஜையை உரியசெயலைத் துவங்குவது நம்வேதாகமமரபு. அங்கு, தனதுகுரு எழுந்தருளியிருந்தாரேயானால், அவரை சந்தனம், மலர்கள், அர்க்யம், முதலியவற்றால் நன்கு, பூசித்தபின்னரே பூஜையைத் துவங்கிடவேண்டும். குரு நேரில் இல்லாதபோது தனது தலைஉச்சிமீது குருவின் திருவடிக்கமலங்களை மனதால் சிந்தித்து, உரிய மந்திரத்துதிகளைக்கூறி, மகிழ்வித்திடுவது அவசியமாம். பூசைப்பகுதியிலும் ஓரிடத்தில் குருவினுடைய பூஜை செய்யப்படும். சக்ரம், யந்திரம், மண்டலம் இவற்றில் செய்யப்படும் பூஜைகளிலும் மூவகையில் குருமார்கள்யாவரும், குருமண்டலத்தில் வழிபடப்படுவர். இவ்விதம் மனம் மொழி மெய் முன்றாலும், பாவனை, மந்திரம், கிரியை, ஆகிய முன்றையும் செய்திடும் இறைவழிபாட்டிற்கு முன்பு, குருபூஜை செய்வது, முக்கியமாகும். பூஜிப்பதற்கு குருவின்பாதமும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

கூறுவதற்குக் குருவின்வார்த்தையும், எண்ணித்தியானிப்பதற்கு குருவின் திருவுருவமும், முக்தியைப் பெறுவதற்கு குருவின் கருணையும் மிகவும் முக்கியமானவை என்று சைவாகம வழிநூல் கூறுகிறது.

पूजामुख्यं गुरोः पादः मन्त्रमुख्यं गुरोर्वचः ।
ध्यानमुख्यं गुरो र्मूर्तिः मोक्ष मुख्यं गुरोःकृपा।। (पूजापद्धतौ)

இக்கருத்தையே திருமூலநாயனாரின் திருமந்திரப்பாடலும் தெரிவிக்கிறது. அப்பாடல் இதுவே.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவரு சிந்தித்தல் தானே. – திருமந்திரம்.

பயன்பெறவிரும்புகையில், யாவரும் தத்தமது செல்வநிலைக்கு ஏற்றஅளவில், இயன்றவரை விரிவானமுறையில் ஆசார்யரைப் பூசித்திடவேண்டும். குருபூஜையே எப்பயனையும் தரவல்லது என்கிறது.

குருவழிபாடு

இதனை आचार्यं पूजयेत् तत्र यथा विभव विस्तरम् । என்கிறது ஆகமம். எனவே யாவரும் பெருமுயற்சியை மேற்கொண்டு, குருவழிபாட்டினைச் செய்திடவேண்டும். மந்திரோச்சாரணத்தாலேயே இறையருள் ஏற்படுகிறது. அந்த மந்திரத்தை நமக்குத் தந்தவரே ஆசார்யராகிறார். இவ்வகையில் தேவனைக்காட்டிலும் முதலாவதாக குருவே நமக்கு அதிக முக்கியமானவராகத் திகழ்கிறார் என்பதால், குருவழிபாடு முக்கியமாகி மிகவும் அவசியமாகிறது. மேலும் தேவர்கள்யாவரும் அடியவர்களுக்கு குருவடிவிலே இருப்பவர்கள். நாம் தேவர்களிடத்தில் பூஜையில் தவறுசெய்து தேவனின் கோபத்திறகு ஆளாகின்றபோதில், நமக்கு உரிய பிராயஸ்சித்த வழிமுறையைக்கூறி தேவகோபத்தினின்றும் நம்மைக் காக்கவல்லவராக குருவே விளங்குகிறார். ஆனால், நாம் குருவை இகழ்தும், குருத்ரோகம், அபசாரம்செய்தும், அந்தகுருவின் கோபத்திற்கு உள்ளாகும்பொழுதில், நமக்கு உதவுபவர் எவரும்இல்லை. அப்பொழுது தெய்வங்களும் குருபக்தியற்றவனுக்கு உதவமாட்டார்கள். இவ்விதமாக இப்பூவுலகில் குருவுக்குநிகராக ஆன்மஉபகாரி ஒருவரும் இல்லை, என்ற காரணத்தினாலேயே, அனைவரும் ஆசானை வழிபடவேண்டும் என்று ஸ்ரீமத் ரௌரவாகமம் படலம் 61-ல் எடுத்துரைக்கப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

तस्मात् सर्वप्रयत्नेन आचार्यं पूजयेत् ततः ।
देवे रुष्टे गुरु स्त्राता गुरौ रुष्टे न कश्चन ।। (रौरवागमे)
देवोभ्यो प्यधिकं तस्मात् गुरुं यत्नेन पूजयेत् ।।

மேலும் ஸ்ரீமத் காமிகாகமமானது ஆசாரியர் என்பவர் சிவபெருமானே ஆவார். சிவனாருக்கும் சிவாசாரியருக்கும் யாதொரு இடைவெளியும் இல்லை. குருக்களுக்கும் இறைவனுக்கும் வேறுபாட்டைக்காண்போர் தாழ்வுநிலையைத் தவராமல் எய்துவர் என்றும் எச்சரித்துக் கூறியுள்ளதைக் காண்க. இதனால் குருநிந்தைசெய்யத்தகாது.

आचार्य : शिव एव स्यात् अनयो रन्तरं न हि ।
यः पश्येत् अनयो भेदं सो ऽधोगति मवाप्नुयात् ।। (कामिके)

இக்கருத்தையே திருமூலரும் **குருவே சிவமெனக் கூறினன் நந்தி** எனத் திருமந்திரத்தில் கூறியுள்ளதாலும் நன்குஉணரலாம்.

தீக்ஷா சிறப்பு

அசுத்தபுவனமாகிற இம்மண்ணுலகில் சிவபெருமான் நேரில்தோன்றாமல், ஆசார்யரின் திருமேனியையே தனக்கு இடமாக்கொண்டு, அங்கு இருந்தபடி, அதிஷ்டித்துஇருந்து, தனது திருவருட்பார்வையால், **போகம் மற்றும் மோக்ஷம்** இரண்டையும் அளிப்பதே **நேத்ரதீக்ஷை** எனப்படும். அருட்சக்தியால் செய்யப்படுதலால் இது சாம்பவீதீக்ஷை என்றவாறு சிவாகமங்கள் யாவும் கூறுகின்றன. சிவதீக்ஷை என்பது இவ்வுலக வாழ்க்கையின் போகாந்தமுடிவில் மோக்ஷத்தைக் கொடுப்பது. **சாம்பவீதீக்ஷை** என்ற சொல்லுக்கு சம்பு ஸம்பந்தினீ யா தீக்ஷா ஸா ஸாம்பவீ தீக்ஷா – என்றஇலக்கணப்படி, மங்களத்தை நுகரச்செய்பவர் என்பதாலேயே **சம்பு** என்ற பெயருடைய சிவனுடன் ஸம்பந்தமுடையது, சிவசக்தியால் செய்யப்படுவது, என்ற காரணத்தாலேயே, இந்த தீக்ஷை என்னும்செயல் **சாம்பவீதீக்ஷை** எனப்பெயருடையது. அதுவும் ஞானக்கண்ணால்பார்த்துச் செய்வது. ஞானத்தைக் கொடுப்பது தீக்ஷா. மும்மலத்தை நீக்கி அருள்வது தீக்ஷை. **தீக்ஷா என்ற சொல்லின்** பொருளை, ஆகமங்கள் பலவாறாக விளக்கியுள்ளன. அவற்றில் ஒருசான்று இதுவே.

दीयते ज्ञान सद्भावं क्षीयते च मल त्रयम्।
दान क्षपण धर्मित्वात् दीक्षा शब्द इहोच्यते।। (कामिकागमे)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஞானஸத்பாவனையைக் கொடுக்கப்படுவதாலும், மும்மலமும் அழிக்கப்படுவதாலும், இவ்வாறு கொடுப்பது அழிப்பது எனும் இருசெயலையும் செய்விப்பதால்இச்செயல், **தீக்ஷை** என்பதாக சைவாகமத்தில் கூறப்படுகிறது. இவ்வகையில் பாசத்தால் கட்டுண்ட நிலையான பசுத்தன்மையை நீக்கி பகவானின் ஷாட்குன்யரூபமான சிவத்தன்மையை அடைவிப்பதால் அரிய இந்த நைமித்திகக்கிரியை **தீக்ஷை** என்று பெயர்பெருகிறது எனஅறிக.

दीक्षैव मोचयेत् पाशान् शैवं धाम नयत्यपि ।

என்கிற ஆகமவசனப்படி தீக்ஷை என்கிற செயல் ஒன்றே, உயிர்களை பாசங்களிலிருந்து விடுவிக்கும், சிவலோகத்தை அடைவிக்கும். என்கிறது பௌஷ்கராகமம். மேலும் மிருகேந்திர ஆகமவசனப்படி अथेष्टसाधनी दीक्षा परमेश मुखोद्गता ।என்பதால், விரும்பியதை அளிக்கும் தீக்ஷை என்பது பரமஆப்தனான பரமேச்வரனால் திருவாக்கால் அருளப்பட்ட அசுத்தனுக்கு சுத்திசெய்யும் செயலாகும்.

வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈவான் கண்டாய் என்ற தேவாரத் திருவாக்கான இறைவன் இலக்கணமே அவனருட்செயலாகிய தீக்ஷைக்கும் பொருந்தும். **இஷ்டஸாதனீ** என்ற அடைமொழியால் மிருகேத்திராகமம் தீட்சையின் உயர்வையும், அதன் பயனையும், நமக்கு நன்கு தெரிவிக்கின்றன. மேலும். **திக்ஷாசுத்தி ரசுத்தஸ்ய** என்ற வசனத்தின்படி, தீட்சைதான் அபக்குவியான ஆன்மாவை பக்குவப்படுத்துகிறது என ம்ருகேந்திரம் கூறுவதாலும், இதற்கு உரைசெய்த நாராயணகண்டர் மலம் முதலான பாசங்களால் தடைபட்ட ஆன்மசைதன்யத்தைஉடைய ஆன்மாவிற்கு, மந்திரங்களின் மஹிமையால் மலம் முதலிய பாசங்களை நீக்கி, ஆன்மசைதன்யத்தை (அதாவது திருக்கிரியா ரூபமான ஞானத்தை) பிரகாசிக்கச் செய்வது, நன்கு ஒளிர ஒளியைப் பெருக்குவது, தீக்ஷை எனக் கூறுவதாலும் தீக்ஷையின், பொருளையும் பயனையும் நாம் நன்கு உணரமுடிகிறது. இவ்வாறாக தீக்ஷை என்பது உயிர்களுக்கு மாசாக உள்ள பாசங்களை நீக்கி சிவத்தன்மையை கொடுக்கவல்லது. போகம் மற்றும் மோக்ஷம் என்கிற இம்மைப்பயன் மற்றும் மறுமைப்பயன் இரண்டையும் அளிக்கவல்லது எனஅறியலாம். **மோக்ஷஸாதனம் சிவஞானமே,** அந்தசிவஞானம் தீக்ஷையால் மட்டுமே பெறஇயலும். அந்த தீக்ஷைகுருவினால் மட்டுமே அளிக்க முடியும் என்பதாலேயே **மோக்ஷமூலம் குரோ:கிருபா** எனப்படுகிறது. ஞானதீட்சை என்பது சாக்ஷுஷீதீட்சையை முன்னிட்டுதான் நிகழும். இதனைச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
சிவானுபூதிச்செல்வர் சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரசர் புராண வயிலாகவும் அட்டமாசித்திகளைப் பெற்றிருந்தும் நவநாதசித்தர்கள் தீட்சையால்தான் ஞானத்தைப் பெற்றனர் என்பதை விளக்கியுள்ளார். இதனால் தீக்ஷா என்ற சொல்லுக்கு ஞானமளிப்பது என்பது பொருளாகும். தியம் = ஞானம் – க்ஷணோதி = ப்ராபயதி வா இதி தீக்ஷா என்றறிக. குருவே சிவனென்று கருதி அன்பு செலுத்துவதே குருவின் வார்த்தையைக் கேட்டலே பக்தி. குருபத்தி இருந்தால் விசேஷ பக்தியான விபத்தி (பகுத்துணர்தல்) வந்துவிடும். சம்பு என்றால் மங்களத்தைச் செய்பவன் அவனே சிவன். அவனது மந்திரத்திற்கு சம்பரம் என்றுபெயர். இதற்கு சிவனுடையது என்பது பொருள்.

சிவனாரது அருளும் சக்திக்கு சாம்பவீ என்று பெயர். அவளின் அருட்செயலான தீக்ஷையே சாம்பவீதீக்ஷை எனப்படுவதாகும். ஆலய மஹோத்ஸவத்தில் ஜங்கமலிங்கமாய் சோமாஸ்கந்தேச்வரனாக வீதியில் எழுந்தருளி கண்இமைக்காது அடியவரைக் காண்பதே சாம்பவீதீக்ஷை எனக்கூறப்படுவதாம். அவ்வாறே நடமாடும் கோ யிலாக ஜங்கமமூர்த்தியாய் விளங்குகிற ஆசார்யர் தம் சீடனை மூலமந்திரத்தால் உற்றுநோக்குவதே சாம்பவீதீக்ஷை என்பதாகும். இதனை விளக்கிக்கூறும் ஆகமசான்று இதுவே.

அந்தர் லக்ஷ்யம் பஹிர் திருஷ்டி: நிமேஷோன் மேஷவர்ஜிதா |
ஏஷா வை சாம்பவீ தீக்ஷா ஸர்வதந்த்ரேஷு கோபிதா ||

अन्त र्लक्ष्यं बहि र्दृष्टि: निमेषोन्मेष वर्जिता ।
एषा वै शाम्भवी दीक्षा सर्वतन्त्रेषु गोपिता ।।

தீக்ஷையில் மந்திரஅருள், உரிய பக்திமானிடத்தில்அதாவது இலட்சிய புருஷனிடத்தில் சரியான சீடனிடத்தில் மட்டுமே அடைவிக்கப்படும். இதற்கு சீடன் தகுதியுடையவனாய் இருத்தல் அவசியமாகிறது. எடுத்துக்காட்டாக கத்தியானது சிகிச்சையில் நிபுணரான வைத்தியரிடம் இருக்கும்போது அது பலருக்கும் அருவைசிகிச்சை மூலம் நன்மையைத் தருவதாகிறது, அதுவே தீயோர் கையில் இருக்கையில் கிடைத்திடில் பலருக்கு தீமைபயப்பதாக ஆகிவிடுகிறதுஅல்லவா? இதனால் அரியமந்திரம் என்பது, சரியான பக்தியுள்ள பாத்திரத்தில் சேர்ந்தாலே பயன்தரும். சிவதீக்ஷை ஒன்றே பாசத்தைக்கெடுத்து ஞானத்தைத் தருவது. சிவசத்தியானது எங்கும் நீக்கமற நிறைந்தது. சாம்பவீதீக்ஷையைப்பற்றி திருமூலர் திருமந்திரத்தில் 1894ல் கூறுகிறார். அம்மந்திரம் இதுவே –

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாம்பவீ நந்தி தன்னருள் பார்வையாம்
ஆம்பவம் இல்லா அருட் பாணி முத்திரை
ஓம்பயில் ஓங்கிய உண்மைய கேசரி
நாம்பயில் நாதன் மெய்ஞ்ஞான முத்திரையே. (திருமந்திரம்)

சாம்பவீயாவது குருநாதர் அருட்பார்வையை விளைவிப்பதாகும். அது தொடர்ந்து வருகின்ற பிறப்பினைநீக்கி, அருள்அமுதத்தை வழங்கும் முத்திரையாகும். பிரணவத்தியானத்தோடு பொருந்தி இருக்கின்ற சிவயோகிகள் பயிலக்கூடிய உண்மையான ஞானமுத்திரையாகும். சாம்பவீதீகைக்ஷியே அருளைஅளிப்பது ஞானத்தை நல்குவது.

சாம்பவீஞானக்கண்ணினால் சுத்தி என்றே துணி என்று சைவசமயநெறி, சாம்பவீதீக்ஷையின் பொருளை எடுத்துரைக்கிறது. சாம்பவீதிக்ஷைக்குசிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர் மணிவாசகர் மற்றும் கண்ணப்பர் ஆவர். உமாபதிசிவாசாரியார் நடராஜரின் பரிந்துரை ஓலையைக்கண்டு, பெற்றான்சாம்பன் என்ற பக்தனுக்கு ஸத்யோ நிர்வாண தீக்ஷைசெய்து முக்தியளித்ததும், அதனை நம்பாதோர் முன்னிலையில் நடராஜர்அபிஷேகநீர் விழும்இடத்தில் இருந்த ஒருமுள்ளிச்செடிக்கு சாம்பவீதீக்ஷையால் முக்தியளித்தசரிதமும், சிறந்த எடுத்துக்காட்டாக அறியத்தக்கன. இதனால் **சிவ ஏக குரு: குரு ரேவ சிவ:** என்ற வாக்கின் மெய்மையை யாவரும் உணரலாம்.

शिवो गुरुः शिवो देवः गुरु रेव परं ब्रह्म । என்கிறது ஆகமம்.

எந்த பரமபதியான சிவனிடத்தில் பராசக்தியானவள் ஸமவாயமாக (அபின்னசத்தியாக) இருக்கிறாளோ, அவ்வாறே சிவனிடத்தில் குருவும், குருவின் இதயகமலத்தில் அந்த பிரம்மமான சிவனும், இருப்பதனால் மஹாத்மாக்கள் குருவினால் அநுக்ரஹிக்கப்படுகின்றனர். இக்கருத்தை உபதேசிக்கும் சிவாகம வசனசான்று இதுவே.

यस्य देवे पराशक्तिः यथा देवे तथा गुरुम् ।
तस्य ते हृदि जाकर्तीः प्रसादन्ते महात्मनः ।।

பிரம்மோபதேசம்

பரம்பிரம்ம என்பதற்கு மேலானபெரியவர்கள் என்பதுபொருள். எது பிரம்மம்? என்ற கேள்விக்கு, வேதாகமத்தின் விடை ஓம் என்பதாகும். ஓம் தத் ப்ரம்ம என்கிறது வேதம். ஆகமம் ஓங்காரம் ப்ரம்ம மித் யுக்தம் என்கிறது. ஓம் என்கிற பிரணவம், அனைத்திற்கும் ஆதியான நாதப்ரம்மம், ஓம் என்பதே தாரகமந்திரமான பிராஸாதம். எல்லாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
அதனுள்ளே அடங்கி அதிலிருந்து வெளிவந்தவையே மந்திரங்கள். மந்திரங்களுக்குத் தலையாக விளங்குவதே பிரணவம். ஐந்து பிரம்மங்களையும், ஐந்தொழிலாற்றும் ஐந்து காரணேசர்களையும், தனது ஐந்து கலைகளுக்குள் அடக்கியுள்ளது ஓம்எனும் பிரணவமே. இதனை அறிந்து தெளிவுபெறுவதே ஞானம். இந்த பிரணவப்பொருளைப்பற்றிய மந்திரஞானத்தைப் பெறுவதே தீக்ஷை எனப்படுவதாகும். இந்த தீக்ஷையைத் தருபவள் அநுக்ரஹசக்தியாகிய சிவசக்தியே ஆவாள். எனவே லலிதாம்பிகையை தீக்ஷிதா என்று புகழ்கிறது திருநாமத்துதி. யார் தெய்வபக்தியோடு இறைவனை குருவிடத்தேகண்டு, போற்றிப் பணிவிடைசெய்வாரோ அவரே தீக்ஷைபெறத் தகுதிபெற்றவராவார். இவ்விதம் ஜீவனை சிவனாக்குவதே தீக்ஷை.

திருமுறையில் தீக்ஷை

திருமுறைகளில் தீக்ஷை பற்றிய கூற்றுக்கள் அதிகமுள்ளன. மாணிக்கவாசகப்பெருமான், திருவெம்பாவையில் 11–வது, 12–வது, 13–ஆவது ஆகிய மூன்று பாடல்களில் தீக்ஷையைப் பற்றி தெரி வித்துள்ளார். அதில் ஒரு பூந்தடாகத்தை உமையொருபாகன் வடிவில் அர்தநாரீச்வரராக சிவதீக்ஷைபோல் உள்ளதாக வர்ணித்துக் கூறியுள்ளார். நாலாம் திருமுறையில் திருத்தாண்டகத்தில் "கண்டேன் அவர் திருபாதம்" என்று திருநாவுக்கரசர் அனுபவத்தைக் குறிப்பிட்டுள்ளார். இறைவனிடம் விண்ணப்பம்செய்து கைகளில் இடபக்குறியையும் சூலக்குறியையும் சிவகணபூதம் பொரித்திட பேறுபெற்றவர். தன் தலைமீது சிவபாதத்தைப்பதியச்செய்தவர் அப்பர்பெருமான். திருச்சி தாயுமானசுவாமியை தேவாரத்தில் தீட்சா ஆசார்யராகவே குறிப்பிடுகிறார். அதாவது,

மட்டுவார் குழலாலொடும் மால் விடை
இட்டமாய் உகந்து ஏறும் இறைவனார்
கட்டுநீத்தவர்க்கு இன்னருளே செய்யும்
சிட்டர் போலும் சிராப் பள்ளிச் செல்வரே. என்று கூறுகிறார்

இதனால் இங்கு கட்டு என்கிற பாசபந்தம் விட்டவர்களுக்கு தீக்ஷை எனும் அருளை வழங்குகிற சிஷ்டாசாரியர் சிவன் என்கிறார். தீக்ஷை என்பது பதிஞானம் பெறுதல், இறையருள் பெறும்செயல். மந்திரத்தைப் பெறும் ஆன்மத் தொடர்புடைய அருஞ்செயலாகும். பாசத்தைக்கெடுத்து ஞானத்தைக்கொடுப்பது தீக்ஷை. பக்தனின் பாசம்கெட ஞானம் கொடுத்து சிவமாக்குவது தீக்ஷை. பக்தனை சிவமாக்கி ஆட்கொள்வதே தீக்ஷை. இக்கருத்தினை திருவாசகத்தில் மணிவாசகசுவாமிகள்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனைஆண்ட – அத்தன் எனக்கு அருளியவாரு யார் பெறுவார் அச்சோவே... என்று தான் சிவனால் குருவாய் வந்து ஆட்கொள்ளப்பட்டதை வியந்து போற்றி பெருமையுடன், தான் தீட்சைபெற்றதைக் குறிப்பிடுகிறார். நாதம் என்பது மூலமந்திர உச்சரிப்பில் எழும் ஓசை ஒலியாகும். மந்திரநாதவடிவனின் சிவன்.

गुरूपदेशात् कन्दादेः मन्त्र मुच्चारयेत् शनैः । என்ற ஆகமவசனத்தின்படி, மூலாதாரக் கிழங்கிலிருந்து, குண்டலினீஓசையை மேலேஎழுப்பி, மெல்லமெல்ல துவாதசாந்தமெனும் சிவனுறைவிடம்வரையில் குருநாதரின் உபதேசமுறைப்படி மந்திரத்தை உச்சரித்திட வேண்டும் என்று, ஆகமங்கள் இறையின் மந்திரவடிவமான நாத உபாஸனையைத் தெரிவிக்கிறது. இது ஸத்குருவின் தீக்ஷையாலேயே செய்யக்கூடியதாகிறது. பஞ்சகலாத்மக பிரணவ உபதேசமே தீக்ஷை.

இறைவனின் அருட்பார்வை நம்மீது பதிதலே தீக்ஷை. இதுவே அருள் எனப்படுகிற அநுக்ரஹச்செயல். இறைவன் அடியாரை ஆட்கொண்டு அருளுவதை மாணிக்கவாசகர் தனது திருவெம்பாவையில் இவ்வாறு தெரிவிக்கிறார். அப்பாடல் இதுவே.

மையார் தடங் கண் மடந்தை மண வாளா
ஐயா நீயாட் கொண்டருளும் விளை யாட்டின்
உய்வார் களுய்யும் வகை யெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமை யேலோ ரெம் பாவாய்.

தீக்ஷையால் மட்டுமே ஆன்மாவானது வீடுபேற்றை அடையமுடியும். இதனை மணிவாசகரின் சிவபுராணத் திருவாசகத்திலிருந்தும் அறியலாம். அவ்வரிகள் இவையே

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்டிங்கு வீடுற்றேன்.
உய்ய வென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே!. (சிவபுராணம்)

சைவநெறியில் முப்பத்தாறு தத்துவங்களும், ஐந்துகலைகளும் ஆக ஷடத்துவசுத்தியுடன் செய்யப்படும் சிவதீக்ஷையால் பிறப்பறுக்கும். தீக்ஷையிலேயே பிறப்பறுக்கும் பிஞ்சகன்தன் பொற்கழலைக் காணுவர். சுந்தரமூர்த்திசுவாமிகள் தீக்ஷையின் பயனை பலவாறு குறிப்பிடுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருளாளா! உனை மறவாதே நினைக்கின்றேன் என்றும் அதனாலேயே இனி பிறவாததன்மை வந்து எய்தினேன் என்றும் தேவாரத்தில் அருள்கிறார்.

மற்றுபற்றெனக்கின்றி நின் திருப் பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாததன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும்சீர் கரையூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா! உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமசிவாயவே.

என்று தவநெறியைப் வேண்டிப்பெற்ற அருளாளரின் அருள்வாக்கால் அறியலாம். சிவனால் அழைக்கப்பட்டு, திருவதிகைத் தலத்தை அடைந்த சுந்தரமுரத்திசுவாமிகள் தம்மையே அறியாத சாதியாருளரே எனும் பதிகத்தைப்பாடி, அதில் ஒரு பாடலில் சிவனார் உயிர்களுக்கு விடுபேறு அளிப்பதைக் குறிப்பிடுகிறார். அப்பாடல்வரி,

வெய்தாய வினைக்கடலில் தடுமாறும்
உயிர்க்குமிக இரங்கி அருள் புரிந்து வீடுபேறு ஆக்கம்
பெய்தானை பிஞ்ஞகனை மைஞ்ஞவிலும் கண்டத்து எண்தோள்
எம்பெருமானை பெண்பாகம் ஒருபால் செய்தானை..

என்று கூறிஇருப்பதால், சிவபெருமான் உயிர்களிடத்தே தயைமிகுந்த வராக தீக்ஷையாகிற அருளைப்புறிந்து, வீடுபேறு என்கிற கிடைத்தற்கரிய இனி பிறவாநிலையாகிய பரகதியாம் முத்தியை அளிக்கிறர், என்பது உணரத்தக்கதாகிறது.

இவ்வாறு மணிவாசகரும் திருவாசகத்தில் தாம் தீக்ஷைபெற்றதைக் குறிப்பிடுகிறார்.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறி அறிவித்து பழவினைகள் மாளும் வண்ணம்
சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவார் யார்பெறுவார் அச்சோவே.
(திருவாசகம் – அச்சோபதிகம்)

இப்பாடலால் மனத்திடையுள்ள மாசுகளை முதலில் மாய்த்து, சிவத்தன்மையுடையதாக ஆன்மாவை உய்வித்து, அருளியன் அத்தன் என்பதில், பெற்றதீக்ஷையின் மெய்ப்பொருள் விளக்கத்தை நன்கு நம்மால் அறியமுடிகிறது. மனத்துக்கண் மாசிலனாதலே சமயநெறியின் அடிப்படை நோக்கம், அகவழிபாடும் புறவழியாடும் வினையை நிறைவுறச் செய்து ஞானத்தைஅளித்திடும் செயலாகும். இதனால் அஹிம்சை, தயை முதலான உயரிய ஆன்மகுணங்களும், தெய்வகுணங்களும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏற்படுகின்றன. பூஜை என்பது நல்லெண்ணமாகிற அமுதத்தால் நீராட்டியும், பற்றின்மையாகிற வைராக்யத்தையே (சமயஉறுதியையே) சந்தனமாக்கி, சிவனுக்குப்பூசித்திலகமிட்டும் அஹிம்சை முதலான எட்டுவகை ஆத்மகுணங்களையே அட்டபுஷ்பங்களாக அர்ப்பணிப்பதால், அவைகள்பூஜிக்கும்ஆன்மாவிற்கும்விளைகிறது, அவை 1. கொல்லாமை, 2. புலனடக்கம், 3. பொறுமை, 4. அன்பு, 5. மெய்யறிவு, 6. தவம், 7. உண்மை, 8. பரந்த பொதுநலநோக்கம் ஆகியவை எட்டும் உயிருக்கு ஏற்படுகின்றன. ஆன்மநலனையும் தேசநலனையும் தரவல்ல இப்பண்புகளை ஒருவர் பெற்றிட சற்குருவின்அருள் தேவையாகிறது.

ஸத்குரு இலக்கணம்

ஸ்ரீமத் அஜிதாகமம் தீக்ஷைசெய்விக்கும் ஸத்குருவிற்கான தகுதியைக் கூறுகிறது.

जात स्तत्रा दिशैवस्तु तथा ऽऽचार्यवर स्त्रयः।
शैवसिद्धान्त तत्वज्ञो देवाग्नि गुरु भक्तिमान्।।
सर्वाचार समायुक्तः तपस्वी जनवत्सलः ।
सहिजिष्णु र्जित श्रीमान् जितेन्द्रियो विगतस्पृहः ।।

இதன்படி ஆதிசைவகுலத்தில் பிறந்தவரும், சரியை முதலிய நெறிகளில் வாழ்பவரும் சைவஸித்தாந்த தத்துவங்களை நன்கு அறிந்தவரும் தேவன் அக்னி குரு மூவரிடத்தும் மிகுந்த பக்தியுள்ளவனாய் பூசிப்பவரும், அனைத்து ஆசார ஒழுக்கங்களுடன் கூடியிருப்பவரும், தவம் செய்பவராயும், மக்களிடத்தில் மகனிடத்தில் உள்ளது போன்ற வாத்ஸல்யமானதயை நிறைந்த அன்பு உடையவராயும், விருப்புவெறுப்பு, அற்று எதையும் தாங்கும் பொறுமையுள்ளரும், அருட்செல்வமுள்ளவரும், புலனடகம் உள்ளவரும், உலகவாழ்த்தைப் பொருள்கள்மீது பற்றுஅற்றவரும், சைவசித்தாந்தநெறியில் தீக்ஷை அளிக்கவல்ல குருவாக ஏற்கத்தக்கவர் என்கிறது. சீடன் ஸத்குருவைத்தேடி நாடி அருள்பெற தீக்ஷையைபெறவேண்டும்.

குருவின் அருஞ்செயல்

அக்ஞானம் இருள்போன்றது. மெய்ஞானம் ஒளிபோன்றது என்பதை

अन्धकारवत् अज्ञानं ज्ञानं दीप्तिवदुच्यते । என்கிறது வாதுளாகமம்.

இத்தகைய அகஇருள்நீங்கிட இறைஞானமெனும் உள்ஒளியைப் பெருக்கி அருள்பவர்குருவாகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

गुकारो अन्धकारस्तु रुकार स्तन्निरोधकः।
अन्धकार निरोधत्वात् गुरु रित्युच्यते बुधैः॥ (சைவாகமம்)

இவ்வசனத்தின்படி குரு என்ற சொல்லில் உள்ள கு என்ற எழுத்து, இருட்டையும், ரு என்ற எழுத்து அதனை நீக்குவதையும் உணர்த்திடுவதால் இருள்நீக்குபவர் என்ற காரணத்தால், அறிஞர்களால் குரு என்று அழைக்கப்படுகிறார். என்பது பொருளாகி சொல்விளக்கமாகிறது. இதனால் சீடனின் அகஇருளைநீக்கி உள்ஒளிபரப்பி அருள்செய்பவரே குரு என்பதை நன்கு உணரலாம்.

शिव एको ध्येय: सर्व मन्य त्परित्यज्य என்கிறது அதர்வண உபநிஷதம்.

ज्ञेय: शिव: सर्वगत: शरीरे ध्येयः स पूज्य श्शिवलिङ्ग मध्ये என்கிறது. சிவபூஜாஸ்தவம்.

இதன்பொருள் எங்கும் விளங்குபவராக சிவன் அறியப்படவேண்டியவன், தனது உடலுக்குள்ளேயே இருப்பவனவாக தியானிக்கத்தக்கவன், அவரே சிவலிங்கத்தின் நடுவே பூசிக்கப்படவேண்டியவர் என்கிறது ஆகமம். தீக்ஷையில் பாசக்கூட்டங்களை துண்டிக்கிறான். மலர் முதலியவற்றை பூஜையை லிங்கத்தில் இருந்து ஏற்கிறான். ஹோமத்தில் தியாகம் செய்யும் பொருளைத்தாமே ஹவிஸ்ஸைப் பெருகிறான். ஆதலால் தேவன் அக்னி குரு ஆகிய மூன்றையும் மூச்சுள்ளவரையில் பூசித்திடவேண்டும் என்கிறது. இம்மூன்றில் எதையும் தீக்ஷை பெற்றவர் கைவிடலாகா.

पूजां गृह्वादि लिङ्गस्थ: वह्निस्थो हवि राहुतिम्।
आचार्य मूर्ति मास्थाय पाशौधान् कृन्ततीश्वरः।। (शिवागमे)

ஆசார்யர் ஒருவரே ஆன்ம மலங்களைத் துண்டித்து நீக்கவல்லவர். பிறவிப்பிணியை முற்றிலும் நீக்கி உதவிடும் உன்னத மருத்துவர். சிவனை கள்ளப்புலக்குறும்பைக் கட்டழிக்கவல்லான் என்கிறார் மணிவாசகர். தீக்ஷையின்போது ஆசாரியர் திருமேனியில் தங்கி இருந்தவாறு, சிவன் நமக்கு எல்லாஸித்திகளையும் தரவல்ல பிராஸாத மந்திரத்தை உபதேசித்து அருள்கிறார். சிவம் பிராஸாத மந்திரவடிவாய் உள்ளதாக அறியத்தக்கது. இதனைக்தெரிவிக்கும் சான்று,

सान्तं सद्यान्त संयुक्तं बिन्दु भूषित मस्तकम्।
प्रासादाख्यो मनुः प्रोक्तः भजतां सर्वसिद्धिदम्।
शिवमेकं विजानीयात् मन्त्रमूर्तिः परं शिवम्। (शारदतिलके)

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

இவ்வாறு, சாரதாதிலகம் என்னும் மந்திரசாஸ்திரமும், வாதுள சுத்தாக்யமும் தெரிவிக்கின்றன. குருவருளின்றி இந்த சிவமந்திரத்தைப் பெறஇயலாது. வேறுமுறையில்பெற்றால் பயன்தராது. இந்த பிரஸாத மந்திரமறியாதவர் ஆசார்யர்அல்ல.

வேதம்கூறும் ஞானதீக்ஷை

दीक्षा च मे என்று யஜுர்வேத சமகப்ரச்ணப் பகுதியில் தீட்சையை எனக்குக்கொடு என்று வேதத்தில் இறைவனிடம் வேண்டப்படுகிறது. சைவசித்தாந்தத்தில் விதிக்கப்பட்ட ஆசாரம் வைதிகாசாரமென்று சொல்லப்படுகிறது. வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறனிங்குத் தரிக்கலுற்றாம் என்னும் சிவப்ரகாசத்தின் வசனத்தால், வேதாந்தஸரமே சிவாகமம் என்பதை அறியலாம். மேலும் ஸநகாதிமுநீந்திரர்கள் பொருட்டு வேதாந்தார்த்தமான ஆகமங்களை அருளிச்செய்தார் என்பதை சங்கரஸம்ஹிதையால் அறியலாம்.

सनकादि मुनीन्द्रेभ्यो वेदान्तार्थागमान् अदात्। (शङ्करसंहिता)

இவ்வுலகில் சைவசித்தாந்தத் தேனமுதைப் பருகிப் பயனடைபவர்கள் சிலரே ஆவர் என குமரகுருபர சுவாமிகள் கூறுகிறார்.

ஒரும் வேதாந்த மென்றுச்சியிற் பழுத்த
ஆராவின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே.

என்னும் குமரகுருபரசுவாமிகளின்
திருவாக்கினாலும் தெளிவு பெறலாம்.

यो वेद निहितं गुहायां परमे व्योमन्।
सोऽश्नुते सर्वान् कामान् सह।। ब्रह्मणा विपश्चिता।। என்கிறது வேதம்

இதன்பொருள் எவன் பரமவியோமமாகிய பரமஆகாச குஹையில் வைப்பை க்ஷேமநிதியை அறிகின்றானோ, அவன் விபச்சித்தாகிய பிரம்மத்தோடுகூடி ஸர்வ காமங்களையும் அனுபவிக்கின்றான் என்கிறது. இவ்வாறு சுருதி கூற்றின்படி பரமாத்மாவின் பிரம்ம சைதன்யத்தோடு முக்தாத்மாவின் சைதன்யமும் ஸமமாக விளங்கச்செய்வதே சைவதீக்ஷை. ஓம் இத்யேகாக்ஷரம் பிரம்ம என்பதும், நமச்சிவாய என்பதும், வேதஸார மந்திரங்களாக தீக்ஷையில் உபதேசிக்கப்படுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ओं इत्येकाक्षरं ब्रह्म – नमश्शिवाय च – पशुपतये च नमः।।

உலகில் ஒருவனுக்கு குரு கிடைப்பது அரிது. ஆதலால் ஒருவன் குருவை அடைவதாலேயே தன்யன் ஆகிறான் என்கிறது சிவஞானபோதம் எனும் சைவசித்தாந்தநூல். இதில்,

मुक्त्वैतान् गुरुणाऽनन्यो धन्यः प्राप्नोतितत् पदम् ।। என்கிறது.

வேதத்தில் ஞானகாண்டம், கர்மகாண்டம் என்று இரண்டு பகுதிகள் உள்ளன. ஞானகாண்டத்தில் உபநிஷதங்கள் விளங்குகின்றன. உபநிஷத்தில் நம்முடைய பெரியோர்கள் தவமும் ஆராய்ச்சியும் செய்து மெய்ப்பொருளின் தன்மையை விளக்கியிருக்கிறார்கள். அந்த உண்மையிலிருந்து தோன்றும் வாழ்க்கைமுறை யாது? எனில் உலகத்தின் நன்மையையும், நம்முடைய வருங்காலத்து சுகத்தையும், கருத்தில்கொண்டு அதை உத்தேசித்து வேதநெறியில்வாழ்க்கையைப் பின்பற்றுவது ஆகும்.

வேதாகமநெறியிலிருந்து பிளவுபட்டவாழ்க்கையில், உழன்று கொண்டிருப்பதில் பயன்ஒன்றுமில்லை. வேதவாழ்க்கை என்றால், பற்றற்ற எதிர்பார்த்தலற்றமுறையில் சமூகக்கடமைகளைச் செய்து, இடையூறுகளைக் கண்டுஅஞ்சாமலும், தோல்வியைக்கண்டு கலவரப்படாமலும், ஓர் புரவும் தெய்வபத்தியும் கொண்டு வாழ்நாளைக் கழித்தல்.

இவ்வாறான வைதிக வாழ்க்கைக்கு வேண்டியஞானம் நூல்களைப் படிப்பதனால் மட்டும் உண்டாகாது. நூல்களில் சொல்லப்பட்ட விஷயங்கள் விளங்குவதற்கே வாழ்க்கையில் சீலமும் பக்தியும் பெற்றிருக்கவேண்டும். இல்லாவிடில் விளங்கிய மாதிரிதோற்றம் காட்டுமேயொழிய உண்மையில் விளங்காது. நல்ல முறையில் ஒருவன் அடைத்த ஞானம் செயலில் தானாகவே பரிணமிக்கும். பூவாவது காய்ஆவது போலும், காய் பழம்ஆவது போலும், ஞானமானது பக்குவப்பட்டு செயலுருவம் எடுக்கும். ஆன்ம சைதன்யமென்பது அறிவும் செயலும் சேர்ந்து விளங்குவதே ஆகும். இந்த வேதநெறி அறநூல்களுக்குள் ஒப்பற்று சிறந்து விளங்குவன உபநிஷத்துக்களே. ஞான உபதேசத்தில் முக்கியமானவை ஆகும். காரணம் யாதெனில்? உபநிஷத்துக்களில் சீடன் குருவிடம் நெருக்கமாக அமர்ந்து விஷயத்தை வினாக்களாகக் கேட்டு, குருவின் கருத்தை விடைகள் மூலம் தெரிந்துகொண்டு, தெளிவுபெறுகிற முறையில் ஆத்மஞானம் போதிக்கப்பட்டுள்தே ஆகும். இது ஒரு சிறந்த போதிக்கும்முறை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அக்காலத்து வாழ்வு நாம் இந்நாளில் நடத்தும் வாழ்வுக்கு முற்றிலும் வேறானபடியால் பலஇடங்களில் விஷயம் விளங்காமலிருக்கும். தவிர சீடனுக்கு விளக்கிச் சொல்லப்பட்ட விஷயங்களை வெறும் ஞாபகக் குறிப்புகளாகக்கொண்டே அந்நாளில் ரிஷிகள் உபநிஷத்துக்களை பார்த்தனர். அச்சிட்டு வழங்கித் தனிமையில் படிப்பதற்காக எழுதிய புத்தகங்களல்ல அவை. இக்காரணத்தாலும் சிலஇடங்களில் பொருள்விளங்குவது கடினமாகிறது. நேர்முகமாக செவிவழிச் செல்வமாகத் தொடர்ந்து வந்தமையால் சுருதி எனப்பட்டன. ஆயினும் வாழ்வை நல்வழியில் நடத்தி மனதைச் சுத்தமாக வைத்துக்கொண்டு மெய்ப்பொருளில் உண்மைப்பற்றுடன் படிப்பவர்களுக்கு இந்த உபநிஷத்துக்களைப்போல் உதவக்கூடியநூல்கள் வேறில்லை எனலாம். உபநிஷத்துகளில் என்னவிஷயம்? அது எவ்வாறு சொல்லப்படுகின்றது? என்பதை அறியாமல் கல்விப்பேறு பெற்ற சமயிகள் இருந்துவரும்நிலை வேதனைக்கும் அவமானத்திற்குமுரியது.

நம்மைப் பெற்ற முன்னோர்கள் கண்டறிந்த கருத்துக்களை இக்காலத்துச் சிறுவர்களுக்கு பெற்றோர்கள் அவ்வப்பொழுது குருமார்களிடம் அழைத்துச்சென்று, அறநூல்களையும் அவற்றின் அரியபல கருத்துக்களையும் அறிமுகப்படுத்தி விளக்கவேண்டியது அவசியமாகிறது. நம்மில் புதுவகை அறிவுநூல்களைக் கற்றவர்கள் நமக்குரிய பூர்வீக தரும்நூல்களைப் படியாமலிருப்பது, இங்கு பலவிதத்தீமையை விளைவித்துவருகிறது. குருசிஷ்யர்களாக பல தேவரும் ரிஷிகளும் உபநிஷதங்களில் காணப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக கடோபநிஷத்தில் யமதருமன் நசிகேதனுக்கு உபதேசிப்பது. தேவீபிரம்மத்தை இந்திரன் அக்னிக்கு உபதேசித்தது, சனத்குமாரர் நாரதருக்கு மெய்ப்பொருள்பற்றிக் கூறியது. உத்தாலகர் தனது மகன் சுவேதகேதுவிற்கு படிப்புக்கு எட்டாத பொருளை உணரும் வழியை சாந்தேக்கயத்தில் உபதேசித்தது, யாஜ்ஞவல்கியர் தம்மனைவி மைத்ரேயிக்கு இல்லறவாழ்க்கையில் தோன்றி வளரும் காதலானது மெய்ப்பொருளின் ஒரு அம்சமே என்று உபதேசித்தது. இவ்வாறாக பரம்பொருள் இலக்கணத்தை பலஉபநிஷதங்கள் ஞானோபதேசத்தை குருசிஷ்யமுறையில் செய்வதைக் காணமுடிகிறது. பழயவைதிக சைவமே **சைவசித்தாந்தம்** என்னும் வேதஸார வழியாகும்.

உபநிஷத்துக்கள் முதலிய சாஸ்திரங்களை முற்காலத்திய அறிஞர்கள் மறைத்துவைத்துக் கொண்டு, பொதுமக்களுக்குத் தாராளமாக அளித்து பகிந்துகொள்ளாமல் உலோபிகளாக நடந்துகொண்டார்கள் என்று சிலர் தவறாக எண்ணுவதுண்டு. அது சரியல்ல உலகில் மருந்துகளை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
வைத்தியர்கள் மிக ஜாக்கிரதையாகத்தான் வைத்து தகுந்தவர்க்கு வழங்குவார்கள். மருந்தை அறிந்து உபயோகித்தால் மட்டும் அது அமிருதம்போன்ற பொருளாகும். ஆனால் அதுவே அறியாதவர்கள் கையில் அபாயமான விஷமாகும். அவ்வாறே அத்யாத்மஉண்மைகள் பக்குவமும் தகுதியும் பார்த்தே உபதேசம் செய்யத்தகும். தீரவிளங்காத விஷயங்கள், தவறானபொருளும் பயனுங்கொண்டு தீமைக்குக் காரணமாகும். வேதாகமங்களை அருளிச்செய்த இறைவனை, வேதமானது, பிஷக் பேஷஜஸ்யாதிகர்தா

भिषक् भेषजस्याधिकर्ता என்றும் विश्वभेषजोऽयं என்றும் கூறி,

வைத்தியர், மருந்து, என்று இறைவனை உவமையுடன் ஒப்பிட்டு விளக்குவதால், ஆசான்பெருமையை அறிக. ஆசார்யர் பிறவித் துன்பம் நீதிகும் வைத்தியரும், அரியமருந்தும் ஆவார். புலவர்கள் விளக்கியதை நேரில்கேட்ட மாணவர்களுக்குத்தான் அக்குறிப்புகள் பயன்படும். இந்த உண்மையையறிந்தே முற்காலத்திலும், சாஸ்திரங்களைக் குருவிடம் நேரில் உபதேசம்பெற்றுப் படிப்பதுதான்முறை என்று, பெரியோர்கள் விதித்தார்கள். பலநூன்முகம் இவ்வாறு உள்ளதாலேயே குருகுலப் பயிற்சியை அதாவது நேர்க்காணல்பயிற்சிமுறையை நாம் நன்கு உணரலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குருகுலவாசப் பெருமை. (குருவும்சீடனும்)

வேதாகமங்களில் குருவுடன் வாசம்செய்யும் சீடனுக்கே உபதேசம் செய்யவேண்டும் எனப்படுகிறது. அவ்வாறு சீடர்கள் குருவிடத்தில் வசித்துப்பயிலுவதே குருகுலக்கல்வி என்பதும் குருகுலவாசம் என்பதுமகும். முற்காலத்தியபோதனாமுறைநிபந்தனைகளில் மற்றொரு விஷயம் குறிப்பிடத்தக்கது. சீடன் ஆசாரியரிடம் அன்பும் பக்தியும் கொண்டு அவருக்குச் சேவைசெய்வதையே முக்கியகாரியமாகக் கருதவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு செய்தால்தான் அவருடைய உள்ளமும் சீடனுடைய உள்ளமும் ஒன்றாகச்சேர்ந்து, அவர் செய்யும் உபதேசத்தின் பொருள் விளங்கி வேர்ஊன்றிப் பயன்பெறும். குருவுக்குச் சேவை செய்வதே பிரம்மசாரியின் முதல்கடமை. சேவை செய்து மிகுந்தநேரத்தில் உபதேசம்பெறவேண்டும் என்பது விதி. தற்காலத்தில் இது வியப்பாகவும், தவறாகவும், தேவையற்றதாகவும் கருதப்படுகிறது. ஆயினும் இதில் ஒரு தத்துவம் அடங்கியுள்ளது. ஆகவேதான் இராமாயணம், மஹாபாரதம் இவற்றில், சக்ரவர்த்திகளின் குமாரர்களும்கூட விலகி பிறிந்து இருந்து குருவினிடத்தில் பலகாலம் தங்கிப்பயிற்சி பெற்றதை அறிகிறோம். சரியான மனப்பான்மைக்கு அத்தாட்சியும் ஏதுவுமான சேவையால் சீடனைப் பரீட்சையும் பக்குவமும் செய்தே உபதேசம் தரப்படவேண்டும். மந்திரம், ஞானம், அஸ்திரவித்தை இவற்றை ஒரு மாணவருக்குக் கூறுவதற்கு பலநிபந்தனைகள், நியதிகள், விதிமுறைகள், சாஸ்த்திரங்களில் உரியநோக்கம் காரணங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

குருவுடன் வசிக்கும் சீடனே உபதேசம்பெறத் தகுதியுடைய வனாகிறான். தகப்பனிடம் மகன் உபதேசம் பெறலாம். அல்லது ஆசாரியனிடம் ஒருவருடகாலமாவது குருகுலவாசம் செய்தசீடன் உபதேசம் பெறலாம். மற்றவர்களுக்கு உபதேசிக்கவேண்டாம் என்று, பலநூல்களில் பலஇடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. வேறுஇடத்தில் குடியிருந்துகொண்டு படிப்புக்குமட்டும் குருவிடம்போய் உபதேசம் பெறுவதில் பயனில்லை. அதனால் உரிய பக்குவநிலை ஏற்படாது. வெளிப்புறத்தொடர்பு, மனத்தடுமாற்றத்தையும் உறுதியின்மையையும் ஏற்படுத்தக்கூடும். ஆதலால் தற்காலத்திய கல்விமுறைப் புலவர்களும் இதையே சொல்லுவார்கள். குருவின் அருட்கண்பார்வையில், சீடன் படாமல் மந்திரஉபதேசம், ஞானஉபதேசம் செய்வது விதிமுறையாகாது. ஞானஉபதேசம் என்பது ஒருதொழிலோ கடமைப்பணியோ அல்ல. அது வேட்கையும் சிரத்தாபக்தியும்உள்ள சீடனுக்கே தரத்தக்கதாகும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குருசிஷ்ய நியதிகள் (ஞானோபதேசநெறி)

குருவிடமிருந்து தான் அறிந்ததைப் பிறருக்கு முறைப்படி உபதேசம் செய்யவேண்டியது, உபதேசம்பெறும் சீடனது கடமை. அவ்வாறு செய்யும் எண்ணங்கொண்டவனுக்கே உபதேசம் செய்யவேண்டும் என்று உபநிஷத்துக்களிலும் ஆகமங்களிலும் விதிக்கப்பட்டிருக்கிறது. கல்வி கேள்விகளின் காப்புக்கும் வளர்ச்சிக்கும் இந்த விதிமுறை மிகமுக்கியமானது. பிறருக்குக்கொடுக்க உத்தேசிப்பவனுக்கே கல்விச்செல்வத்தை வழங்கவேண்டும் என்பது நியதிஆகும்.

ஒருசீடன் சமூகத்தின் கட்டுப்பாட்டுக்கு அடங்கியவனாக இருக்க வேண்டும். சமுகப் பழக்கவழக்கங்களை நிராகரிப்பவனாக சீடன் இருக்கக்கூடாது. தன் கடமைகளைச் சரியாகச் செய்திருக்கவேண்டும். உபதேசம் பெறுவதற்கு முந்திப் படித்து முடித்திருக்க வேண்டியதை யெல்லாம் குறைவின்றிப் படித்திருப்பதோடு கோபத்தையும் ஆசைகளின் வேகத்தையும் அடக்கினவனாக இருக்கவேண்டும். குணசீலனாக இல்லாதவனுக்கு குருவானவர் உபதேசத்தைச் செய்யக்கூடாது.

நல்ல பெருந்தன்மை கொண்டவனும் தெய்வபக்தியுள்ளவனும் குருவை தெய்வம்போல் கருதி பக்தி செலுத்துபவனுமான சீடனுக்குச் சொன்னால் உபதேசத்தின் பொருள்கள் ஒளிபெற்று விளங்கும் என்பது உபநிஷத்து வாக்கியங்களால் உபதேசிக்கப்படுகிறது.

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஆசார்யனிடத்தில் பெறவண்டிய உபதேசத்தைப்பெற்று, முறைப்படி பிரம்மசரியம் முடித்தபின்பு, விவாகம் செய்துகொண்டு இல்லறம் நடத்தி, இல்லற வாழ்க்கையிலும், கற்றதை மறக்காமல் கிரமமாக (வரிசையாக) சிந்தனை செய்துகொண்டு வந்து, நல்ல குழந்தைகளைப்பெற்று, குடும்பக்கடமைகளை முடித்தபின்பு, (கடமைகள் முடிந்தபின்) புலன்களை அடக்கி, என்றும் ஜீவகாருண்ய விரதம் பூண்டு, வாழ்க்கைப் பயணத்தை முடிக்கவேண்டும் என்பது நம்முடைய அறநூல்களின் முன்னோர்களின் கொள்கை. மரணம் வரையில், குடும்பப்பற்றையும், அதனால் உண்டாகும் கவலைகளையும், வைத்துக்கொண்டிருக்கக்கூடாது. கல்விப்பருவம், பின்பு இல்லறப் பருவம், பின்பு தவப்பருவம் என்று நமது ஆயுட்காலத்தைப் பங்கிடுதலை நமது வாழ்வியல் நெறிமுறையாகக் கொள்ளவேண்டும். அவ்வாறு வகுத்துக்கொண்டு கடமைகளைக் கவனித்தால், அறிவும் ஆற்றலும் பெற்று அவ்வப்பருவக் கடமைகளையும் சரிவரச் செய்வோம். இது வேதாகமத்தின் ஸநாதன வாழ்க்கை நெறிமுறை என அறியலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிஷ்யனின் இலக்கணம்



सुदीक्ष्याः साधका स्तन्त्रे ये शिवार्पित चेतसः।
सत्सङ्ग निरताः शुद्धाः असत्सङ्ग पराङ्मुखाः।।
शिश्रूषाभिरता श्शान्ताः कालेन सुपरीक्षिताः।
सहिष्णवो ऽनुरक्ताश्च गुरो स्सर्वात्मना सदा।
शिवशक्तिकरैःस्पृष्ट्वा विनीताः प्रियवादिनः।
अक्रोधना न चपलाः श्रद्दाधाना जितेन्द्रियाः ।
तेऽनुग्राह्याः सदा ऽक्रूराः स्वाचार परिपालकाः।। (मतङ्गपारमेश्वरे)

இதன்படி ஆகமத்தில் ஸாதகர்கள் எவர்களோ அவர்கள், சிவனிடத்தில் மனதை அர்ப்பணித்தவர்களாயும், நல்லோருடனான ஸத்ஸங்கத்தில் ஈடுபட்டவர்களாயும், தூய்மையானவர்களாயும், தீயோருடனான அஸத்ஸங்கத்தில் சேராமல் விலகியுள்ளவர்களாயும், குருவுக்கு பணிவிடைசெய்வதில் ஈடுபட்டவர்களாயும், ஒருவருட காலத்தால் குணம், மனம், பக்தி, கொள்கைஉறுதி இவற்றை பலவகையில் சோதிக்கப்பட்டவர்களாயும், பொறுத்துக்கொள்பவர் களாயும் (கோபப்படாதவர்கள்) குருவிடத்தல் அன்புமிக்கவர்களாயும், எல்லாவகையிலும் எப்பொழுதும் குருவினுடைய சிவசத்திவடிவான திருக்கரங்களால் தொட்டுவாழ்த்துமளவில் அடக்கமுள்ளவர்களாயும், விருப்பமானவற்றைமட்டுமேஇனிமையாகக்கனிவாகப்பேசுபவர்களாயும், எந்நிலையிலும் கோபப்படாதவர்களாயும் சபலபுத்தியில் பலவற்றையும் விரும்பாதவர்களாயும், சமயநெறியில் சிரத்தை என்கிற நன் நம்பிக்கையை (உறுதியை) உடையவர்களாயும், மெய் வாய் செவி கண் முக்கு என்கிற ஐம்புலன்களையும் அடக்கி, அதன்வழியில் செல்லாது, அவற்றைச் செலுத்தும்வகையில் வென்றவர்களாயும், கொடிய குணம் செயலற்றவர்களாயும், தனது ஆசாரநடத்தைகளைவிடாமல் எப்போதும் கடைபிடித்து வருபவர்களாயும் உள்ளவர்களான ஸாதகர்களே ஸத்குருவால் நன்குதீக்ஷை செய்யத்தக்கவர்களும், அவர்களே அருள்பெறத் தகுந்தவர்களும் ஆவர் என்கிறது மதங்கபார மேச்வராகமம். இந்த தீக்ஷையானது உடலுக்கோ ஜாதிக்கோ செயலுக்கோ செய்யப்படுவதில்லை, ஆன்மாவாகிய உயிருக்கு செய்யப்படும் கிரியையாகும். என்கிறது காலோர்த்தராகமம்.

தீக்ஷையில் ஆன்மாவானது ஐவகையில் சுத்திசெய்யப்படுகிறது அவை 1. யோநி, 2. பீஜ, 3.ஆஹார, 4. பாவனா, 5, தேஹம் இவற்றால் ஆகும். குருவின் தீக்ஷையால் குலம், தகுதி, ஞானம், குணம்,

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

இவை மேம்படுவதாகிறது. இதனைக் காமிகாகமம் தெரிவிக்கிறது. அதற்கான சான்று,



विप्रादयोऽपि शूद्रास्स्युः गुणं तस्मात् समुद्धरेत् ।
शूद्रादि जाति मुद्धत्य स्वाहान्तेनैव मूलतः ।
हुत्वा ऽऽहुति त्रयं पश्चात् शिवं प्रति वदेदिदम् ।
आहार भाव दोषाभ्यां योनि बीज शरीरतः।
शुद्धो द्विजो भवत्वात्मा भगवन् परमेश्वर ।। (कामिके)

இவ்வாறு குருவினால் சிவனிடம் விண்ணப்பம் செய்து, வேள்வியால் சுத்தி செய்யப்பட்டு, ஆன்மா புனிதனாகிறான் என்று அறியலாம். சமய விசேஷதீக்ஷைகளைப் பெற்றபின்பு சிஷ்யன் ஒருவருடகாலம் குருவுடன் குருவினிடத்திலேயே வசித்து வரவேண்டும். இதுவே குருகுலவாஸம் எனப்படுவதாகும். தன்னுடன் இருக்கின்ற சீடர்களை, ஓராண்டுக் காலத்தில் பக்குவநிலையை அறிந்திடப் பரீக்ஷக்கவேண்டும் என்கிறது, சிஷ்யர்களின் அத்தேர்வின் விதிமுறை, இதைக்கூறும் சான்று,

गुरुस्तु स्वाश्रितान् शिष्यान् वर्षमेकं परीक्षयेत्।
प्राण द्रव्य प्रदानाद्यैः आदरैश्च समागमै :। (आदेशैश्च समासमैः)
उत्तमानधमे कृत्वा नीचानुत्तम कर्मणि।
अक्रुष्टा स्ताडिता वाऽपि ये विषादं त्यजन्ति च ।
ते योग्या: संयुताः शुद्धा: शिवसंस्कार कर्मणि।। (ज्ञानरत्नावळी)

பாசம் என்கிற மலமானது, அசுத்தி, அக்ஞானம், தாமஸ், சைதன்ய ரோதகம் என்று பலவாறு கூறப்படும். அசுத்தமாயுள்ள இந்நிலை மலபரிபாகத்தால் மேன்மையடையும், அதனால் சக்திநிபாதம் அதாவது அருட்சக்திப் பதிவு ஏற்படும் என்கிறது ஆகமம்.

मल श्चाशुद्धि रज्ज्ञानं तम श्चैतन्य रोधकम्।' (वारुणापद्धति)
परिपक्वमला नेतान् उत्सादनहेतु शक्तिपातेन। (तत्वप्रकाशे)

இந்த குருகுலவாஸ ஒருவருடகாலத்தில், சீடனைப் பலவாறு, குருவானவர் தம்விருப்பப்படி சோதித்திடவேண்டும். உடல், உயிர், பொருள் இவற்றை சிடன்அளிக்க முன்வருவதாலும், ஸம அஸம நிலையிலிருக்கும், ஆதரவினாலும் உயர்ந்தோரை இழிசெயலிலும், தாழ்ந்தோரை உயர்செயலிலும் ஈடுபடுத்தி குணமன, ஈடுபாடு, தாப, நிலையாலும் அடித்திட்டபோதும் கோபப்படாது இருப்பதாலும், இவையைக்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
கைவிடுகின்றனரா? பொறுமை உள்ளதா? என இவற்றால் சோதித்து, இத்தேர்வில் தூய்மையாய் உள்ளவர்களே சிவஸம்ஸ்காரமாகிய மோக்ஷதீக்ஷையில் தகுதியுடையோர் ஆவார்கள். விருப்பு வெறுப்பு, கோபம், ஆசை, சுகம், துக்கம் இவற்றை விட்ட, சாந்தமாகிய, தூயகுணநலப்பண்புள்ளவர்களே தீக்ஷைசெய்திடத்தக்கவர்கள்.

சீடனுக்கு சேர்க்கையின் சிறப்பு

स्वयं तरितु मक्षमः परान् निस्तारयेत् कथम् ।
दूरे तं वर्जयेत् प्राज्ञाः धीर मेव समाश्रयेत् ।।

தன்னை உயர்த்தி மேன்மைபெற இயலாதவன் மற்றவர்களை எவ்வாறு உயர்த்திவிடுவான். எனவே, அறிவாளி அவனை இயலாதவர்களை நீக்கிடவேண்டும். எனவே அறிவொளி அவனை இயலாதவர்களை நீக்கிடவேண்டும். தீரனான சிறந்தவனையே சார்ந்துவிளங்கிடவேண்டும். எனவே தாழ்ந்த சேர்க்கையைத்தவிர்த்து மேலான வல்லுனரையே சேரவேண்டும்.

குருசொல்தரும் மேன்மை

परुषमपि गुरूणां बुद्धिबोधार्थयुक्तं -
वचन मनुसरन् याति शिष्यो महत्वम् ।
खनितलगतरत्नं श्रेष्ट मप्यत्र शाणो -
त्कषण मधिगतं तत् भाति मौलौ नृपाणाम् ।।

குருநாதருடைய ஞானோபதேசத்தோடுகூடிய நலம்தரும் வசனம் எவ்வளவு கடினமாயிருந்தாலும் அக்கட்டளையை மாணவன்விடாது பின்பற்றி நடத்தலாலேயே மேன்மையை அடைகிறான். எவ்வாறெனில் நிலச்சுரங்கத்திலிருந்த ரத்தினம் எவ்வளஉயர்ந்ததாக இருந்தாலும், அது சாணக்கல்லில் முறைப்படிபட்டை தீட்டப்பட்டாலே அந்த வைரம் முதலான இரத்தினம் மன்னர்களின் தலையில் ஒளிவீசும் அவ்வாறு குருவில் சொல்லாலேயே சீடன் மேல்நிலையை அடைவான்.

यथा खनन्खनित्रेण भूतले वारि सिध्यति ।
एवं गुरूगतां विद्यां सुश्रूषु रधिगच्छति ।।

எவ்வாறு பூமியில் மண்வெட்டியால் தோண்டப்படுவதால் நிலத்தடிநீர் கிடைக்கிறதோ, அவ்வாறே ஒருசிஷ்யன் குருவினுடைய முறையான

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
பணிவிடையாலேயே, குருவினுடையதான வித்யாஞானத்தை அடைகிறான்.

गुरुणा शोभते शिष्यः शिष्येणापि गुरुस्तथा ।
उभाभ्यां शोभते शाला शालया शोभते पुरम् ।।

நல்லகுருவினால் சிஷ்யன் மிளிர்கிறான். அவ்வாறே நல்லசிஷ்யனால் குருவானவர் பிரகாசிக்கிறார். இத்தகைய நல்ல கல்விச்சாலையாலேயே நகரம் புகழையும் சிறப்பையும்பெற்று மேன்மையடைகிறு. எனவே நல்லொழுக்க நெறியில் வாழும் குருசிஷ்யர்கள் தேவையானவர்கள்.

सद्वर्तनं च विद्वत्ता तथा ऽध्यापन कौशलम् ।
शिष्यप्रियत्वं एतत् हि गुरो र्गुण चतुष्टयम् ।।

1. நல்லநெறியில் வாழ்தல், 2. சிறந்த பாண்டித்யம் (புலமை) 3. நன்கு கற்பிக்கும் திறமை, 4. மாணவர்களிடத்தில் அன்புடனிருத்தல் ஆகிய இந்த நான்குமே, ஸத்குருவினுடைய இருக்கவேண்டிய நான்கு குணங்களாம்.

ज्ञानतृष्णा गुरौ निष्टा सदा ऽध्ययन दक्षता ।
एकाग्रता महत्वेच्छा विद्यार्थि गुणपञ्चकम्।।

1. ஞானத்தைப் பெறுவதில் ஆர்வமிகுதியான வேட்கையும், 2. குருவினிடத்தில் எப்பொழுதும் ஒன்றிநிற்பது, 3. படிப்பதில் திறமைசாலித்தனம், 4. மனதின் ஒருமுகத்தன்மை (இலக்கு) 5. மேன்மையானவற்றில் உயர்வதில்விருப்பம், ஆகியஇவைகள் ஐந்தும் கல்விகற்கும் மாணவருக்கான ஐந்துகுணங்களாகும். இவற்றை ஒவ்வொரு சிஷ்யனும் பெற்றுஇருக்கவேண்டும்.

உபதேசத்தின் உன்னதப்பயன்

குருஉபதேசம் என்பது, மற்றவர்களை அன்புடன் பாராட்டவும் தனக்குள் மனங்கலங்காமலிருக்கவும் சாதனமாக உண்மையை எடுத்துக்காட்டவேயொழிய, அவனவன் தன்னைப்பற்றி ஆத்ம பொறுப்பை இழந்துவிட்டுப் முயற்சியின்றிக் கெட்டுப்போகவல்ல. இந்த உபதேசம் மற்றவர்களை இவர்கள் பூர்வகர்மத்தின் பயனாக இழிகுலம் அல்லது இழிகுணம் கொண்டவர்கள் என்று இகழ்ந்து குரூரமாகவும் அசூயையுடனும் கர்வங்கொண்டும் நடத்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
ஆதாரமாகாது. அப்படி ஒருவன் செய்தால் தன்னுடைய ஆத்மாவைத் தாழ்த்திகொண்டவனாவான்.

ஆத்மா ஒன்றாலும் மாறுதலடையாது. அது தனித்துநிற்கிறது. பிரகிருதிகுணங்களே எல்லா சேஷ்டைகளையும் செய்கின்றன. அந்த சேஷ்டைகளால் ஆத்மா மாறுதலடையாது என்று சொல்லப்பட்டதெல்லாம் அதன் சொரூபத்தை உணர்த்துவதற்காகச் சொன்னதாகும். பாலில் மோர்விட்டால் பால் தயிராய்ப் போவதுபோல் தேஹத்துடன் சேர்ந்த ஆன்மாவின் சொரூபம் பாப புண்ணியத்தால் மாறிவிடாது. தனித்து நிற்கிறது. மாறுதலடையாது என்பவற்றின் கருத்து இதுவேயொழிய ஆத்மாவுக்குப் பொறுப்பில்லையென்று சொன்னபடியல்ல. செய்யும் செயல்களின் பாப புண்ணிய பயன் அதைத் தீண்டாது என்றல்ல. தீண்டும். தீண்டாதவாறு செய்யவே குருஉபதேசம் செய்வது.

சுபாவகுணங்கள் ஜடப்பிரகிருதியான தேகத்தில் நாட்டப் பட்டனவாயினும், அவை இந்திரியங்களையும் மனதையும் தம் ஆதீனமாக்கிக்கொண்டு, அவைகளின் வழியாய் ஆன்மாவையும் சிறைப்படுத்திவிடும். ஆனால், குணங்களுடன் போர்செய்து சிறை செய்யப்படாமல் தப்புவதற்கு ஆத்மாவுக்குச் சக்தியும் சுதந்திரமும் உண்டு, இதற்கு ஞானம் என்ற ஒப்பற்ற துணைவேண்டும்.

ஞானலக்ஷணம்

ஞானம் என்பது குணம், சாதாரணமான படிப்பினாலும், ஆராய்ச்சி யினாலும், தியானத்தினாலும் மட்டுமே வராது. பயன்படும் அறிவுதான் ஞானம். ஞானம் என்பது க்ஷேத்ரக்ஞர் பற்றியது என்கிறார் ஸ்ரீகிருஷ்ணர். ஞானத்தைப் பெறக்கூடி ஸாதனங்களுக்கும் ஞானம் என்று பெயரிட்டுக்கூறுவர். அதில்

அமானித்வ மதம்பித்வ மஹிம்ஸா க்ஷாந்தி ரார்ஜவம்.
ஆசார்யோபாஸநம் சௌசம் ஸ்தைர்ய மாத்மவிநிக்ரஹ: (கீதை)

இதில் ஆசார்யோபாஸனம் என்று குருவழிபாடு செய்வதே ஞானஸாதனம் எனப்படுகிறது. அறிவையும் நல்லுபதேசங்களையும் அளிப்பவர் ஆசார்யர் குரு. அத்தகைய ஆசார்யரின் அருகில் இருந்து ச்ரத்தையுடனும் பக்தியுடனும் மனம்மொழிமெய்களால் அவருக்கு எல்லாவிதமான சுகமும் தரக்கூடியஸேவைகளைச்செய்வது, அடிபணிந்து வணங்குவது, அவர்ஆணைகளை நிறைவேற்றுவது, அவர்மனம் உவக்குமாறு நடந்துகொள்வது இவையாவும் ஆசார்ய உபாஸனையில் அடங்கும் என்கிறது கீதை. ஆத்மா என்ற சொல் மனம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
புலன்களுடன் கூடிய உடலை குறிப்பதுமாகும். இவற்றை நல்லமுறையில் தன்வசப்படுத்துவது ஆத்மவிநிக்ரஹம். இது முழுமையாக அமையப்பெற்ற ஸாதகருடைய மனம், புத்தி, புலன்களோடு கூடிய உடல் அவர்விரும்பியவாறு செயல்படும். போகவிஷயங்களில் திரும்ப அவரை சிக்கவைக்காது. இடைவிடாது அவருடைய விருப்பப்படி ஸாதனைகளிலேயே ஈடுபடும்.

ஞானம் என்பது தற்பெருமையின்மை, தன்னிடமில்லாத நற்குணங்களை இருப்பதாகக் காட்டிக்கொள்ளாமை. எவ்வுயிரையும் மனம் வார்தை முதலியவற்றில் நேர்மை, பெரியோர்களுக்கு பணிவடை செய்தல், உள்ளும் புறமும் தூய்மையாயிருத்தல், உள்ளத்தின் உறுதியுள்ளமை, மனம் புலன்உடல்களைக்கட்டுப்படுத்துதல், பற்றற்றதன்மை அஹந்தையியல்லாமை, பிறப்பு இறப்பு, மூப்பு, நோய், இவற்றில் உள்ள துக்கத்தையும் குறைபாடுகளையும் திரும்பதிரும்ப சிந்தித்து பார்த்தல், மனைவி மக்கள் வீடு செல்வம் இவற்றில் பற்றின்மை, விருப்பமானவை விரும்பாதவைகளையடையும்போது ஒரேமாதிரியா இருத்தல், பகவனிடத்தில் அந்யோந்யயோகம், இறைவனிடத்தில் பிறழாதபக்தி, தனிமையைநாடி தனிமையில் வாழ்தல் இவையாவும் ஞானம் எனப்படுகிற ஞானஸாதனங்களாக அறியத்தக்கவையாகும்.

உண்மைஅறிவை அடையவிரும்பினால் புலன்களையும், மனதையும், செயலையும் அடக்கியாளவேண்டும். இப்படி அடக்காவிடின். அடைந்தஅறிவு உள்ளத்தில்புகுந்து ஆத்மாவிற்குத் துணையாகாது.

எண்ணெய்மேல் விட்ட ஜலம்மாதிரி பயனற்றுப் போகும். உண்மையறிவை அடையாமல், செயலையும் மனதையும் அடக்கி ஆளாமல் சுபாவகுணங்களை எதேச்சையாய் வேலைசெய்ய விட்டுவிட்டோமேயானால் கர்மச்சுமை விருத்தியாகிக் கொண்டே போகும். இதைத்தான் மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம் என ஔவையார் எடுத்துரைத்துள்ளார்

मन एव मनुष्याणां कारणं बन्ध मोक्षया: ।
मन एव मनुष्याणां कारणं सुख दु:खयो: ।।

என்பதாக மனமே மனிதரின் பாசத்தால் கட்டுண்டு இடுப்பதற்கும், பாசத்திலிருந்து விடுதலை பெறுவதற்கும், சுகத்திற்கும் துக்கத்திற்கும் காரணமாகிறது என்று கூறுகின்றனர். ஆதலால் ஜிதேந்திரியனாக இருக்க பயிற்சிமேற்கொள்ள வேண்டும். மஹாபாபம் செய்தவனா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
யினும் எனக்கு ஏதுகதி என்று ஏங்கி யாரும் நிராசை அடைய வேண்டியதில்லை, அவனுக்குங்கூட, தான்செய்த பாவச்செயலைப் பற்றித் துக்கப்பட்டு, பகவானைச் சரணமடைந்தால் விடுதலையுண்டு என்பதே கீதோபதேசஸாரமாம். இதென்ன? கர்ம பந்தம் இவ்வளவு சுலபமாகத் தீர்த்துக்கொள்ள முடியுமா? என்று சந்தேகப் படவேண்டியதில்லை, செய்த பாவச்செயல்களைப் பற்றியும், நினைத்த பாபஎண்ணத்தைப் பற்றியும், உண்மையாகத் துயரப்பட்டு மனங்கரைந்துருகினால் அழிவும் ஒருகர்மமே யாகும். அதன் நற்பயனையும் ஆத்மா அடையும். பகவானைச் சரண்அடைந்தால் கர்மமூட்டை திரிந்துவிடும் என்பது கர்மவிதிக்கு மாறாகாது. ஆனால் மந்திரங்கள் சொல்லிப் பின்னால் பிராயசித்தம் செய்து கொள்ளலாம் என்று மனதறிந்து பாவச்செயல் செய்தால் தப்பமுடியாது. உண்மையாக மனமுருகினா லொழிய வேணுமெற்று செய்தவனுக்கு உண்மையான பச்சாத்தாபம் ஏற்படமாட்டாது. தான் செய்த பாவத்திற்குத் தகுந்த அளவில் ஒருவன் பச்சாத்தாபப்பட்டால், அந்த பச்சாத்தாபமே அவனுக்குப் பெரும் துயரமும் துக்கமும் தந்து மற்றவர்கள் விதிக்கும் தண்டனையைவிடப் பெருந்தண்டனை ஆகும். அவ்விதமான துயரத்தைத் தானே அனுபவிப்பதால் தன்னைத்தானே தண்டித்துச் சுத்திசெய்து கொண்டதாகும். ஆனால் எவ்வளவு தூரம் உண்மையாகத் துயரப்படுகிறோமோ அதாவது நாமே துக்கத்தில் ஆழ்ந்து தண்டனைசெய்துகொள்கிறோமோ அந்த அளவுக்குத்தான் முன்செய்த பாவத்திலிருந்து தப்புகிறோம்.

பச்சாத்தாபப்படுவதும் (பின்வருந்துவது) பகவானைச் சரண் அடைவதும், உள்ளத்தில் உண்டாகும் ஆத்மாவின் வேகமேயொழிய, வெறும் மந்திரமாவது, பேச்சாவது, ஜபங்களாவது, சடங்காவது, அல்ல, புரோகிதனோ, குருவோ சொல்லும் க்ஷமாப்ரார்தனா மந்திரத்திலேயே பிராயச்சித்தம் முடிவடைவதில்லை. மந்திரமும், சடங்கும், புரோகிதரும், குருவும் உபயோகமற்றனஅல்ல. உபயோகமாக விளங்குவதே. புனிதமாவதற்கு ரிஷிகளும், முன்னோர்களும் உபயோகப்படுத்தின பாதகங்களும் காரியங்களும் சமிக்ஞைகளும் நாமும் உபயோகப்படுத்துவதனால் எண்ணங்களும் தைரியமும் பக்தியும் உண்பாகும். இவையெல்லாம் மனதைப் புனிதப்படுத்தக்கூடிய கருவிகள். அவ்வளவேயொழிய அவைகளைக்கொண்டு சத்தியத்தை ஏமாற்ற முடியாது. ஒருக்கால் மற்றவர்களை ஏமாற்றலாம். தன்னைத் தானேயும் மோசம்செய்துகொள்ளலாம். ஆனால், உண்மையையே ஒருவன் எவ்வகையினாலும் ஏமாற்றமுடியாது. **கர்மவிதி என்பது உண்மையின் உருவமே.** ஆகையால் அதை ஏமாற்ற முடியாது. ஒரு வியாபாரி பொய்த்தராசு அல்லது அளவில் குறைந்தபடி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
வைத்துக்கொண்டு ஜனங்களை ஏமாற்றலாம். அனால் எந்த வியாபாரியாலும் தன் கணக்கையே தான் ஏமாற்றமுடியாது. வைத்தியன் நோயாளியிடம் பொய்சொல்லலாம், ஆனால் ஜுரத்தை அளக்கும் சுரமானிக்கருவியையே அவனால் ஏமாற்ற முடியாதல்லவா?

வேறுசாஸ்திர புஸ்தகங்களில் எவ்வாறு சொல்லியிருந்தபோதிலும் பகவானைச் சரணடைந்து விடுதலை பெறுவதற்கு ஜாதியாவது குலமாவது பாதிக்காது. ஆண் பெண் வித்தியாசமுமில்லை. வழிதவறிப் போனவனுக்கும் கதி உண்டு என்பதாலேயே ஆகமதீக்ஷையும் சிவவழிபாடும் யாவருக்கும் உண்டு என்று ஆகமத்தில் கூறப்பட்டுள்ளதால் அறியலாம்.

आत्मन: क्रियते दीक्षा न हि देहस्य कुत्रचित्। என்கிறது காலோத்தரம்.

என்பதாக ஆகமங்களில் தீட்சையளிக்கப்படுவது, உயிருக்கே அன்றி உடலுக்குச் செய்யப்படுவதில்லை. ஜாதி, குலம், குணம் இவற்றை உயர்த்திடச் செய்யப்படுவதே தீக்ஷை குருவால் ஜாதி உத்கிருஷ்டதீக்ஷை செய்யப்படும். இக்கருத்து ஸ்ரீகிருஷ்ணபகவானால் கீதையில் உபதேசிக்கப்படுகிறது.

समोऽहं सर्वभूतेषु न मे द्वेष्यो ऽस्ति न प्रिय:।
ये भजन्ति तु मां भक्त्या मयि तेषु चाप्यहम्।। (भगवद्गीता)

இதன்பொருளாவது நான் எல்லா உயிர்களிடத்தும் சமமானவன். நான் யாரையும் வெறுப்பதுமில்லை. விரும்புவதுமில்லை. என்னைப் பக்தியோடு யார் வழிபடுகிறார்களோ அவர்கள் என்னகத்துள் அமர்ந்திருப்பார்கள், அவர்கள் அகத்துள் நான் இருப்பேன் என்கிறார். ஸ்ரீகிருஷ்ணர் உபமன்யு முனிவரிடம் சிவதீக்ஷை பெற்ற ஜகத்குருவாவார். தான் அறிந்ததை உலகுக்கு எடுத்துரைத்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA).
உத்தம ஜகத்குருவாய் உள்ளவர். இவர் கூறிய இக்கருத்துக்கள் மூல சிவாகமங்களில் அப்படியே கூறப்பட்டுள்ளதாலேயே உபதேசம் யாவருக்கும் பொதுவானது என்பதை உணரலாம். மிகவும் தவறான நடையோனாயினும் வேறுவழியில் மனத்தைச் செலுத்தாமல் என்னை வழிபட்டால் அவன் நல்லோனே ஆவான். அவனுடைய முயற்சி நன்முயற்சியே ஆகும். அவன் விரைவிலே தர்மாத்மா ஆவான். நித்ய சாந்தியு மெய்துவான் பக்தனுக்கு நாசம் இல்லை. அடியவர்களாக இருப்பவர்கள் ஆட்கொள்ளப்படுவர் என்கிறார் ஸ்ரீகிருஷ்ணர்.

ஆத்ம இயற்கைக்குணங்கள்பற்றி உபதேசம்

பிறக்கும்போது என்ன குணங்களுடன் பிறக்கிறோமோ அவை நம்மை செயல்களில் தூண்டுகின்றன. பாவம் செய்தான் என்று ஒருவனையும் துவேஷிக்கக் கூடாது. இழிவாகவும் நடத்தக்கூடாது. அவன் அந்தபாவத்தைச் செய்தான், நான் செய்யவில்லையென்று கர்வப்படவுங்கூட்டாது.

ஈசுவரனே அனைத்துக்கும் கர்த்தா என்று சொல்லுவதனால், தன் பொருப்பு தனக்கில்லை யென்றுபொருள் செய்துகொள்ளக் கூடாது. எல்லாம் பிறப்புச்சுபாவம் என்று விட்டுவிட்டு, பொறுப்பற்று நடக்க சிலசாஸ்திரநூல்களின் சுலோகங்களைப் பிரமாணமாக வைத்துக்கொள்ளுவது மூடத்தனமாகும். ஆத்மசக்தியினால், சுபாவகுணங்களை, அதாவது தான் முன்ஜன்மத்தில் செய்த கருமங்களின் பலனாகத் தான் சம்பாதித்த சுபாவகுணங்களை, அடக்கியாளமுடியும். அடக்கியாண்டு, அவற்றை வென்று ,விடுதலையடையக் கூடும். எவ்வாறு குணங்களைப் பெற்றோமோ அவ்வாறே நீக்கிக்கொள்ளவும் வேண்டும். சுபாவகுணங்களைப் பற்றிக் கீதையில் சொல்லுவதெல்லாம் மற்றவர்களை அன்புடன் பாராட்டவும் தனக்குள் மனங்கலங்காமலிருக்கவும், சாதனமாக உண்மையை எடுத்துக்காட்டவேயொழிய அவனவன் தன்னைப் பற்றி ஆத்மபொறுப்பை இழந்துவிட்டு முயற்சியின்றி கெட்டுப் போகவல்ல. இந்த உபதேசம் மற்றவர்களை இவர்கள் பூர்வகர்மத்தின் பயனாக இழிகுலம் அல்லது இழிகுணம் கொண்டவர்கள் என்று இகழ்ந்து குரூரமாகவும் அசூயையுடனும் கர்வங்கொண்டும் நடத்த ஆதாரமாகாது. அப்படி ஒருவன் செய்தால், அவன், தனது ஆத்மாவைத் தானே தாழ்த்திக்கொண்டவனாவான்.

Digitization by eGangotri and Sarayu Foundation of America. HHFA(USA)

ஆகையால் யாவரும் எதைச்செய்யலாம் எதை நீக்கலாம் என்று நிச்சயம் செய்துகொள்வதற்குச் சாஸ்திரத்தையே பிரமானமாக மூலசான்றாக வைத்துக்கொள்ளவேண்டும். சாஸ்திரங்களின் விதிமுறைகளை அறிந்து யாவரும் கருமங்களைச் செய்து வாழ்க்கையை நடத்திடவேண்டும் என்று அறநூல்கள் யாவும் உபதேசிக்கின்றன.

நம்முடைய பிரகிருதிகுணங்கருக்குத் தகுந்தவாறு நாம் தெய்வ உபாஸனைக்கு மூர்த்தியைத் தேடிக்கொள்கிறோம். நாம் எதை உபாஸிக்கிறேமோ அதிகவேட்கையோடு நேசிக்கிறோமோ, அந்த குணம் (பண்பு) நமக்கு உண்டாகும். இப்படி உபாஸனை செய்பவன் குணமும் உபாஸனைக்கிரமமும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுகிறது. எந்தவிதமான சிரத்தை அல்லது நம்பிக்கையுடன் நாம் கர்மங்களைச் செய்கிறோமோ அதுவும் இவ்விதமே, படைத்த குணத்துக்குத் தகுந்த சிரத்தை மனதில் உண்டாகும். கொண்ட சிரத்தைக்குத் தக்ககுணம் வந்துசேரும். ஆசாரமும் உணவும் இப்படியே நாம்படைத்த குணத்திற்குத் தகுந்தவாறு ஏற்படும் குணமும் அவைகளைத் தொடர்ந்து மாறும். அடுப்பில் நெருப்புக்கும் விறகுக்கும் உள்ள சம்பந்தம் மாதிரி. முதலில் நெருப்பு விறகை எரிக்கிறது. விறகு எரிவதால் நெருப்பு வளர் கிறது. இவ்விதம் ஒன்றுக்கொன்று உதவி ஏற்படுகிறது. நண்குணம் படைத்தலுக்கு இரு நல்லதெய்வம், நல்லமனோபாவனைகள், நல்ல இலட்சியங்கள் வைத்துக்கொள்வான். அதனால் இன்னும் குணம் மேன்மையடையும். நல்ல உணவில் அவனுக்கு ருசியுண்டாகும். நல்ல ஆஹாரமும் அவனுக்குச் சந்தோஷத்தைத் தரும். அவைகளால் அவனுடைய நல்லகுணம் இன்றும் வளரும். நற்குணமில்லாதவனுடைய புத்தியோ, உபயோகமற்ற உபாஸனை, உபயோகமற்ற தாமஸ உணவு (துராசாரம்) தீயபழக்கவழக்க செயல்பாடுகள் இவைகளில் செல்லும் வரவர தாமஸகுணமே அதிகரிக்கும். இந்தச் சூழலிலிருந்து தப்பி ஸத்வகுணமும் மேலோங்கும் வகையில் உணவு, ஆசாரம், கர்மயோகதவம் இருத்தல்வேண்டும்.

இந்ததாமஸ குணம் மேம்படுகிற சூழலில்இருந்து தப்புவதற்கு வழி என்ன? என்றால், கர்மத்தைப் பற்றி (வினை பாசத்தைப்பற்றி) முன்சொன்னதை நினைவுக்குத்தந்து கொள்ளவேண்டும்.ஆத்மாவுக்குச் சுதந்திர புத்தியிருக்கிறது, செயலுக்கு அதிகாரமும் உண்டு. அதை உபயோகித்து, கர்மபந்தத்திலிருந்தும் பிறவிக்குணங்களின் போக்கிலிருந்தும், மீள்வதற்குச் சாதனமான தெய்வஉபாஸனை, சமய ஆசாரம், ஸாத்வீககுண பதார்த்தமான ஆஹாரம் உணவுமுறை இவைகளை நித்திய நியமமாக வைத்துக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் ஆத்மா மேன்மையடையும் என்கின்றன அறநூல்கள்.

Digitization by Hindu Heritage Foundation, Ambattur (USA)

பூர்வஜன்ம காரணபலனுக்கும், இந்த ஜன்மத்தில் செய்யும் கருமத்திற்கும், பீஜாங்கு ரஸம்பந்தம் என்பதான விதைக்கும் முளைத்தசெடிக்கும் உள்ளது போன்ற தொடர்பானது இருக்கிறது. அதாவது செடியிலிருந்து விதை உண்டாகிறது. பின் அவ்விதை யிலிருந்து செடிமுளைக்கிறது. இதில் காரணம் காரியமாகும். காரியம் காரணமாகும். விதை காரணம், செடி காரியம். பின்பு செடி காரணம் விதை காரியம். இந்த இயற்கை நியதியே இதுவே தினசரி ஆசாரத்திற்கும் (ஒழுக்க நெறிசெயல்கள்) குணத்திற்கும் ஒன்றுக்கொன்றுள்ள பரஸ்பரஸம்பந்தம். ஒன்றிற்கு மற்றொன்று காரணமாகும். உடலெடுத்த ஆத்மாக்களிடம் பிறவியுடன் தோன்றும் சிரத்தை முன்றுவகையானதாகும். அவை ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்பன முக்குணங்களாகும். யாவருக்கும் தத்தம் பிறப்பியல்புக்குத் தக்கவாறு சிரத்தை உண்டாகிறது. ஆனால் இவன் தான்கொண்ட சிரத்தையால் தன்னை ஆக்கிக்கொள்கிறான். எவன் எந்தப்பொருளில் சிரத்தையுடையவனோ, பற்றுடையவனோ அந்தப்பொருளே தானாகிறான். இங்கு பக்திரஸத்தால் தெய்வப்பண்புடையவனாகிறான். வேஷத்திற்குச் செய்யப்படும், பூசை, தவம், ஆசாரம், முதலியவை பயன் தருவனவல்ல. அவ்வாறே ஒருபயனை விரும்பியும் அதனால் வரும் லாபத்தைக் கருதியும் செய்யப்படும் செயல்களும் பயன்தராதவையே சிலர் டம்பமும் அகங்காரமும், காமத்தாலும், சித்தவிகாரத்தாலும் இங்ஙனம் மதிகெட்டவர்களாய் செய்வதெல்லாம் தவமாகாது.



Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அறநூல் அறவுரை: (தவநெறி)

தவம்என்பது மனம் – வாக்கு – காயம் ஆகிய மூன்றினாலும் செய்யப்படும். நேர்மை, தூய்மையாயிருத்தல் (சுசி) பெரியோரிடம் பணிவு, புலனடக்கமாகிற பிரம்மசரிய விரதம், பூததயா எனும் உயிர்களிடத்தில் அதீத இரக்கம் இவைகள் உடலால் செய்யப்படுகிற சாரீரிகதவம். வாக்குத்தவம் என்பது ஸத்தியமும் அன்பும், ஹிதமும் கொண்ட இனியபேச்சு (நலம்தரும் மனம்கவரும் கூற்று), நல்ல தருமநூல்களைப் படித்தல். மனதை அமைதி நிலையில் வைப்பதும், சுத்த எண்ணங்களை எண்ணுவதும், போக எண்ணங்களை நீக்குவதும் மனநோம்பு ஆகும். இப்படிப் பலவித விரதங்களையும் (நோம்புகளையும்) லாபம்கருதாமலும், பிறருடைய மதிப்பைப்பெறுவோமென்று எண்ணாமலும், நோம்பின் சிறப்பைக்கருதியே செய்யவேண்டும். பிறருக்குத் துன்பம் உண்டாக்கவோ, அல்லது பிடிவாதப் புத்தியினாலேயே நோம்பு கொள்வது சுத்தத்தவறு.

देवद्विजगुरु प्राज्ञ पूजनं शौचमार्जवम्।
ब्रह्मचर्यं अहिंसा च शारीरं तप उच्यते।। (பகவத்கீதை)

தேவத்விஜ குருப்ராஜ்ஞ பூஜநம் சௌச மார்ஜவம் |
பிரஹ்மசர்யம் அஹிம்ஸா ச சாரீரம் தப உச்யதே ||

இதன்படி தேவர், அந்தணர், குருக்கள், அறிஞர் இவர் காணப் பூசித்தல், தூய்மை / நேர்மை, பிரம்மசரியம், உயிர்களை இம்சை செய்யாமை இவை சரீரத்தைப் பற்றிய தவம் ஆகும்.

अनुद्वेगकरं वाक्यं सत्यं प्रियहितं च यत्।
स्वाध्यायाभ्यसनं चैव वाङ्मयं तप उच्यते।।

அநுத்வேக கரம் வாக்யம் பதியம் பரியஹிதம் ச யத் |
ஸ்வாத்யாயாப்யஸ்நம் சைவ வாங்மயம் தபஉச்யதோ ||

இதன்படி, பிறருக்கு மனக்கலக்கம் உண்டாக்காதலும், ஸத்தியம் பொருந்தியதும், பிறருக்கு நலங்கருதியதுமான பேச்சுப்பேசுதல், சாஸ்திரம் ஒதிப்பயிலல், இவைகள் வாக்கினால் (வாய்சொல்லால்) செய்யப்படுகிற தவம்ஆகும்.

मनः प्रसादः सौम्यत्वं मौनं आत्मविनिग्रहः।
भावसंशुद्धि रित्येतत् तपो मानस मुच्यते।।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மன: ப்ரஸாதஸ்ஸௌம்யத்வம் மௌனம் ஆத்மவிநிக்ரஹ: |
பாவஸம்சுத்திரித்யேதத் தபோ மானஸம் உச்யதே ||

இதன்படி, மனஅமைதி, உள்ள மகிழ்ச்சி, பேச்சடங்கல் உள்ளத்தைக் கட்டிஅடக்குதல், எண்ணத்தூய்மை, இவை மனதால் செய்யப் படுகிற தவம் ஆகும். இப்படியே தானமும் என்ன நோக்கத்துடன் செய்யப்படுகிறதோ அவ்வாறு அது வகுக்கப்படும். கொடுக்கவேண்டும் என்கிற கடமையை உத்தேசித்து மகிழ்ச்சியுடன் கைம்மாறு எதிர்பாராமல் கொடுப்பதே சரியான தானம் ஆகும். புண்ணியம் சம்பாதிக்க வேண்டுமென்று கொடுப்பதும்கூட இரண்டாம் பக்ஷமே என்று அறியத்தக்கது. (இதில்பயன் எதிர்பார்த்தலால்)

दाव्यं मिति यद् दानं दीयते अनुपकारिणे ।
देशे काले च पात्रे च तद् दानं सात्विकं स्मृतम्।।

தாவ்ய மிதி யத் தானம் தீயதே அநுபகாரிணே |
தேசே காலே ச பாத்ரே ச தத் தானம் ஸாத்விகம் ஸ்மிருதம் ||

இதன்பொருள் கொடுத்தல் கடமை என்றறிந்து, கைம்மாறு வேண்டாமல், தகுந்த இடமும், தகுந்த காலமும், தகுந்த பாத்திரமும் (தக்கபெறும்நபர்) நோக்கிச் செய்யப்படும் தானம் ஸத்விகதானம் எனப் போற்றப்படுவதாகும் (தானம் = கொடை)

यत् तु प्रत्युपकारार्थं फलं उद्दिश्य वा पुनः ।
दीयते च परिक्लिष्टं तद् दानं राजसं स्मृतम् ।।

கைம்மாறு வேண்டியோ, பயனைக் கருதியோ, மனதில் வருத்தத்துடனோ கொடுக்கப்படும் தானம் **ராஜஸதானமாகும்.**

अदेशकाले यत् दानं अपात्रेभ्यश्च दीयते ।
असत्कृतं अवज्ञातं तत् तामस मुदाहृतम्।। **(பகவத்கீதை)**

தகாதஇடத்தில், தகாதகாலத்தில், தகாதவர்களுக்குச் செய்யப்படுவதும், தானம் பெறுபனை மதிக்காமல் இகழ்ச்சியுடன் செய்யப்படுவதுமான தானம் கீழ்தரமான **தாமஸதானமாகும்.** அவ்வாறே நாம் தினமும் உண்ணும் உணவு நம்முடைய குணங்களை ஓரளவு மேல்தூக்கவும், கீழ்தள்ளவும் செய்கின்றன. ஆதலால் உணவு நியமத்தை பின்பற்றதல் அவசியத்தேவை. சாத்விக்உணவு எது? சாந்த சித்தத்திற்குத் தடையான ராஜஸஉணவு எது? புத்தியைக் கொல்லும் தாமஸ்உணவு

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

எது? என்பனவற்றை கீதை யிலிருந்தும் ஆயுர்வேதம் முதலிய சாஸ்திரங்களிலிருந்தும் அறிந்த உரியதை ஏற்கவேண்டும். இவ்வாறே வேள்வியும் தவமும் தானமும் மூன்று வகையாக அமையும்

எந்த நிகழ்ச்சியும் நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோமோ அதன்படி நல்லதோ கெட்டதோ ஆகிறது. நம்முடைய புறநிகழ்ச்சிகள் நம்மை நம்மை ஆன்மாவை ஒன்றும் செய்ய முடியாது. அவற்றை அவ்வாறா யினும் செய்துகொள்ளும் சக்தி மனதுக்கு உண்டு. உலகம் என்பது, அதிலுள்ள கோடிக்கணக்கான பிராணிகள் உயிரற்றபொருள்கள் இவை அனைத்தும் ஒன்றுக்கொன்று பரஸ்பரஸம்பந்தத்துடன் அமைக்கப்பட்டுள்ள ஒரு அமைப்பாகும். உலகத்திலிருந்து ஒருவன் தன்னை வேறுபடுத்திக் கொண்டு வாழ்வது உடம்பில் ஒருகொப்புளம் அல்லது பரு உண்டாவது போலாகும். சரீரசம்பந்தம் இருந்தும் அந்த சரீரத்தின் அமைப்பில் சரியாகச்சேராமல் நோய் இழைப்பது கொப்புளம் அல்லது புண் ஆகும். அவ்வாறே ஒருவன் உலகத்திலுள்ள உயிரினங்களுடன் ஒன்றினையாமல் ஐக்கியப்படாமல் தன்னை வேறுபடுத்திக்கொள்வதும் ஆத்மதுரோகமாகும். இந்த உலகத்தில் ஒருபாகமாகிய எனக்கு நேரிடும் எந்த சம்பவத்தைக் குறித்தும் நான் வருத்தப்படக்கூடாது. வருத்தப்பட்டால் உலக அமைப்பில் சேருவதற்கு இணங்காமல் அதற்கு இடையூறு விளைவித்ததைப் போலாகும். உலகம் முழுவதும் அடங்கியுள்ள, பரவியுள்ள பிரபஞ்சத்தின் பராசத்திக்கு அது துரோகமாகும். ஒருவனைத் துவேஷித்தாலும் (வெறுத்தாலும்) அல்லது ஒருவன்மேல் கோபம் கொண்டு தீங்குசெய்ய நினைத்தாலும் அது உலகத்தினின்று வேறுபடும் குற்றமாகும். நேர்ந்த இன்பத்தினாலாவது, துன்பத்தினாலாவது மனநிலை கெட்டால் அதுவும் துரோகமாகும். கபடம், பொய், மோசம் இவை கலந்த பேச்சும் செயலும் துரோகமாகும். பயனில்லாத செயலும், சிந்தனையும், குறிக்கோளற்ற வாழ்க்கையும் அவ்வாறே துரோகமாகும். எந்தச்சிறிய காரியத்தையும் மனதில் நிலை கொண்ட தருமத்தின்படி செய்யவேண்டும். அரசன் கட்டளைக்கும் அமைப்புக்கும் கீழ்பட்டு நாம் நடப்பதுபோல் பகுத்தறிவு உள்ள

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
ஒவ்வொருவனும் எல்லா ஆட்சிகளுக்கும் மேலானதும், வழிகாட்டியுமான ஆட்சியும் அமைப்புமான இந்த உலகஅமைப்பின் தெய்வீகதருமத்தை அனுசரித்து நடந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு உலகஇயக்க இயற்கைஅமைப்பை அனுசரித்து நடந்து கொள்ளாவிட்டால், அது பிரபஞ்ச ஆட்சிக்குத் துரோகம்செய்த வாறாகும், அதனால் அதில் வாழ்வதால் ஆத்மதுரோகமும் ஆகும். எனவே இறைவனின் படைப்பாகிய உடல், உலகம் இவற்றை மதித்திட வேண்டும். நாம் நமது வினைப்பயனை அனுபவித்து நீக்கிடவே ஞான நெறியில் வழிபட்டு உயர்த்திடவே இறைவன் தனு = (உடல்) கரணம் (தத்துவக்கருவி) புவனம் (உலகம்) இவற்றை நமக்கு அளித்துள்ளார்.

மனிதனுடைய ஆயுளில் கழிந்தகாலம்போக உண்மையில் இருப்பது ஒருகண நேரமே. வாழ்வு நிலையற்றது. வாழ்வு என்பது. ஆற்றுநீரைப்போல் ஓடிஓடி கழிந்திபோகும் ஒரு நிகழ்ச்சியே. அவன் மனதைக் கவரும் விஷயங்களும் நிலையற்றவையே. மனிதனுடைய உணர்ச்சியும் தெளிவற்றது. உடலும் அழிந்து போகும் பொருள்களால் ஆக்கப்பட்டது. மனமும் ஆற்றோட்டத்தில் ஒருசுழி போன்றது. விதியும் அறியக்கூடாதது. புகழும் அறிந்தோர் ஆக்குவது அல்ல ஒழுங்கற்றது. சுருங்கச்சொல்லின் உடம்புக்குச் சம்பந்தப்பட்டதெல்லாம் நீரோட்டம் மனதுக்குச் சம்பந்தப்பட்டதெல்லாம் நிலையும் உருவமுமற்ற கனவு. ஆயுள் நாளெல்லாம் ஒரு போராட்டம், அல்லது தேசாந்திரியின் யாத்திரை, வாழ்க்கை ஒரு எதிர்நீச்சல், இறந்தபின் அடையும் புகழும் வெரும் அந்தகாரம் இருட்டுஆகும். இவற்றின் இடையில் மனிதனுக்கு எது வழிகாட்டியாகும்? எனில்அதற்கு பதில் ஞானம் ஒன்றே. இந்த ஞானம் எதுவென்றால், ஒவ்வொருவன் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கும் தெய்வத்தன்மையுடைய ஆத்மாவிற்கு தீங்கு நேரிடாமல் சுத்தமாக மாசற்ற நிலையில் வைத்து தொடர்ந்து பாதுகாப்பதே ஆகும். சுகத்திற்கும் துக்கத்திற்கும் மேலாக ஆத்மாவை நிறுத்திவைப்பகதஞானமாகும். விருப்புவெறுப்பற்ற சாந்தநிலை எய்துதல். பயனிலாச்செயல், மோசம், கபடம் இவைகளைச் செய்யாதிருத்தலே ஞானம், தனக்கு மற்றொருவன் இது செய்யவேண்டும், இதுசெய்யாமல் ஒழியவேண்டும் என்று எதிர்பாராதிருத்தலே ஞானம், எது நேரிட்டாலும் எந்தக்கடவுள் என்னைப் படைத்தாரோ, அல்லது எந்தப் பிரகிருதி அமைப்பில் நான் ஒருபாகமாகப் பிறந்தேனோ அந்தத்தெய்வம் அந்தப் பிரகிருதியே அதற்கும் காரணம் என்று அறிந்து நேரும் சுகம் துக்கம் இரண்டையும் வருத்துமின்றி ஒப்புக்கொள்வதே ஞானம்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

முடிவில் சாந்தசித்தத்துடன் மரணத்தை எதிர்கொள்வதே ஞான மாகும். மரணம் என்றால் என்ன? எந்த மூலதாதுக்கள் சேர்ந்து உடல் உண்டாயிற்றோ அந்தந்தத் தாதுக்களாக மறுபடி உடல் பிரிந்துபோவதே மரணம் என்று அறியவேண்டும். இதைக்கண்டு ஏன் கலங்கவேண்டும்? நாம் யார்? சில தாதுக்களின் (குத்துவங்களின்) சேர்க்கையினால்தானே உடலோடு நாம் உண்டாயிருக்கிறோம். அந்த தாதுக்கள் ஓயாமல் உருவம் மாறியும், அமைப்பு மாறியும் இருந்து கொண்டிருப்பதை நாம் அறிவோம். அதைப்பற்றிக் கவலையில்லை. அவ்வாறிருக்க அந்தப் பொருள்களின் சேர்க்கையாகிய இந்த உடலின் (பரிணாமத்தை) மாறுதலைக் கண்டு ஏன் அஞ்சவேண்டும்? மரணம் என்பது பிரகிருதி யின் இயல்பாகும், இயல்பான ஒருவிஷயம் எப்போதும் தீங்காகாது.

கடமைகளைச் செய்துமுடிப்பதை ஒத்திப்போடவேண்டாம். ஆத்மசுத்திக்கு வேண்டிய முயற்சிகளையும் ஒத்திப்போட வேண்டாம். ஒவ்வொருநாள் கழிந்ததும் உனக்குள் ஆயுளில் ஒரு பாகம் கழிந்து போயிற்று. மீதியுள்ள நாட்களிலும் எவ்வளவு காலம் விவேகமும் ஆத்மசுத்திக்கு வேண்டிய ஞானமும் பெற்றிருப்பாமோ தெரியாது. உடலைப்பொறுத்தமட்டில் ஜீரணசக்தியும் ஆசைகளும் முன்புபோலவே இருக்கலாம். அதுமட்டும் இருந்தால் என்னபயன்? விஷயங்களை உணரும் சக்தியும் கடமைகளை விவேகத்துடன் செய்துமுடிக்கும் அறிவும் இருக்க வேண்டுமல்லவா? மூப்பில் இவையெல்லாம் குறையும் ஆயுள் மட்டும் போதாது. மரணம் வருவதற்கு முன்னேயே அறிவு போய்விடும். உணர்ச்சிநுட்பம் அழிந்து போய்விடும். மனோபலம் போய்விடும். விவேகம் தீர்ந்து போய்விடும் ஆகையால் அறச்செயலை செய்வதை ஒத்திப்போடக்கூடாது. இறையின் படைப்பான இயற்கை அழகை உணர்ந்து அனுபவிக்கத் தெரியவேண்டும், குற்றம்போலும் குறைபோலும் தோன்றுவதிலும் உண்மை அழகு இருக்கிறது. பிரகிருதி அழகை அனுபவிக்கத் தெரிந்தவர்களின் கண்களுக்கு அழகிலாத பொருள்களே இல்லை. ஒவ்வொன்றிலும் ஒரு தனிப்பட்ட அழகைக்கண்டு அனுபவக்கலாம்.

சிலையில் செய்யப்பட்ட யானை, சிங்கம், புலி, கரடி, நாய் இவற்றை எவ்வாறு மிக்க அழகென்று அனுபவிக்கிறோமோ அவ்வாறே உயிர்கொண்ட அந்தப் பிராணிகளின் உறுப்புகளும் அழகாகவே தோன்றும். இயற்கையைப் பற்றி ஞானம் பெற்றவன், வயது முதிர்ச்சி நிலையை அடைந்த ஆண் பெண்களிலும் முதிர்ந்த அழகைக் காண்பான். இளமைப் பருவங்கூடிய அழகைக் கண்டாலும் அவன் உள்ளம். கற்பு இழக்காது. மாசு படியாத பார்வை செலுத்தியே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
அழகை மட்டும் அனுபவிப்பான். இயற்கை எவ்வாறு வேலை செய்கிறது. என்பதை உணர்ந்தஞானி இன்னும் பலவிஷயங்களில் மற்றவர்கள் காணாதவைகளைக் காண்பான். எனவே கடமையைச் செய்யவேண்டும்.

अनित्यानि शरीराणि विभवो नैव शाश्वतः ।
नित्यं सन्निहितो मृत्युः कर्तव्यो धर्मसं ग्रहः ।।

உடலுள்ளவரை ப்ராரப்கர்மாவை செய்தே அழித்திடவேண்டும்.

नाभुक्तं क्षीयते कर्म कल्प कोटिशतैरपि।

பலகோடிகல் பகாலமே யானாலும் அனுபவிக்கப்படாமல் கர்மா வினை எனும் பாசம் அழிவதில்லை. தீக்ஷையால் ஆகாமிகர்மாவும் ஸஞ்சித்கர்மாவும் மட்டுமே ஞானாக்னியால் பொசுக்கி நீக்கப்படும். மமகாரம் என்ற (ஆணவமலமான) நோய் தீரும்வரை கர்மத்தைச் செய்தே ஆகவேண்டும். நோயாளியானவன் சிகித்ஸைக்கு உள்பட்டு வைத்தியசாலையில் பதிவு செய்யப்படுகிறான். நோய் தீருமுன் வெளியேற முடியுமோ? அல்லது அனுமதிப்பார்களோ? நோய் தீர்ந்துவிட்டால் அங்குவேலையும் இல்லை. வெளியேற்றிடுவர். அந்தபோல் பிரகிருதி என்ற (ஸம்ஸார துக்கவடிவான) வைத்தியசாலையில் கர்மம் என்ற சிகிச்சைக்கு உட்பட்டுத்தான் ஆகவேண்டும். அல்லது பாடசாலையை எடுத்துக்கொள்வோம். அங்கு வித்யார்த்தியானவன் இருப்பது ஞானத்தை சம்பாதிக்கவேண்டித்தானே ஒழிய, எக்காலமும் அங்கேயே வசிப்பதற்கு அல்ல. உலகவாழ்க்கை என்ற பள்ளியும் அத்தகையதே. நம் முதிர்ந்த அளவிற்கு இவனை கர்மா விட்டுவிடும். ஒரு சமயம் வெளிஉலக ஞாபகம் வந்துவிட்டால் பலகாலம் சென்று இருப்பினும் தன்னை நொந்துகொண்டு ஸந்தியை உபாஸிக்க உட்கார்ந்ததும் அயர்ந்துவிட்டேனே என்று உடன் கர்மாவைத் தொடங்குவான். ஆக இவன் எப்போதும் க்ஷணகாலம்கூட தனது செய்யவேண்டிய கர்மாவை கைவிடக்கூடாது, தர்மகர்மாவை புறக்கணித்தால் அது பகவானையே புறக்கணிப்பதாக ஆகும். தர்மத்தை இங்குநாம் காத்தால் பறத்திலும் அது நம்மைக் காத்திடும் என்பது அறநூல்களின் முடிவு.

அறம்பின்பற்றுதல் (தரம் ஆசரணம்)

स्थावर जङ्गमात्मकं जगत् धर्माधर्मात्मकं सृष्टम्।

என்றபடி வசனப்படி, இவ்வுலகம் அசையாய்பொருள், அசையும் பொருட்களால் ஆனது, மேலும் தர்ம அதர்மங்களை உள்ளடக்கியதாக படைக்கப்பட்டது. அந்த தர்மாதர்மங்கள் மகரிஷிகளால் மனுமுதலான

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
முப்பத்திரெண்டு ஸ்மிருதி நூல்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆராயாமல் பின்பற்றி வாழவேண்டும்.

धर्मशुद्धिं अभीप्सद्भिः न वेदा दन्य दिष्यते।
धर्मस्य कारणं शुद्धं मिश्र मन्यत् प्रकीर्तितम्।
अतः स परमो धर्मः धर्मो यो वेदा दधिगम्यते।
अवरः स तु विज्ञेयः यः पुराणादिषु स्मृतः।
वेदार्थं वित्तमैः कर्म यत्स्मृतं मुनिभिः पुरा ।
यद् यत्नेन समातिष्ठेत् तन्निषिद्धं तु वर्जयेत्।
ते हि वेदार्थं तत्वज्ञाः लोकानां हितकाम्यया ।
प्रदिष्टवन्तो यं धर्मं तं धर्मं न विचारयेत्।।
वेदार्थो यः स्वयं ज्ञातः तत्राज्ञानं भवे द्यदि।
ऋषिभि र्निश्चिते तस्मिन् का शङ्का स्यान्मनीषिणाम्।
एतेभ्योऽपि यदन्यत्स्यात् किञ्चित् धर्माभिधायकम्।
तद् दूरतरतो विद्धि मोह स्तस्या श्रयो मतः।।

மேற்கண்ட கூற்றுகளின்படி அறநெதியில் தன்னைப் புனிதப் படுத்திக்கொள்ள விரும்புபவர்களால் வேதநெறியைக் காட்டிலும் மற்ற எந்த நெறியும் செயலும் ஏற்றகத்தக்கதல்ல. உள்ளும் புறமும் சுத்தமாக இருப்பதே தர்மத்திற்கு காரணமாகிறது. மற்றவைக் கலந்ததாகும். ஆதலால் வேதத்திலும் அறியப்படுவதே மேலாக அறமாகும்.

வேதோகிலோ धर्ममूलं வேதமே அனைத்து அரங்களுக்கும் அடிப்படையாகும் புராணங்களில் கூறப்படுபவை இதற்கு அடுத்த நிலையில் உள்ளவைகளே. வேதார்த்தங்களை. அறிந்தல் மிருதிகளை அளித்திட்டஅறிஞர்கள் கூறியசெயல்களையும் முன்பு முனிவர்களால் பின்பற்றப்பட்டு வந்தவைகளையும் முயற்சியோடு பின்பற்றப்பட வேண்டும். அவற்றில் விலக்கபட்டவற்றை ஒருபோதும் பின்பற்றாமல் விலக்கிடவேண்டும்.

வேதாகமபுராணாதிகளில் தம்மால் குறை காணப்படின் அது நமது அக்ஞானம் அறியாமையே தவிர வேறொன்றுமில்லை. வேதம் ஸ்மிருதிகள் நிச்சயித்தவற்றை நமது அறிவால் ஆய்வு செய்தல் கூடாது. ரிஷிகள் கூறியவற்றில் சாதாரண மனிதர்களான நமக்கு ஸந்தேஹம் எப்படி வரலாம்? இந்த நூல்களைவிடவோ? அறம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உரைக்கும் நூல்கள் இவ்வையகத்தில் இல்லவேயில்லை. ஆதலால் வேதாகம நெறிகளுக்குப் புறம்பானவற்றை விலக்கித் தொலைவிலேயே வைத்திடவேண்டும். பின்பற்றக் கூடகது என்றறிக.

பாசங்களால் கட்டுண்டு பத்தாத்மாவாயுள்ள ஜீவன், தனது மாசுக்கட்டிலிருந்து விடுதலையாகி சிவத்வம் எனும் இறைவனின் எட்டுக்குணப் பண்புகளைப் பெறத் தகுதியுடையவனாகிறான். இவ்வாறு ஆசார்யரின் தீக்ஷையால் சீடனுக்கு மும்மலுக்கட்டு நீங்கி சிவஞானம் ஏற்படுகிறது. சிவனின் உறைவிடத்தை, உண்மையை, மோக்ஷத்தைத் தனது சீடனுக்கு காண்பிப்பதால் ஆசாரியர் தேசிகர் எனப்படுகிறார். லிங்கம் சிவாக்னி குரு ஆகிய மூன்று இடத்திலும் சிவபெருமான் என்றும் இருப்பதாக ஆகமங்கள் கூறுகின்றன. ஆகமஆசார நெறி வழுவாது தூய்மை நிலையிலேயே வாழ்வதால் சிஷ்டர் எனப்படுகிறார். பரமகுருவான சிவனை திருநாவுக்கரசர் தீக்ஷை செய்யும் சிஷ்டர் என்றே தேவாரத்தில் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார்.

இதனால் இறைவன் ஜீவனுக்கு அருள்செய்வதே தீக்ஷை என்பதாகும். மேலும் அப்பர் சுவாமிகள் கொடுமுடி தேவாரத்திலும் தக்ஷிணாமூர்த்தியாகக் கருதிபோற்றுங்கால் சிட்டன் என்று குறிப்பிடுகிறார்.

சிட்டனை சிவனை செழுஞ்ஜோதியை
அட்ட மூர்த்தியை ஆலநிழல் அமர்
பட்டனைத் திரு பாண்டிக் கொடுமுடி
நட்டனைத் தொழ நம்வினை நாசமே. (திருநாவுக்கரசர்)

என்று கூறுகிறார். இங்கு ஆசார்யரே தேவராஜர் என்பதாக பட்டர் என்றும் பட்டன் எனவும் பெயர் பெருகிறார். பரமகுருவைத் தொழ நம் வினைகள் அழியும் என்கிறார்.

குருவம்ச கீரமம் (குருவின் தோற்றமுறைமை)

வேதாகம ஞானமானது சிவனிடமிருந்து குருசிஷ்ய பரம்பரையில் இப்புவியை வந்தடைந்துள்ளது. இதனால் குருவுக்கும் சீடக்கும் ஏற்பட்ட ஸம்பந்தத்தால் ஸந்தானம் ஏற்படுகிறது. இவை பலவகையில் ஓகம் = கூட்டம் என்பதாக திவ்யௌகம், ஸித்தௌகம், மானவௌகம் என்பதாக முன்று வகைப்படுகிறது. அதாவது. தேவர்கள், சித்தர்கள், மனிதர்கள் என்ற மூன்றுநிலையில் குருகுழுமங்கள் உள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரமசிவன் முதலாக பலநிலைகளில் குருமார்கள் விளங்குகின்றனர் அவரிடமிருந்து வழிவழியாகத் தோன்றிய வம்சாவளியினர் ஸந்தான குருமார்கள் எனப்படுவார்கள். இதனால் குருமரபு கயிலாயம் முதலாக இப்பூவுலகை அடைந்து, பரவி இருப்பதாயிற்று. திருக்கயிலாய பரம்பரை என்றும், நந்திஸத்தானபரம்பரை என்றும் குருபரம்பரை விளங்குகிறது. அவற்றில் முதலாவதாகக் கூறப்பட்டது பரசிவஸந்தானம் எனப்படுவதாகும். அதாவது பரம்பொருளான பரமபதியாய் உள்ள பரசிவனை ஜீவனாக் கொண்டு உருவநிலையில் ஸதாசிவன் வடிவில் இருந்தவர் பரமேஷ்டிகுரு, முதல் பரமகுரு ஸதாசிவகுரு ஆகிறார். பரமசிவனிடமிருந்து ஸதாசிவகுருவும், அந்த ஸதாசிவகுருவினிடமிருந்து அனந்தேசகுருவும், இவ்வறாக இடைவிடாது தொடர்ச்சியாக குருசிஷ்ய பரம்பரையானது நூல்களில் கூறப்படுகிறது.

இந்த வகையிலான, குருவம்சத்தின் வரிசை முறையை ஆகமங்கள் முன்று வகையாகக் கூறுகின்றன. அதாவது பர–அபர–பராபர என்றவாறு.

गुरवो बहव स्त्वत्र परापर विभेदतः।
चोदकादि विभेदेन तथा गुर्वी दि भैदतः (पराख्यआगमवृतौ)

இந்த பராக்ய ஆகமஉரை வாக்கியத்தின்படி குருபரம்பரையை சோதகர்கள் (அறிவைவதுரண்டிச் செயல்படச் செய்யும் தெய்வங்கள்) என்றும் குருமுதலானவர்கள் (ஆசார்யர், தேசிகர், போதகர் ஸாதகர் முதலான உபதேசக்குருமார்கள்) என்றும் இருவகையில் இந்த குருபரம்பரை விஷயத்தில் எண்ணற்ற அனேகம் குருக்கள் விளங்குகின்றனர். அவர்கள் பர என்றும், அபர என்றும் இரண்டும் கலந்த பரா–பர என்றும், முன்றுவகைகளில் அறியத்தக்கவர்கள்.

மூவகை குருநாதர்கள்

இவற்றில் பரகுருநிலையில் பரமேச்வரன், ஸதாசிவன், சாந்தன் ஆகிய பெயர்களில் விளங்குவர்ஆவர். இவை முன்றும் ஒன்றே. இது ஒரே பரம்பொருளின் விரும்பிஏற்ற உருவநிலையாகும்.

ईश स्सदाशिव श्शान्तो गुखः परमाः मृताः ।
एकमेव परं तत्वं स्वेच्छया तु त्रिधा स्थितम्।।

அபரகுரு வகையில் 1. அனந்தேசர், 2. ஸ்ரீகண்டர், 3. உமாதேவீ, 4. கந்தஸ்வாமீ, 5. விஷ்ணு, 6. பிரம்மா ஆகிய ஆறு முக்கிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவர்களும், ஆறு குருமூர்த்திகளாக விளங்குகின்றனர். இந்த இருவகையையும் சேர்த்து ஸதாசிவாதி ஸப்தகுருக்கள் என்பது ஆதிசைவ ஆகமமரபு. மூன்றாவது வகையான பராபரகுரு வகையில் அபரநிலையில் தேவர்களும் முனிவர்களும், மனித குலகுருக்களும் விளங்குகின்றனர். இவற்றைத் தெரிவிக்கும் ஆகமசான்ற இதுவே.

अनन्तः श्रींगळ श्रोमा स्कन्दो विष्णु र्विधि स्तु षट्।
परा ऽपरे परं देवा मुनयो नृ गुरूत्तमा:।।

பராபர வகையில் பரத்தில் தேவர்களும், முனிவர்களும், அறியத்தக்கவர்கள். அபரவகையில் மனிதகுலகுருவும் தன்னுடைய குருவாகிய ஸ்வகுருவும் விளங்கிடுவர். இவ்வாறு தேவகுல ஸம்பந்தமுடையவர்களின் கூட்டம் குழுமமே திவ்யௌகம் எனப்படுவதாகும். நமக்கு முன் அந்த தெய்வத்தை உபாஸனை செய்து வழிகாட்டி ஸித்தியை அடைந்தவர்களான ஆரியர்களின் கூட்டமே ஸித்தௌகம் எனப்படுவதாகும் மற்றவகையாவும் மானவௌகம், சிஷ்யவர்கம் எனப்பொருள்படும் மானுஷகுருக்கள். இவ்வாறு மூவகையில் குருமண்டலமானது திவ்யவ்கம், ஸித்தவ்கம், மாணவவ்கம், என்று மூன்றுநிலையில் அறிந்து, பூசிக்கத்தக்கது. க்ருணந்தி = அதாவது உபதேசிக்கின்றனர் என்ற காரனத்தினால், குரு எனப்படுவதாக விஞானஉரையாசிரியர்கள் கூறியுள்ளனர்.

गृणन्ति-उपदिशन्तीति = गृणन्तीति गुरवः इत्युच्यते।।

இவர்களை உண்மையான இறைவனே என்ற முழு நம்பிக்கையுடனே பக்தி சிரத்தையுடன் உண்மையில் உள்ளம் உள்கி உகந்து சிவமே என்று கண்டு மனம் மொழி மெய் மூன்றாலும் வணங்கிட வேண்டும்.

ஆகமபரம்பரா குருக்கள் (ஸப்த குருக்கள்)

இதனையே குருபரம்பராவந்தனத்தில் கூறுவது மரபு, அதாவது,

सदाशिव समारम्भां श्रीकण्ठाचार्य मध्यमाम्।
अस्मदाचार्य पर्यन्तां वन्दे गुरुपरम्पराम्।।

ஸதாசிவ ஸமாரம்பாம் ஸ்ரீகண்டாசார்ய மத்யமாம்.
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம். (சைவபத்ததி)

பூஜைசெய்வதற்கு முன்னும் முதல் ஸதாசிவர் முதலான ஏழு குருமார்களையும் வணங்கி அனுமதியைப்பெற்ற பின்னரே பிரதான தெய்வத்தைப் பூசைசெய்வது ஆகமமரபு செயல்முறை. எழுவர் பெயர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

सदाशिव मनन्तं च श्रीकण्ठं पुन राम्बिकाम्।
गुहं विष्णुं च धातारं सदा सप्त गुरुन् स्मरेत्।।

ஸதாசிவம் அனந்தம் ச ஸ்ரீகண்டம் புனர்அம்பிகாம்.
குஹம் விஷ்ணும் ச தாதாரம் ஸதா ஸப்தகுரூன் ஸ்மரேத்.

இதில் ஸாக்ஷாத் பரமசிவ அனுக்ரஹத்தாலேயே குஹன் முதலானோர் பரமகுருவாயுள்ளனர். இங்கு ஸ்ரீகண்டர் குணதத்துவத் திற்குமேல் இருப்பவர். அசுத்தாத்வ புவனங்களின் கர்த்தாவும் குருஆவார். அங்கு கார்த்திகேயன் முதலான குருக்கள் உள்ளதாக பௌஷ்கரம் கூறுகிறது. இவர்களது உலகமான குருக்களின் புவனம் எட்டு கூறப்படும்.

அக்ருதம் ச க்ருதம் சைவ பைரவம் ப்ராஹ்ம மேவ ச.
வைஷ்ணவம் சைவ கௌமாரம் ஔமம் ஸ்ரீகண்டமேவ ச.
புவனானி குணேஷ் வஷ்டௌள..... என்று கூறுகிறது,

அனைத்திற்கும் தோற்றுவாயாக உபாதானமாக விளங்குகின்ற பிந்துவிலிருந்து, அதிலிருக்கிற மஹேச்வரரிடமிருந்து ஸ்தாவரம், ஐங்கம ரத்மகமான உலகம் உத்பத்திக்காக பிந்துவைக் கலக்கிய ஸதாசிவத்தினிடமிருந்து அதிலிருந்து பித்துவைக்கடந்து, நிஷ்களம் என்று இரண்டாவது கூறப்பட்டது. உலகத்தை தோற்றுவிப்பதற்காக ஞானஉடலை உடைய வராகிறார் என்று அறியவேண்டும். அப்படி சித்தேஹத்தை உடைய ஸதாசிவனால் பிந்துவைக் கலக்கும் காலத்தில் அதிலிருந்து மேலான **சைவகாயத்ரீசக்தி** தோன்றியது. அந்த சைவகாயத்ரீயால் அதிஷ்டிக்கப்பட்டதே சைவகுலம். அதாவது **சைவஸந்தானம்.** ஸதாசிவர் பிந்துவைக் கலக்கிப் படைத்திட்ட தருணத்தில் பைந்தவ உடலுடைய அனந்தர் முதலான எட்டு வித்யேசர்கள் தோன்றி வெளிப்பட்டனர். ஸதாசிவர் உருவமற்ற நிஷ்களசிவத்திலிருந்து தோன்றினார். ஆதி சிவனிடமிருந்து அனந்தேசரும் முறையே அனந்தேசரிடமிருந்து பிரம்மாண்ட மத்ய கைலாசத்தின் அதிபதியான ஸ்ரீ கண்டருத்திரர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தோன்றினார். ஸ்ரீ கண்டருத்ரரிடமிருந்து விஷ்ணுவும், விஷ்ணுவிடமிருந்து பிரம்மாவும், பிரம்மாவிடமிருந்து இந்திரன் முதலான தேவர்களும் தோன்றினார்கள். மீண்டும் ஸ்ரீகண்டருத்ரரிடமிருந்து துர்வாஸமஹரிஷி தோன்றினார். இவ்வாறாக ஸந்தான முறையில் இந்த மண்ணுலகில் துர்வாஸரால் ஸதாசிவகுலம் தோன்றியது என்று சைவகுருக்களின் ஸந்தான பரம்பரையை ஞானசிவாசசார்யர் கூறியுள்ளார். சித்தாந்தஸாராவளியில் உள்ள அச்சுலோகம் இதுவே.

ஸ்ரீ ஸித்தி புத்தி ஸமேத விக்னேச்வர குருநாதர்.

अग्राही किल ईश्वरः परशिव स्तस्मात् सदेशः शिवः
नादात्मा सकलाकलः प्रभुरतो ऽनन्तेश भट्टारकः।
तस्मा दण्डज विष्णु वासव विधिः श्रीकण्ठरूद्र स्ततः
तन्त्राणां अवतारको मुनिवरो दुर्वासनामा गुरुः।।
(सिद्धान्तसारावलिः)

என்கிறது. இந்தப் பூவுலகில் பாரதவர்ஷத்தில், பரதகண்டத்தில், சிவனாரின் திருவருளால் துர்வாஸமுனிவரிடம் தீக்ஷைபெற்ற ரிஷிகள் முறையே குசிகர், காச்யபர், அகஸ்தியர், பாரதிவாஜ, கௌதமர் மற்றும் ஸனத்குமாரர், ஸனகர், ஸநாதனர், ஸனந்தனர் முதலானவர்கள் ஏற்கத்தவர்கள் ஆவார்கள். பாரதவர்ஷத்தில் பூலோகத்தில் ஜம்பூத்வீபத்தில் அதன் நடுவே இருக்கிற மேருமலையின் தெற்குப் பிரதேசத்தில் இருக்கின்ற இமயமலைக்கு தென்பகுதியே பாரதவர்ஷம் என்று புகழ் பெற்ற நிலப்பகுதியாகும். அங்கேயும் பாரதகண்டத்தில் சிறப்புமிக்க யோகம் மோக்ஷம் இருவகைப்பயனையும் தரவல்லதும் முக்கியமாக தம்பபூஷணங்களுடன் கூடியதும் கதம்பவிருக்ஷாலங்கார ஸஹிதமான ஆமர்தக ஆச்ரமம் ஆமர்தகமடம் என்று

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பெயருடையதாய் சிறந்த தபோவனம் விளங்கிற்று. இதுவே ஸ்ரீ துர்வாஸ ஆச்ரமமாய் விளங்கிற்று.

स्थान मामर्दकं नाम श्री दूर्वास निषेवितम् ।।

என்று கூறப்பட்டுள்ளதால் அறியமுடிகிறது.

ஆகமத்திருமடங்கள்

துர்வாஸரின் அனுக்ரத்தை முன்னிட்டு, ஆமர்தகமடத்தில் வசித்தவர்களான கௌசிகர், காச்யபர், முதலானோர் தக்ஷிணா மூர்த்தியின் உருவமாயுள்ள ஸ்ரீகண்டரை, ஆகமஞானம் பெறுவதன் பொருட்டு உபாஸித்தனர். ஸ்ரீகண்டரிடமிருந்து சிவாகமஞானத்தை அறிந்து, ஆமர்தகமடத்தில் இருந்தனர். இவர்களின் சிஷ்யர்களாக ஸநத்குமாரர் முதலான நால்வர் தோன்றினர். அவர்களுக்காக ஆமர்தகமடத்திலிருந்து முன்று மடங்கள் தோன்றின. அந்த மூன்று சைவாகமத் திருமடங்களும் 1. ரணபத்ரம், 2. கோளகீ 3. புஷ்பகிரி என்ற திருநாமங்களில் புகழ்பெற்று விளங்கின. இதனைத் தெரிவிக்கும் சான்று இதுவேயாகும்.

तस्मा द्विनिर्गतं स्थानं रणभद्रं च गोळकी। तथा पुष्पगिरिश्च..... என்று கூறப்படுகிறது. இந்த நான்கு திருமடங்களிலும் முதலான, 1. ஆமர்தகமடத்திற்கு பிரதான குருமுதல் வராக, ஸநத்குமாரர் மடாதிபதியாகவும், கதம்பவிருக்ஷவனமும் இருந்தன. 2. புஷ்பகிரி மடத்திற்கு ஸநகர் மடாதிபதியாக குருமுதல் வராக விளங்கினார். அவரது ஸாந்தானிகர்கள் பலர். அவரிடம் அர்ஜுனவிருக்ஷம் மருதமரம் விளங்கின. 3. கோளகீமடத்திற்கு பிரதானகுரு நாயகர் ஸநாதனர் ஆவார். இவரது மடாலயவிருக்ஷம் ஜம்பூகம் என்கிற நாவல் மரமாக விளங்கிற்று. 4. ரணபத்திரம் என்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA) (USA)

மடத்திற்கு ஸநந்தனர் என்பவர் அதிபதியாக விளங்கினார். இவரது மடாலய விருக்ஷம் (ஸநந்தன ரிஷியாவார்) ஆலமரமாகும். அவருடைய ஸாந்தானிகர்கள் எவர்களோ அவர்களுக்கு கோதாவரிநதிக்கரையில் இந்த சைவர்களின் இருப்பிடம் மங்களகரமாக விளங்கிற்று. அந்த இடத்தில் மந்திரகாளிபுரம் என்று புரம் விளங்கிற்று.அங்கு சிவன் வசித்துவந்தார். அந்த சிவனருளால் சைவர்களான ஆசார்யர்களுக்கு தோற்றம் விசேஷமாக ஏற்பட்டு, அந்த மந்தரகாளீச்வரரைச் சுற்றிலுமாக நான்கு திருமடங்களும் விளங்கின என்று கூறப்பட்டுள்ளதால் அறியமுடிகிறது.

ஆகம மடாதிபதிகள்

(ஆதிசைவகுல ஆதிமடாதிபதிகள் நாலவர்)

கைலாஸசிகரே ரம்யே வடமூல நிவாஸினம்।
தக்ஷிணாமூர்திரூபம் து முனய ஸ்ஸமுபாஸிரே।।
அகஸ்த்யः கௌசிகஶ்சைவ பாரத்வாஜோऽத கௌதமः।
காஶ்யபः பரமேஶானாத் ஆகமார்தம் ச தத்வதः।।
ஜ்ஞாத்வா ஸம்ப்ரீதமனஸ: தே ஸர்வே முனய ஸ்ததா।
தேஷாம் ஶிஷ்யா ஸ்ஸனந்தாத்யா: முனய ஸ்தானுபாஸிரே।
தே ச லப்வாऽகமார்தம் து மாடாபத்யேன ஸம்ஸ்திதா:।।
ஆமர்தக மடபதி ஸ்ஸனத்குமாரகோ முனி:।
கதம்போ வ்ருக்ஷஏவ ஸ்யாத் தஸ்ய ஸான்தானிகாஶ்ச யே।
புஷ்பகிரி மடபதி ஸ்ஸனகோ வ்ருக்ஷ மர்ஜுனம்।
தஸ்ய ஸான்தானிகாஶ்ச யே கோளகி மடனாயக:।।

இங்கு கௌசிகர், காச்யபர் முதலானோர் சிவசிருஷ்டியில் தோன்றியவர்கள். உலகில் கௌசிகர், காஸ்யபர் முதலானோர்கள் பிரம்மசிருஷ்டியில் உதித்தவர்களாக அறியப்படுகிறது. ஆனால் இங்கு சிவசிருஷ்டியினர் என்று எவ்வாறு? கூறப்படுகிறது என்றால், உண்மைதான். முதலில் சிவசிருஷ்டியில் தோன்றியவர்களே இவர்கள். பின்னர் கௌசிக காச்யபாதிகள் மற்றவர்கள்வேறு. பெயரினால் ஸமானமானவர்களான கௌசிக காச்யபர் முதலான ரிஷிகள், சிவசிருஷ்டர்கள் என்றும், பிரம்மசிருஷ்டர்கள் என்றும் இருவகையினர் ஆவர். சிவாகமங்களில் கூறப்படுகிற கௌசிக காச்யபாதிகள் அனைவரும் சைவஸம்பந்தம்உள்ளவர்கள். இதனைக்

Digitization by Vimdu Heritage Foundation of America. HHFA(USA)
காமிகாகம காரணாகமங்களின் கூற்றாலறியலாம். காமிகாகமத்தின் சைவ கோத்ரநிர்ணயபடலத்தில் கூறப்படுவதாவது,

सनातनो ऋषि र्वृक्षो जम्बूक स्तस्य सन्ततिः।
रणभद्राधिपः प्रोक्तः सनन्दन इति स्मृतः।।
न्यग्रोघो वृक्षकः प्रोक्तः तस्य सान्तानिकाश्च ये।
गोदावरी नदीतीरे शैवानां वसति श्शुभा।
पुरं मन्धरकालीति तस्यां वसति शङ्करः।
उत्पत्तिस्तस्य शैवाना माचार्याणां विशेषतः।
तत्र मन्धरकाळीश मभितश्च चतु र्मठाः।
आमर्दकी पुष्पगिरिः गोळकी रणभद्रकम्।।

எனப்படுகிறது. மேலும் அங்கேயே காமிகாகம அர்ச்சனா படலத்தில்

कौशिकः काश्यपश्चैव भारद्वाजोऽथ गौतमः।
अत्रि र्वसिष्ठ श्चागस्त्यो जमदग्निश्च भार्गवः।।
अङ्गिराश्च मनिश्चान्यो द्विविधा स्ते प्रकीर्तिताः।
शिवसृष्टि समोपेता मुनयः तद्विवर्जिताः।।
शिवसृष्ट्या न्विता एते पञ्चवक्त्रेषु दीक्षिताः।
कौशिकाद्याश्च मनुयः सर्वे सर्वत्र दीक्षिताः।।
शिवसृष्टिं बिना ये तु जायन्ते ब्रह्मणो मुखात्।
ते सामान्या न तेषां तु परार्थेऽस्त्यधिकारिता।। (कामिकागमे)

என்று பிரம்மசிருஷ்டியினருக்கு, சிவாலயபூஜையில் அதிகார மின்மையும், அவர்கள் சாமான்யமானபிராம்மனவர்கள் என்றும் கூறப்படுவதாலறியலாம்.

சைவஸந்தான குருக்கள்

ஆமர்தகமட நிவாஸியும், ஸகலஆகமங்களிலும் கரைகண்டவருமான **திரிலோசன சிவாசாரியார்** தனது **ஸித்தாந்தலாவளி** எனும் நூலில், தனது ஸந்தானமுறையையும் ஆகமநூல்களையும் குறிப்பிடுகிறார். அதில் கிரியாபாத சுலோகமுடிவில் இந்த நான்கு ஆதிமடங்களைப் பற்றி குறிப்பிட்டு இருசுலோகங்களால் விளக்கியுள்ளார். அங்கு சிவாகமங்களில் கூறப்பட்ட தீக்ஷையை செய்விப்பதற்கு விசேஷ

Digitization by Hindu Heritage Foundation of America (HHFA)(USA)

அதிகாரம் உடையவர்களாகி பிந்துவில் தோன்றிய சைவகுலத்தோரே என்று கூறுகிறார். அந்த சிவகுல ஸந்தானபரம்பரையைக்கூறும் சான்று,

बिन्दो स्तत्स्थ महेश्वरात् शिवकुलं गायत्रि शक्त्यङ्कितं –
विद्येशादि सुरक्रमात् उदभवद् दुर्वाससेह क्षितौ ।
ऋष्यादेस्तदनुग्रहोदयजुषो वर्षे ऽभवद् भारते -
श्रीमन्मुख्य कदम्ब भूषणयुतं चामर्दसंज्ञाश्रमम् ।। (श्लोक: 116)

तत्रत्या मुनिपङ्क्तिकाश्च मनुजे पैतामहाख्ये स्थिताः -
प्राजापत्य मुखाश्च गोचरयुगो दन्ता बभूवु स्ततः ।
आद्या त्तेषु च शौच संयम युतात् सद्गोचरा दुद्ययौ -
श्रीमद् व्यापकशम्भु पूर्व गुरुयुक् सन्तान मेवं स्थितम् ।।

இதன்படி, ஆமந்தகமடத்தின் ஸம்பரதாயத்தில் தோன்றியவர்களான கௌசிகர் முதலான ரிஷிகளின் ஸமூகங்கள், ஸ்வாயம்புவம் என்ற பெயருடைய மனு என்றபெயரில் தோன்றிய மனுக்களில் முதலாவது மனுவின் காலத்தில் மகரிஷிகளாக விளங்கியிருந்தனர். பதிநான்கு மனுக்களில் முதலாம்மனுவான ஸ்வாயம்புவமநு காலத்தில் இருந்த மகரிஷிகள் என்றறிக. இவர்கள் ஸ்வாயம்புவமனுவின் காலம் வரையில் ஆமர்தகமடத்தில் ரிஷிஸம்ப்ரதாயத்துடன் இருந்தனர் என்று கூறியுள்ளார்.

रैवत श्चाक्षुष श्चैव वैवस्वत इति स्मृतः ।
सूर्य दक्ष ब्रह्म धर्म रुद्र सावर्णय स्तथा ।
रोच्यभावा इमे प्रोक्ता मनवश्च चतुर्दश ।।

பதினான்கு 14 மனுக்களில், முதலாம் ஸ்வாயம்புவமனுவின் காலமுடிவுக்குப்பிறகு இரண்டாவது ஸ்வாரோசிஷமனுகாலத்தில் ப்ராஜாபதியர் என்றபெயரை முதலில் உடையவர்களாய், தமதுகுலத்திற்கு ஸம்பரதாயத்தினருக்கு, யுகத்தில் ஆமர்தகம் முதலான பிரஸித்தமான நான்குமடங்களிலும், குருக்களாக பிரஸித்தமாக விளங்கினர். இந்த நான்குவித மடங்களின் ஸம்பரதாயங்களில், தோன்றியவர்களான ஆதிசைவர்களான சிவப்ராம்மணர்களும் நால்வகையாகக் கூறப்படுபவர்கள் ஆவர். இது பற்றி கூறப்படுவதாவது

Digitization by Sri Muthukumaran Foundation of America, HHFA(USA)

स्थान मामर्दकं नाम श्री दुर्वासा निषेवितम्।
तस्माद् विनिर्गतं स्थानं रणभद्रं च गोळकी।
तथा पुष्पगिरि श्चेति स्थानमेवं चतुर्विधम्।
एतत्स्थान समुद्भूता: शैवास्ते च चतुर्विधा:।
ब्रह्मचारी गृहस्थश्च वानप्रस्थो यति स्तिवति।।



சைவஆச்ரமிகள் (தமிழக சைவ ஆசார்யர்கள்குலம்)

இவ்வாறான ஆமர்தகம், ரணபத்ரம் கோளகி, புஷ்பகிரி ஆகிய நால்வகையான ஸ்தானங்களில் தோன்றிய சைவர்கள் நால்வகைப்படுவர் இவர்கள் 1. பிரம்மசாரி. 2. கிருஹஸ்தர், 3. வானப்ரஸ்தர், 4. யதி என்றபெயரில் நால்வகை ஆச்ரமத்திலும் விளங்கினார்கள். இந்த ஆமந்தகமடத்திலிருந்து கலியுகத்தின் ஆரம்பகாலத்தில் ஸ்ரீமத் வியாபகசம்பு என்றபெயருடைய மஹாகுருவானவர் புக்திமுக்தி இராண்டையும் தரவல்லவராக தோன்றி விளங்கியிருந்தார். இந்தவகையில் இருந்து வந்தபொழுதில், இங்கு தமிழ்நாட்டில் ஆட்சிபுரிந்துவந்த சோழஅரசனான இராஜேந்திரசோழன் என்ற புகழ்மிக்க அரசர், கங்கையில் நீராடுவதற்குவந்து, அங்கு வாழ்ந்துவந்த சிறந்த சைவர்களைக்கண்டு, அழைத்து, கங்கை நீராடித் திரும்பிவரும்பொழுது, அவர்களை, சைவாசார்யர்களைத் தன்னுடன் அழைத்துவந்து, சைவசமய ஆசார்யர்களாகத் தமது இராஜ்யத்தில் அவர்களைப் பணியமர்த்தினார். காஞ்சீபுரத்தை நடுப்பகுதியாக் கொண்டு எங்கும் குருக்களைப் பரப்பினார்.

राजेन्द्र चोल इत्याख्य चोलभूपो महीमवन्।
गङ्गास्नानार्थ मागत्य दृष्टवा शैववरान् तदा।
स्नात्वा प्रतिनिवृत्तस्सन् तान् समादाय शैवकान्।
स्वराज्ये स्थापयामास शैवाचार्यवरां स्ततः।
काञ्चीमध्ये चोलभूमौ सर्वत्रैव प्रविस्तरान्।।

(शिद्धान्तसारावलीव्याख्यायाम्)

சிவாகம குருவரர்களின் பூஜாலக்ஷணம்

சிவாகம நெறியில் தீக்ஷைபெற்று, தினமும் ஞானியரும் யோகியரும், சிவனைபூஜை செய்திடவேண்டும். அந்தபூஜையோகநெறியில் யோகியரால் மானஸீகமாகவும், இல்லறத்தோரால் உள்ளும், புறமும், இருவகையிலும் உரியபொருட்தியாகத்தால் செய்யத்தக்கதாகும்.

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

போகிக்கும் ஞானிக்கும், யதிக்கும் வெளிக்கிரியைகள் செய்யவேண்டுயதில்லை. காரணம் அவர்கள் எங்கும், எதிலும், எப்பொழுதும், பிரம்மத்தைக் காண்போர். ஆசார்யர், குருக்கள், இவர்கள் பொதுநலவழிபாட்டையாவருக்குமாகச் செய்யத்தக்கவர்கள். ஆசார்யர் என்பவரே கிரியாதிகாரம் உடையவராக நற்காரணத்திற்கான நைமித்திகபூஜையை சிவலிங்கத்தில் மலர்களால் பூசித்திடவேண்டும் என்கிறது. ஆகவழிபாடு புறவழபாட்டுச்சான்று,

यजनं द्विविष्धं प्रोक्तं बाह्याभ्यन्तर भेदतः ।
अहिंसादिभि रभ्यर्च्यो योगिभि र्न बहिर्भवेत्।
द्रव्यहिंसा न कर्तव्या तत्र तत्र यत श्शिवः।
क्रियावद्भिः सदाऽभ्यर्च्यः लिङ्गस्थः कुसुमादिभिः॥

இவ்வாறு மலர்முதலானவைகளால் சிவலிங்கத்தில் சிவாகமப்படி பூஜைசெய்திட, சிவதீக்ஷையைப்பெற்று, நான்குபாத விஷயங்களையும் அறிந்தவராக இருத்தல் வேண்டும். தினமும் சிவபூஜையும், சிவாக்னியில் ஹோமமும் செய்திடவேண்டும். சிவபூசையை செய்யத்தக்கச் சிறந்த சிவாசார்ய குருவின் இலக்கணம் இதுவே ஆகும்.

विद्यापादार्थकुशलः क्रियापादगतक्रमः।
योगपाद कृताभ्यासः चर्यापादानुवर्तकः।।
शिवशास्त्रपरो नित्यं शिवपूजाग्नि तत्परः।।

வித்யாபாதம் என்கிற ஞானபாதவிஷயத்தின் பொருளை நன்கு அறிந்தவராயும், கிரியாபாதவிஷயத்தின்படி செய்திடுவதில் திறமையுள்ளநிபுணராயும், யோகபாதநெறியின்படி செய்துமுடித்த யோகப்பயிற்சியை உடையவராயும், சரியாபாதத்தின்படி தினமும் பின்பற்றிடும் ஒழுக்கசீலராயும், எப்பொழுதும் சிவாகமங்களின்படியே ஈடுபட்டு வாழ்பவராயும், தினமும் சிவன், சிவாக்னி, குரு, இவற்றில் சிவனை பூசித்திடவும் வேண்டும். முற்றிலும் சைவசமய ஆசாரநெறியில் வாழ்ந்திடுபவராய், சீடர்களுக்கு போகம் மோக்ஷமிரண்டையும் அளிக்கவல்வல்லவரயும் விளங்கிடவேண்டும் என்கிறது சிவாகமம்.

ஆகமக்கிரியாவிதி (ஆகமசெயல்முறை)

ஆகமக்கிரியைகள் அனைத்தும் வெவ்வேறு மந்திரங்களாலேயே செய்யப்பட வேண்டியவை. ஆகமநெறியில் மந்திரமில்லா செயலில்லை. இதனை ஆகமம்.

मन्त्रं विना क्रिया नास्ति कर्षणा द्यर्चनान्तका என்கிறது.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அந்த மந்திரம் தெய்வம் வெளிப்படக் காரணமான விதைபோன்றது. எனவே கிரியையில் குருவால் உபதேசிக்கப்பட்ட பீஜாக்ஷரங்களே அல்லது மூலமந்திரங்களே, முக்கியமானதாக ஜீவனாக உள்ளவை. எனவே பூஜைக்கு குருவே மூலகாரணாகிறார். குரு கூறியபடி அறிந்து செயலைச் செய்யவேண்டும் கிரியைகள் உடலாயும் மந்திரம் அதன் ஜீவனாயும் அறிக. கிரியைகளில் ஆசார்யரால் செய்யப்படுகிற மந்திரப்ரயோகமே, சிவன் எழுந்தருளுவதற்கு அதாவது தெய்வம் ஸாந்நித்யமாவதற்கு முக்கியகாரணமாக விளங்குகிறது. இவ்வாறு பிராணன் ப்ரகிருதி அல்லது ஜீவன் தேஹம் இவற்றை அறிந்துதான் எல்லா கிரியைகளையும் முறையே செய்யவேண்டும் என்று வாதுளசுத்தாக்ய ஆகமம் கூறுகிறது.

क्रिया शरीर मित्युक्तं मन्त्रं जीव मिति स्मृतम्।
क्रिया मन्त्रप्रयोगं हि शिवसान्निध्य कारणम्।।
तस्मात् जीवं शरीरञ्च ज्ञात्वा सर्वं समाचरेत्।।

கிரியா சரீர மித்யுக்தம் மந்த்ரம் ஜீவமிதிஸ்மிருதிம்.
க்ரிய மந்திர ப்ரயோகம் ஹி சிவஸாந்நித்ய காரணம்.
தஸ்மாத் ஜீவம் சரீரசம் ச ஞாத்யா ஸர்வம் ஸமாசரேத்.

மந்திரமஹிமைகள்

குருவினால் கூறப்பட்ட மூலபீஜாக்ஷரமே, விதைஎழுத்து மந்திரமே, பூசிக்கும் லிங்கம் அல்லது சிலையினுள்ளே உயிர்போல இதயத்தாமரை யிலே தேவதைை யஸ்தாபனம் செய்கையில் வைக்கப்படுகிறது காண்க. உருவச்சியையில் தெய்வஸ்தாபனகாலத்தில் அந்ததெய்வத்திற்கு உரிய பீஜஅக்ஷரமந்திரத்தை, அதன் இதயத்தில் பதித்திடக் கூறுகிறது. அச்சான்று,

सकलस्थापने काले तद्बीजं हृदि विन्यसेत् । என்றும்,
शक्तीनां स्थापनेकाले तत्तत् बीजं हृदि न्यसेत् । என்றும்,

சிவாகமங்களில் கூறப்படுதலால் பீஜமந்திரத்தேவையும் பெருமையும் அறியத்தக்கது. மந்திரங்களை தெய்வவடிவமாயும், இந்தஉலகமாயும் உள்ளதாக, வாதுளாகமம் தெரிவிக்கிறது. அதாவது

मन्त्रं तु देवतारूपं मन्त्ररूप मिदं जगत् என்கிறது.

மந்திரங்களே உலகில்வாழும் உயிர்களுக்கு விரும்புவதை அளிப்பன.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

भुक्तिदं मुक्तिदं चैव सर्वकामार्थ सिद्धिदम् என்கிறது ஆகமம்.

சிவாகமங்கள் இருபதாவது பத்துமடங்கு எண்ணிக்கையான, பரார்த்த அளவினால் கோடிஎண்ணிக்கையில் சிவனது ஐந்து முகங்களிலிருந்து வெளிவந்ததாகக் கூறுகின்றன. எனவே இந்த மந்திரங்கள் அனைத்துமே, பல்வேறாகவுள்ள கிரியைகளின் பொருட்டேயாகும். அந்தகிரியைகளும், கோயிலமைக்கவும் தெய்வத்தை அழைக்கவும் உரியகர்ஷணம் முதலானவையாகும். இதன் விரும்பும்செயல்களான காமியகர்மா, நித்யகர்மா, நைமித்திககர்மா ப்ராயச்சித்தகர்மா, தீக்ஷை முதலிய எல்லாவகையான செயலுக்கும் மந்திரம் தேவைப்படும்.

कर्षणादि क्रिया स्सर्वाः मन्त्रेणैव प्रकीर्तिताः।
तस्मान्मन्त्रं क्रियार्थत्वात् विनामन्त्रं क्रिया न च।।

மேலும் மந்திரத்தினாலேயே, தெய்வங்களை ஸ்தாபிக்கு செயலும், தெய்வங்களின் பூஜையும், ஸ்நானம் ஹோமம், தர்ப்பணம், ப்ராயச்சித்தம், தீக்ஷை, அணிமாதிஅஷ்டஸித்திகள், ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம் முதலான பதமுத்திகள், பலவகை பாதகங்களிலிருந்தும் விடுதலை முதலான எல்லாவகையான செயல்களையும், அவற்றின் ஈடிலாப்பயன்களையும் பெறமுடியும்.

மந்திரத்தேவை

मन्त्रेण देवता स्थाप्या: मन्त्रेण यजनादयः।
स्नानं मन्त्रेण कर्तव्यं मन्त्रेणाहुति तर्पणम्।।
प्रायश्चित्तं तु मन्त्रेण दीक्षा मन्त्रेण चैव हि ।
अणिमादीनि मन्त्रेण सालोक्यादि पदं ततः ।।
मन्त्रेण पातकादीनि मुच्यन्ते सर्वजन्मिनाम् ।
सर्वमन्त्रक्रिया श्चैव मन्त्रं श्रुणु षडानन ।। என்கிறது. (வாதுளாகம்)

இதன்பொருள் – மந்திரத்தாலேயே தெய்வங்கள் நிலைபெறுகின்றனர். ஸ்நானம், பூஜை, ஹோமம், தர்பணம், பரி ஹாரம், தீக்ஷை, அணிமா முதலிய அட்டமாசித்திகள், ஸா லாக்ய முதலான பகமுக்தி பரமுக்திகள் யாவர்க்கும் பஞ்சமாபாதகங்களிலிருந்து விடுதலை முதலான கிரியைகளனைத்தும் எந்த மந்திரத்தாலேயே சித்திக்கின்றனவோ அந்த மந்திரத்தை அறிந்திடுவாயாக என்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மந்த்ரம் என்ற சொல்லில் இருசெயல் தொடர்புள்ளது. முதலாவது மனனம் என்றால் அறிதல். இது சிவஞானமளித்தல் என்று பொருள் ஆகும். மற்றது த்ராணம் என்பது. இதற்கு உலகவாழ்க்கையே ஒருபெரும் துயரக்கடல் அதிலிருந்து கரையேறிஉய்ய உயிர்களைக் காப்பது என்பது பொருள். மந் என்பது அறிவித்தலையும், திர என்பது காத்தலையும் செய்வதாலேயே இது மந்திரம் என்று அழைக்கப்படுகிறது என்று இப்பெயர்ச்சொல்லுக்கு விளக்கம் கூறப்படுகிறது.

मननं सर्व पक्षेषु त्राणं संसार सागरात् ।
मनन त्राण धर्मित्वात् मन्त्र इत्यभिधीयते ।। (वातुलागमे)

இதனையே வள்ளுவரும் பிறவிப்பெருங்கடல் நீந்துவர் என்றார். இறைவனடி சேருதலையே கரைசேருதலாகக் குறிப்பிடுகிறார்.

எவ்வாறு உலகில் ஒருவன் தனது பெயரைக்கூறி அழைத்தால் நேரில் நம்முன் வருகிறானோ, அவ்வாறே உரிய மந்திரப்ரயோகத்தாலேயே அங்கு சிவன் வெளிப்படுகிறார் என்று ஆகமங்கள் அறிவிக்கின்றன.

यथा ऽऽदरः स्वनाम्ना तु जन स्सन्निहितो भवेत्।
तथा मन्त्र प्रयोगेण तत्र सन्निहित श्शिवः।। (वातुलागमे-5)

प्राशब्दं स्यात् शिवं ज्ञेयं साशब्दं शक्ति रुच्यते।
तत् स्वरूपं तु दंशब्दं त्रिवर्ण मभिधीयते।।
दानेन मुक्तिदं यस्मात् तस्मात् प्रासादमुच्यते।।
(वातुलागमे-5)

இவ்வசனப்படி சிவதீக்ஷையில் குருவினால் அளிக்கப்படுகிற ப்ராஸாத மந்திரமானது, மூன்று எழுத்துக்களாலும் சப்தங்களால் முறையே ப்ரா என்பது சிவனாகவும், ஸா என்பது சக்தியாகவும், மூன்றாவதான தம் என்பது முன்கூறிய இரண்டின் வடிவமாயும் சிவசத்தி ஸ்வருபமாயுள்ளதை உணர்த்துவதாகக் கூறப்படுகிறது.

ஆகையால் இந்த பிராஸாத மந்திரமானது குருவினால் அளிப்பதனாலேயே முக்தியளிப்பதாகிறது. அதனாலேயே இது ப்ராஸாதமெனப் பெயர்பெறுகிறது. இந்த சிவஞானத்தைக்காட்டிலும் மேலானஞானம் என்பது வேறுஎதுவும் முன்றுஉலகிலும் காணப்படாமையால் இதுவே ஒப்பற்ற சிறந்த ஞானமாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

शिवज्ञानात् परं ज्ञानं न हि लोकेषुविद्यते। என்கிறது.

இந்த ப்ராஸமந்திரமானது 1.சுத்தம், 2.மூலம், 3.தத்வம், 4.ஆதி, 5.ஆத்மப்ராஸாதம் என்பதாக ஐந்துவகைப்படும். இவை ஒவ்வொன்றும் சிறந்த பயனைத்தருபவைஆகும். இவ்வகைகூறும் சான்று,

प्रासादं पञ्चधा प्रोक्तं तद्भेदं वक्ष्यते ऽधुना।
शुद्धो मूल स्तथा तत्वं आदि रात्मे ति पञ्चधा।। (वातुलागमे-5)

மேலும் மனிதர்களுக்கு முக்தியை அளிப்பதும் எல்லாபாவத்தையும் போக்கிடுவதும், எல்லா மந்திரங்களுக்கும் உயிராகவும் தலையாகவும் மேலானதாகவும் விளங்கிடும் ஒரெழுத்து ஓம் என்கிற ப்ரணவமே ஆகும்.

सर्वपापहरं चैव मुक्तिदं परमं नृणाम्।
प्रणवं सर्वदेवाख्यं सर्वदेवमयं विदुः॥
सर्वेषां चैव मन्त्रणां प्रणवं प्राण मुच्यते।। என்று வாதுளாகமம் கூறும்.

அந்த ப்ரணவமும் 1. ஸாகல்யம், 2. சாம்பவம், 3. ஸௌக்யம், 4. ஸாவச்யம், 5. ஸாயுஜ்யம் என்று ஐந்துவகைப்படும். இது அகாரம், உகாரம், மகாரம், பிந்து, நாதம், என்ற ஐந்து கலைகளையும், ஐந்துகிருத்யகாரண ஐந்து பிரம்மங்களையும் தன்னகத்தே கொண்டுவிளங்கும் மேலானதாகும்.

மந்திர உபதேசத்தின் மேன்மை

குருவின் உபதேசம் மனிதனை உய்விக்க மிகவும் அவசியமாகும். உபதேசத்தினால் ஒருவன் தெளிவுபெற்று, நன்நெறியில் எவ்வுயிருக்கும் மனம் மொழி மெய்களால் தீங்கிழைக்காமல் வையத்துள் என்றும் வாழ்வாங்கு வாழ்வான். இதனால் அவன் தனது இலக்கை நோக்கி எளிதாகத் தடையின்றி பயனிக்க இயலும் தனது புத்தியின்படி நடப்பது ஒருவனுக்கு சுகமளிக்கும், பிறர்புத்திப்படி நடப்பது அழிவைத்தரும், ஆனால் குருபுத்திப்படி செயல்படுவது விசேஷசுகத்தைத் தருவதுஆகும்.

आत्मबुद्धि सुखश्चैव गुरुबुद्धि र्विशेतः।
परबुद्धि विनाशश्च स्त्रीबुद्धि कलहावहा।। என்கிறது நீதி.

ஸத்குருவின் உபதேசத்திறயினால் சீடன் எவ்வளவு தடை ஏற்படினும், முயற்சியை கைவிடாது தொடர்முயற்சியால் இலக்கை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
அடைவான். உலகில் பாமரமரமக்களுக்குக்கும் உபதேசமானது அவர்களை நெறிப்படுத்திட உதவுகிறது. எனவே அறநூல்கள் கூறும் நல்வழியை எடுத்துக்கூறுவது அவசியம். உடலுக்கு உணவு எவ்விதம் தேவையோ, அவ்விதமே பசியாற்றும் அன்னம்போல, உள்ளத்திற்கு குருவின் நல்லுபதேசம் பயன்தருவதாகிறது. உபதேசமும், முயற்சியும் ஒருபோதும் பயனற்றுப்போகாது. உயர்ந்த இலட்சியம் மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதது. முற்றிலும் அடைய முடியாதென்றுகருதி தருமமாகிற விளக்கை அனைத்துவிட்டு இருட்டில் நிற்பதுபோல், இலட்சியமேயில்லாமல் ஒருபோதும் நிற்பது கூடாது. இது பற்றி கீதையில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா கூறியிருக்கிறார். அக்கூற்று இதுவே ஆகும்.

நேஹாபிக்ரம நாசோஸ்தி ப்ரத்யவாயோ ந வித்யதே |
ஸ்வல்ப மப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதே பயாத் || (கீதா)

இந்த உபதேசத்தின்படி இந்தமுறையில் எடுத்த முயற்சிக்கெல்லாம் பயன்உண்டு, நட்டம் கிடையாது. பத்தியம் தவறிய மருந்தைப்போல அல்ல. குற்றங்குறைகள் ஏற்பட்டதால் தீங்கு அபாயம் எதுவுமில்லை. இந்த தருமத்தில் சிறிது நடத்தினாலும் உலகத்துயர வாழ்வெனும் ஸம்ஸாரமென்ற பேரச்சத்திலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

கையில் விளக்கை எடுத்துச் செல்லும்பொழுது நம்முடைய நிழலே வழியில் குறுக்கிடும். மரமும் புதரும் வெளிச்சத்தைத் தடுக்கும் ஆயினும் இது விளக்கின் குற்றமல்ல. மேலும் விளக்கும் இங்கு பயனற்றுப் போகவில்லை. இவ்வாறே பாவமும் கஷ்டமும் சந்தேஹமும் ஆசையும் ஆத்திரமும் நம்வாழ்வில் தடையாக வந்தாலும், வேதாகம சாஸ்திரங்களில் உபதேசிக்கப்பட்ட இலட்சியங்களை வைத்துக் கொண்டு நடந்தோமானால் எவரும் இருளைத்தாண்டி ஈடேறலாம் என்று உணரவும்.

குருமூர்த்தி மஹிமை

குருவாக விளங்குபவர் எவரோ அவரே சிவன். எவர் சிவனோ அவரே குரு, குருவும் சிவனும் ஆன்மாக்களுக்கு ஞானத்தைத் தருபவராகவே உள்ளனர். சிவன் எவ்வாறு விளங்குகிறாரோ அவ்வாறு வித்யா எனும் ஞானசக்தி விளங்குகிறது. வித்யா எவ்வாறோ, அவ்வாறே குருவிளங்குகிறார். இவ்வாறு சிவன், வித்யாசக்தி, குரு ஆகிய இந்த மூவருடைய வழிபாட்டிற்கும் பயன் ஸமமானதே ஆகும். ஏற்றத்தாழ்வு இல்லை. இவ்விதமாக குருவானவர் உலகில்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
ஸர்வதேவர்களின் திருவுருவாகவும், கண்கண்டதெய்வமாகவும் உள்ளார். ஆதலால் பெருமுயற்சியோடு குருநாதரை யாவரும் வழிபடவேண்டும். அவருடைய கட்டளைகளைத் தவறாது பின்பற்றி நடக்கவேண்டும். மாறாக நடப்பது பரிகாரமற்ற பெருங்குற்றமாகும். இதனை சைவாகமங்கள் நன்றாக எடுத்துரைத்து வலியுறுத்துகின்றன. இச்சான்று இதுவே.

यो गुरुः स शिवः प्रोक्तः यश्शिव स्स गुरु स्मृतः।
गुरुर्वा शिव एवाथ विद्याकारेण संस्थितः।
यथा शिव स्तथा विद्या यथा विद्या तथा गुरुः।
शिवविद्यागुरूणां च पूजया सदृशं फलम्।
सर्वदेवात्मक श्चासौ सर्वमन्त्रमयो गुरुः।
तस्मात् सर्वप्रयत्नेन तस्याज्ञां शिरसा वहेत्।।

யோ குருஸ் ஸ சிவப் புரோத்த: யஸ் சிவஸ் ஸ குரு ஸ்மிருத:
குருர் வா சிவ ஏவா(அ)த வித்யாகாரேண ஸம்ஸ்தித:
யதாசிவஸ் ததா வித்யா யதா வித்யா த்தா குரு:
சிவவித்யாகுரூணாம் ச பூஜயா ஸத்ருசம் பலம்
ஸர்வதேவாத்மகஸ் சாஸௌ ஸர்வமந்திரமயோ குரு
தஸ்மாத் ஸர்வப்ரயத்னேன தஸ்ய ஆக்ஞாம் சிரஸா வஹேத்.

குருவானவர் ஸர்வதேவஸ்வரூபராக விளங்குவதால் குருவை யாவரும் வழிபட்டு அவரது சொல்படி நடப்பவராயும், குருவுக்கு எவ்வகையிலும் தீங்கு எண்ணாதவராயும், தீங்கிழைக்காதவராயும், தனது உடலுழைப்பால் உபசரித்தும் உடனிருந்தும் பணிவிடைசெய்து ஈடிலா புண்ணியத்தைப் பெற்றிடவேண்டும். வேதமானது குருவின் பொருட்டு அவருக்கு விருப்பமானவற்றை அளித்தும் தக்ஷிணையாக தனம் தான்யம், பிற தேவையான பொருட்களையும் தந்து அவரை மகிழ்வித்து, அவரதுமகனைப்போன்று, உறவைவிடாது, சீடன் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது வேதம்.

आचार्याय प्रियं धन माहृत्य प्रजातन्तुं माव्यवत्सेत्सी:

என்றுகூறி வேதஉபநிஷதமானது குருவிடம் செல்வத்தை ஸமர்பித்திடு என்கிறது. பிறவியும், செல்வமும், நிலையற்றவை ஆனால் குருவால்பெறும் முக்தி ஒப்பற்றது.

यद् द्रव्यं गुरवेदत्तं तत् शिवाय समर्पितम् என்றவாறு உணரலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
குருவுக்கு காணிக்கையாக அளிக்கப்படும் எப்பொருளும். குருவுக்கு அர்ப்பணித்ததாகவே ஆகிறது என்பதை அறியவேண்டும். குருவினால் தீக்ஷைமுடிவில் பின்பற்றப்பட வேண்டியவையாக எடுத்துரைக்கப்பட்ட சமயாசாரங்களை கைவிடாமல் இயன்றவரை செய்திடவேண்டும். தீக்ஷையின் நிலைகளுக்கு ஏற்ப உரிய அதிகாரத்தின்படியே சீடன் செயல்படவேண்டும்.

ஆசார்ய அதிகாரம்

எச்செயலிலும் குருவே அதிகாரமளிப்பவர். செயல்படச் செய்யவும், மறுத்திடவும் இருவகையான ஸாதிகாரதீக்ஷை நிரதிகாரதீக்ஷை விதிமுறைகளின்படி, அவருக்கே முழுஅதிகாரமுண்டு. சைவஸமயத்திலும் ஆலயத்தின் ஆகமக்கிரியைகளிலும் சிஷ்யர்களை செயல்படுத்தவும் **ஆசார்யரே ஸர்வாதிகாரம் படைத்தவர்** என்று சிவாகமங்கள் கூறுகின்றன. மற்றவர்கள் அவரது சீடர்களாகவே உடனிருந்து பணியாற்ற இயலும். மற்றவர்களால் செய்யப்படும் செயல்களும் குருசெய்ததாகவே ஆகும் என்கிறது. ஆசார்யநிலைக்கு முன்பாக மூன்றுநிலைகளில் ஸ்மயாசாரங்கள் கூறப்படுகின்றன. ஸமயீ என்றும் புத்ரகன் என்றும் ஸாதகன் என்றும் முத்தரப்பினரும் தினம்தோரும். செய்யவேண்டிய செயல்களும் கடமைகளுவோழ்வியல் நெறியும் ஆகமங்களில் கூறப்படுகின்றன. இவற்றை தீக்ஷை பெற்றவர்கள். உயிருடன் உள்ளவரை இடைவிடாது, பின்பற்றியே வாழவேண்டும். குறிப்பாக மந்திரத்தாலேயே முக்கியமான ஐந்து செயல்களைத் தினமும் தவறாது செய்துவரவேண்டும். அவை முறையே 1. ஸ்நானம் = தலக்குமுழுக்காடி நிராடுதல் (குளித்தல்) 2. பூஜை = வீட்டில் லிங்கம் அல்லது கையளவு பிரதிமையில் தெய்வத்தை வழிபடுதல், 3. ஜபம் = குருஉபதேசித்த முறைப்படி மந்திரத்தை முடிந்தவரை. 108, 300, 500, 700 என்ற கணக்கில் மிண்டும் மீண்டும் உச்சரித்தபடி உறுஏற்றி முனகியநிலையில் ஜபித்தல். 4. தியானம் = குருவின் திருவுருவையும் இஷ்டதெய்வத்தின் திருவுருவையும் மனதில் எண்ணி தன்புருவநடுவே சிந்தித்தபடியே சிறிதுகாலம் ஒருமனதாக தவநிலையில் இருத்தல், 5. ஹோமம் = குருவின் கட்டளையை ஏற்று, தானோ அல்லது பிராமணர் மூலமாகவே சிவாக்னியில் தினமும் வேள்வித்தீயில் இறைவனுக்கு ஒருகைப்பிடி நெல் அல்லது அரிசி, நெய் இவற்றை ஆகுதி அளித்து, ளரிஓம்பி, பொருளைத் தியாகம்செய்து அர்ப்பணித்தல் ஆகிய இந்த ஐந்து செயல்களையும் தினமும் எப்பொழுதும் செய்யவேண்டும் என்று வேதாகமங்களில் விதிக்கப்பட்டுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தீக்ஷைபெற்ற சீடனுக்கான
நித்யபஞ்சகர்மாக்களைக் கூறும் சான்று.

समयी पुत्रकाद्यानां साधकस्य विशेषतः ।
नित्यं क्रमेण कथितं यावत जीवं शिवाज्ञया।
स्नानं पूजा जपो ध्यानं होम श्चैव तु पञ्चमः।
इति नित्यं सदा कुर्यात् नित्याङ्गं प्रोच्यते पुनः।।

ஸமயீ புத்ரகாத்யாநாம் ஸாதகஸ்ய விசேஷத: |
நித்யம் க்ரமேண கதிதம் யாவத் ஜீவம் சிவாக்ஞயா |
ஸ்நாநம் பூஜா ஜபோ த்யானம் ஹோமஸ் சைவ து பஞ்சம: |
இதி நித்யம் ஸதா குர்யாத் நித்யாங்கம் ப்ரோச்யதே புன: |

இவ்வசனத்தின்படி சைவசமயத்தில் நுழைவு நிலையான சைவ ஸாமான்ய சமயதீக்ஷையைப் பெற்றவர்கள் அனைவரும், சைவசமயம் சார்ந்தவர்கள் சிவஸம்பந்தம் உள்ளவர் எனப் பொருள்படும் வகையில் சமயீ என்று பெயர் பெற்றவர்களான சமயிகள் ஆவர். இரண்டாம்நிலையில் சைவ விசேஷதீக்ஷையைப் பெற்றவர்கள், அனைவரும், சிவனிடம் தீக்ஷையில் மீண்டும் மகனாகத்தோன்றிடும் தொடர்புடைய உரிமையுள்ள பூசை செய்பவர்களாக புத்ரகர் என்ற பெயரில் சிவனாரின் மகன்களாக விளங்கிடும் புத்ரகர்கள் ஆவர். மூன்றாம் மேல்நிலையில் சைவமுக்தி நிலையான நிர்வாணதீக்ஷையைப் பெற்றவர்கள் அனைவரும் ஸாதகர் எனப்பெயர் பெற்றவர்களாவர். இங்கு நிர்வாணம் என்றசொல்லுக்கு இவ்வுலகவாழ்வில் பற்றின்மை, முக்தி என்பது பொருள். ஸாதகர் என்ற சொல்லுக்கு தீக்ஷையில் தான்பெற்ற மந்திரத்திலேயே, புரச்சரண விதிமுறைகளைச்செய்து, கோடிக்கணக்கில் ஜபம்செய்து, மந்திரங்களை ஸித்திசெய்பவர் என்று பொருள். இதனையே ஸாதகோ மந்திரஸாதக: என்றுகூறும். இவர்கள் மந்திரவாதிகளாக மந்திரவகைகளால் எதையும் ஸாதித்துக்காட்டக் கூடியவர்களாக, ஸாதனையாளராக இருப்பதால் ஸாதகர் எனப்படுகின்றனர். சிவாகமங்கள் இந்நிலையில் உள்ள தீட்சிதர்களை நிர்வாணதீகைக்ஷ பெற்றவர்களை, ஸாதகர் என்றும், மந்திரீ என்றும் குறிப்பிடுகின்றன. மந்திரீ என்ற சொல்லுக்கு ஸாதிக்கும் வகையில் மந்திரத்தைத் தன்வசம் கொண்டிருப்பன் என்பது பொருள். மந்திரம் இவனிடம் உள்ளதால் இவன் மந்த்ரீ ஆகிறான். இவர்கள் பலபொதுநல நைமித்திக காம்யகர்மாக்களைச் செய்யவும், செய்துகொடுக்கவும் தகுதி உடையவர்கள் ஆவர். இதனை அடுத்த மேல்நிலையில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
தீக்ஷையில், ஆசார்யஅபிஷேகம்செய்து காண்டோர்களே ஆசார்யர் எனப்படுவர். இவர்கள், தேசிகர், குரு, பட்டாரகர் எனப்படுபவர்.

மந்திர சாஸ்த்திரங்களை குருவிடமே பயில்வது முறை



தெய்வங்களைப் பற்றிய பலவகையான அரியசெய்திகள் மந்திர சாஸ்த்திர நூல்களில் கூறப்பட்டுள்ளன. ஸாதகனின் ஜனன ஜாதக்குணங்களுக்கு ஏற்பவும், அடைய விரும்பும் பயனுக்கு ஏற்பவும் ஒரு தெய்வத்திருவுருவைத்தை தியானிக்க வேண்டிய முறை வேறுபடும். அஷ்டகர்மப் பரம்யோகங்களை குருவின் வழிகாட்டு தலின்று ஈடுபடுதல் கூடாது. சிலசமயங்களில் அதனால் தீங்கு நேரிடலாம். எனவே மந்திர உபதேசத்தை நன்கு ஞானம் பெற்றவர்களிடம் பெறவேண்டும் என்று குருமார்கள் கூறுவர். பழையகால குருமார்கள் பணத்துக்கு ஆசைப்பட்டவர்கள் அல்லர். அவர்கள் தங்கள் சீடர்களின்னின் நல்ல சந்தோஷத்தைக் கேட்கவும், அதைக்ககண்களால் பார்க்கவும் ஆசைப்பட்டவர்கள். அவர்கள் மஹனீயர்கள், மஹான்கள். சரபர், வாராஹி போன்ற வலியதேவதைகளை உபாஸனை செய்பவர்கள் கொஞ்சம்கூட ஒழுக்கநெறி தவநெறி வழிபாட்டுநெறி இவற்றிலிருந்து தவறக்கூடாது. மந்திர சாஸ்திரங்கள் சொன்னவழிமுறைகளிலிருந்து தவறிப்போகக்கூடாது. அப்படித் தவறித் தங்கள் இஷ்டப்படி பூஜிக்கின்றவர்கள் முக்தி சித்தி போன்றவற்றை அடைவதற்குப் பதிலாக பித்துப் பிடித்து பின்தங்கிப் போவார்கள். அதுபோல தகுந்த குரு இல்லாமல் நூல்களைக் கையில் வைத்துக்கொண்டு, மந்திரங்களை நாக்கில் வைத்துக்கொண்டு, பிரயோகத்தில் பயணம் கிளம்பக்கூடாது. சத்ருக்களைப் பகடைக்காய்களைப்போல நகர்த்துவதில் உபாஸகர்கள் முயலக்கூடாது. கேட்பவர் பேச்சைஎல்லாம் கேட்டுக்கொண்டு தலைவிரிகோலமாக அலையக்கூடாது.

மந்திர சாஸ்திரங்களைப் படிப்பதில் ஒருவகையான சிறந்த பழக்கம் உண்டு. இதைக் குருமூலம் கற்கவேண்டும். தெரிந்தவிஷயம் சிலசமயம் தெரியாதவிஷயத்துடன் கலந்துபோய்விடும். இதனால் பயன்மாறிடும். மந்திரங்கள், அதன் செயல்தன்மை, அதன் பரிமாணம், அதன் பயணகாலம், பயணதூரம், பயன்பாட்டின் சிறப்புகள் இவைகளைப் பற்றி எல்லாம் ஞானம் குருவருளால்தான் கைக்கூடும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
(ஸித்திக்கும்) மந்திரத்தின் புரச்சரணநெறியில் இருந்து வழுக்கிவிழுந்து விடக்கூடாது. இது தன்னைக் கீழே தள்ளுவதுடன், தன்னால் உதவிபெறவந்தவனையும் சேர்த்துக் கீழே தள்ளிவிடும் ஆதலால் குருவிடம் கற்றுத்தெளிந்து செயல்படுவது அவசியமாகிறது.

குருவால்அறநெறி அறியும்முறை

அறம்செய் என்று அறுமறைகூறும். இதனை அறஞ்செய்ய விரும்பு என்று தமிழ்மொழியின் அறநூலில் ஆத்திச்சூடியில் ஔவையார் அருச்செய்திருக்கிறார். அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் கொண்ட திருக்குறகள் ஒரு சிறந்த அறநூல் ஆகும். அறம் என்ற சொல்லின் கருத்தைத் திருக்குறள் நூலானது இவ்வாறு கூறுகிறது.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீத்த லரிது. (குறள்)

எனக்கூறி அறத்தின் தத்துவத்தைக்குறள் நன்கு புலப்படுத்துகிறது. அறம் பொருள் இன்பம் எனப்படும் மூன்றனுள் அறத்தை முன்னர் பிரித்தமையால் ஏனைப் பொருளும் இன்பமும் பிறவெனப்பட்டன என்பது பரிமேலழகர் கருத்து. அறக்கடலாகிய இறைவன் திருவருளால்தான் பொருட்கடலையும் இன்பக்கடலையும் கடக்கமுடியும் என்பது அவர் கண்ட மெய்ப்பொருள்.

தருமம் என்னும் சமுத்திரமாகவுள்ள பரமேச்வரனின் பாதத்துணை யில்லாதவர் 'பாவக்கடலை நீந்தமாட்டார்' என்பது பரிதியார்உரை. அறம் என்பதற்கு அறுத்தல் அதாவது ஒழுங்குபடுத்துதல் என்னும் கருத்து திருவாசகத்தால் புலனாகிறது. அறத்தால்லருவது இன்பம் என்பது வள்ளுவர் வாக்கு. எவனொருவன் அறவாழ்வைப் பின்பற்றுகிறானோ அவனீத் தெய்வீகமனிதன் என்று எல்லோரும் பாராட்டுவார்கள். அறத்தால் வருவது புண்ணியம். மறத்தால் வருவது பாவம் என்பது நமது சமயப் பொதுக்கொள்கை. நமது மனப்போக்கையொட்டி தீயசெயல்களை வகுப்பதில் காமம், குரோதம், மதம், மாத்ஸர்யம், லோபம், மோஹம் என்று ஆறுவகையில் தீயமனநிலைகளை ஆறு எதிரிகளாகக் குறிப்பிடுகிறோம். இவற்றை திருக்குறள்

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். (குறள்)

என்னும் திருக்குறள் மேற்சொன்ன கருத்தில் அமைந்தது. 1.கொலை, 2.களவு, 3.கள்ளுண்ணல், 4.காமம், 5.குருநிந்தை

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
என்பவை களைப் பஞ்சமாபாவங்களாகக் கூறும்பொழுது, ஏனைய தீயவொழுக்கங்களனைத்தும் அவைகளிலேயே அடங்கியிருக்கின்றன என்பது சான்றோர்கருத்து. நல்லொழுக்கமே அறத்திற்கு வித்தாகும். சிவனேயான குருவாயிலாகவே அந்நெறியினை அறிதல்வேண்டும்.

குருவே மும்மலம் நீக்கி முக்திதருபவர்

अथानादि मलापेतः सर्वज्ञः सर्वकृत् शिवः ।
पूर्वव्यत्यासितस्याणोः पाशजाल मपोहति ।। (कामिके)

நம் சைவசித்தாந்தத்தில் மிகச்சிறப்பாகவும், ஆணித்தர மாகவும், ஏனைய மதங்களையும் தர்க்க ரீதியில் ஒப்புக் கொள்ளச் செய்வதாகவும் பேசப்பெற்ற பொருள்கள் மூன்று, அவை பதி, பசு, பாசம் என்பன. இவை அநாதி, நித்தியமாக உள்ளவை. ஒருகால் தோன்றி, ஒருகால் அழிபவையல்ல. ஒருவரால் தோற்று விக்கப்பட்டவையுமல்ல. அப்பதி சிவபெருமானே. இவர்தான் பிறப்பு இறப்பில்லாதவர். இவர் ஒன்றே. இனி உயிர்கள் பல. இவ்வுண்மையை பசுபதயே நமோ நம: என்றுகூறி வேதம் வலியுறுத்தியுள்ளது. அதாவது பசுக்களுக்குத் தலைவன் பதி என்றதைக்கொண்டு உயிர்கள் பல எனக் கொள்ள வேண்டும். இதனையே வழிமொழிவதுபோலத் தமிழ் கந்தபுராணமும் பின்வருமாறு கூறுகிறது.

சான்றவ ராய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை
வான் திகழ் தளை என வகுப்பர். (கந்தபுராணம்)

இவ்விதம் முப்பொருள்களின் நிலையைக்கூறுவது சைவசித்தாந்தம். இதற்குப் பிரமாணநூல் வேதமும் சிவாகமமுமாம். இவைகள் சைவர் களுக்கு இருகண்கள் போன்றவை. சாத்திரங்களை பெருமானிடமிருந்து சீடனாகி நந்திதேவர் கேட்டு அவர் சனங்குமாரருக்கும் உபதேசித்து சந்தானமரபில் பூவுலகை அடைந்தன. ஆதலால் மக்கள் யாவரும் சமயஅடிப்படையில் வாழவேண்டும். மூன்றாவது பொருளான பாசம் எனும் மலம் மூன்றுவகை. அவை, ஆணவம், கன்மம், மாயை. இவை செம்பிற் களிம்புபோல் உயிர்களான நம்மைப் பற்றியுள்ளன. இவைகளைவிட்டு நீங்கித்தான் நாம் இறைவனை அடையமுடியும். இதற்கு நமக்கு குருமட்டுமே வழிகாட்டி, தீக்ஷையை செய்து, முக்திதரவல்லவராவார். மக்கள் மூன்று வகையாகப் பேசப்பட்டு உள்ளனர். அதாவது, 1. ஆணவமலம்மட்டும் உடையவர். இவரை

Digitization by Hindu-Heritage-Foundation of America. In memory of [illegible]

விஞ்ஞானகலர் என்று சாத்திரம் பேசும். இவ்வகையினரை ஆண்டவன், தானே நிராதாரமான திருமேனிகொண்டு காப்பான் 2. ஆணவம், கன்மம் என்கிற இரண்டு மலம் மட்டுமே உடையவர்கள். இவர்கள் பிரளயாகலர் எனப்படுவர். இவர்களுக்கும் ஆண்டவனே முன்னவர்களுக்கு அருள் செய்தபடி காப்பான். 3. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூவகைப் பாசங்களையுமுடையவர். (இவர்கள் நாம்தாம்) இவர்களுக்குச் சகலர் எனப்பெயர். இவர்களுக்குச் சாதாரணமாகிய மானுடச்சட்டைதாங்கி ஆசாரியனாகவந்து, தீக்ஷைசெய்து அதன்வா யிலாகக் காப்பான்.

தீட்சைவகையும் பயனும் (நால்வகையில்)

மாணாக்கருக்குத் தீட்சைசெய்யும் ஆசார்யர்கள், அத்தீட்சையை 1. தங்கள் கண்பார்வையால், 2. நினைவால், 3. தொடுதலால், 4. உபதேசிப்பதால் மாணாக்கர்களை (சீடனை) இறையருளுக்குத் தகுதியுள்ளவர்களாக மாற்றுவார்கள். சிவபெருமானையோ அல்லது எந்த மூர்த்திவகையையோ சரியைமூலமே வழிபடுபவர் ஸாலோகபதவியை பெற்றிடுவர். சிவபெருமானை கிரியைமூலம் வழிபடுபவர் சாமீப்யபதவியை பெறுவர். சிவபெருமானை யோகம்மூலம் வழிபடுபவர்கள் ஸாரூப்யபதவியை பெறுவார்கள். சிவபெருமானை ஞான நெறிமூலம் வழிபடுபவர் சாயுஜ்யம் எனும் பரமுத்தியை அடைவார். இவற்றுள் முன்னுள்ள மூன்றும் பதமுத்தி என்றும், கடைசியானது பரமுத்தி என்றும் வழங்கப்பெறும்.

நால்வகை உடற்தோற்றம்

உயிர்களுக்கு உடம்புகள் தோன்றும்வகை நான்கு ஆகும். அவை அண்டஜம், சுவேதஜம், உத்பிஜம், ஜராயுஜம் என்பவையாம். 1. அண்டசம் = முட்டையிலிருந்து தோன்றுபவை. பறவை, பாம்பு முதலியன. 2. சுவேதசம் = வியர்வையிலிருந்து தோன்றுபவை. கிருமி, கீடம் (புழு முதலியன. 3. உற்பிஜம் = விதையிலிருந்து தோன்றுபவை. மரம், செடி, பூண்டு முதலியது. 4. சராயுசம் = கருப்பையிலிருந்து தோன்றுபவை, விலங்கு, மனிதர், தேவர். எழுவகைப் பிறப்பு (ஸப்தயோனி) ஸித்தாந்த ரஹஸ்ய ஸாரம் எனும் நூல்கூறும் சான்று,



पञ्चभूतं सप्तयोनिः प्रतितत्वं व्यवस्थितम्।
मृगः पक्षी च पशवः चतुर्थ श्च सरीसृपः।
स्थावरं मानुषं दैवं सप्तयोनि द्वियोनयः ।।

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
பதினான்குவகைப் பிறப்புகள். (சதுர்தசயோனிபேதம்). அவற்றில் 1.மிருகம், 2.பறவை, 3.பசுக்கள், 4.பாம்பு, 5.ஸ்தாவரம் ஆகியவை ஐந்தும் குருக்கேசெல்லும். திர்யக்யோனிகள் 6.ஆறாவது மானுஷ்யயோனி, 7. பைசாசயோனி முதலாக 8. பிரம்மதேவர் வரையிலானவை எட்டுவகை யோனிகள். ஆக இவ்வகையில் பதினான்குவகை யோனிகள் கூறப்படுகின்றன. (தோற்றுவாய்கள்)

எழுவகைப்பிறப்புகளில் மனிதப்பிறவி மிகஅரிதானதாகும். அந்த மனிதகுலம் பிறவித்துன்பத் தொடர்நீங்கி பேரின்பப் பெருவாழ்வாகிய முக்தியைப் பெறுவதற்கு குருவருளான தீக்ஷை மிகஅவசியம். ஸ்ரீமத்காரணாகமத்தில் தீக்ஷாவிதியில் சிவனர் இதனைக் கூறியுள்ளார். மனிதர்களுக்கு முத்திகிடைப்பதற்காகவும், எல்லாபாவங்களையும் போக்கிடவும், எல்லாவகை நோயையும் அழித்து, தனதான்ய நிறைவைத் தருவதும் தீக்ஷை என்று குறிப்பிட்டு, அதன் செய்முறையை விளக்கியுள்ளார். அச்சான்று,

अतः परं प्रवक्ष्यामि शिवदीक्षा विधिक्रमम्।
नराणां मोक्षसिद्ध्यर्थं सर्वपापहरं परम्।।
सर्वरोग विनाशार्थं धनधान्य समृद्धिदम्।
शुद्धशिवद्विजै र्मुख्यैः आचार्यस्य प्रकीर्तितम्।।

தீக்ஷையின் செய்முறை

இந்த தீக்ஷை இருவகைப்படும். கலம் என்பது சிவகர்பம் என்றும், அகலம் என்பது ரிஷிகர்பம் என்று அறியப்படும். அகலம் போதிக்கும் முறையாகும், இது நால்வகை வர்ணத்தாருக்கும் உபதேசத்தால் செய்யப்படுவது. கலம் எனப்படுவதாகும். இதனை தேவாலயத்திலோ, மடத்திலா, குருவீட்டிலோ அல்லது சிஷ்யனின் வீட்டிலோ, உரியஇடத்தில் தீக்ஷை செய்யப்படவேண்டியது. தூய்மைமிக்க இடம்தேவை.

திதி வாரேஷு நக்ஷத்ரே சுமுகூர்த்தே சுலக்னகே |
தேவாலயே மடே சைவ குருசிஷ்ய க்ருஹே ததா ||
தீக்ஷாஸ்தானேஷு கர்த்தவ்யம் மண்டபம் து ப்ரகல்பயேத் ||

பூசித்த சிவகும்பநீரால் சிஷ்யனை குருவானவர் முழுக்காட்ட வேண்டும். இது பாசத்தைநீக்கி ஞானத்தைஅளித்திடும் என்றும், ஹும்படந்தமான பாசுபதாஸ்த்ரமந்திரத்தால், தீக்ஷையில் பாசம் நீக்கப்படுகிறது. முறம்மண்டலத்தில் சீடனை நிற்கச்செய்து, தத்வநியாஸம்செய்து, பஞ்சகவ்யத்தைப் பருகச்செய்வதால்

Digitization by Hindu Heritage Foundation. CC-0. USA. http://www.hindu-heritage.org

சிஷ்ய ஆத்மா புனிதமாவதாக என்று காரணாகமம் தெரிவிக்கிறது. அச்சான்று,

சிவகும்பம் ததோத்ருத்ய சிஷ்யாணாம் ஸ்நாபயேத் குரு: |
ஞானகண்ட மிதம் பரோக்தம் பாசச்சேத மனுக்ரமாத் |
ஹும்பட் பாசுபதாஸ்த்ரேண பாசச்சேதம் விதீயதே |
சூர்ப்பமண்டலகே ஸ்தித்வா சிஷ்யம் சேத் சுமுகம் ததா |
தத்வநியாஸம் ப்ரகுர்வீத ப்ராசயேத் பஞ்சகவ்யகம்|| (கரணாகமம்)

ஆசார்யரை, சீடன் தன் உடல்பொருள்ஆவி முதலிய அனைத்தையும் குருதக்ஷிணையாக அர்பணித்து, வழிபடவேண்டும் என்கிறது ஆகமம். அதற்கானசான்று,

ஆசார்யம் பூஜயேத் தத்ர வஸ்த்ர ஹேமாங்குலீயகை: |
பிராம்மணான் பூஜயேத் தத்ர மாஹேசான் ச சூஜயேத் ||
அதிதீன் சுத்தகான் சேந பூஜயேத் து விமோதனே |
சீர மர்த்தம் ப்ராணம் ச ஸத்குருப்யோ நிவேதயேத் ||

என்கிறது காரணாகமம்.

வித்யாப்யாஸம் மந்திரஸ்வீகரணம்

வேத உபநிஷதமும், ஆசார்யாய ப்ரியம்தனம் ஆஹ்ருத்ய ப்ர்ஜாதந்தும் மாவ்யவத்ஸத்ஸீ: என்று ஆசார்யருக்கு விருப்பமான செல்வத்தை அளித்து தொடர்பிலேயே இருந்திடு என்கிறது. மேலும் தைத்திரிய உபநிஷதமானது, ஆசார்யப் பூர்வரூபம், அந்தேவாசி யுந்தரரூபம், வித்யாஸந்தி:, ப்ரவசனகும் ஸந்தானம், இத்யத்வித்யம் என்று விவரித்து உபதேசிக்கிறது. அதாவது இதுவே ஸம்ஹிதை எனப்படுவது. இனி வித்யாவிஷயஞ்சொல்லப்படுகிறது. அதாவது ஆசார்யரானவர் முதல்ரூபமாகிறார். அந்தேவாசீ எனப்படுகிற அவருடனே அவரருகில் வசித்து விதிதையைக் கற்கும் சிஷ்யனானவன் அடுத்த உத்தரரூபமாகிறான். மேல்உருவமாகிறான். வித்யையானது (குருவையும் சிஷ்யனையும் இணைக்கும்) ஸந்தியாகிறது. ப்ரவசனம் என்கிற ஒதுவித்தலானது ஸந்தானமாகிறது. தொடர்பாகிறது இப்படி வித்யாவிஷயஞ் சொல்லப்பட்டது என்று விளக்குகிறது. இங்கு வித்யா என்ற சொல்லுக்கு கல்வி, வித்தை கலை, மந்திரம் ஞானம் என்பவை பொருளாகும், வித்யாப்யாஸம், கல்வியையும், வித்யாதேஹம் என்பது ஞானமயசித்சரீரம் என்பதையும், வித்யா = வித்யாதீக்ஷை தீக்ஷை என்பது ஸ்ரீவித்யா, பஞ்சதசீவித்யா முதலாகிய மந்திரஸ்வீகரணத்தை உணர்த்தும், மந்திரத்தை குருவின் வாயிலாக உபதேசமாகக்கூறிட தாமும் அதைக்கூறி பெறுவதே தீக்ஷை எனப்படுகிற மந்திரத்தை

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

கைக்கொள்ளுவது **மந்திரஸ்வீகரணம்** எனக்கூறப்படுவதாகும். இவ்வாறு தீக்ஷையிலேயே உபதேசிக்கப்படுகிறது. லலிதாவை தீக்ஷிதா என்றும் **தக்ஷிணாமூர்த்திரூபிணீ** என்றும், பிரம்மாண்டபுராணம் புகழ்ந்துரைக்கிறது. தீட்சைசெயலின் சான்று,

दीक्षा चैव प्रतिष्ठा च नैमित्तिक मिदं द्विधा।

தீக்ஷை என்றும், ப்ரதிஷ்டை என்றும், ஷட்ஸஹஸ்ரிகை எனும் நூலில் இருவகையாக நைமித்திகக்கிரியை கூறப்படுகிறது. மனிதனுக்கு தினமும் செய்யத்தக்கவையாக 1. ஸ்நாநம், 2. ஸந்த்யா, 3. பூஜா, 4.ஜபம், 5.ஹோமம் ஆகிய இவைஐந்தும் கூறப்படுகின்றன. இவைகளைச் செய்திட தீக்ஷை அவசியமாகிறது. நித்யாங்கசெயல்களுக்கு தீக்ஷையே தகுதியளிக்கிறது. சான்று,

स्नानं सन्ध्या तथा पूजा जपो होमश्च पञ्चम:।
इति नित्याङ्ग मुद्दिष्टं पवित्रारोपणं तथा।।

தீக்ஷை என்பது இறைவனான பரமேச்வரனிடமிருந்து முதலில் தேன்றி வெளிப்பட்டு பின்பு அந்த உபதேசமே வித்யேச்வரர்கள் முதலானவர்களால் முறையே தேவர்களையும், பின்பு முனிவர்களையும், பின்பு மனுஷ்யர்களையுமாக வரிசையாக முறையாக உபதேசிப்பவர் கேட்பவர் என்றமுறையில் புக்தி மற்றும் முக்தி என்கிற பயனுக்கு ஸாதனத்தை அடைவிப்பதற்கு மலம் முதலான பாசங்கள் ஐந்தையும் அழித்து, அருள்செய்வதே ஞானத்தைக்கொடுப்பதே தீக்ஷை எனப்படுவ தாகும். இதனை வாருணசிவர் கூறுகிறார்.

ஸபாச த்ரய விச்லேஷம் சிவத்வம் யுஜ்யதே யயா |
க்ரியா ஸா கத்யதே தீக்ஷா பக்திவைராக்ய லக்ஷணா ||

सपाशत्रय विश्लेषं शिवत्वं युज्यते यया ।
क्रिया सा कथ्यते दीक्षा भक्ति वैराग्य लक्षणा ।। என்கிறது.

மேலும், இதுவே மற்றோருடத்திலும் கூறப்பட்டுள்ளதாவது.

दीयते ज्ञान सद्भावं क्षीयते कर्म वासना।
दान क्षपण योगाद् हि दीक्षा शुद्धि: कृतात्मन:।।

இதில் உள்ள தானசப்தத்தால் புக்தி முக்தி என்கிற இருவகைப் பயனை அளிப்பது தீக்ஷை என்பது உணர்த்தப்படுகிறது தீக்ஷை பெற்று இறுதிவரை சிவார்ச்சனத்தை செய்யவேண்டும்.

Digitization by Hindu Heritage Foundation (www.hindu.ca) (USA)

லயம் குர்யாத் பரே தத்வே போகாத் சத்தாத்ய நிர்வாணதா
லதஸ்ச பக்த்யா ஸதா கார்யம் யாவத் ஜீவம் சிவார்ச்சனம்.
ஆசார்யஸ் யார்ச்சனம் தத்வத் யதாசக்த்யா சிவார்ச்சனம்.

நிர்பீஜதீக்ஷையை சித்தாந்தசேகரத்தில் ஸத்யோநிர்வாண தீக்ஷையென்றும், சிராந்நிர்வாண தீக்ஷை என்றும், இருவகையாகக் கூறப்பட்டுள்ளதால், பக்குவம்உள்ளதாக குருகருதினால் உடனே சீடனை முக்தியெறச் செய்யவும் இயலும். பிராப்தகர்மா காயமுள்ளவரை இருந்து, அணுபவித்தலால் தீருவது. மற்றய இருவகையான ஸஞ்சிதகர்மம், ஆகாமிகர்மம் என்பவை தீக்ஷையால் தீர்ந்தவிடும். இதனால் முக்திபெறப்படுகிறது. தீவ்ரபக்வாத்மாவிற்கு ஸத்யோ நிர்வாண தீக்ஷையையும், சிறுவர், முதியோர், முதலானோர்க்கு அஸத்யோநிர்வாணதீக்ஷையையும் ஆசார்யர் செய்திடுவார். இதனால் ஆகமஆசார்யர் பெருமையை உணரலாம்.

प्रारब्ध सञ्चितागामि कर्मजालं विशोध्यते।
ययाऽत्यन्तं विरक्तानां सद्योनिर्वाणदा तु सा।।
प्रारब्धकर्मणां भोगात् यया मुक्ति मनन्तरम्।
यान्ति बालादय स्येयं चिरान्निर्वाणदा भवेत्।।

ப்ராரப்த ஸஞ்சிதாகாமி கர்மஜாலம் விசோத்யதே |
யயா(அ)த்யந்தம் விரக்தாநாம் ஸத்யோ நிர்வாணதா து ஸா ||
ப்ராரப்த கர்மணாம் போகாத் யயா முக்திம் அனந்தரம் |
யாந்தி பாலாதயஸ் யேயம் சிரான் நிர்வாணதா பவேத் ||

சிவனே குருவைஆதாரமாகக்கொண்டு அதாவது அதிகரணமாக ஸ்தானமாகக் கொண்டு, குருவடிவத்தில் சேர்ந்துஇருந்து, தனது தீவிரசக்தியால் செய்யப்படுகிற தீக்ஷையால் உடனேயே முக்திதருவார். இவ்வகை தீக்ஷையைச்செய்து, ஸந்தானாசாரியரான ஸ்ரீமத் உமாபதி சிவாசார்யார் பெற்றான்சாம்பனுக்கு நடராஜர்உத்தரவின்படியும், மன்னர் முன்நிலையில் நடேசதீர்த்தக்கரை தும்பச்செடிக்கு முக்திதந்து நிரூபித்த வரலாறும் உள்ளது. ஸகலாத்மாக்களுக்கும் குருமூர்த்தியை அதிஷ்டித் திருந்து செய்யப்படுகிறதீக்ஷை ஸாதாரதீக்ஷை எனப்படுவதாகும்.

குரு மூர்த்திம் ஸமாச்ரித்ய மந்தசக்தி நிபாதநாத் |
குருதே ஸகலஸ்யேச: ஸாதாராம் தாம் இமாம் விது ||

குருவினால் செய்யப்படுகிற இந்த தீக்ஷை என்கிற ஸம்ஸ்காரமானது,

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

(அரியசடங்கானது) ஒரு சிஷ்யனுடைய உடலுக்கு செய்யப்படுகிறதா? அந்தநபரின் ஜாதிக்கா? உயிருக்கா? என்றால், உடலுக்கு செய்யப்படுவதல்ல, இவ்விஷயத்தில் சைவஸித்தாந்தத்தில், வைதிகத்விஜ என்பதுபோல உபநயனம்போல் உடலுக்கு தீக்ஷை ஸம்ஸ்காரம் விதிக்கப்படவில்லை. பிராம்மணர் முதலான ஜாதிக்கும் விதிக்கப்படவில்லை. ஆனால் அது ஆத்மாவிற்கு அநாதியாகவே மலத்தால் மறைக்கப்பட்டுள்ள ஆத்மாவிற்கு சிவத்தன்மையை அடைவிப்பதன் பொருட்டாகவே தீக்ஷா ஸம்ஸ்காரம் விதிக்கப்படுகிறது. என்கிற அடிப்படையான மூலகாரணம் ஆகமங்களில் கூறப்படுகிறது. வைதிகத்விஜத்வம் என்றது உடலுக்குக் கூறப்பட்டது ஆகும். ஆன்மாவிற்கு கூறப்பட்டதல்ல இதனை ஸ்மிருதிவாக்காலறியலாம்.

கார்யம் சரீர ஸம்ஸ்காரா பாதனம் ப்ரோக்ஷணாதிதிகர்பை: |
ஹோமைர் ஜாதகர்மசௌள மௌஞ்ஜீபந்தநைரிதி ||

कार्यं शरीरसंस्कारापातनं प्रोक्षणादितिगर्भैः होमै ।
र्जातकर्म चौल मौञ्जीबन्ध नैरिति ।।

உடல் என்பது அசேதனமாய் ஜடமாயுள்ளதால் தீக்ஷை எனும் ஸம்ஸ்காரம் அதற்குக் கூறப்படவில்லை. மேலும் பிராம்மணர் முதலான ஜாதிக்கு தீக்ஷை செய்யப்படுமேயானால் செய்யப் பட்டவரின் ஸம்ஸ்காரத்தாலேயே, அவரால் தோன்றிரும் பிள்ளை முதலானோரும் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டவர்களாக ஆகிவிடுவர். அவ்வாறு ஒரு சடங்கும் உலகில் கூறப்படவில்லை. ஆகையால் தீக்ஷை செயல் ஜாதிக்கு செய்யப்பட்டதாகக் கூறஇயலாது.

ஆகவே சைவாகமங்களில் கூறப்படுகிற தீக்ஷை என்பது, ஆத்மாவினுடைய (உயிரினுடைய/ஜீவனின்) அநாதியாகவுள்ள மலத்தை நீக்கிடவே லம்ஸ்காரமானது கூறப்பட்டதாக அறிக. அருணகிரிநாதர் திருப்புகழில் மரத்துறைபோலுற்றடியேனும் மலத்திருள் மூடிக்கெடலாமோ என்று முருகனிடம் அருளை வேண்டுவதாலும் தீக்ஷை மலநீக்கத்திற்கானதாகும் எனஉணரலாம்.

தீக்ஷையின் மூலகாரணத்தைக்கூறும் ஆகமசான்றுகள்,

न जाते र्न शरीरस्य संस्कारः प्राणिनो मतः ।
यदि जाते स्तदैकस्मिन् दीक्षिते खलु दीक्षणम्।।
प्राप्तं तेन न जाते स्तु जडत्वान् न तनो र्मतः।
चिद्रूपे ऽनुग्रह प्राह सर्वाऽनुग्राहक श्शिवः।।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

अन्यत्रच - कालोत्तरे-

न शरीरस्य संस्कारो न जाते र्न च कर्मणः।
आत्मनः कारयेद् दीक्षां अनादि मलकुण्ठिनः।।
निरोध स्तस्य कर्तव्यो मन्त्रैश्च विषशक्तिवत्।
दीक्षैव मोक्षदा पुंसां चिदचिद् व्यक्तिकारिणी।।

ந ஜாதேர் ந சரீரஸய ஸம்ஸ்கார: ப்ராணிநோ மத: |
யதி ஜாதேஸ் ததைகஸ்மின் தீக்ஷிதே கலு தீக்ஷணம் ||
ப்ராப்தம் தேந ந ஜாதேஸ் து ஜடத்வாத் ந தநோர் மத: |
சித்ரூபே (அ)நுக்ரஹம் ப்ராஹ ஸ்ர்வாநுக்ராஹகச் சிவ: ||

மேலும் காலோத்தராகமத்தில்

ந சரீரஸ்ய ஸம்ஸ்காரோ ந ஜாதேர் ந ச கர்மண: |
ஆத்மனக் காரயேத் தீக்ஷாம் அநாதிமல குண்டிந: ||
நிரோதஸ் தஸ்ய கர்த்தவ்யோ மந்த்ரைஸ் ச விஷசக்திவத் |
தீக்ஷைவ மோக்ஷதா பும்ஸாம் சிதசித்வ்யக்தி காரிணீ ||

மனிதகுலம் பிராணிகள் யாவும் குருவருளாகிய தீக்ஷையைப் பெற்று இவ்வுலகத்துயரக்கடலான பிறவித்துன்பத்தொடரிலிருந்து விடுபட்டு, இறைவனின் பண்புகளைப்பெற்று, பேரின்பநிலையை பரகதியான பரமுக்தியை அடைவர்.

சித்தாந்தசேகரம் எனும்நூல் சரத்காலத்திலும் வைகாசிமாசத்திலும் செய்யப்படும் தீக்ஷையானது உயர்ந்தபயனளிக்கும், பங்குனி, ஆனி, மார்கழி ஆகிய மாசங்கள் நடுத்தர பயனளிப்பவை, ஆடி மற்றும் மாசிமாதம் கடைநிலைக்காலமென்றும், ஆவணி, சித்திரை, தை, புரட்டாசி, இவை நீக்கத்தக்கவை. ஐப்பசியும், கார்த்திகையும் சரத்காலம் என்பதால் சிறப்புடையதாகவும் தெரிவிக்கிறது, கூறப்பட்ட இந்த மாசங்களிலும் குரு சுக்ர அஸ்தமனகாலங்களிலும் இரு அமாவாசை வருகிற அதிமாஸத்திலும், சந்திரன் மறைந்துள்ள காலமும் நீக்கத்தக்கது. மேலும் முக்தியை விரும்புவாகுக்கு தீக்ஷையை எப்பொழுதும், காலநியமமின்றி செய்யலாம், இல்லறத்தோருக்கு காலமறிந்து செய்யவேண்டும் என்கிறது.

விதித்வா சைவ காலாதிம் தீக்ஷாம் குர்யாத் புபுக்ஷுஷு |
முமுக்ஷோஸ் ஸர்வதா தீக்ஷா காலாதி நியமோ ந ஹி ||

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
இவ்வாறு சைவசமயத்தில் குருவினிடத்தில் தீக்ஷை பெற்றவர்கள் சமயநெறிமுறைகளை ஒருபோதும் கைவிடக்கூடாது, தெரிந்தோ, பிராயச்சித்தம் செய்யாமலோவிட்டாலோ பலநூற்றாண்டு காலம் பிசாசநிலையிலிருந்து பின்பு மேன்மையடைவார்கள் எனவே

ஸமயோல்லங்கனாத் புரோக்தம் க்ரவ்யாதத்வம் சதம் ஸமா:

என்ற வாக்யப்படி பிசாசுத்தன்மையை அடைவர், அதை நீக்கிடவே அவர்களுக்கு அந்தியேஷ்டி விதிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கட்டளையையோ, குருவினுடைய கட்டளையையோ, மீறுவது மஹாபாதகச்செயல் ஆகும். இதனை த்விசதிகாலோத்தரம் கூறுவது,

தீக்ஷிதஸ் தூத்தரே காலே ஸமயாந் யஸ் து லங்கயேத் |
தேவஸ்ய ச குரூணாம் ச மஹாபாதகபாக் பவேத் ||

என்கிறது. மேலும் சிஷ்யர்கள் சைவசிராத்தத்தையும், பித்ருக்கள் குருக்கள் இவர்களைக் குறித்து பிதா பிதாமஹ ப்ரபிதாமஹர்களாக ஈச ஸதாசிவ, சாந்தர்களையும், ருத்ரன், அனந்தன் என்ற பெயருடைய இரு விச்வேதேவர்களையும் குறித்து அவசியம் ஸத்பாத்திரத்திரர்களுக்கு தர்பணம், யோஜனம், தானம் இவற்றைச்செய்து வழிபடவேண்டும். இதனால் பித்ருஸம்பந்த பிறவிக்கடனிலிருந்த ஒருவன் விடுபடுகிறான் என்கிறது.

சிஷ்யாபிஷேக விதி



சிவதீக்ஷையில்யாகசாலையின் வடகிழக்குமூலையில் அமைந்த ஸ்நாநமண்டபத்தில், நடுவே மேடைஅமைத்து, அதன்மீது சிஷ்யனை கிழக்குமுகமாக அமரவைத்து, சிவமந்திரங்களால் அவரது உடலை ஸகளீகரணம் செய்து பூஜித்திடவேண்டும். உரிய மண்வகை விபூதி, அருகு, சாணம், வெண்கடுகு, தயிர், பஞ்சகவியம், முதலானவற்றால் நீராட்டி நிர்மார்ச்சனத்தை செய்த பின்பு, பாற்கடல் முதலான எட்டுவகைக் கடல்களைப் பூசித்த கலசநீரால் நீராட்டியபின்பு எட்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
வித்யேசர்களைப் பூசித்த கலசங்களாலும் சிஷ்யனை முழுக்காட்டி அமுதத்தால் அபிஷேகித்து, வெண்பட்டு ஆடையைஉடுத்தி, புதியபூணூல் அணிவித்து, முன்கூறிய அனந்தாஸனத்தில் அமரச்செய்து, ஆசாரியருக்கு உரிய பொருட்களையும் அதிகாரத்தையும் குருவானவர் அளித்திடுவது முறை யாகும், அதன்படி சிஷ்யனை சிவனெனவே கருதி குருவானவர்பூசித்து சிஷ்யனுக்கு உஷ்னீஷம், மகுடம், குடை, பாதுகை, இரட்டை, சாமரங்கள், யானை, குதிரை, சிபிகை, (தூக்குபல்லக்கு) முதலானவற்றையும், கத்திரிக்கோல், அரணீ, கிண்டிகை, கமண்டலம், குடம், அக்ஷமாலை, தர்பைக்கட்டு, மான்தோல் இருக்கை, சுருக்கு, சுருவம், ஆகமபுஸ்தகம், அரணித்தீக்கடைகட்டை முதலிய யாகோப கரணங்களைத் தந்திடவேண்டும். மோலும் அவ்வமயம் குருவானவர் சிஷ்யனின்பொருட்டு, செயலில் அவருக்கு உரிய அதிகாரங்களை எடுத்துரைத்து, அதிகாரத்தைத் தெவித்திடவேண்டும் என்று சைவாகம பத்ததிநூல்கள் கூறுகின்றன. இதற்கான சான்று,

பூர்வோதிதாஸநே சிஷ்யம் புனப் பூர்வவத் அர்ச்சயேத் |
உஷ்ணீஷம் மகுடம் சத்ரம் பாதுகா சாமராணி ச ||
கஜா (அ)ச்வ சிபிளகா தீநி கர்த்தரீம் கரணீம் கடம் |
அக்ஷமாலாம் ச தர்பாம்ஸ் ச ஸ்ருக் ஸ்ருவௌ புஸ்தகாதி ச ||
அதிகாரம் குருஸ் தஸ்மை சிஷ்யாய விநிவேதயேத் |
தீக்ஷா வ்யாக்யா ப்ரதிஷ்டாத்யம் ஞாத்வா(அ)த்ய ப்ரப்ருதி த்வயா ||
ஸுபரீக்ஷ்ய விதாதவ்யம் ஆக்ஞாம் ஸம் ச்ராவயேத் இதி ||

இவ்வாறு தீக்ஷைசெய்யப்பட்டு, அதிகாரம்பெற்றவரே ஆசார்யர் எனப்படுவர் ஆவார். சடங்கின்றி பிறப்பால் ஆகார்.

ஆசார்ய இலக்கணம்

தீக்ஷை, ஞானோபதேசம், உத்ஸவம், பிரதிஷ்டை, மற்றும் நைமித்திகக் காமிய பிராயச்சித்த கர்மாக்களை ஆசார்யர் மட்டுமே செய்யவேண்டும். எனவே இச்செயல்களுக்கு முதலில் செய்யப்படுவது "ஆசார்யவரணம்" எனப்படுகிற ஆசார்யரை நியமிக்கிறசெயலாம். முதலில் ஆசார்யரை நிச்சயித்து அவரிடம் விண்ணப்பித்து ஒப்புதலை பெறவேண்டும், பிறகு அவருக்கு யாகத்தில் துணைபுரியும் மூர்த்திபர்களையும் ரித்விஜர்களையும் முறையே மதுபர்க்கம் தந்து, விண்ணப்பித்து, நிச்சயித்திடவேண்டும். இவ்வாறு பொருப்பை அளிப்பதற்கு, ஆசாரியரை இலக்கணத்துடன் உள்ளவரா? என்று கண்டு அறிந்த பின்னரே நியமிக்கவேண்டும். சிவனாரின் மறுஉருவமாகப் போற்றிடும் திருமேனியராக ஆசான் விளங்குவதால், அவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எவ்வகையிலும் மற்றவர்களால் குறைகூறப்படாதவாறும், குற்றம்குறை, பழி, பாவம், ஆசௌசம், துற்குணம், துச்சீலம் இல்லாதவராக இருந்திடுவது அவசியமாகிறது. என்றுமே வேதாகமநெறியிலேயே வழுவாமல் வாழ்ந்துவந்தால் மட்டுமே அவர் விசேஷகிரியைகளைப் பொறுப்பேற்க இயலும். எனவே ஆகமங்கள் செயல்களை விதிக்கும்பொழுது, முதலில் ஆங்காங்கே ஆசார்யர் இருக்கவேண்டிய இலக்கணத்தைக் கூறியுள்ளன. ஆதிசைவ குலத்துஉதித்தோர் இவற்றைப்பெற்று இருந்திடவேண்டும். முப்போதும் இறைவனின் திருமேனியைத்தீண்டுகின்ற இவர்களுக்குப் பிறப்புத்தகுதி மட்டும் ஆகமத்தில் கூறப்படவில்லை. அத்துடன் பல்வேறுவகையில், 1.உடற்தகுதி, 2. கல்வித்தகுதி, 3. பண்புத்தகுதி, 4. சமயச்சடங்குத்தகுதி, 5. ஆசௌசத்துடக்குஅற்ற புனித்காலத்தகுதி, 6. ஆத்மசுத்தி 7. சிவஹஸ்ததகுதி என்று பலவாறாக தகுதிகள் கூறப்பட்டுள்ளன. எனவே ஸத்குருவை தேடிப்பார்த்து, தேர்வுசெய்து, முதலில் ஆசாரியரை ஏற்றல்முறை. இதுபற்றி, விநாயகருக்கு சிவனார்கூறிய சுப்ரபேதாகமநூல் கூறும் சான்று இதுவே.

ஆசார்யம் பூர்வம் அன்வேஷ்ய மூர்த்திபான்ஸ்த தனந்தரம் |
ஆதிசைவ குலோத்பூத: பஞ்சகோசர ஸம்ஸ்தித: ||
ஸர்வ சாஸ்த்ரார்த்த தத்வக்ஞ: சிவாக்னி குரு பூஜக: |
ஸர்வாவயவ ஸம்பூர்ணஸ் ஸர்வலக்ஷண ஸம்யுத: ||
வயஷ் ஷோடசகாத் ஊர்த்வம் ஸப்ததேர்(அத)உச்யதே |
க்ருஹஸ்தஸ் சோத்தமோ ஞேயோ பௌதிக ப்ரஹ்மசார்யபி ||
க்ரியாதி ஞாந பர்யந்த சாஸ்த்ரேஷு க்ருத நிச்சய: |
க்ரியாபாதே து நிபுண: சர்யாபாதா நுவர்த்தக: ||
யோகபாதே க்ருதாப்யாஸோ ஞானபாதா நுரஞ்ஜக:| (சுப்ரபேதாகமம்)

இவ்வசனப்படி, முதலில் ஆசார்யரைத் தேடித்தேர்வு செய்துபின்பு, மூர்த்திபர்களைத் தேர்வுசெய்திடவேண்டும் என்றும், அதற்கானவர்கள், ஆதிசைவகுலத்தில் தோன்றியவராகவும், சிவனாரின் ஐந்து திருமுகங்களில் தோன்றி தீக்ஷைபெற்ற ஐந்து சிவரிஷிகுலங்களில் வாழ்பவராகவும், எல்லா சாஸ்த்திரங்களின் உண்மைப்பொருளை அறிந்திருப்பவராகவும், சிவன், சிவாக்னி, தனதுகுரு ஆகிய மூவரை யும் தினமும் வழிபடுபவராகவும், உடலில் எல்லா உறுப்புகளுடனும்கூடி நிறைவாயுள்ளவரும், (ஆணுக்குரிய 32சாமுத்ரிகா லக்ஷணம்) ஆணுக்குரிய அனைத்து இலக்கணத்துடன் இருப்ப வரும், பதினாறுவயதுக்கு மேற்பட்டவராகவும் எழுபதுவயதுக்குக் கீழ்பட்ட வராகவும் வயதுவரம்பு ஆசாரியராய் செயல்பட கிரியைகளைச்செய்திட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



கூறப்படுகிறது. இல்லறத்தில் மனைவி மக்களுடன் வசிப்பவராகவும் இருப்பவர் உத்தம ஆசார்யராக அறியத்தக்கவர். பௌதிகர் மற்றும் பிரம்மசாரியுமாக இருப்பவரும், சைவசாஸ்த்திரங்களுடைய கிரியாபாதம் முதலாக ஞானபாதம் வரையிலான, நான்கு பகுதிகளின் செய்திகளில் தெளிவான நிச்சயநிலையைப் பெற்றிருப்ப வராயும், கிரியாபாதத்தில் ஆகமக்கிரியைகளைச் செய்வதில் திறமைமிக்க வராயும், சரியாபாகத்தில் ஆகம அநுஷ்டானத்தை முறையே இடைவிடாது பின்பற்றுபவராயும், யோகபாகத்தில் ஆகமத்தின்படி தவநிலைநெறியில் தினமும் பயிற்சிசெய்து வருபவராயும், ஞானபாகத்தில் ஆகமத்தின் வித்யாபாதமானத்தில் பசு–பதி–பாசமென்னும் திரிபார்த்தங்களையும் நன்குஉணர்ந்து திடமானபற்று உடையவராகவும், பிறருக்கு சைவஸித்தாந்தத்தை எடுத்துக்கூறி உபதேசிக்கவல்லவராயும், ஆசார்யர் எனப்படுபவர் திகழ்ந்திடவேண்டும் என்கிறது ஆகமம்.

த்ரிபதார்த்த பரிஞானீ மனோ(அ)ஹங்கார வர்ஜித: |
தயாவான் ஸர்வபூதேஷு ஆத்மவத் பரிபாலக: ||

இவ்வாறு ஷட்ஸஹஸ்ரிகா எனும் நூல் சிறப்பிலக்கணத்தைக் கூறும்.

இதன்படி பதி பசு பாசம் எனப்படுகிற மூவகையான உண்மைப் பொருளைப்பற்றி தெளிந்த மெய்யறிவு பெற்றவராயும், மனதில் ஏற்படக்கூடிய நான் என்ற மமதை என்கிற அகந்தை எனும் அஹங்காரம் இல்லாதவராயும், எல்லா பிராணிகளிடத்திலும் தயை எனும் இறக்கம் உள்ளவராயும், பிற உயிர்களைத் தன்னைப்போலவே கருதி காப்பவராயும், இருக்கவேண்டியவராக ஆசாரியர் கூறப்படுகிறார்.

மேலும் காமிகாகமத்தில் ஆகம கல்வித்தகுதியால் முத்தரத்தினராக ஆசார்யர் கூறப்பட்டுள்ளார். அதன்படி லக்ஷம் சலோகத்தைக் கசடறக்கற்ற குருவானவர் சிரேஷ்டராக புக்திமுத்திப் பயனளிப்பவர். அதில்பாதியளவில்ஆகமக்கல்விகற்றவர்நடுத்தரமானமத்யமநிலையில் விளங்குபவர் அதில் கால்பாகம் கற்றறிந்த ஆகமஅறிஞரோ கடைநிலையில் உள்ளவராகவும் அறியப்படவேண்டியவர் என்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதனால் சுலோகவடிவில் உள்ள மூலாகமத்தை கற்றுஇருத்தல் அவசியமாம்.

லக்ஷாத்யாயீ குரு ச்ரேஷ்டோ புக்தி முக்தி பலப்ரத: |
மத்யமஸ் து ததர்தக்ஞஸ் தத் பாதக்ஞோ(அ)தமோ பவேத் ||

என்கிறது காமிகாகமம், மேலும் பூர்வகாரணாகமநூல் இவருக்கு உரிய செயல்களைக் குறிப்பிட்டு அதிகாரத்தை எடுத்துரைக்கிறது. அதாவது

ஸ்தாபனம் யஜனம் ஸர்வம் ஆதிசைவார்ஹகோ விது: |
அத்யாபனம் சாத்யயனம் யாஜநம் யஜநம் ததா ||
தானம் ப்ரதிக்ரஹம் சைவ ஷட்கர்ம நிரதஸ் ஸதா |

இவ்வசனத்தால், ஆதிசைவர்களான ஆசார்யர் என்பவர்கள், தெய்வஸ்தாபனம், தேவபூஜை, மற்றும் அனைத்துகாரியத்தையும் செய்திடத் தகுதியுடையவராக அறியத்தக்கது. மேலும் இவர்கள், கற்பித்தல், கற்றல், பூசையைசெய்வித்தல், தானும்பூசைசெய்தல், அவ்வாறே தானம்செய்தல் மற்றும் அளித்திடும் தானத்தைப்பெறுதல் என்கிற ஆறுசெயல்களையும் தொடர்ந்து எப்பொழுதும் செய்துவரு பவர்களாக இருந்திடவேண்டும் என்கிறது. மேலும் கல்வி, குணம் மனம் செயல்பாடு முதலிய பலவேறு தகுதிகளை ஆசார்யருக்கு இலக்கணமாகக் கூறப்பட்டுள்ளது. அவைகளாவன

சைவஸித்தாந்த தத்வக்ஞோ தேவாக்னி குருபக்திமான் |
ஸர்வாசார ஸமாயுக்தல் தபஸ்வீஜந வத்ஸல: ||
தர்மக்ரியாதி நிபுணோ வீதராகோ விமத்ஸர: |
பரதத்வே ஸதா த்யாயீ சிவசாஸந தத்பர: |
ஸர்வ சாஸ்த்ரார்த்த குசல: ஸமயாசார பாலக: |
க்ருஹஸ்தஸ் ஸரஸோ வாக்மீ ஸுசீலப் பிரியதர்சந: |
சிகீ ச பத்தகேசோ வா ச்மச்ரு ரோமாதி வர்ஜித: |
அரோகீ தீக்ஷிதஸ் சைவ மந்த்ர முத்ரா க்ரியாந்வித: |
பத வாக்ய ப்ரமாணக்ஞ: பசுசாஸ்த்ர பராங்முக: |
சிவதந்த்ரைக சித்தாத்மா ஸர்வ ப்ராணிஹிதே ரத: |
ஸர்வாவயவ ஸம்பூர்ணஸ் ஸர்வலக்ஷண லக்ஷித: |
ஈத்ருக் லக்ஷண ஸம்பன்ன: ஸ்தாபகஸ் ச்ரேஷ்ட உச்யதே|

(பூர்வகாரணாகமம்)

மேற்காணும் பூர்வகாரணாகம் வாக்கியக் கூற்றின்படி ஆசாரியரானவர், சைவஸித்தாந்தத்தின் உண்மை முடிவுகளை அறிந்தவராயும், தேவன்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அக்னி, குரு, இம்மூன்றினிடத்திலும் மாறாபக்தியுள்ளவராயும், ஆகமத்தின் அனைத்து ஆசாரங்களையும் கடைபிடிப்பவராயும், தவநெறியில் வாழும் மக்களிடத்தில் தந்தை போன்று பாசமுள்ளவராயும், சிவதர்மமாகிய ஆகமக்கிரியைகளில் செயல்திறன் மிக்கவராயும், ஆசையற்றவராயும், கர்வம் அகந்தையற்றவராயும் சைவாகமத்தின் மேலான தத்வநிலையில் எப்பொழுதும் பரப்ரம்மத்தை தியானிப்பவராயும் சிவனாரின் கட்டளைகளானது ஆகமநூல்களில் ஈடுபாடும் மதிப்பும் கொண்டவராயும், அனைத்து சாஸ்த்திரங்களின் உட்பொருளை. அறிந்திடும் திறமையுள்ளவராயும் (பிறசமய குறைகளைக் கண்டுள்ளவர்) ஸமயஒழுக்கநெறி செயல்முறைப் பின்பற்றி சமயநெறிகாப்பவராயும், மனைவி, மகனுடன் இல்லறவாழ்க்கை நெறியில் வாழ்ந்துவருபவராயும், மற்றவர்களிடம் இயல்பாகப் பழகுபவராயும், பத்திரஸத்துடன் இருப்பவரும், சிறந்த பேச்சாற்றல் உடைய ஸமயபோதகராயும், நல்ல ஒழுக்கத்துடன் வாழ்பவராயும், மற்றவர்களால் பிரியமாகத் காணப்படுபவராயும், (இகழப்படாதவராயும்) தலைமுடியை கொண்டையாக (சேவலைப் போலவோ சிகையாகவோ, அல்லது கட்டப்பட்ட கேசத்தை உடையவராக அதாவது குடுமியைக் கொண்டுள்ளவராய்.

தாடி மற்றும் மீசைகளை, உடல்ரோமங்களை நீக்கியவராயும், (காரணமின்றி இவை இருக்கலாகாது, செயலாற்றுகையில் முடிவழித்து திருத்திடவேண்டும். வபனம்செய்யாமல் ஆசாரியராகச் செயலாற்றக்கூட்டது) எந்தவித நெடுநாளய ரோகமற்றவராய், நோயற்ற அரோகியாயும், சைவசமயநெறியில் தீக்ஷைசெய்விக்கப்பட்டவராயும், சைவாகமத்திலுடைய மந்திரவகைகள், முத்திரைவகைகள் கிரியைவகைகள் இவற்றை நன்குஅறிந்து செயல்படுத்தத் தெரிந்த வராயும், ஆகமங்களின் அறிய பதமந்திரச் சொற்கள் மற்றும் ஆகமவாக்கியங் களுக்கானப்ரமாணத்தையும் அளவையும், பொருளையும், சான்றையும், அறிந்திருப் பவராயும், பசுசாஸ்த்திரங்களைக் கற்பதைத் தவிர்த்து வாழ்பவராய் (உலகியல், பொருளியல், அறிவியல், தொழிற்கல்வி, கலைகள், இயல்இசை, நாடகம், இவைகளைப் புறந்தள்ளி, அதற்கு மனதில் இடமளிக்காது விரும்பா திருத்தல்) பிறகலைரசனையால் இறை யியலைப் பின்னுக்குத் தள்ளாமல் சிவதந்திரநூல்களான சைவாகம

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல்களிலேயே ஈடுபாடு உடைய, ஒன்றிய மனமுடையவராகவும், மனம் – மொழி – உடல் எல்லா உயிரினங்களிடத்திலும், அவைக்கு நன்மையைச்செய்யும் வகையில் இரக்ககுணமுள்ளவராயும், அஹிம்சையை பின்பற்றுபவராயும், அனைத்து அவயவங்களுடனும் ஸம்பூர்ண தேஹியாயும், ஸர்வலக்ஷணங்களோடு காணப்படுபவருமாக இவ்வாறான இலக்கணங்களோடு கூடியவரான ஸ்தாபகர், ஸ்தாபனம் முதலானவற்றைச் செய்திடும் ஆசாரியர் சிறந்தவராக, சிரேஷ்டராக கூறப்படுகிறார். மேலும் ஆசார்யஅபிஷேகம் செய்துகொண்ட ஆசார்யரானவரும், நிருவாணதீக்ஷைவரைபெற்று, மந்த்திரப் பயிற்சிமுடித்த ஸாதகரானவரும், விசேஷதீக்ஷையை முடித்தவரான வாகீசீ புத்ரகராக உள்ளவர்களும், சைவசாமான்ய ஸமயதீக்ஷை மட்டுமே பெற்றுள்ள ஸமயீ என்பவர்களும், சைவத்தில் தீக்ஷை பெற்றுள்ளவர்களும், கோயில் முதலானவற்றில் தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்வதற்கு யாகச்செயலுக்கு ஆசார்யராக ரித்விஜர்களாகவும் விளங்குவதற்குத் தகுதியுடையவர்கள். சைவாகம சாஸ்த்திரங்களைப் பற்றி விரிவுரையாற்றும் வியாக்யாதாக்கள், உத்ஸவம், ஸ்நபனம், பவித்ராரோபணம், சாந்திககர்மாக்கள் வளம்பெறச்செய்யும் பௌஷ்டிககர்மாக்கள் மந்திரத்தால் செய்யத்தக்க மற்றய கர்மாக்களிலும் செய்திடத் தகுதிபடைத்தவர்களாவர்.

ஆசார்யருடன் பணியாற்றவல்லவர்கள்

ஆசார்யஸ் ஸாதகஸ் சைவ புத்ரகஸ் ஸமயீ ததா |
தீக்ஷிதாஸ் ச ப்ரதிஷ்டாயாம் ஆசார்யஸ்யைவ யோக்யதா |
வ்யாக்யாதா சிவசாஸ்த்ராணாம் உத்ஸவே ஸ்நபனே (அ)பிச |
பவித்ரா ரோஹணே சைவ சாந்திகே பௌஷ்டிகே ததா |
அன்யேஷ் வபிச ஸர்வேஷு மந்த்ரகர்மசு யோக்யகா: ||

(பூர்வகாரணாகமே).

சைவஸித்தாந்தவகையான லலிதாகமத்தின் உபாகமமாக விளங்குகிற கௌமாரம் என்கிற குமாரதந்திரம் எனும்நூல் மேலும் சிலதகுதிகளை ஆசார்யருக்கு இலக்கணமாக தேவையானதாகத் தெரிவிக்கிறது. அவை,

சிவாகம புராணக்ஞோ குஹபூஜா விதாநவித் |
வேத வேதாங்க தத்வக்ஞோ ஜபஹோம விதானவித் |
தேவாக்னி குரு பக்தஸ் ச மேதாவீ குசலஸ் சுசி: |
ஸர்வாவயவ ஸம்பூர்ணஸ் ஸமயாசார ஸம்யுத: |
குலீநஸ் ஸர்வசாஸ்த்ரக்ஞோ ஸத்யவாதீ ஜிதேந்தரிய: ||

(குமாரதத்திரம்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதன்படி ஆசார்யரானவர் சிவாகமங்களுடன் புராணங்களையும் அறிந்திருப்பவராயும், குஹன் எனும் முருகனை பூசைசெய்யவேண்டிய விதிமுறைகளை அறிந்தவராயும், வேதம் மற்றும் வேதாங்கங்களின் தத்துவப்பொருளை அறிந்தவராயும், ஜபம்செய்யும்முறை ஹோமம் செய்யும்முறை, இவற்றை நன்கு அறிந்தவராயும், தேவர்–அக்னி–குரு இவர்களிடத்தில் பக்தியுடையவராயும், திரிபதார்த்தங்களின் உண்மை விளக்கமறிந்த மேதாவியாகவும், குடும்பத்தில் நலமுடன் வாழும் குசலராயும், நெருப்புபோல மாசற்று எப்போதும் உடல்தூய்மையுடன் பரிசுத்தராக சுசியாயுள்ளவரும், அங்கக்குறைவு மற்றும் மிகுதி ஏதுமின்றி அனைத்து உறுப்புக்களுடனும் கூடிய ஆணாக பரிபூரணராக உள்ளவரும், சைவசமயத்தின் ஆசாரங்களுடன் பின்பற்றி வாழ்பவராகவும், உயர்குலத்தில் ஆதிசைவகுலத்தில் தோன்றியவராகவும், எல்லா சாஸ்த்திரங்களையும் அறிந்தவராயும், எப்போதும் உண்மையே பேசுபவராயும் தனது ஐந்து புலன்களின் வழியே செல்லாமல் புலன்களை ஒருமுகப்படுத்தி வென்று பக்திநெறியில் இருப்பவருமாக விளங்கவேண்டும். அஹிம்சை, புலனடக்கம் பொருமை, தயை, ஞானம், ஸத்யம், தவம், ஸத்பாவனை (நல்லெண்ணம்)ஆகிய எட்டு ஆன்மகுணங்களைப் பெற்றுவிளங்குபவரே ஆசார்யர் என்று பொறுப்பேற்றுப் பணியாற்றத்தக்கவர் என்கிறது ஆகமம்.

குருவின் பூஜாமஹிமை

ஆகமோக்த ப்ரகாரேண ப்ரதிஷ்டா லிங்கபூஜநே |
ஆதிசைவஸ்ய பூஜா ச ஸர்வஸித்திகரீ ஸ்மிருதா ||(உத்தரகாரணே)

இவ்வாறு ஆகமங்கள் கூறும் வழிமுறையினாலேயே சிவலிங்கத்தின் நிலைநிறுத்துவதான பிரதிஷ்டையையும், அந்தலிங்க பூஜையையும் செய்ய வேண்டும், இவையும் ஆதிசைவகுலத்தில் தோன்றிய ஆசாரியரால் செய்யப்பட்டாலே அந்த பிரதிஷ்டை, பூஜை, இஷ்டஸித்தியைத் தருபவை ஆகும். மற்றவர்களால் இச்செயல்கள் செய்யக்கூடாததாகும்.

ஆசார்யர் பெருமையும் இலக்கணமும்

ஆதிசைவஸ்ய பூஜாச ஸர்வஸித்திகரீ ஸ்மிருதா |
ஸுஸ்நாதோ நவவஸ்த்ரஸ் து ஸோஷ்ணீஷஸ் சோத்தரீயக: ||
பஞ்சாங்க பூஷணோபேத: சந்தனாத் யநுலேபித: |
ருத்ராக்ஷமாலா பரணஸ் ஸர்வலக்ஷண லக்ஷித: ||

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

மந்த்ர தந்த்ர க்ரியா முத்ரா பாவநாபாவ காபித: |
சிவேந ஸ்தாபிதம் சைவம் சைவேந ஸ்தாபிதஸ் சிவ: ||
சிவ சைவ விசுத்தாத்மா சிவப்ராஹ்மண உச்யதே |
சதுர்வேதாதி காரத்வாத் சைவஸித்தாந்த பாரக: ||
சாதுர்வர்ண்யாதிகாரத்வாத் ஆதிசைவ இதிஸ்மிருத: ||

(உத்தரகாரணாகமம்)

இவ்வாக்கியத்தின்படி ஆதிசைவரால் செய்யப்படுகிற சிவலிங்க பூஜையே எல்லாஸித்திகளையும் (பயன்களைத் கைகூடிடச் செய்தலை) தருவதாகும். அதற்கு அந்த ஆதிசைவரான குருவானவர் எவ்வாறு? விளங்கிடவேண்டுமெனில், நன்கு தலைக்கு நீரில் முழுகாடியவராயும், புதியதான பருத்திஆடையை உடுத்தியவராயும், பஞ்சகச்சமும் மேலாடையுடனுமாய், தலைப்பாகை எனும் உஷ்ணீஷத்துடனும், பூணூல்போல அணிந்திடும் இருமுனையுடன் முடிந்த உத்தரீயத்தை உடையவராயும், பொன்னாலான மோதிரம், கைகாப்பு, இடைச்சரம், காதணி, பூணூல் ஆகிய ஐந்துவகை ஆபரணங்களுடன் கூடியவராயும், மனம்மிகுந்தசந்தனச்சாந்துகளைபூசியத் திருமேனியராயும், ருத்ராக்ஷமாலையை அணிந்தவராயும், அனைத்து இலக்கணத்துடன் காணப்படுபவராயும், ஆகமங்களின் மந்திரம், தந்திரம் (நூல்நெறி) கிரியாவகைகள், முத்ராதர் சனங்கள், பாவனைகளுடன் உரிய பொருளைக் கருதி செப்பவர்களாயும் இருந்தல்வேண்டும். சிவனால் ஸ்தாபிக் கப்பட்டது சைவம் எனும் சமயம் அந்த சைவசமயத்தால் சிவன் ஸ்தாபிக்கப்படுகிறார்இவ்வாறாக.

சிவத்தாலும் சைவசமயத்தாலும் மிகவும் புனிதமான ஆத்மாவை உடையவராதலால் சிவசிருஷ்டியில் வந்தவராதலால் சிவபிராமணர் என்று கூறப்படுகிறது. மேலும் நான்கு வேதநெறியிலும் பணியாற்றும் அதிகாரம் கொண்டிருப்பதாலும், சைவஸித்தாந்தத்தில் கரைகண்ட அற்றிஞராக உள்ளதாலும், பிராமனர் க்ஷத்ரியர், வைச்யர் சூத்ரர் என்கிற நாங்கு வர்ணாச்ரமிகளில் வாழ்வோருக்கும் தீக்ஷையைச் செய்துவைக்க அதிகாரம்படைத்தவர் எபன்பதாலும் இந்த ஆசார்யர் ஆதிசைவர் என்று அழைக்கப்படுகிறார் என்பது அறியத்தக்கது.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

குரு தேசிக சொல்விளக்கம்

மண்ணுலகில் வாழும் ஆதிசைவ ஆசார்யர் ஒருவரே யாவருக்கும் தீக்ஷை, பூஜை, மூலமாக அறம் பொருள், இன்பம், வீடுபேறு, ஆகிய நால்வகை அறங்களான நால்வகை புருஷார்த்தங்களையும் தரவல்ல தலைவராக, இம்மைப்பயனையும், மறுமைப்பயனையும், தரக்கூடிய கர்த்தாவாக உள்ளகாரணத்தால், அவர் குரு என்று அழைக்கப்படுகிறார். இவ்வாறே ஆகமங்களில் குறிப்பிடப்படுகிறது.

धर्मार्थ काम मोक्षाणां कर्ता यः स गुरुः स्मृतः । என்று தெரிவிக்கிறது.

தர்மார்த்த காம மோக்ஷாணாம் கர்த்தா யஸ் ஸ குருஸ் ஸ்மிருத: |

என்று அஜிதாகமம் குரு என்ற அழைப்பிற்கு விளக்கம் தருகிறது. இவ்வாறே இறைவன் இருக்கும் இடத்தை சீடனுக்கு காட்டி வழிபடக்கட்டளை இடுகிறவர் என்ற காரணத்தினாலேயே ஆகம்ங்களில் குரு ஆசார்யர் எனப்படுபவர் தேசிகர் என்ற சிறப்புப் பெயரை உடையவராகிறார் என்கிறது வீரதந்திரம் என்றநூல்.

देश आदिश्यते येन देशिकः तदुदाहृतः ।

தேச ஆதிச்யதே யேந தேசிகஸ் ததுதாஹ்ருத்: எனப்படுகிறது.

सर्वेषां च गुरु श्चैव गुरु रित्यभिधीयते।
लिङ्गस्थापन योग्यत्वात् स्थापको नाम उच्यते।। (वीरतन्त्रे)

இதன்படி, மோக்ஷதேசத்தைக் கூறுவதாலேயே தேசிகர் என்றும், எல்லோருக்கும் மந்திர உபதேசம் செய்யவல்லவராயுள்ளதால், குரு என்றும், மேலும் லிங்கத்தை ஸ்தாபிதம்செய்யத் தகுதியுடையவர் என்ற காரணத்தால் ஸ்தாபகர் என்றபெயரும் கூறப்படுகிறது. என்று வீரதந்திரம் எனும் சைவாகமநூல் பெயர்விளக்கமளிக்கிறது.

ஏற்கத்தகாத ஆசார்ய இலக்கணங்கள்.

தீக்ஷை தேவதாபிரதிஷ்டை மஹோத்ஸவம் இவைகளில் கிரியைகளைச் செய்ய வேண்டியவரே ஆசார்யர். இவரைத் தேர்வுசெய்து நியமித்திடுவதில் விலக்களித்திடும் பொருட்டு ஆகமங்களில் கூடாத இலக்கணங்களும் கூறப்பட்டுள்ளன. இவற்றை யாவரும் கவனத்தில்கொள்ளவும்.

नास्तिको मत्सरो रोकी पतिरो वृत्ति जीवक: |
भिषक् सास्त्रोप जीवी च तदा रङ्कोप जीवक: ||

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பிரஸ்த க்ருர காம்யஸ்தல் பேலப் பாரதாரிக: |
ஸந்யாஸீ தார்க்கிகோ ப்ரஷ்ட: க்ருசாங்கச் சல்யஜீவக: ||
பராபவாத சீலஸ்ச நைஷ்டிகஸ் ச கபாலிக: |
ப்ரதிஷ்டாதந்த்ர கிஞ்சிக்ஞ: பசுசாஸ்த்ராநு ரஞ்ஜித: || (கூர்மபுராணம்)
அங்கஹீநம் துராசாரம் மூர்க்கம் சாப் யதி ஹ்ரஸ்வகம் |
க்ருசாங்கம் ஹீநதந்தம் ச தீக்ஷா (அ)நுஷ்டா நஹீநகம் |
நாக்னிமந்தம் ப்ரம்மசர்யம் வானப்ரஸ்தம் விஸர்ஜயேத். || (காரணம்)

மேற்கண்ட ஆகமவசனங்களின்படி கொள்கைகளை மறுத்துரைக்கும் நாஸ்திகர், கர்வம்மிக்கவர், ரோகமுள்ளவர், காதுகேளாதவர், (செவிடர்) முதுமையால் வாழ்பவர், பணிசெய்து பிழைத்து வருபவர், வைத்தியம்செய்பவர் (வைத்தியர்) சாஸ்த்திரங்களால் வாழ்பவர்கள் அவ்வாறே அரங்கத்தைநம்பி அதில் தொடர்புடைய இயல், இசை, நாடக, நாட்ய, வாத்யத் துறையில்வாழ்பவர்கள், கருமித்தனமுள்ளவர், கொடும்செயலில் ஈடுபடுபவர், ஸ்தம்பன, மாரணாதி தீவினைகளைச் செய்திடுபவர், பேராசையுள்ளவர், சபலபுத்தியுள்ளவர் பிறர்மனைவியுடன் கூடியவர் – ஸந்யாஸீ, தார்க்கிகராக விவாதம்செய்பவர், வர்ணாச்ரம தர்மத்திலிருந்துவிலகி நழுவிவாழ்கிற பிரஷ்டர், தாழ்வைஅடைந்தவர். (பதிதர்) மிகவும் மெலிந்துள்ளவர், விலக்கிடும் பொருட்களால் வாழ்பவர், பிறரைப்பற்றிய அபவாதங்களைக் கூறிடும் பொல்லாங்கு கூறுபவர், ஒழுக்கம்குன்றியவர், பிரம்மசாரியாகநைஷ்டிகராக இருப்பவர், காபாலிக சமயவாதிகளாயுள்ளவர், மாறுபட்ட ரௌத்ரசைவக் கொள்கையர், பிரதிஷ்டா மஹாதந்திரங்களான, காமிகம், காரணம் முதலானவற்றில் முழுமைபெறாத சிற்றறிவுஉடையவர், உடல், உயிர், விலங்கு, பொருள், கலைகளைப்பற்றிய, பசுசாஸ்த்ரங்களில் மிகவும் ஈடுபாடுஉடையவர், இவர்களையும், உடலுறுப்பில் குறையுள்ளவர், தீயநடத்தையுள்ளவர், பிடிவாத மூர்க்ககுணத்தவர், மிகவும் குள்ளமாக இருப்பவர், மிகஇளைத்தமேனியர், பல்இழந்தவர், தீக்ஷை அநுஷ்டானம் செய்யாமலிருப்பவர் அக்னியை தினமும் வழிபடாதவர், மணம்புரியாத பிரம்மசாரியானவரும், வானப்பிரஸ்த நிலையிலிருப்பவரும். ஆசார்ய நியமனத்தில் விலக்கத்தக்கவர் என்றறிக.

ஆசாரியத் தேர்வுமுறை. (தகுதியின் தேவை)

தீக்ஷை, பிரதிஷ்டை முதலிய உயரிய கிரியைகளுக்கு ஸத்குருவை தேர்ந்தெடுத்தல் மிகவும் அவசியம், அதனை எவ்வாறு தேர்வு செய்வது? என்பதற்கு உரியவழிமுறையை ஆகமம் எடுத்துக்கூறுகிறது. அதாவது, ஆசாரியருடைய சுபாவஎண்ணங்கள், நல்லெண்ணங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
செயலைச் செய்வதில்உள்ள வல்லமை, திறமை, ஸாமர்த்தியம், இவற்றை அறிந்தும், ஸித்தாந்தத்தில் உள்ள புலமை, பாண்டித்யம் வித்வானாய் விளங்கி, உபதேசிக்கும்ஆற்றல், ஆகமபாடங்களை நடத்துவதிலும், விளக்குவதிலும்உள்ள செயற்திறன், நிர்வாகத் திறமை இதுபோன்றவைகளை ஆய்ந்துபார்த்து, ஆசார்யக்ருதியத்தை செய்விப்போரை, ஸத்குருவை கைக்கொள்ளுதல் முறையாகும். அவரைப்பற்றி ஒன்றையுமே அறியாமல், ஆகமச்செயலில் பொறுப்பான பதவியை அளித்தலாகாது. அவ்வாறு அறியாமல் நியமித்தவரால் செய்யப்படும் செயல்கள்யாவும் பயன்தராதவைகளாகும் என்பர். மேலும் அறியாதவர் செய்யும் உயரிய அரிய செயலால் செய்விப்போருக்கும், செல்வத்திற்கும் அழிவு ஏற்படும் என்றும், ஆகமஞானமற்றவர்களால் ஸ்தாபிக்கப்படுகிற லிங்கம், பிம்பம் (சிலை) இவை மீண்டும் அறிவாளியால் மீண்டுமை ஸ்தாபிக்கப்படவேண்டியவையே என்று அறியவேண்டும். ஸ்தாபனம் தீக்ஷை முதலானவைகளில்ஆசார்யர் கிடைத்திடாவிடில் அங்குள்ள அரசனுக்கு மரணம் ஏற்படும் என்று உரியபயனை அறிவுறுத்தவேண்டும். ஆகையால் ஆகம இலக்கணப்படி, உள்ள ஆசார்யராலேயே விசேஷமாக செய்திடுக. இல்லாவிடில் வீண்பகட்டுக்கானதாய் பயனற்றதாய் ஆகும் என்கிறது ஆகமம். இவற்றைக்கூறும் சான்று.

ஞாத்வா (ஆ)சார்யஸ்ய ஸத்பாவம் க்ரியாகரண கௌசலம் |
ஞாத்வா ஸித்தாந்த வைதுஷ்யம் பாடகர்ம பலந் ததா ||
ஏவமாதீன் பரீக்ஷ்யா (அ)த காரகம் ஸங்க்ருஹேத் குரும் |
அக்ஞாத்வா தஸ்ய வ்ருத்தாந்தம் குருஸங்க்ருஹணம் க்ருதம் ||
தத்க்ருதம் விபலம் ப்ராஹுர் கர்த்ருநாசம் தனக்ஷயம் |
அக்ஞேந ஸ்தாபிதம் பிம்பம் புனஸ் ஸம்ஸ்தாபயேத் புத: ||
ஸ்தாபனாதா வபாவே து ராக்ஞாம் மரண மாதிசேத் |
அதஸ் ஸம்ஸ்தாபனம் தக்ஷ கரணீயம் விசேஷத: ||

இந்தவகையில் ஆலயத்தில் ஐந்துவகையில் ஆசார்யர்கள் விளங்குவர். அவர்கள் முறையே 1. ஆசார்யர், 2. அர்ச்சகர், 3. ஸாதகர், 4. அலங்கிருதர், 5. வாசகர் என்று அழைக்கப்படுபவர்கள் ஆவர். இவ்வாறு அம்சுமதாகம் கூறுகிறது.

आचार्य श्चार्चक श्चैव साधको ऽलङ्कृत स्तथा ।
वाचक श्च कुलोद्भूतः पञ्चाचार्याः प्रकीर्तिताः (अंशुमदि)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆசார்யஸ் சார்ச்சகஸ் சைவ ஸாதகா(அ) லங்க்ருதஸ் ததா |
வாசகஸ் ச குலோத்பூத: பஞ்சாசார்யாப் பிரகீர்த்திதா: ||

முறையே இவர்களின் பணிவிவரமும் ஆகமங்களில் கூறப்படுகின்றது. ஆசிரியர் ஆகமங்களைப் பார்த்து அதன்படி காலத்தைசெயலை நிச்சயித்தல் நைமித்திகக் க்ரியை வகைகளைச் செய்தல்வேண்டும். அர்ச்சகரால் நித்யபூஜை அர்ச்சனைகளை செய்யவேண்டும். அலங்கிருத ஆசார்யரால் தெய்வத்திருவுருவங்கள், லிங்கம், கும்பம் முதலானவைக்கு உரிய அலங்காரத்தைச் செய்வது முறையாகும். ஸாதகாசாரியரால் யாகபூஜைகளில் விதிமுறைப்படி உரியபொருளை தந்துஉதவி செய்தலை செய்விக்கவேண்டும். வாசகாசாரியர் என்பவரால், யாகம் பூஜை இவற்றில் எல்லாசெயலுக்கும் உரிய வேத சிவாகம மந்திரங்களை தவறாமல், மாறாமல்கூறி, ஒதிடச்செய்யவேண்டும். இவ்வாறு ஐந்து வகை ஆசார்யர்களாலும் செய்விக்கும் பூஜையானது, காலம், த்ரவியம், கலைநயம், மந்திரம், கிரியை, பாவனை, தந்த்ரமார்க்கம் யாவும் குறைவற்றதாக செய்யப்படுதலாம் நிறைவான பயனைத்தருவதாம்

ஆசார்யஸ் சாகமாலோகாத் யஜேத் நைமித்திகக் கிரியா: |
ஏவம் ஆசார்யக்ருத்யம் ஸ்யாத் அர்ச்சகேநா (அ)ர்ச்சனம் குரு ||
அலங்கிருதேநா (அ)லங்கிருத்ய ஸாதகோ த்ரவ் யஸாதக: |
வாசகஸ் து ச்ருதேக் கர்த்தா பஞ்சாசார்ய க்ரமம் விது: ||

இவ்விடத்தில் ச்ருதி என்ற சொல்லுக்கு வேதம் ஆகமம் இரண்டுமே பொருளாகும்.

ஆசார்யேணைவ கர்த்தவ்யா பூஜா நைமித்திகக் க்ரியா ||

என்கிற அம்சுமதாகம வசனப்படி தீக்ஷை பிரதிஷ்டை உத்ஸவம் முதலிய நைமித்திக விசேஷக் கிரியைகளை ஆசார்யரைக் கொண்டு மட்டுமே செய்விக்கவேண்டும். மேலும் விருப்பப்பயனைப் பெற்றிட விரும்பி செய்யப்படுகிற காம்யக்கிரியைகளையும் உலகநலனுக்கான பொதுவேள்வியான சாந்திகபௌஷ்டிக கிரியைகளையும், ஆசார்யரே செய்யவேண்டும். ஆசார்யருக்கு இயலாமை ஏற்பட்ட நேரத்தில் அச்செயலை அவரது மகனால் சிஷ்யனால் செய்து முடிக்கப்பட வேண்டியது, ஆகமவிதிமுறையாகும். இவ்வாறு யாவருக்கும் விருப்பப்பயனை அளித்திட ஆசார்யர் உதவிடுவார்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

யார் குரு? யாருக்கு குரு?

வேதம் உபநிஷதம் ஆகமம், புராணம், ராஜசரித்திரம் அனைத்திலும் குருவும் சிஷ்யருமாக பல்லாயிரம் குருமார்களைக் காணமுடிகிறது. ஸதாசிவப்ரம்மம் முதலாக தேவர்களும், ரிஷிகளும், மனிதர்களும் குருவாக விளங்குகின்றனர். அறிவு சார்ந்ததொடர்பு உடையவர்களே குருவாயும் சிஷ்யர்களாயும் கூறப்பட்டுள்ளனர் என்பது அறியத்தக்கது. ஸம்ஸ்கிருதமொழியில் உள்ள குரு என்ற சொல்லுக்கு பலவகைப் பொருள்கள் உண்டு. அவை தந்தை, பெரியது, சுமை, ஆசிரியர், தேவன், குருகிரஹம், ஆசார்யர் முதலானவற்றை உணர்த்துவது. அவ்வாறே சிஷ்யனுக்கும் பல்வேறு காரணங்களால் பலபெயர்கள் உண்டு, அவை, சிஷ்யன், அந்தேவாசி, சாத்ரன், மாணவன், முதலானவை. இவ்வாறு இருப்பினும் தற்காலத்தில் உரிய கருத்தரிந்து பகுத்து அறிந்து கூறாமல், மூத்தவர், வழிகாட்டுபவர், தொழில்கலை உதவியாளர்கள், தலைவர்கள், தீயவர்களின் தலைவர்கள் மூர்க்கர் அனைவரையுமே குரு என்று போற்றி அழைக்கின்றனர். இது மிகவும் தவறான கண்டனத்திற்கு உரிய பாவச்செயலாகும். எனவே தந்தை ஆசிரியர், ஆசார்யர், குரு, தெய்வம், ஞானியர், யோகியர் இவர்களை மட்டுமே தனக்குத் தொடர்புள்ளவர்களை மட்டுமே குறிப்பிட்டு அழைக்கவேண்டும். கருத்தை அல்லது மந்திரத்தை உரைத்தவரே குரு எனவும், கேட்டுப்பின்பு கூறிப்பெற்றவரே சிஷ்யர் எனவும், அறியப்பட வேண்டும். இவ்வகையில் குருவை அறிவோம்.

மூவுலகத்து உயிர்கள் அனைத்திற்கும் தேவர்கள் ரிஷிகள், மனிதர்கள் யாவருக்கும் பரமேச்வரன் ஒருவனே மேலான பரமேஷ்டி குரு ஆவார். அவரே முதல்குரு, அவரிடம் உபதேசம் பெற்ற கௌசிகாதிரிஷிகளும், ஸனகாதிமுனிவர்களுமே சிஷ்யர்கள் ஆவர். இறையருள் இன்றி எதையும் நாம் செய்துமுடிக்க இயலாது. அந்த இறையருளுக்கு நாம் பாத்திரமாவதற்கு நமக்கு ஒரு குருவினுடைய வழிபடுதல் மிகஅவசியமாகும். உலகியல் வாழ்வில் சுகபோகங்களை திருப்தியாக அனுபவித்துக்கொள்வதற்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும், பக்திநெறியில் தெய்வஆராதனைகளைச் செய்வதற்கும், ஒரு வழிகாட்டி தேவை. அவரே நமக்கு குருவாக அமைத்து அருள்கிறார். இந்துமதத்தில் குருவுக்கு முதன்மை அளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக சைவவழிபாடு, சாக்தவழிபாடு, வைணவவழிபாடு, கௌமார வழிபாடு, முதலிய எந்தஒரு தெய்வவழிபாட்டு உபாஸனை முறையும், ஒரு குருபரம்பரையை உடையதாய் குருமண்டல ஸந்தானகுருக்களைக் கொண்டு விளங்குகிறது. இறைவன் ஸ்வரூபலக்ஷணம் என்றும்,

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

தட்சிணாமூர்த்தி என்னும், இருநிலையில் அருவமும் உருவமுமாய் விளங்குகிறான். சொரூபலக்ஷணம் என்னும் அருள்புரிகிற உயர்நிலையில் குணங்குறிகளற்ற ஒரு அருவப்பரம்பொருள் தனது அருவநிலையிலிருந்து சிவப்ரம்மம் ஒருபடி கீழிறங்கிவந்து ஆன்மகோடிகளின் நன்மைக்காகப் பல்வேறு பெயர்களையும் பல்வேறு திருவுருவங்களையும் தாங்கிப் பேரருள் செய்கிறது. அடியார்கள் தத்தமது விருப்புக்கும் தேவைக்கும் தகுதிக்கும் இசைந்த வடிவங்களில் இறைவனைக் கண்டறிந்து வழிபடுவதற்கான வாய்ப்பு இந்துசமயமெனும் அறுசமயநெறியில் மட்டுமே காணப்படுவது தனிச்சிறப்பாகும். சிவனாரின் ஐந்தொழில்களை உணர்த்துகின்ற மஹேச்வர வடிவங்களில் அகோரமுகத்தில் தோன்றிய அற்புதமான ஒருவடிவமே தக்ஷிணாமூர்த்தியாகும். இந்த உருவம் கலைநயச்சிறப்பும், தத்துவார்த்தச்செறிவும், திருவருட்பொலிவும் கொண்டதொரு மூர்த்தமாகும். சிந்து சமவெளிக் காலத்திற்குரியதான அகழ்வராய்ச்சியில் யோகிவடிவமொன்று கண்டெடுக்கப்பட்டிருப்பது தக்ஷிணாமூர்த்தியின் பழமைக்குத் தொல்பொருள் சான்றாகும். பழந்தமிழ்மக்களும் இம்மூர்த்தியை வழிபட்டிருப்பது ஆலமர் செல்வன் என்ற சங்ககாலச் செய்யுட்சொற்றொடர் மூலம் உணரலாம்.

காமிகாகமம் எண்வகை தட்சிணா மூர்த்தி வடிவங்களைக் கூறுகிறது. இவற்றைவிடப் பல்வேறுவடிவங்களும், பல்வேறுநூல்களில் காணப்படுகின்றன. பல்லவர்காலக் குடைவரைச் சிற்பங் களில் இருந்து, சோழர்காலச் செப்புப் படிமங்களினூடாக இன்றைய புலம் பெயர் நாட்டுக் கோயில்கள்வரை எல்லாஇடங்களிலும் எல்லோராலும் விரும்பிவழிபடப்படும்குருமூர்த்தம்இந்த தக்ஷிணாமூர்த்தியின் திருக்கோலமே ஆகும். பொதுவாக உபதேசநிலையில் ஞானதக்ஷிணாமூர்த்தி, தவநிலை யில்உள்ள யோகதக்ஷிணாமூர்த்தி, நாதமிசைக்கும் நிலையிலுள்ள கேயதக்ஷிணாமூர்த்தி என்று அடிப்படையில் மூவகைத் திருக்கோலமும், பலவகையில் இவையே விளங்குவன ஆகும். தமிழ்மறையாகிய பன்னிருதிருமுறைகளிலும் குருவடிவம் புகழப்பட்டுள்ளதைக் காணலாம்.

Digitization by Hindu Heritage Foundation of America (HHFA(USA)

பரமகுருவின் சிஷ்யர்களுடனான கோலம்.

பரமசிவனார் ஆலமரத்தடியில் கையிலாயமலையில் சனகாதி முனிவர்களான சிஷ்யர்களுக்கு சிஷ்டகுருவாகி சிந்முத்திரை காட்டி வேதாகமப்பொருளை உபதேசித்து அருளினார். பரம குருவான சிவனாரிடம், பிரம்மா, விஷ்ணு, இந்திரன், முதலான அட்ட திக்பாலர்கள் அனைவரும் அவரைவழிபடும் ஆகமமுறையைக் கேட்டறிந்து, வழிபட்டு, உய்வை, தமதுபதவியை பெற்றனர் என்று புராணங்களால் அறியமுடிகிறது. சிவனேகுருவாகிறார். குருவே சிவனாக விளங்கிடுவார். குருவே சிவமெனக் கூறினன் நந்தி என்று திருமந்திரப்பாடல் கூறும். இதையே ஆகமம் ஆசார்யஸ் சிவஏவஸ் யாத் அனயோரந்தரம் நஹி என்கிறது.

குருசிஷ்ய பதே ஸ்தித்வா ஸ்வயம் தேவஸ் ஸதாசிவ: |
ப்ரச்னோத்தரபதைர் வாக்யைர் தந்த்ரம் ஸமவதாரயத் || என்றும்,

வேதம் ஈசானஸ் ஸர்வவித்யானாம் ஈஸ்வர: | என்றும்,
அஷ்டாதசநாம் ஏதாஸாம் வித்யாநாம் பின்னவர்த்மனாம் |
ஆதிகர்த்தா கவிஸ் ஸாக்ஷாத் ஸூலபாணி ரிதி ச்ருதி: || என்றும்,

கூறப்படும் ஆகமவாக்கியங்களால் அறியலாம். இவ்வுலகில் உள்ள குருக்கள் சிவனால் தீக்ஷிக்கப்பட்டவர்களின்குலத்தில் உதித்ததால் சிவப்ராம்மணர் என்றும், சுத்தமே சிவமாவதால் இவர்கள் சுத்த பிராம்மணர் என்றும் அழைக்கப் படுகின்றனர் என்று சைவ சமய குருக்களை ஆகமம்கூறுகிறது.

शिवेन दीक्षितत्वात् च शिवब्राह्मण उच्यते ।
तस्मात् शिवद्विजं विप्रं शुद्धब्राह्मण मुच्यते।। (पूर्वकारणागमे)

இவ்வுலகில் ஆசார்யரை இடமாகக்கொண்டு அந்தமஹாதேவனே குருவாக இருந்து அருள்தருகிறார் என்றும், குருவையே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
பரம்பொருளாகக்கருதவேண்டும். அந்த குருவையே சிவனாக எண்ணி வழிபடவேண்டும்.

ஆசார்யஸ் யாஸனம் த்ருத்வா ஆசார் யாத்மான மானயேத் |
தஸ்மாத் ஆசார்யரூபம் து மஹாதேவாத்ம ரூபகம் ||
குரூர் தேவோ மஹாதேவோ குரூர் தேவஸ் ஸதாசிவ: |
தஸ்மாத் தேவமிதம் குஹ்யம் தியாயயேத் பரமாம் கதிம் ||
ஏகாக்ஷர ப்ரதாதாரம் குரோ ரன்யம் ந மானயேத் |
சுவானயோநி சதம் ப்ராப்ய சண்டாலேஷ் வபி ஜாயதே ||
சரலிங்க ஸ்வரூபம் ச ஜ்யேஷ்டாசார்ய ஸ்வரூபகம் |
ஆசார்ய லிங்கமூர்த்திஞ்ச குருராத்ம ப்ரபூஜயத் || (மகுடாகமம்)

இவ்வாறு மகுடாகமம் குருவே மகேசன் என்கிறது.

ஆசார்ய மஹிமை (குருவின்பெருமை)

சுப்ரபேதாகமம் ஆசார்யரே இவ்வுலகில் காணப்படும் சிவன் என்கிறது. ஆசார்யரே இவ்வுலகில் சிஷ்யருக்கு சிவனைப்போல் முத்திதர வல்லவர். ஆசார்யரை சிவனைப்போலவே சிந்தித்து வழிபடவேண்டும். இதுவே சைவஸித்தாந்த சாஸ்த்திரத்தினுடைய நிச்சயம் என்று வலியுறுத்துகிறது

ஆசார்யாஸ் சிவசாஸ்த்ரக்ஞா: மோக்ஷக்ஞாஸ் சிவவத் புவி |
சிவவத் சிந்தயேத் ஸர்வே இதி சாஸ்த்ரஸ்ய நிச்சய: ||

என்று சுப்ரபேதாகம சைவோத்பத்திபடல வாக்யத்தால் அறியலாம். ரௌரவாகம படலம் 61–ல் தேவன் கோபித்தால் குருகாத்திடுவார். குரு கோபித்தால் ஒருவரும் காப்பவரில்லை என்றும், இவ்வாறு தேவனினும் குருவானவர் உயரியநிலையில் இருப்பதால் தமது குருவை யாவரும் பெருமுயற்சியோடு பூஜிக்கவேண்டும் என்றும், பொன்பொருள் உடல்உழைப்பு, உயிர், அனைத்தையும் குருவுக்கு அர்பணிக்கவேண்டும் என்றும், கூறப்படுகிறது. அச்சான்று,

தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந ஆசார்யம் பூஜயத் தத: | என்கிறது.
தேவே ருஷ்டே குருஸ் த்ராதா குரௌ ருஷ்டே ந கஸ்சன || 65
தேவேப்யோ (அ)ப்யதிகம் தஸ்மாத் குரும் யத்நேந பூஜயேத் |
தேவகோபாத் குருஸ்த்ராதா குரோர் கோபான் நஸாதுதா || 66
தேவேப்யோப்யதிகம் தஸ்மாத் குரும் யத்னேன பூஜயேத் |
(ரௌராவாகமம்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆசார்ய குருதக்ஷிணை விவரம்

பஞ்சநிஷ்கா அதமா ப்ரோக்தா தசநிஷ்கா து மத்யமா |
உத்தமா த்ரிகுணா ப்ரோக்தா ஆசார்யாய ப்ரதாபயேத் || (மகுடே)

हेमाङ्गुलीयं कटकं (कटिसूत्रं) केयूरं कुण्डलं तथा।
हेमयज्ञोपवीतं च पञ्चाङ्गभूषणं स्मृतम्।।
आचार्यं पूजयेत् तत्र यथा विभवविस्तरम्।
उष्णीषं उत्तरीयं च परिधानं तथैव च।
हेमाङ्गुलीयकं चैव गन्धपुष्पं तथैव च।
मकुटं कुण्डलं चैव हार केयूरकं तथा।
कटकं कटिसूत्रं च आचार्यस्य प्रदापयेत्।। (सुप्रभेदे)

இதன்படி 15 நிஷ்கம் 10 நிஷ்கம் 5 நிஷ்கம் அளவு எடையில் தங்கத்தை குருதக்ஷிணையாக அளிக்க வேண்டும் என்றும் ஐவகையான பஞ் சாங்க பூஷணங்களையும் பயன்படும் பொருள்களையும் அளித்திட வேண்டும் என்றும், தனது செல்வநிலைக்கு ஏற்ப விரிவாக, பொன்பொருள், மகுடம், ஆடை ஆபரணங்களைத் தந்து குருபூஜையை ஆசாரிய ஆராதணையை ஆகமவிதிப்படி அளித்திடவேண்டும். ஆசார்ய பூஜையால் உளமகிழ்ந்து ஆசீர்வதிப்பாரேயானால் இவரால் மந்திரஸித்தி ஏற்பட்டு மத்திரம் பயன்தரும்.

उपदेशस्य सामर्थ्यात् श्रीगुरोश्च प्रसादतः।
मन्त्रप्रभावात् भक्त्या च मन्त्रसिद्धिः प्रजायते।। (कुलप्रकाशतन्त्रे)

உபதேசம் பெற்ற சீடருக்கு அந்த மந்திரம் ஸித்திபெற்று, பயன்தரவேண்டுமானால், உபதேசத்தின் திறமையாலும், குருவின் அருளாசியாலும், மந்திரத்தின் மஹிமையாலும், குருபக்தி தெய்வபத்தி மந்திரபக்தியாலும் மந்திரம் பயன்தருவதாக ஆகும். எனவே மந்திரம், அதனால் செய்யும் பூஜை பயன்தரவும். குருவருள் தேவை. ஒவ்வொரு மந்திரத்தையும் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியினிடத்தில் வைத்து, வழிபட்டு, பின்பு அதை எடுத்து உபதேசமாகப்பெற்று பயன்படுத்துவது சைவாகம ஆதிசைவ மரபுவழி முறையாகும். ஆலமரத்தடியில் அமர்ந்திருப்பவரும், தனதருகில் சூழ்ந்திருக்கின்ற முனிவர்களுக்கு ஞானத்தை சிந்முத்திரையால் போதித்து அளிப்பவரும், பிறப்பு இறப்பு எனும் தொடர்துக்கத்தை போக்கடிக்கவல்லவரும், மூன்றுஉலகங்களுக்கும் குருவாக இருப்பவருமான ஸ்ரீ மேதாதக்ஷிணாமூர்த்தி உருவிலமைந்த பரமேச்வரனை வணங்குகிறேன் என்கிறது குருவின் துதி.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

வடவிடபி ஸமீபே பூமிபாகே நிஷண்ணம் –
ஸகல முனிஜனானாம் ஞானதாதார மாராத்
த்ரிபுவன குரு மீசம் தக்ஷிணாமூர்த்தி மீசம் –
ஜனன மரண துக்கச் சேததக்ஷம் நமாமி

இறைவனை தாயாகவும், தந்தையாகவும், அரசனாகவும், தலைவனாகவும், மருத்துவராகவும், அறியாமையை அகற்றும் ஆசிரியனாகவும், பலவகையான நிலைகளில் போற்றி வழிபாடுவது சைவசமய மரபு ஆகும். குருந்தமரத்தடியிலிருந்து, குருவாய்விளங்கி இவ்வுலகில் மாணிக்கவாசகருக்கு, தீக்ஷை செய்வித்தார் சிவன். பிரம்மஞானத்தை உணர்த்த குருவடிவாக எழுந்தருளிய வடிவமே தக்ஷிணாமூர்த்தி வடிவமாகும். திருநாவுக்கரசர் தனது தேவாரங்களில் ஆலடிச்செல்வனைப் பெரிதும் போற்றிப் பாடியுள்ளார். கொடுமுடித்தலத் தேவாரத்தில் "நட்டனைத் தொழ நம் வினை நாசமாகும்" என்று கூறுகிறார். அப்பாடல் –

சிட்டனை சிவனை செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை ஆல நிழல் அமர்
பட்டனைத் திரு பாண்டிக் கொடுமுடி
நட்டனைத் தொழ நம்வினை நாசமே. **(திருநாவுக்கரசர்)**

இவ்வாறு இறைவனை சமயக்குரவர்களும், மெய்ஞானிகளும், அப்பனாக, அம்மையாக, தோழனாக, குருவாக, எல்லாமாய், எண்ணி, வழிபட்டு பேரானந்தபெருவாழ்வை அடைந்திருக்கின்றார்கள். போதிப்பதில் இருவகையுண்டு. சொல்லித் தெரியவைக்கும்முறை ஒன்று, மற்றது சொல்லாமல் புரியவைக்கும்முறை. அவ்வாறு சொல்லாமல் விளங்க வைக்கும் முறையினை உபதேசிக்கும் தத்துவமாய்அமைந்தவர் தக்ஷிணா மூர்த்தியாவார். சனகாதிமுனிவர்களுக்கு சின்முத்திரையைக் காட்டி, மௌனமாக வீராசனமிட்டு அமர்ந்து, சொல்லாமல் தத்துவத்தினை புரியவைத்தவர் தக்ஷிணாமூர்த்தி ஆவார். இதனைத் திருவிளையாடற் புராணப்பாடலால் நன்கு உணரலாம், அப்பாடல் இதுவே.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்க முதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தக்ஷிணாமூர்த்தி வீற்றிருக்கும் நிலை குருவடிவமாகும் ஆலமரம் பிரபஞ்சதத்துவத்தை உணர்த்துவது. ஆலமரமான பிரபஞ்ச வாழ்வில் இருந்து அருள்தரும் குருவடிவான தக்ஷிணாமூர்த்தியின் அருளால் விடுபட்டு இறையின்பம் அடைதல் என்னும் தத்துவ வடிவமே தக்ஷிணாமூரத்தி வடிவமாகும் மணிவாசகரின் திருவாசகத்தில்

அன்றால் நிழற்கீழ் அருமறைகள் தானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாடோறும்
நின்றார வேத்து நிறைகழலோன் புனை கொன்றைப்
பொன்றாது பாடிநாம் பூவல்லிக் கொய்யாமோ (திருவாசகம்)

"யோகதக்ஷிணாமூர்த்தியானவர்" யோகபட்டயம் அணிந்து நேரன நிமிர்ந்தஉடலுடன், ஆழ்ந்த கருத்துக்களையும், குண்டலினீ சக்தியை முறையே சிவராஜயோகத்தால் புருவநடுவில் ஏற்றினால் என்றும் இளமையோடு நோயின்றி விளங்க முடியும் என்பதை விளக்கும் வகையில், இவர் இளமைத் தோற்றத்துடன் காட்சிதந்து அருள்கிறார்.

ஞானக்ஷிணாமூர்த்தியானவர், சிவஞானமாகிய முப்பொருள் உண்மையை வலதுகையின் சின்முத்திரையினாலே மௌனத்திலேயே விளக்கி, அருள்பவராகிறார். அதாவது சின்முத்திரையில் உள்ள கட்டைவிரல் பதியாகிய இறைவனைக் குறிப்பிடுகின்றது. ஆள்காட்டிவிரல் பசுவாகிய உயிரைக் குறிப்பிடுகின்றது. இந்த சுட்டுவிரலை அடுத்ததுள்ள நடுவிரல் அணிவிரல் சிறுவிரல் ஆகிய மூன்றுவிரல்களும் முறையே ஆணவம் கன்மம், மாயை என்கிற மும்மலங்களை உணர்த்துகின்றன. இதனால் அறிவித்தது யாதெனில் "பசுவாகிய உயிர் பதியாகிய இறைவனைச் சென்றடையவேண்டும்." ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களும் பதியை நெருங்கவொட்டாமல் உயிரை மும்மலங்கள் மறைத்து இருக்கின்றன. இவற்றைக் தவிர்த்து விலகி, உயிர் பரமபதியை சேர்வதே "பேரின்ப முக்திநிலை" என்று முக்திநெறியை போதிக்கிறார்.

முக்திநெறி அறியாக மூர்க்கரொடு முயல்னேப்
பக்திநெறி அறிவித்து பழவினைகள் மாளும் வண்ணம்
சித்த மலம் அருவித்து சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கருளியவாரார் பெறுவார் அச்சோவே. (திருவாசகம்)

என்று, தான்பெற்ற திருவருள் தீக்ஷைப்பயனை, மணிவாசகர் திருவாசகத்தில் கூறிஇருப்பதால், மும்மலம் வேறுபட்டொழிய முக்திபெற ஆமைரத்தடிசெல்வன் திருவடிபணிந்து ஏத்தி அருள்பெறவேண்டும்.

Digitized by Siva Siva Heritage Foundation of America. HHFA(USA)



தேஹதக்ஷிணாமூர்த்தியானவர், வீணாதரராக, வியாக்யான மூர்த்தியாக, தேஹநாடீசக்ரங்களை முறையே பயன்படுத்தினால் தேஹத்தில் உள்ள நாதத்தை மேலேஎழுப்பி பிரம்மரந்திரத்தில் சேர்த்து, பரநாதத்தை உபாஸித்து பேரின்பநிலைபெறும் முறையை, நாதோபாசனையை உணர்த்திடும் ச்ருதிவாத்யம் அல்லது துடி எனும் உடுக்கையான லயவாத்யம் இவற்றைக்கொண்டு, இசையின் மேன்மையை உணர்த்துகிறார். தக்ஷிணாமூர்த்தியின் திருக்கோலங்கள், முப்பத்தாறு வகைகளில் பலவகைநிலைகளில் ஆலயங்களில் தென்முகக்கடவுளாக விளங்கும். சிவலிங்கத்தில் அருவுருவநிலையில் உள்ள, ஐந்துமுகமுள்ள ஸதாசிவ குருவின், உருவநிலையில்உள்ள, மூலவராக சிவமூர்த்தியாக உள்ளதே தக்ஷிணாமூர்த்தியின்திருவுருவமாகும். இதுவே சிவனாரின் குருமூர்த்தம் என்று உணரவேண்டும்.

குருவின்குரு (ஆலடிஆசான்)

தக்ஷிணாமூர்த்தி ஜகத்குருவாக பரமகுருவாக சீடர்களுடன் கூடியவராக ஆலயங்களில் தென்திசையில் தேவகோட்டத்தில் மூலவராகவும், உற்சவமூர்த்திபேரங்களில் பலஆலயங்களில் எழுந்தருளும் சலபேரமாகவும், ஆலயத்தின் மஹாகோபுரங்கள், விமானத்தின் தலங்களில், பலவகைத் திருக்கோலங்களில், சுதாவிக்ரஹங்களாகவும் காட்சிதந்து அருள்தருகின்றார்.

திருக்கொற்கை எனும் தலத்தில், தவநிலையிலிருந்தபடி மன்மதனை எரித்து, காமத்தை வென்றாலே கடவுளை சேரஇயலும் என்பதை உணர்த்துகிறார். ஆவுடையார்கோயிலில், மாணிக்கவாசகருக்கு குருவாக காட்சிதந்து, குருந்தமரத்தடியில் ஞானஉபதேசம்செய்து, அருளினார். ஒம்ஆம்புலியூர்தலத்தில், தேவிக்கு பிரணவப்பொருளை எடுத்துக்கூறி ப்ரணவவியாக்ரபுரீசராக பரமேஷ்டிகுருவாய் அருள்கிறார். மத்யார்ஜுனம் எனும் திருவிடைமருதூருக்குத் தென்திசையிலுள்ள ஆலங்குடியில், ஆலமரத்தடி செல்வராய் அருள்பாலிக்கிறார். உத்தரமாயூரத்தில், வள்ளலார் சுவாமியாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ரிஷபதேவருக்கு ஞானோபதேசம் செய்து, மேதாதக்ஷிணாமூர்த்தியாக அருள்கிறார். திருவாரூர்திருத்தலத்தில், தென்முகக்கடவுளாய் குருமூர்த்தியாய் தனிக்கோயில் கொண்டு சிவஞானம் தந்தருள்கிறார். இவ்வாறு பலஇடங்களில் பலதிருவருட் செயல்களைச் செய்து குருவாக எழுந்தருளி இருப்பதைக் காணமுடிகிறது.

பரமகுருவும் கிரககுருவும்

இவர் இந்திரன் முதலான தேவர்களுக்குக் குருவாய் விளங்கிடும் பிருஹஸ்பதிக்ரஹமாகிய வியாழபகவானுக்கும் மேம்பட்ட பரமகுருவாக குருவுக்கும் குருவாக தக்ஷிணாமூர்த்தி விளங்குகிறார். ஆதலால் மக்கள் குருகிரஹதோஷம் அகல அவருக்கும் மேலான தெய்வமான தக்ஷணாமூர்த்தியை வழிபட்டு கிரஹபீடையைப் போக்கிக்கொள்கின்றனர். குருகிரஹத்திற்கு சமமாக மாற்றாக தக்ஷிணாமூர்த்தியைக்கருதி வழிபடலாகாது. இவர் பரமபதியாவார். எனவே வியாழ க்ரஹத்திற்கு உரியவற்றை இவருக்கு அளிப்பது முறையற்ற தேவையற்ற பயனற்ற செயலாகும்.இது சிவனது ஒப்பற்ற மாசற்ற நிலையை, தூயபளிங்கு வெண்நிறத்தை மாற்றி காவி நிறமாகவும், மஞ்சளாகவும், கடலைதானியமாலையோடும் தாழ்த்துதல் கூடாது. அவை கிரஹதெய்வமான குருவிற்கு மட்டுமே அளிக்கத்தக்கவை. மேலும் குருகிரஹத்தைமட்டும் வழிபட்டுவிட்டு, சிவாலயத்திற்குச் சென்று, சிவனைவழிபடாது வெளிவருவதும் பாவச்செயலாகும். சிவனிடம் விருப்பத்தை விண்ணப்பித்தபின்பு அவரை வலமாய்வந்து பிறகு கிரஹவழிபாட்டைச் செய்து வணங்கி வெளிவருவதே முறையாகும்.

குருவடிவிலே தெய்வங்கள்.

சிவபெருமான் முதலான தெய்வங்கள் யாவும், தமது அடியார்களுக்கு குருமூர்த்தியாகவும் அருள்புரிந்துள்ளதை வேதாகம புராணங்களால் அறியமுடிகிறது. பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலான எட்டுதிசை தெய்வங்கள் முதலான தேவர்களும், ஸநகாதி மஹரிஷிகளும் சிவபெருமானை குருவாகக்கொண்டு அவரை வழிபடும் நெறிமுறையை மூலாகமத்தை உபதேசம் பெற்று அதன்படி வழிபட்டு பயனெய்தியுள்ளனர். அவ்வாறே ஸதாசிவகுருகுவின் ஆதிசக்தியான அம்பிகையும் சிவனை வழிபட்டு ஆகமங்களைக் கேட்டு வழிபட்டுள்ளார். அவரது பிரம்மாண்டபுராணத்தின் லலிதாஸஹஸ்ரநாமத்துதி, ஈசனுக்கு தேவியேதிருமேனியாகத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திகழ்வதையும் பிரியாதவளாயும் தக்ஷிணாமூர்த்திரூபிணி என்றும், ஞானமுத்ரா என்றும், சிவஞான ப்ரதாயினீ என்றும், ஸம்ஸாரபங்க நிர்மக்ன ஸமுத்தரண பண்டிதா என்றும், கைவல்யபத தாயினீ என்றும், பல திருநாமங்களால் அம்பிகையை குருமூர்த்தமாக விளக்குகிறது. சைவாகமங்களில் பரமகுருமார்கள் எழுவரல் ஸதாசிவகுடும்பி னியான அம்பிகா குருவாக இருந்து அருள்தருகிறாள். இவளை ஸ்ரீசக்ரத்தில் சிந்தாமணி கிருஹத்தில், குருமண்டலரூபிணியாக வழிபடுவது சாக்தமரபு. இவ்விதம் தேவிகளை குருவாகக்கொண்டு உபதேசம் பெற்று உய்வுபெற்றவர்கள் பலதேவர்களுமாவர். மேலும் தேவலோகரிஷிகளும், சிவன், சத்தி, கந்தசுவாமி, விஷ்ணு, ஹயகீரிவர், கிருஷ்ணபகவான், இவர்களிடம் உபதேசம்பெற்றதை நாம்அறிவோம். இல்வாறு பலரும் தமது இஷ்டதெய்வத்தை குருவடிவிலே தியானித்து போற்றிப்புகழ்ந்து வழிபட்டு அருள்பெற்றனர் என்பதை அறியமுடிகிறது.

குருவாய் அருளும் குமரன் (குஹகுரு / ஸ்கந்தகுரு)

அகஸ்தியமஹாமுனிவரானவர், சிவன், ஹயக்ரீவர், தேவீ, குஹன் இவர்களைநாடி குருவாகஏற்று உபதேசங்களைப்பெற்ற ஒப்பற்ற "கும்பமுனி" ஆவார். அருணகிரிநாதர் எனும் குஹாநுபூதிமானாகிய குறாளர் தனது திருப்புகழில் இதனை கும்பமுனி கும்பிடும்தம்பிரானே என்கிறார். சைவசமய ஸப்தபரமகுருக்களின் வரிசையில் குஹகுருவும் கூறப்படும். முருகன் கந்தன் எனப்படுகிற சுப்ரமண்யராகிய குஹமூர்த்தியானவர், ஞானவடிவமாய் சிவப்புதல்வனாய் யோகாக்னியில் வெளிபட்ட சிவசுதனாவார். இவரே ஞானபண்டித்சுவாமி ஆவார் குமரக்கடவுளான குஹமூர்த்தி நமது உள்ளக்குகையில் இருந்த நம்மை இயக்கும் பரமபதியாவார். செந்தமிழ்க்கடவுளான முருகப்பெருமானவர், நக்கீரர், ஔவையார், கச்சியப்பர், அருணகிரிநாதர், பாம்பன்சுவாமி, குமரகுருபர் போன்ற பலஅடியவர் களை, தமிழிலக்கியத் துதிகளைப் பாடச்செய்து, அகமகிழ்ந்த குருந ாதராக விளங்குகிறார். முருகன் புகழை சிறப்புறபாடவைத்த "கந்தகுரு வின் பெருமை" அளப்பரியது. அருணகிரிநாதர் தனது திருப்புகழ் பாடல்களில் முருகப்பெருமனை பல இடங்களில் குருநாதா என்றே அழைத்து பலவாறாகப் புகழ்கிறார்.

Digitization by Hindu Heritage Foundation Trust (HHFT)

அருணகிரிநாதர் தனது முதல் திருப்புகழிலேயே முக்கண்ணருக்கு, வேதத்தலையான ஓமெனும் பிரணவப்பொருளை உபதேசித்த சரவணபவமுருகனே யாவருக்கும் முக்திக்கு ஒரு மூலவிதையாக இருப்பவரான குருபரர் என்று கூறுகிறார்.

குமரக்கடவுளையே பரப்ரம்மமாக விளக்கும் சமயம் "கௌமாரசமயம்". சிவனுக்கும் குஹனுக்கும் வேறுபாடில்லை, சிவனேமுருகன் என்பது வேதாகமஉபநிஷதங்களினால் விளக்கப்பட்டுள்ள முடிந்தமுடிவு. திருவாவினன்குடித் திருப்புகழில் ஜபமாலைதந்த ஸத்குருநாதா என்று குறிப்பிடுகிறார். மேலும், திருப்பரங்குன்றத் திருப்புகழிலே "இந்த உலகவாழ்க்கைத் தொடரினால் மனசஞ்சலமுற்று உன்னை நினையா தொழிந்த என்னை, உன்னைப்போற்றிவழிபட அருள்செய்யுமாறு" வேண்டுகிறார். அந்த திருப்பரங்குன்ற திருப்புகழ் கூற்று இதுவே.

ஸந்ததம் பந்தத் தொடராலே – சஞ்சலம் துஞ்சித் திரிவேனை –
கந்தனெ ன்றன்புற்றுனைநாளும் –
கண்டுதொண்டன் புற்றிடுவேனோ
தந்தியின் கொய்பைப் புனர்வோனே – சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா – தென்பரங்குன்றிற் பெருமாளே.

மேலும் இவ்வுலகில் தீங்கிழைத்து, இகழ்ச்சிக்குள்ளாகி உழல்வேனை ஸத்குருவாகிய உனதுஉபதேசத்தால் சரவணபவ எனும் ஆறெழுத்துமந்திர பிரணவமந்திரப்பொருளை உணர்ந்து, அருள்பெறும் நாள் எது? அருள்பெறச்செய், என்று குஹனை குருநாதராகக்கருதி விண்ணப்பிக்கிறார்.

அபகாரநிந்தைபட்டுழலாதே அறியாதவஞ்ஜரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே உனை
நான் நினைந் தருட்பெறுவேனா
இபமாமுகத்தனுக்கிளையோனே –
இமவான் மடந்தையுத்த மிபாலா
ஜபமாலைதந்தஸத்குருநாதா திருவாவினங்குடிப் பெருமாளே.

இவ்வாறு அருள்பெறவேண்டுகிறார். திருப்பழனிப் பெருமாளைப் புகழுங்கால், மனக்கவலை ஏதுமின்றி உனக்கடிமையே புரிந்து மயக்கமற வேதாகமப்பொருள் நாடி உனது அருள்பெற குருவாய் வந்து அருள்தர வேண்டுகிறார். இவ்வாறு முருகனைப் பலரும் பரமகுருவாகவே வழிபடுகின்றவர். அருணகிரிநாதர் தனது கந்தரநுபூதி பாடலில் குருபுங்கவனே எனப்போற்றுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முருகன் குமரன் குஹன் என்று மொழிந்து
துருகும் செயல்தந்துணர் வென்றருள்வாய்
பொருபுங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே. (கந்தரநுபூதி)

தேவகுரு வியாழபகவான் (பிருஹஸ்பதி)

உலகவழக்கில் குரு என்றாலே, நவகிரஹங்களில் ஒருவரான வியாழபகவானாகிய தேவகுருவே நினைவுக்கு வருவார். அந்த அளவிற்கு குரு என்ற சொல்லுக்கு இலக்கணமாய், இந்திரன்முதலான எண்ணிலா தேவர்குலத்திற்கு வழிகாட்டிடும் சுராசர்யராய் விளங்குபவர் குரு. இவர் பிரம்மதேவனின் அம்சமாக விளங்கி ஸகல வேதாகமசாஸ்த்திர பண்டிதராக, முற்றிலும் சுபகிரஹ பதவியில் அருள் தரும் கிரஹமூர்த்தி. இவர் சிறந்த ஞானியாகவும் சுபங்கரராகவும், தனது அருட்பார்வையாலேயே அடியவர்களின் தோஷங்களைப் போக்கி அருள்பவர். ஜோதிடர்கள் இதனை, குருபார்க்க கோடிதோஷ நிவிருத்தி என்பர். தேவர்களின் குருவான இவர் மூவுலகிற்கும் குருவாகவும், சிவனுக்குபக்தராகவும், தாரகாசூரனை வதம் செய்திடவேண்டி திருச்செந்தூரில் முருகனை வழிபட்டவரும் தேவரிடத்தில் குருவாயூரில் கிருஷ்ணனை வழிபட்டவர். இவர் புத்திரனை அளித்திடும் புத்ரகாரகர் எனவே இவருக்கு ஜீவன் என்றும் சிறப்புப்பெயர் உண்டு.

தேவகுரு வழிபாடு. (குரு கிரஹம்)

இவரை வழிபடுவதாலேயே யாவருக்கும் வாழ்வில் சுபமேற்படும்.

தேவானாம் ரிஷீணாம்ச குரும் காஞ்சன ஸந்நிபம் !
புத்திபூதம் த்ரிலோகேசம் தம் நமாமி பிருஹஸ்பதிம் !!

என்று கூறி யாவரும் துதித்துப் பயன்எய்தலாம். மேலும் இவரது கிரஹபீடைஅகன்றிட பீடாஹரஸ்துதியால் வழிபட்டு உய்யலாம்.

தேவ மந்த்ரீ விசாலாக்ஷஸ் ஸதா லோகஹிதே ரத:!
அநேக சிஷ்ய ஸம்பூர்ண: பீடாம் ஹரது மே குரு:!!

பொன்னாபரணம், மஞ்சள்பட்டாடை, புஷ்பராகரத்னம், கடலைதான்யம்,

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
இவற்றின் தானங்களால், இவரது போராதகாலத் தீமையிலிருந்து விலக்கு பெறலாம்.

அமரர் அமைச்ச அகலவிழியோய் –
ஆரிய குருவே நலம் தருவோய்
தமரென சீடர் புடை சூழும்
தகவுடைய குருவே துயர் தீர்ப்பாய்.

என்று செந்தமிழ்பாடலால் துதித்து வேண்டி, துயர்நீக்கிடலாம். குருஎன்பவர், வித்யாகுரு, தீட்சாகுரு, ஞானகுரு, லோககுரு, எனப் பலவகைப்படுவர். வியாழக்கிரஹத்தின் தோஷமுள்ளவர்கள் வியாழக் கிழமைகளில் விரதம்அனுஷ்டித்து, குருவை மல்லிகைப்பூவால் வழிபடுவது, மேன்மையளிக்கும். வியாழக்கிழமையில் சிவாலய தக்ஷிணாமூர்த்தி வழிபாடு துயர்தீர்க்கும். தக்ஷிணாமூர்த்திக்கு பசுநெய் தாமரை நூல்திரி விளக்கிட்டு வழிபட துன்பம் நீங்கும். குருகிரஹதோஷம் குறையும் என்று அறியலாம்.

ஸம்ப்ரதாய வித்யாகுருமார்கள் (துறைசார்குருக்கள்)

சைவம், வைணவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம், ஸௌரம் என்று அறுவகை சமயங்கள் நமது தேசத்தில் இந்துமதம் எனப்படுகிறது. இவைகள் அனைத்திலும், பரம்பொருளை வழிபடும் நெறிமுறைகளை எடுத்துக்கூறி பத்ததிநூல்களை இயற்றி அளித்தும், விளக்கவி ரிவுரைகளை அளித்தும் பல ஆசார்யர்கள் வழிகாட்டியுள்ளனர். பலவகை வித்தைகளை மாணாக்கர்களுக்கு கற்பிப்பவர் வித்யாகுரு எனப்படுவர். மாணாக்கரின் மனோபக்தி பக்குவ நிலைக்கேற்ப தீக்ஷையில் பஞ்சாட்சரம், ஷடாட்சரம், பிரம்மோபதேசம் முதலிய மந்திரவகையினை போதிப்பவர் தீட்சாகுரு எனப்படுவார்கள். என்றென்றும் அழியாத மாறாத பேரின்பப் பெறுவாழ்வைப் பற்றியதான மெய்பொருள் ஞானத்தினை, நல்வழியாகிய சமயநெறியை போதிப்பவர்,

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

லோக குரு, ஸமயாசாரப் பிரகடனர் எனும் பெயர்களாலும் எல்லாசமயங்களிலும் கூறப்படும் பரம்பொருளை, உபாசித்து அருள்பெற வழிவழியாய் தொடர்ந்து வழிகாட்டிடும் ஆசார்யர்களை வழிபட்டு அவர்களின் அனுமதியுடன் செய்யும் பூசையே பயன்தரும். ஆதலால் சமயங்களுக்கு தனித்தனியே ஸந்தானகுருக்களும், பத்ததி அருளிய, முன்னால்வழிபட்டு பயனடைந்த ஸம்ப்ரதாயகுருக்களும், தேவ ஸித்த மானுஷ வகைகளில் மூவகையிலுமுள்ள குருமண்டலபூசை கூறப்பட்டுள்ளதால், சம்ப்ரதாயகுருமார்களை இவ்வகையில் சைவசித்தாந்தநெறியில் உள்ள பலசம்பிரதாய குருக்களை, அறியமுடிகிறது.

சிவம் சக்திம் கணாதீசம் குஹம் வாகீச்வரீம் க்ரமாத்!
தூர்வாஸஸம் அஹம் வந்தே பைங்களாத்யாம்ச தேசிகான் !!

ருத்ரமூர்த்தியின்அம்சமாக தேவரிஷியாக விளங்கிய துர்வாச மஹரிஷி முதலாகவே சைவசம்ப்ரதாய குருமூர்த்திகள் இவ்வுலகில் பூசிக்கப்படுவர். அசுத்தபுவனங்களுக்கு பிருத்வீ தத்துவத்திலுள்ள மண்ணுலக ஆன்மாக்களுக்கு மகேசன்அருளால் அருளாட்சிசெய்யும் ஸ்ரீகண்டருத்ரமூர்த்தியே குருமூர்த்தி ஆவார். மேலும் பாசுபத சைவசம்ப்ரதாய குருமார்களும் கூறப்படுவார்கள். **துர்வாஸர் கௌசிகர், பிரம்மா, மார்க்கண்டேயர், தேவேந்திரன், பாணன், ஹரி, சக்திரஷி ததீசிரிஷி, ராமர்கள் மூவர், கண்வர், அத்ரி, சுக்ரன், குரு கௌதமர், முதலானோர் சைவகுருமார்களாகக் கூறப்பட்டு போற்றப் படுகின்றனர்.**

துர்வாஸ கௌசிக விரிஞ்சி மிருகண்டுபுத்ர
தேவேந்திர பாண ஹரி சக்தி ததீசி ராமான்
கண்வாத்ரி பார்க்கவ பிருஹஸ்பதி கௌதமாதீன்
புண்யான் இமான் பரம பாசுபதான் நமாமி. (சைவபத்ததி)

குரூன் பராபரான் ஸர்வான் குருவம்ச க்ரமாகதான்!
அஸ்மத் ஆசார்ய பர்யந்தான் வந்தே தேசிக புங்கவான்!!

என்றுகூறி வம்சகுருக்களை வழிபடுவது சைவசமய மரபு நெறியாம். காமிகாகமம் முதலான சித்தாந்தவகையிலான இருபத்தெட்டு மூலாகமங்களின் செய்முறைகளின்படி நித்ய, நைமித்திக, காம்ய மூவகை வழிபாட்டுக் கிரியைகளைத் தொகுத்து வழிநூல்களைத் தந்த சைவாகமபத்ததி குருக்கள் பதினெட்டு ஆசார்யர்கள். அவர்கள் 1. துர்வாஸர் 2. பிங்களர், 3. உக்ரஜ்யோதி, 4. சுபோதகர், 5. ஸ்ரீகண்டர், 6. விஷ்ணுகண்டர், 7. வித்யாகண்டர், 8. ராமகண்டர்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
9. ஞானசிவர், 10. ஞானசங்கரர், 11. சோமசம்பு, 12. பிரம்மசம்பு, 13. திரிலோசனசிவர், 14. அகோரசிவர், 15. ப்ராஸாதசிவர் 16. ராமநாதசிவர் 17. ஈசானசிவர் 18. வாருணசிவர் ஆகிய இவர்கள் பத்ததி ஆசாரியர்கள் இவர்களை சித்தாந்த மார்கதர்சிகளாக, வழிகாட்டி வம்சகுருவாக வழிபடுவதுமுறை.

துர்வாஸாப் பிங்களச் சைவ உத்ரஜ்யோதிஸ் ஸுபோதக:!
ஸ்ரீகண்டோ விஷ்ணுகண்டஸ் ச வித்யாகண்டஸ் ததைவ ச!
ராமகண்டோ ஞானசிவோ ஞானசங்கர ஏவச!
ஸோமசம்புர் பிரம்மசம்புர் திரிலோசனசிவஸ் ததா!
அகோரசிவ ஏவாத ப்ராஸாதசிவ ஏவச!
ராமநாதசிவஸ் சைவ ஈசானசிவ ஏவச!
வாருணாக்ய சிவஸ் சைவ(அ)ஷ்டாதசா சார்யபுங்கவா:!
ஏதைர் திவ்யைச் சிவாசார்யைர் பத்ததிப் பரிபாஷிதா!
தேப்யோ நித்யம் நமோ திவ்ய தேசிகேந்த்ரேப்ய ஏவச!
ஸித்தாந்த மார்கதர்சிப்யோ ஆசார்யேப்யோ(அ)ஸ்து மே நதி:!!

மேலும் பல சிவாசார்யர்களும் சைவாகம பத்ததியை எழுதி அளித்து வழிகாட்டியாக விளங்கியுள்ளனர். அத்தகைய ஸம்பிரதாய முறையை நமக்குஅளித்த குருக்களை வழிபடவும்.

சைவஸந்தான குருக்கள் (ஸந்தானாசாரியர்கள் நால்வர்)

சைவசித்தாந்த சாஸ்திரங்களை அருளிச்செய்தவர்கள் சந்தானா சாரியர்கள் எனப்படுவர். ஸந்தானம் என்ற சொல்லுக்கு பரம்பரை வழிவழி என்பது பொருள். இந்த பரம்பரை சிவசம்பந்தம் உள்ளதால் சைவபரம்பரை எனப்படும். இந்த மரபுநெறி கயிலாயத்திலிருந்து ஏழு அண்டத்துக்கு, அப்பாலுள்ள சிவலோகநாதரான சிவபெருமான் முதலில் 1. நந்திதேவருக்குச் சிவஞானபோதத்தை உபதேசித்தார். 2. பிறகு இவர் (நந்திதேவர்) சனத்குமாரருக்கு உபதேசம் செய்தார். 3. இவர் சத்தியஞான தரிசினிகளுக்கு உபதேசித்தார். 4. இவர் பரஞ்சோதியாருக்கு உபதேசித்தார். இந்த நான்கும், அகச்சந்தானம் என்றழைக்கப்படும். இது



Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
கயிலாயத்திலுள்ளதால் இப்பெயர் உடையதாயிற்று என்று அறியவும்.

அடுத்தநிலையில்,

பரஞ்சோதியார் நிலவுலகத்திலுள்ள 1. மெய்கண்டதேவருக்கும். இவர் 2. அருள்நந்திசிவாசாரயருக்கும், இவர் 3, மறைஞான சம்பந்தருக்கும் இவர் 4. உமாபதி சிவாசாரியருக்கும் ஞானோபதேசம் செய்து, திருமடங்களைஅமைத்து சைவபரம்பரையை வளர்த்தார்கள். இது நிலவுலகத்திலே தொடர்பு ஏற்பட்டதால் புறச்சந்தானம் எனப்படும். இவர்கள் அருளிச்செய்த பதிநான்கு சித்தாந்த சாத்திரங்களும் இலக்கணம் ஆகும். சமயாசாரியார் முதலானோர் அருளிய சைவத்திருமுறைகள் பன்னிரண்டும் இலக்கியம் எனப்படுபவர் ஆகும். இவைகளுள் தேவாரம், திருவாசகத்தை அருளிச்செய்தவர்கள் சைவசமயாசாரியர் எனப்படுவர். இவர்கள் 1. திருஞானசம்பந்தர் 2. திருநாவுக்கரசர். 3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் 4. மாணிக்கவாசகர் எனப்படுவர். இவர்கள் இவ்வருள் நூல்களைக் தமிழிலே தோத்திர வடிவமாக அருளிச்செய்து சைவ சித்தாந்த ஞானத்தை நிலைநிறுத்தினார்கள். அவ்வாறே சந்தானா சாரியர்களும் தங்கள் அருள்நூல்களைத் தமிழிலே சாத்திரவடிவமாக அருளிச்செய்து, சைவசித்தாந்தஞானத்தை தமிழில் எடுத்துரைத்து நிலைநிறுத்தினார்கள். குரு லிங்க ஜங்கமம் என மூவகைவழிபாட்டினுள் முதன்மை பெற்றுவிளங்குவது குருவழிபடே ஆகும். அத்தகையப் பெருமைமிக்க குருநாதர்களை வழிபடுவதற்கு முன்னதாக அவர்களது வரலாற்றை அறிந்திருத்தல் போற்றிடத்தேவையாகிறது. சந்தானம் என்றால் பரம்பரை எனப்பொருள். ஆசாரியார் என்ற சொல்லுக்கு ஆசரித்தல் = நடத்திக் காட்டுதல் என்பதாகப் பொருள்பட, அதாவது தாம்சொல்வதுபோலவே எவர் நடந்தும்காட்டுகிறாரோ அவரே ஆசாரியர் எனப்படுவர். மேலும் சந்தானம் என்பதற்கு பிள்ளைக்கும் தந்தைக்கும் தொடர்பு உள்ளதுபோல உபதேசமந்திரத்தால் தொடர்ந்து வழிவழியாக குருவாயுள்ளவர் என்றும், ஸந்தானம் தொடர்புகொண்டு விளங்குவது என்பதுபொருள். ஆதலால் முதலில் சந்தானாசாரியர்கள் நால்வரின் வரலாற்றை இனி சுருக்கமாகக் காண்போம்.

ஸந்தானாசாரியார் வரலாறு

இப்படியாக நமக்கு சித்தாந்த ஞானத்தை உபதேசித்தவர்கள் இருவகைப்படுவர். ஒன்று அகச்சந்தானம் மற்றது புறச்சந்தானம் உமாபதிசிவாசாரியாருக்குப் பின்பு, நமசிவாயதேவர் திருவாவடு துறையில் ஒரு ஆதீனம்நிறுவிப் பரம்பரையாகச் சிவஞானத்தைக் கட்டிக்காத்து வருகின்றனர். இதுபோன்ற மற்றொரு மடமான தருமபுர

Digitization by Hindu Heritage Foundation of America. HHF (USA)

ஆதனமும் தோன்றி திருக்கயிலாயபரம்பரையில் வழிவழியாக ஞானோபதேசஞ்செய்து சைவசித்தாந்தத்தைக் காப்பாற்றி வருகின்றது. இவ்வாறே பிறகு சமயாசாரியர்களின் சீடர்கள் பலரும் மதுரை, திருநெல்வேலி, குன்றக்குடி முதலான பலதலங்களில் மடாலயங்களை நிறுவி காத்துவந்தனர். இவ்வாறு குருசந்தானம் வளர்ந்துவந்தவகைமுறை அறியத்தக்கது. மெய்கண்டதேவரின் நாற்பத்தொன்பது மாணவர்களின் வாயிலாகத்தான் தமிழ்நாட்டில் சைவமடங்கள் தோன்றின என்று அறியப்படுகிறது. புறச்சந்தானா சாரியர்களின் வரலாற்றை முதற்கண் நாம் தெரிந்து கொண்டு பின்பு அவர்கள் அருளிச்செய்த சித்தாந்தசாத்திரங்களைக் கற்றுத்தெளிதல் சைவமரபு. எனவே முதல் சந்தானாசாரியரான மெய்கண்டதேவ நாயனாரது வரலாற்றை சுருக்கமாகக் காண்போம்.

1. மெய்கண்டார் வரலாறு

தமிழ்நாட்டில் தொண்டைநாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் நடுவே உள்ளது திருமுனைப்பாடிநாடு அல்லது நடுநாடு என்பதாகும். (இது தென்ஆற்காடு மாவட்டம் எனலாம்.) இந்த நாட்டில்தான் சைவசமயாசாரியர்கள் நால்வருள் திருநாவுக்கரசுநாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் தோன்றியருளினார்கள். இந்நாட்டில் திருப்பெண்ணாகடம் என்ற ஊரில் சைவவேளாளர் குலத்தில் அச்சுதகளப்பாளர் என்று ஒரு வேளாளர் வாழ்ந்துவந்தார். பண்டைத் தமிழரது செந்நெறிக்கொள்கையாகிய சித்தாந்த ஞானத்தை உலகில் நிலைநாட்டவந்த பலபெரியவர்களும் இவ்வேளாளர் குலத்திலேதான் தோன்றினார்கள். தில்லை மூவாயிரவருள் ஒருவரும், சந்தானாசாரியருள் ஒருவருமான உமாபதிசிவாசாரியர் இவ்வேளாளர் குலப்பெருமையைப் பாடியுள்ளார். அந்த அச்சுதகளப்பாளர்க்குப் பலநாள் பிள்ளைப்பேறில்லாதிருந்தது. இதற்காகத் தங்கள் குலகுருவாய் விளங்கிய ஸ்ரீஅருள்நந்திசிவாசாரியரிடம் விண்ணப்பித்தனர் அவரும் திருமுறையைப் பூசித்து அதில் தயிறு சாத்திப் பார்த்தனர். அதில் திருஞானசம்பந்தர் அருளியதான, பேயடையா பிரிவெய்து எனத்துவங்கும் திருவெண்காட்டுத் தேவாரத் திருப்பாட்டு உதயமாயிற்று. இப்பாட்டில் சீகாழிக்கு அண்மையிலுள்ள திருவெண்காட்டில் உள்ள முக்குளத்தில் நீராடுபவர்க்குப்

Digitized by Hindi Sevaka Foundation of America. HHFA(USA)

பிள்ளைப்பேறுடன் எண்ணிய யாவும் கைவரும் என்று அறுதியிட்டுக் கூறியிருத்தலின் ஆசிரியர் அச்சுதகளப்பாளரை அத்தலத்திற்குச்சென்று முக்குளநீரில் மூழ்கிப் பெருமானை விதிப்படி வழிபட்டுவருமாறு கட்டளையிட்டார். தன் மனைவியுடன் அச்சுதகளப்பாளரும் அவ்வாறே அங்குச் சென்று பெருமானை வழிபட்டு முக்குக்குளத்தில் நீராடித்தங்கினார். அங்குத் தங்கியிருந்தபோது சிவபெருமானும் அவர் கனவில் தோன்றி ஒரு நன்மகவினை யருள்வோம் என்றனர். அவ்வாறே ஓராண்டுகாலம் செல்ல அம்மையாரும் இவ்வுலக உய்யுமாறு ஒரு ஆண்குழந்தையைப் பெற்றுதவினார்கள். குழந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகள் செய்யப்பெற்றன. குழந்தைக்குச் சுவேதவனப்பெருமான் என்று நாமகரணஞ்செய்து வளர்த்தனர். மூன்று வயது நிரம்பியது. சிலநாட்கள் கழித்து இக்குழந்தையை இவர் மாமனார் திருவெண்ணெய்நல்லூருக்கு அழைத்துப்போய் வளர்த்துவந்தார். இக்குழந்தை முற்பிறவியிலேயே சரியை கிரியை யோகம் முதலியன முடித்துச் சிவஞானம் அடைதற்குரிய பெருந்தவத்தினதாயிருத்தலின் இரண்டு வயதளவிலேயே சீவன்முக்தர் நிலையை எய்தியது. இதனைத் திருவள்ளுவர் திருக்குறள் வலியுறுத்தும்.

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்கு
எழுமையு மேமாப் புடைத்து. (குறள்)

தற்காலத்திலும் இத்தகைய சிறுவயதிலேயுள்ள பலமேதைகளைக் காண்கிறோம். இவர் திருவெண்ணெய்நல்லூரில் வாழ்ந்து வரும்போது, அகச்சந்தானாசாரியரது ஞானப்புதல்வராகிய சத்தியஞான தரி சினிகளிடம் உபதேசம்பெற்ற பரஞ்சோதி முனிவரானவர் அகத்தியமுனிவரைச் சந்திக்கப் பொதியமலை நோக்கி ஆகாயவழியாகச் செல்லும்போது, இவர் விமானம் திருவெண்ணெய்நல்லூருக்கு நேராகவந்தவுடன் நின்றுவிட்டது. இதன் குறிப்பை உணர்ந்த பரஞ் சோதியார் சுவேதவனப்பெருமாளைக் கண்டு அவருக்கு மெய்யுணர்வு அளித்துத் தனது ஆசிரியரின் திருநாமமான சத்தியஞானதரிசினிகள் என்றதைத் தமிழாக்கி இவருக்கு மெய்கண்டார் எனப்பெயரிட்டு அருளினர். சிவஞானபோதம் என்னும் நூலை உபதேசித்தார் என்பது வரலாறு. பின்பு மெய்கண்டார் கலைஞானம் அனைத்தையும் திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியுள்ள பொல்லாப்பிள்ளையாரிடம் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தனர். பின் இச்சிவஞானபோத நூலை இவர் தமது நாற்பத்தொன்பது மாணவர்க்கு உபதேசித்தார். இவர்கள் தமிழ்நாட்டில் பலமடங்களை அமைத்தனர். இவரது முதல் மாணவர் தமது தந்தையாருக்குக் குலகுருவாய் விளங்கிய அருள்நந்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
சிவாசாரியசுவாமிகள், இவர் பல மாணவர்களுக்கு உண்மைப்பொருள் உணர்த்திய பின்னர், நனவிலேயே அதீதத்தைப் புரிபவராய் இடையறாது சமாதிநிலையிலிருந்து ஐப்பசிமாதம் சுவாதி நன்னாளில் இறைவன் திருவடிகளில் இரண்டறக்கலந்து அருளினார்.

2 அருணந்தி சிவாசாரியர் வரலாறு

இவர் நடுநாட்டிலுள்ள திருத்துறையூர் என்னும் ஊரில் இறைவனைத் தொட்டுப்பூசிக்கும் பாக்கியமுடைய ஆதிசைவகுல பரம்பரையில் தோன்றினார். மெய்கண்டதேவரின் தந்தையாராகிய அச்சுதகளப்பாளருக்கு குலகுருவாகவும், மெய்கண்டதேவர் பிறப்பதற்குக் காரணமாக இருந்தவர் என்றும் கூறுவர். இவர் எல்லாச் சிவாகமங்களையும் நன்கு கற்றுத்தேர்ந்த வராதலால் இவர் சகலாகமபண்டிதர் என்று அழைக்கப்பட்டுவந்தார். இவர் எங்கு சென்றாலும் இவருடனே எல்லா ஆகம நூல்களும் வண்டியில் பின்னே கொண்டுசெல்லப்படுமாம். இதுவன்றிச் சைவத்திருமுறைகள் பன்னிரண்டினையும் நன்கு ஆராய்ந்து தெளிந்தவர். இவர் சரியை கிரியை யோகம் இவற்றில் தலைசிறந்தவரான தமது மாணவராகிய அச்சுதகளப்பாளரின் அருள்ஞானப் புதல்வராகிய மெய்கண்டாரிடம் ஞானோபதேசம் பெறும்பான்மையுடைய வராயிருந்தார். மெய்கண்டார் குழந்தையாயிருந்தும் மாணவர் பலருக்கும் ஞானநூலைக் கற்பிக்கின்றார் என்பதைச் சிவாசாரியர் கேள்விப்பட்டு ஆச்சரியப்பட்டுச் சிலதூதரைத் திருவெண்ணெய்நல்லூருக்கு முன்அனுப்பிப் பின்தான் தன் பரிவாரங்களோடும் விருதுகளோடும் புறப்பட்டுச்சென்றார். திருவெண்ணெய்நல்லூரில் உள்ள வேளாளர் யாவரும் தங்கள் வீடுகளையும் தெருக்களையும் அலங்கரித்துப் பூரணகும்பங்களுடன் ஆசாரியசுவாமிகளை வரவேற்றனர். மெய்கண்டதேவர் மட்டும் தம் இருக்கையிலேயே அமர்ந்திருந்தார். அதைக் கண்டசிவாசாரியர் மெய்கண்டதேவரிடம் நேரேசென்று, அவர் தம் மாணவர்க்கு ஆணவமலத்தின் இயல்பினை எடுத்துச்சொல்வதைக் கேட்டு, அவ்வருள் ஞானச்செம்மலை நோக்கி செருக்கும் சீற்றமும் உடையவராய் **ஆணவசொரூபமாவதென்னை?** என்று அதிர்ச்சியோடு கேட்டார். உடனே மெய்கண்டதேவர் இன்முகத்தோடு அருணந்தி சிவாசாரியரை நேர்நோக்கித் தமது விரலால் சுட்டிக்காட்டி, அவர் தான் நின்றநிலையில்

Digitization by Hindu-Heritage Foundation of America, HHFA(USA).

ஆணவவடிவத்தை விளக்கினார் என்பதைக் குறிப்பித்தருளினார். அந்தஞானாசிரியர் அருளாளி நோக்கால் மலவிருள்அகலப்பெற்று உண்மையை உணர்ந்து அவர்களது திருவடிகளில் தாழ்ந்து இறைஞ்சி ஞானம் வேண்டிப்பெற்று அவரது முதல் மாணவரானார்.

இவர் தாம் இயற்றிய சிவஞானசித்தியார் என்னும் நூல் பாயிரத்துள் தம் ஆசிரியரைப் பின்வருமாறு பாராட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. அப்பாடல் இதுவேயாம்.

என்னை இப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னை வைத் தருளினாலே தாளிணை தலைமேற் சூட்டு
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண்டானூல்
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றாம்.

இவர் தம் மாணவரான மறைஞானசம்பந்தருக்கு ஞானோபதேசஞ் செய்து ஒரு புரட்டாசிமாதம் பூரநன்னாளன்று சிவபெருமான் திருவடிநிழலில் இரண்டறக்கலந்தருளினார்.

3. மறைஞானசம்பந்தர் வரலாறு

இவரும் நடுநாட்டிலுள்ள திருப்பெண்ணாகடத்தில் தோன்றியவர், பராசரமுனிவர் பரம்பரையில் தோன்றினவர். மறைகள் அனைத்தையும் கற்றுத் தெளிந்தமையால் மறைஞான சம்பந்தர் எனஅழைக்கப்பட்டார். இவர் தலைசிறந்த வேதியர் அந்தணர் தலைவராக விளங்கினார். இவர் அக்காலத்து வாழ்ந்து விளங்கிய அருள் நந்திசிவாசாரியசுவாமி களிடம் சென்று அடிசேர் ஞானம் பெற்றுத் தில்லையில் (சிதம்பரத்தில்) ஞானமார்க்கபூஜை இயற்றிக்கொண்டு இருந்தர். அப்பொழுது அங்கு விளங்கிய ஸ்ரீ உமாபதி சிவாசாரியசுவாமிகளது பக்குவநிலையைக்கண்டு அவருக்குச் சித்தாந்தஞானத்தை உணர்த்தினார். சிதம்பரத்திற்கு வடமேற்கிலுள்ள திருக்கஞ் சேரியில் பலமாணவர்களுக்கு ஞானநூல் போதித்துக் கொண்டிருந்து ஆவணி மாதம் உத்தரநன்னாளில் சிவபெருமான் திருவடிநிழலில் இரண்டறக்கலந்தருளினார்.



Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. உமாபதிசிவாசாரியசுவாமிகள் வரலாறு

சிதம்பரம் எனவழங்கும் தில்லைப்பதியில் நடராஜப்பெருமானைப் பூசிக்கும்பேறுபெற்று தில்லைமூவாயிரவர் எனப்பெறும் தீட்சிதர் பரம்பரையில் தோன்றியவர் ஸ்ரீஉமாபதிசிவாசாரிய சுவாமிகள் என்பவர். தில்லை மூவாயிரவர்களுக்குள் இவர் ஒருவரே சித்தாந்தஞானத்தை உலகோருக்கு விளக்கினோராவர். இவர் சகல வேதஆகம சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்து நல்ல ஒழுக்கம் உடையவராக விளங்கினார். திருவருள்பதிதற்கு உரியபருவம் வாய்ந்திருந்தார். இவர் ஒருநாள் நடராஜப்பெருமானுக்கு வழிபாடு முடித்துத் தமது வீட்டிற்குத் திரும்பும்போது வழக்கம்போலத் தமக்குரிய விருதுகளோடு பல்லக்கிலே சென்றார். அங்ஙனம் செல்லும்போது வீதியில் ஒருதிண்ணையில் மறைஞானசம்பந்த சிவாசாரியர் தமது மாணவருக்குஞான உபதேசஞ் செய்து கொண்டிருந்தார். இவர் தம் மாணவரை நோக்கி பட்ட கட்டையிற் பகல் குருடு ஏகுதல் பாரீர் என்றார். இச்சொற்களைக் கேட்ட உமாபதி சிவாசாரியசுவாமிகள் உடனே பல்லக்கிலிருந்து கீழேஇறங்கி, மறைஞானசம்பந்தர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அவர் சொன்ன சொற்களுக்குப் பொருள்கேட்டார். (பட்டகட்டை என்றது பல்லக்கு, பகற்குருடு என்றது பகலில் உபசாரமாக விருதாக விளக்கு எடுத்துச்செல்வது) இப்பொருளைத் தெரிந்துகொண்டதும், சிவஞானத்தையே விரும்பிய நமது சுவாமிகள் அவற்றையெல்லாம் உதறிவிட்டு அவரையே தமது ஆசாரியராகக் கொண்டார்.இவர் பக்குவத்தை உணரும்பொருட்டு ஒருநாள் மறைஞானசம்பந்தர் கைக்கோளர் தெருவிற்குச் சென்று பாவிற்செலுத்திய (நூலின்மேலிட்ட) கூழின் மிச்சத்தை விடாய் தணித்தற்பொருட்டு வாங்கி உண்டார். அப்பொழுது அவர் புறங்கையில் ஒழுகிய மிச்சத்தை உமாபதி சிவம் ஏந்திப் பருகினார். உடனே, மறைஞானசம்பந்தர் அவருக்கு ஞானோபதேசஞ்செய்து சிவஞானப்பொருள் உரைத்தனர். இவரது பக்குவத்தை உணராத ஏனைய தில்லை மூவாயிரவர்கள், இவர் நடராஜப்பெருமானுக்குப் பூசை செய்யத்தகுதியற்றவர் என்று கூறி இகழ்ந்தனர். ஆதலினால் அவர் சிதம்பரத்திற்குக் கிழக்கேயுள்ள கொற்றவன்குடி என்னும் ஊரிலே ஒருமடம் அமைத்து அங்கே சிவபெருமானை விதிப்படி வழிபட்டுவந்தார். நடராஜப்பெருமானைப் பூசிக்கும் முறைநாள் இவருக்குவந்தது. ஏனையோர் இவரைத்

Digitized by Siva Siva Heritage Foundation of America. HHFA(USA)
தடுத்துவிட்டார்கள். இவரும் மனம் வருந்தித் தம்மடத்தில் எழுந்தருளி யிருந்தார். தீட்சிதர்கள் சிற்சபைக்குச் சென்று பார்த்தபோது பேடகத்தில் திருவடிவம் காணவில்லை. அனைவரும் நடுங்கினர். அப்பொழுது வானில் ஒரு ஒலி எழுந்தது. நம்மை பூசையாற்றுந் தகுதியுடையவன் உமாபதியாதலால் அவன்பால் அமர்ந்தோம் என்பது. உடனே தீட்சிதர்கள் அனைவரும் அவரிடம் சென்று மன்னிப்புக்கேட்டுக்கொண்டனர். பிறகு உமாபதிசிவமே அன்று பூசையை வழக்கம்போலச் செய்துமுடித்தார்.

பெத்தான்சாம்பான் என்னும் தீண்டாதகுலத்துதித்தவன் விறகுவெட்டிப் பிழைப்பவன். இவன் தீவிரமான பக்குவம் உடையவனாதலால் இவறுக்கு முத்திகொடுக்க எண்ணினார் நடேசப்பெருமான். இவர் அவன்கனவிலே தோன்றி உமாபதி சிவத்திற்குப் பணிவிடை செய்யுமாறு கட்டளையிட்டார் சிவன். (இதனால் தீட்சைதருமுன் சீடன் பணிவிடைசெய்வதை உணர்த்தியுள்ளார்.) அவனும் அவ்வாறே தினமும் அவர் மடத்திற்கு ஒருவிறகுசுமை போட்டுவந்தான். அதிகமழையினால் ஒருநாள் விறகுசுமை மடத்துக்கு வரவில்லை. திருவமுது சமைக்கத் காலம் தாழ்த்தது. உமாபதிசிவம் காரணம்கேட்கப் பெத்தான்சாம்பான் விறகு கொண்டுவரவில்லை என்றார்கள். சுவாமிகள் அவன் வந்தால் தனக்குத் தெரிவிக்கச் சொன்னார். அவ்வாறே மறுநாள் பெத்தான்சாம்பான் மடத்துக்கு வந்தான். நடராஜப்பெருமான் அவன் கையில் ஒருசீட்டைக் கொடுத்துவிட்டு மறைந்தார். இவன் வரவை உமாபதிசிவத்திற்கு மாணவர்கள் அறிவித்தார்கள். அவனும் அவரிடம் பெரியவர் கொடுத்த சீட்டைக்கொடுத்தான். உமாபதிசிவம் அச்சீட்டைப் பார்த்து அதனைத் தன்கண்களில் ஒற்றிக்கொண்டு நடராஜப்பெருமான் திருவருளை வியந்தனர். அந்தச் சீட்டிலிருந்த பாட்டு இதுவே.

அடியாற் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியாற் கெழுதிய கைச்சீட்டுப் – படியின்மிசைப்
பெத்தான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

உமாபதிசிவம் இப்பாட்டின் கருத்துப்படி பெத்தான்சாம்பானுக்கு ஞானதீக்கை செய்யத்தொடங்கினார். அவன் வீடு எய்தற்குரிய பக்குவமுடையவனாக இருந்தமையால் அப்போதே முக்தியடைந்தான். இவ்வுண்மையை உணராத அவன் மனைவியும் சுற்றத்தாரும் அரசனிடம் புகார் செய்தனர். அரசன் வேறொரு உதாரணத்தால் தீக்கையின் பெருமையினை உணர்த்துமாறு சுவாமிகளை

Digitized by Siddhanta eGangotri Gyaan Foundation and Sivaya Subramuniyaswami Heritage Trust (HHSAC)(USA)

வேண்டிக்கொண்டான். ஒவாமிகளும் அவனை சிவபெருமான் திருமஞ்சன நீரால் வளர்ந்த முள்ளிச்செடியைத் தம் அருட்பார்வையால் நோக்கவே அது எரிந்து அதன் ஆன்மாமேலே செல்வதை அனைவரும் கண்டு ஆச்சரியப்பட்டனர். ஒருநாள் சிதம்பரத்தில் திருவிழாவில் கொடியேற்றமுயன்றபோது அது ஏறவில்லை. ஆகாயவாணியின் மூலம் உமாபதி வந்தக்கால் கொடியேறும் என்று தெரியவந்தது. உடனே இவரும் நான்கு பாட்டுகள் கொண்ட கொடிக்கவி என்ற ஒரு சாத்திரத்தை அருளிச்செய்யக் கொடி தானாக ஏறியது. இப்படிப் பலகாலம் பலஅற்புதங்கள் இயற்றிக்கொண்டு தில்லையில் வாழ்ந்து உமாபதி சிவாசாரியசுவாமிகள் பின்வரும் எட்டு சாத்திரநூல்களை அருளிச்செய்தார். அவை 1. சிவப்ரகாசம், 2. உண்மைநெறிவிளக்கம், 3. நெஞ்சுவிடுதூது, 4 வினாவெண்பா, 5.திருவருட்பயன், 6. சங்கற்ப நிராகரணம், 7. போற்றிப்பஃறோடை, 8. கொடிக்கவி. என்பவை. இவையெட்டு நூல்களும் உமாபதி அஷ்டகம் எனப்படும். இவையன்றி 1.கோயிற்புராணம்,2சேக்கிழார்புராணம்,3.திருத்தொண்டர்புராணசாரம், 4. திருப்பதிகக்கோவை என்ற நூல்களையும், வடமொழியில் பௌஷ்கர ஆகமத்திற்கு ஒரு விரிவுரையும், சதரத்தினஸங்கிரஹம் என்ற முலசூத்திரத் தொகுப்புநூலையும், பலஉரை நூல்களையும் இயற்றி, ஒரு சித்திரைத் திங்கள் அந்த நன்னாளில் நடராஜப்பெருமான் திருவடிகளில் இரண்டறக் கலந்தருளினார்.

சைவசமய ஆசார்யர் நால்வர்

சைவசித்தாந்த சாஸ்திரங்களுக்கு இலக்கியமாக அமைந்த, தேவார திருவாசக ஆசிரியர்களான சைவசமயாசாரியர் நால்வருடைய வரலாறுகளையும் அவர்கள் அருளிச்செய்த தமிழ்மறை எனும் திருமுறைகளைப் பற்றியும் இனி காண்போம். சிவனை உயிர் வழிபட்டு அவனடிசேரும் வழியைக்காட்டுவது சமயம். இதனை நமக்கு உபதேசித்தும் நடந்தும்காட்டிய பெரியவர்கள் சைவசமயாசாரியர்கள் எனப்படுவர். இவர்கள் நால்வர். இவர்களை 1. திருஞானசம்பந்தர், 2. திருநாவுக்கரசர், 3. சுந்தரமூர்த்தி சுவாமிகள், 4. மாணிக்கவாசகப்பெருமான் என்பவர்கள். பரம்பொருளாகிய சிவபெருமானை உயிர்கள் வழிபடும் வழிகள் நான்கு சரியை, கிரியை, யோகம் ஞானம், என்பவை. இதனையே சிவஞானசித்தியார் நூலும் 1. சன்மார்க்கம், 2. சகமார்க்கம் 3. சற்புத்திரமார்க்கம், 4. தாஸமார்க்கம் என்று நான்குவகை வழிகளைக்கூறும்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

நால்வகை அருள்நெறிகள்

சிவபெருமானை உயிர்கள் வழிபடும் நால்வகை வழிகளை சிவஞான சித்தியார் எனும் நூலில் அருள்நந்திசிவாசாரியார் கூறியுள்ளார்.

சந்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாதமார்க்கம் என்னும் சங்கரனை யடையும்
நன்மார்க்கம் நாலவைதாம் ஞான யோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்
சன்மார்க்க முக்திகள்சா லோக்கியசா மீப்பிய
சாரூப்பிய சாயுச்சிய மென்றுசதுர் விதமா
முன்மார்க்க ஞானத்தால் எய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபத மென்பர்.

(சிவஞான்சித்தியார்)

இந்த நான்கு வழிகளை நமக்கு உபதேசித்து நடத்திக்காட்டு வதற்காகவேதான் ஆண்டவன் நான்கு சைவசமயாசாரியர்களைத் தமிழ்நாட்டில் தோற்றுவித்தார் போலும். இதனை வலியுறுத்துவது பின்வரும் பழமொழி. இது எல்லா மதத்தாரும் ஒப்புக்கொண்டு முடிவிற்குவந்த ஒரு அனுபவமுறை எனலாம். ஒருவரைஒருவர் பார்த்து நல்லவார்த்தைகள் சொல்லும்போது உலகவழக்கில் நாலுபேர் போனவழியில் நீயும் போ, வேறுவழி வேண்டாம் என்பர். இதனால் ஆண்டவனை அடைதற்குரிய வழிகள் இந்நான்கைத் தவிர வேறில்லை என்ற உண்மை தோன்றுகின்றதல்லவா? இதனால் நம் சைவசமயத்தின் மேன்மையும், சிவபெருமானின் பரத்வமும் விளங்கவில்லையா? இந்நான்கு வழிகளும் சித்தியாரில் நான்குசெய்யுள்களால் விளக்கிக் கூறப்பட்டுஉள்ளது.

1. தாஸமார்க்கம் (தொண்டுநெறி)

ஆண்டவனைத் தலைவன் என்றும், உயிர் தன்னை அடிமை என்றும் பாவித்து வழிபடும்நிலை. இதனைத்தான் திருநாவுக்கரசு சுவாமிகள் நடத்திக்காட்டினார். என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற கொள்கைகொண்டு, சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கோயில்களில்உள்ள அசுத்தங்களைத் திருஅலகு கொண்டு அப்புறப்படுத்திச் சாணத்தினால் மெழுகிப் பச்சரிசிமாவினால் கோலமிட்டு, நந்தவனங்கள் வைத்து, அவற்றிலுள்ள பூக்களைக்கொய்து மாலைகட்டி ஆண்டவனுக்குச் சாத்தர்செய்து, கோயில்களில் தூபமிட்டு, தீபம்ஏற்றி அடியார்களுக்குப் பணிவடை செய்து, அவன் புகழைத்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
துதிப்பாடல்கள் மூலம் ஒதிவழிபட்டு அவனருளைப் பெறுதலாம். இவர்வேண்டி இடபக்குறி சூலக்குறிகளைப் பெற்றஅடியார்.

2. புத்திர மார்க்கம். (பிள்ளைநெறி / மகவுநெறி)

ஆண்டவனைத் தந்தை என்றும், உயிர் தன்னை மகன் என்றும் கருதியபடி (எண்ணி) அன்புசெலுத்தி உறவுகொண்டு வழிபடும்நிலை. இதனைத்தான் திருஞானசம்பந்த சுவாமிகள் நடத்திக்காட்டினார். அதாவது மேற்சொன்ன சரியை தொண்டுகளுடன் தக்கஆசாரியரிடம் சிவனை எழுந்தருளச்செய்துகொண்டு நாளும் தவறாமல் சிவபூசை செய்த இதன்மூலம் ஆண்டவனருளைப்பெறுதல்.

3. சகமார்க்கம் (தோழமைநெறி) நட்புநெறி

யோகமார்க்கம், தோழமைநெறி, மைத்ரமார்க்கம் (ஸகா/மித்ரன்–நட்பு) எப்படிச் சொன்னாலும், ஒருவழியைத்தான் குறிக்கும். முன்னே சொன்ன சரியை, கிரியைத் தொண்டுகளையும் செய்துகொண்டு, தக்க ஆசாரியரிடம் உபதேசம் மூலம் யோகப்பயிற்சியைக் கற்றுக்கொண்டு, நம்முள்ளிருக்கும் ஆன்மாவைக் குண்டலினி சக்தியின் துணைக்கொண்டு, உடம்புக்குள் இருக்கும் ஆதாரத் தானங்களில் நிறுத்திஆங்காங்கு எழுந்தருளியுள்ள மூர்த்திகளைத் தரிசிக்கச் செய்து, கடைசியாக சிரசில் உள்ள உச்சிப்பள்ளத்தின் வழியாக ஆன்மாவை மேலே கிளப்பி, உச்சிக்குமேல் பன்னிரண்டு அங்குல தூரத்திலுள்ள கூத்தப்பெருமான் திருவடியில் சேர்த்தல். யோகம் என்ற சொல்லுக்கு ஒன்றுகூடுதல், ஜீவாத்மா பரமாத்மாவிடம் ஒன்றுசேர்தல் என்றுபொருள். இவ்வாறு இணைந்திருந்து பேரின்பம் அனுபவித்தலாம். இவ்வழியை நடத்திக்காட்டியவர் சுந்தரமூர்த்திசுவாமிகள். இவர் இல்லறத்திலேயே பர்யங்கயோக நெறியில் இறைவனோடு நட்புநெறியில் உரிமையோடு விண்ணப்பித்து பயனெய்தியபடி, நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச் சிவாயவே. எற்றான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை என்ற கொள்கையில் வாழ்ந்தார்.

4. சன்மார்க்கம் (ஞானமார்க்கம்)

இவ்வழிமுறையானது, மேலே சொன்ன சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றுடன் தொண்டுகளையும் செய்து, வேதாகமபுராண சாத்திரங்களை நன்கு ஒதியுணர்ந்து உலகவிவகாரங்களில் உழலாமல், சைவசாத்திரங்கள் பேசும் பதி, பசு, பாசம் எனும் முப்பொருளுண்மையை உணர்ந்து, தெளிவுபெற்று, இறைவனைத் தனது குருவாகக்கருதி,

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
உயிர்கள் தம்மை சிவனாகக்கருதி ஒழுகி அன்புசெலுத்தி, பரமபதியான சிவபெருமானைக் காட்டும் நன்மார்க்கத்தை நாடி, முத்திஒன்றையே இலக்காகக்கொண்டு அருள்நெறியாம் முத்தி நெறியில் வாழ்தல் என்பதாம். இவ்வழியில் வாழ்ந்து, பொருள் பதவிகளைத் துறந்து, குருவருளால் தன்னகத்தே பரஞ்சோதியைக்கண்டு, ஒன்று கலந்து வாழ்ந்து காட்டியவர் ஞானத்தேனாகிய திருவாசகம்பாடியருளிய மாணிக்கவாசக சுவாமிகள்.

அறிவோம் குரு வரலாற்றை
(சமயாசாரியர்கள் வரலாறு)

சைவர்கள் தங்கள் சமயத்தலைவர்கள் யார்? என்று அறிந்திருத்தல் வேண்டும். நமக்கு சமயாசாரியர் நால்வர் வரலாறு தெரியவில்லை என்றால், வெட்கித்தலைகுனிய வேண்டியதுதான். ஏன்? பிற மதத்தார்கள் தங்கள் ஆசார்யர்களின் வரலாறுகளை நன்கு கற்றுத்தெரிந்து கொண்டுள்ளார்கள். வைணவர்களும் தங்கள் மதத்தலைவர்கள் வரலாறுகளை நன்கு கற்றோ, கேட்டோ, தெரிந்துகொண்டுள்ளார்கள். ஆனால், நம்சைவர்கள் மட்டும் தங்கள் சமயத்தலைவர்கள் யார் என்பதுகூடத் தெரியாமல் வாழ்வது வருந்தத்தக்கது. இனியாகிலும் நாம் நம் ஆசாரியர்கள். வரலாறுகளைக் கற்றுத் தெரிந்துகொண்டு, அவர்கள் சமயநெறிக்கொள்கையில் பெற்ற இன்பதுன்பங்களை சீர்தூக்கிப்பார்த்தும், அவர்கள் தவப்பயனால் நிகழ்த்திக்காட்டிய அற்புதங்களையுப்போற்றிக்கொண்டும், அவர்கள் நடந்துகாட்டிய வழியில் நாமும்நடந்து, புலன்வழியில் தடுமாற்றமின்றி கலாசாரம் வழுவாதிருந்து அவர்கள் சேர்ந்தவிடத்தில் நாமும் சேர்ந்து பேரானந்தப் பெருவாழ்வினைப் பெற்று உய்வோமாக. இனி நால்வர் வரலாற்றை மிகச்சுருக்கமாகக் காணலாம்.

திருநாவுக்கரசு நாயனார்வரலாறு

தமிழ்நாட்டில் தென்ஆற்காடு இல்லாவில் நடுநாட்டில், திருமுனைப்பாடி என்ற நாட்டில், திருவாமூர் என்னும் ஊரில், வேளாளர் குலத்தில், குறுக்கையர்குடியில், புகழனார் என்பவர் இருந்தார். அவர் மாதினியார் என்பவருடன் வாழ்ந்துவந்தார். இவர்கள் இருவரும் சிவபக்தியில் ஈடுபட்டவர்கள். இவர்களுக்கு முதலில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குத் திலகவதி எனப் பெயர்இட்டு வளர்த்தனர். பிறகு சிலஆண்டுகள் கழித்து இத்தம்பதிகளுக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
மருணீக்கியார் என்னும் பிள்ளை பிறந்தது. இருவரும் நன்கு வளர்ந்தனர். சிறப்பாக கல்விகற்று நல்லொழுக்கத்துடன் வாழ்ந்தனர். திலகவதியாருக்கு வயது 12 ஆயிற்று. அக்காலத்து வழக்கப்படி அம்மையாருக்குத் திருமணம் செய்யஎண்ணிச்சேனையில் ஈடுபட்டிருந்த வேளாளர் குலத்தவரேயான கலிப்பகையார் என்பவரைத் தேர்ந்தெடுத்துத் திருமண உறுதிசெய்தனர் பெற்றோர். ஆனால் அவர் சேனையைச் சேர்ந்தவராயிருந்ததால் திடீர்என்று அரசன் ஏவலால் போருக்குச் செல்லவேண்டியதாயிற்று. சென்றார் போர்புரிந்தார், உயிர்நீத்தார்.இது இப்படியிருக்கத் திருவாமூரில் புகழனார் இறைவனடிசேர்ந்தார். மாதினியாரும் உயிர்துறந்தார்கள்.

கலிப்பகையார் இறந்தசெய்தி தெரியவந்தது. ஏற்கனவே, இளையவர்களான திலகவதியாரும், மருணீக்கியாரும், பெற்றோரை யிழந்து வருந்திக்கொண்டிருக்கும்போது, கலிப்பகையார் உயிர்நீத்தார் செய்தியைக்கேட்டதும் திலகவதியார் தமக்குப் பெற்றோர்களால் உறுதிசெய்யப்பட்ட கணவன் உயிர்நீத்ததால் தாமும்உயிர்துறக்க எண்ணினார். அப்போது மிகச் சிறியவராகவிருந்த மருணீக்கியர் வருந்தித் தமக்கை திருவடிகளில் வீழ்ந்துவணங்கித் தடுத்தார். தம்பியிருக்கவேண்டும் என்ற ஒரேஎண்ணத்தால் அம்மையார் தவக்கோலம் தாங்கித் திருவதிகையில் சிவாலயத்தில் திருத்தொண்டு செய்யத்தொடங்கினார்.

மருள்நீக்கியாரும் சகலநூல்களையும் படித்தும் உணர்ந்தும், பரமன் அருளாததால் சமணசமயம் சிறந்தது என்று முடிவுசெய்து, சைவத்தை விட்டுச் சமணம் சேர்ந்தார். இவர் தமது வாக்கு வல்லமையால் அச்சமயத்தைப் பிரச்சாரம்செய்து நன்குவளர்த்தார். இதனைக்கண்ட சமணர்கள் இவருக்குத் தருமசேனர் என்ற பட்டத்தைக்கொடுத்து மகிழ்ந்தனர்.

திலகவதியாரும் இச்செய்தியை அறிந்து வருந்தித், திருவதிகை வீரட்டானஞ்சென்றுசேர்ந்து, நந்தவனம்வைத்துப், பூக்கொய்து மாலைகள் கட்டிவிரட்டேச்வரப்பெருமானுக்கு சாத்தி மகிழ்ந்தார். சரியைத்தொண்டுகள் செய்துவந்தார். தம்பி மீண்டும் சைவசமயத்திற்கு வரவேண்டுமென்று திருவதிகை வீரட்டானத்து உள்ள சிவபெருமானை நாளும் வேண்டிக்கொண்டேயிருந்தார். பெருமானும் இவ்வம்மையார் வருத்தத்தைப் போக்கஎண்ணி மருள்நீக்கியாருக்குக் கொடுஞ் சூலைநோயை ஏவினார். அவரும் வருந்தித் துடித்தார். மந்திரம் மருந்து முதலியவற்றால் அது தீராததால் தமது தமக்கையிடம் (அக்காவிடம்) சேர்ந்து பிழைக்கலாம் என்று எண்ணித் திருவதிகை வந்துசேர்ந்தார்.

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
அம்மையாரிடம் தமது பின்னிக்குமாறு வேண்டிக்கொண்டார். அம்மையாரும் சிவபெருமான் திருவருளை நினைந்து திருநிறு கொடுத்துத் தரித்துக்கொள்ளச்செய்து, திருவதிகைவீரட்டான ஆலயத்திற்குள் அழைத்துச்சென்று பெருமானை வணங்கப்பணித்தார். அவரும் பணிந்து எழுந்தார். சூலைநோய் தீர்ந்தது. பதிகம்பாடும் அருளையும் பெற்றுப் பாடி வணங்கினார். இதனையறிந்த சமணர்கள் தங்கள் சமணசமயம் இனி அழிந்துவிடும் என்றெண்ணி அரசனிடம் விண்ணப்பித்து அவன்அனுமதியை பெற்று இவரைச் சுண்ணாம்புக் காளவாயில் வைத்து அடைத்தார்கள்.

சிவபெருமானிடமிருந்த உறுதிப்பாட்டினால், இவர் பிழைத்தார். இவருக்கு விஷமூட்டினார்கள் சிவனை நினைந்து உயிர்பிழைத்தார். பின்னர் பட்டத்துயானையையேவிவிட்டு இவரைக்கொல்ல முயற்சிசெய்தார்கள். அப்போதும் இவர் பரமனைப்பாடிப் பிழைத்தார். கடைசியாக இவரை ஒருகல்லோடு சேர்த்துக்கட்டிக் கடலில் இட்டனர். அப்போதும் பரமனைபாடி நமசிவாய்த் திருப்பதிகத்தால் வழிபட்டுக் கரையேறினார். இவ்வற்புதங்கள் உண்மையாக நிதழ்ந்தன என்பதற்குச் சான்றுகள் பல இன்றுமுள்ளன. சூலைநோய்தீர்ந்ததும் பரமனைப்பாடினபோது, ஆண்டவன் இவருக்கு வாகீசர் என்ற திருநாமத்தைச் சூட்டினார். அந்த தீக்ஷாநாமமே தமிழில் நாவுக்கரசர் என்று வழங்கப்படுகிறது. பின் இவர் அடியார் திருக்கூட்டத்துடன், பெருமான் எழுந்தருளியுள்ள பல தலங்கள் தோறும் சென்று, சிவபெருமானைத் தேவாரத் திருத்தாண்டக, நேரிசை, முதலிய பலவகைத் துதிப்பாடல்களால் துதித்து, வாழ்ந்துவந்தார். தில்லை சென்று நடராஜப்பெருமானை வணங்கிப் பல பதிகங்களை அருளிச் செய்தார். அக்காலத்தில் வாழ்ந்துவந்த திருஞானசம்பந்தரைச் சீர்காழியில் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தார். இருவரும் சேர்ந்து சிலதலங்களைத் தரிசித்தனர். திருநாவுக்கரசுநாயனார் இப்படித் தலயாத்திரை செய்துவந்தபோது திங்களூர் என்னும் ஊரில் உள்ள அப்பூதியடிகளாரைச் சந்தித்து வணங்கி, அவர் வீட்டில் உணவு கொள்ளும் சமயம் அப்பூதியாரின் மூத்தமகன் வாழைஇலை அறுக்கச் சென்றபோது பாம்புகடித்து இறந்தசெய்தி அறிந்து, பதிகம்பாடி அப்பிள்ளையை உயிர்பெற்று எழச்செய்தார். பின்பு, பலதலங்களைத் தரிசித்துவந்தார். மீண்டும் திருஞானசம்பந்தரை இவர் சந்திக்க நேர்ந்தது. இருவரும் திருவீழிமிழலைக்குச் சென்றனர். அக்காலம் மழையின்மையால் விளைவு குறைந்து மக்கள் பசியால்வாடி யிருந்தனர். இரு தலைவர்களும் இறைவனைவேண்டிப் படிக்காசு பெற்று அவற்றைமாற்றி உணவுப்பொருட்களை ஏராளமாக வாங்கிச்

Digitization by Hindu-Heritage Foundation of America, HHFA(USA)
சமைத்து அங்குள்ள மக்களுக்கு எல்லாம் இருபோதும் உணவளித்துப் பஞ்சம்தீர்த்தபிறகு, இருவரும் திருமறைக்காடு தலம் சேர்ந்தனர். அங்கு வேதம் பூசித்துச் சாத்திப்போன ஆலயக்கதவு மக்களால் திறக்கமுடியாததால் வேறொருவழிவகுத்துக்கொண்டு, மக்கள் சுவாமி தரிசனம் செய்துவந்தனர். திருஞானசம்பந்தர், அப்பர்சுவாமிகளைக் கதவுதிறக்குமாறு பாடப் பணித்தார். அவரும் பதிகம்பாடினார். கதவு திறந்தது. இருவரும் உள்ளே சென்று சுவாமியை வணங்கித் திரும்பினர். அப்போதுஅப்பர்சுவாமிகள் திருஞானசம்பந்தரைப் பார்த்து கதவு மூடிக்கொள்ளப் பதிகம்பாடுமாறு கேட்டுக்கொண்டார். அவரும் பாடினார் கதவும் முடிக்கொண்டது. பிறகு அப்பர்சுவாமிகள் சம்பந்தரிடம் பாண்டிநாட்டு வரலாற்றினைக்கேட்டு அறிந்து, அந்நாட்டிலுள்ள தலங்களுக்குச் சென்று, சுவாமிதரிசனம் செய்து பாடிக்கொண்டு தம்மூருக்குத் திரும்பினார். பின்பு தொண்டைநாட்டிலுள்ள தலங்களைத் தரிசித்துப்பதிகங்கள் பலபாடினார். பிறகு கயிலைக்கு சென்று பரமனை வணங்க எண்ணி நடந்துசென்றார். நெடுந்துரம் நடந்தசென்றதால் கால்கள் தேய்ந்துவிட்டன. பிறகு கைகளால் ஊன்றிச்சென்றார் கைகளும் தேய்ந்துவிட்டன. மூர்ச்சையாயினார். ஆண்டவன் இவர்முன் ஒரு முனிவர்போலக் காட்சியளித்து இவரை அங்குள்ள ஒருகுளத்தில் மூழ்கப்பணித்தார். உடம்புகுறைகள் எல்லாம் நீங்கிக் குளத்தில் மூழ்கத் திருவையாற்றில் ஒரு குளத்தில் எழுந்து, அங்குக் கயிலைக்காட்சி யினைக் கண்டார். பதிகமும்பாடினார். இவர் பெண்ணாகடத்தில் இடபக்குறி சூலக்குறி பெற்றும் சிவன் திருவடியைத் தலைமேல் பதியப்பெற்றும் கடைசியாக சுவாமிகள் திருப்பூந்துருத்திசேர்ந்து பலபதிகங்கள் பாடியிருந்து பிறகு பெருமானை வேண்டிக்கொண்டு திருப்புகலூர் சென்று தன்னை அவர் திருவடியில் சேர்த்துக்கொள்ள வேண்டி எண்ணுகேன் என தொடங்கும் திருப்பதிகம் பாடிக்கொண்டே தமது 81ஆம் வயதில் சித்திரைச் சதய நன்னாளில் இறைவனுடன் இரண்டறக்கலந்தார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வரலாறு

செந்தமிழ்நாட்டில், பொய்யாதளிக்கும் புனல்நாடாகிய சோழவள நாட்டில் சீர்காழி என்னும் ஊரில் அந்தணர்குலத்தில் கவுண்டின்யர் கோத்திரத்தில் சிவபாதஇருதயர், தம் மனைவியார் பகவதியாருயன் இல்லறத்தை நடத்திவந்தார். காலம் 7ம் நூற்றாண்டின்பிற்பகுதி. அப்போது சமணசமயம் மேலோங்கிச் சைவம் நிலைதாழ்ந்திருந்தது. இதனை நீக்க ஒரு சற்புத்திரனைத் தனக்கு அளிக்கவேண்டு மென்று இத்தம்பதிகள் நாளும் பரமனை வேண்டிவந்தார்கள். இறையருளால்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

இவர்கள் விருப்பப்படி ஒரு நல்லநாளில் நல்ல ஆண்குழந்தை பிறந்தது. குழந்தையும் நன்குபொலிவுடன் வளர்ந்தது. இவர்தம் முன்றாவது வயதில் சீர்காழிகுளக்கரையில் அழுதபோது, பெரியநாயகியம்மையாரின் ஞானப்பாலுண்டு, பலதேவாரத் திருப்பதிகங்களை யருளிச்செய்து வந்தார். தலயாத்திரை செய்துவந்தார். ஆண்டவனை நாளும்பதிகம் பாடி வணங்கிவந்ததால் இவர்க்குப் பலஅற்புதங்களை நிகழ்த்த ஆற்றலும் வந்தது. பரமனருளால் இவர்வாழ்வு வளம்பெற முத்துச்விகை, முத்துக்குடை, முத்துச்சின்னம், முத்துப்பந்தல் முதலியனவற்றை இறைவனிடம் பெற்றார். திருஆவடுதுறையில் உலவாக்கிழிபெற்று அதனைத்தன் பிதாவிடம் யாகச்செலவிற்குப் பயன்படுமாறு கொடுத்தார். பின் அப்பர்சுவாமிகளுடன் யாத்திரைசெய்து, திருவீழிமிழலையில் உணவுப்பஞ்சத்தைத்தீர்த்துவைத்துப் பின்பு திருமறைக்காட்டில் வேதத்தால் பூசித்து அடைக்கப்பட்ட கதவினை, அப்பர்திறக்கப்பாடிய பிறகு, இவர் அடைக்கப் பதிகம்பாடியருளினார்.

திருமருகலில் பாம்புதீண்டி இறந்த வணிகனைப் பதிகம்பாடி உயிர்பிக்கச் செய்தார். பிறகு பௌத்தர்களுடன் வாதம்செய்து, அவர்களை வென்றார். அப்பொழுது பாண்டியநாட்டில் சமணசமயம் தலைநிமிர்ந்து இருந்தது. கூன்பாண்டியன் உள்பட அனைத்து குடிமக்களும் சமணராயிருந்தார்கள். ஆனால் அரசன் அனுமதிபெற்று அவர் தேவியாரான மங்கையர்க்கரசியாரும், மந்திரி குலச்சிறையாரும், சைவராக வாழ்ந்துவந்தனர். இவ்வம்மையார் ஞானசம்பந்தர் அற்புதம் நிகழ்த்திவரும் செய்திக்கேட்டு, அவர்களுக்கு ஓலையனுப்பித் தம்நாட்டிற்குவந்து, சமணத்தை அழித்துச், சைவத்தை நிலைக்கச் செய்யுமாறு வேண்டினார்.

சுவாமிகளும் அடியார்கூட்டத்துடன் அவ்வாறே பாண்டிய நாட்டிற்குச் சென்று, அம்மையார்காட்டிய மடத்தில் தங்கியிருந்ததைக் கண்டு, பொறாதவர்களான சமானர்கள் அம்மடத்திற்குத் தீவைத்தனர். சுவாமிகள் அவ்வெப்பம் அரசனைப் பற்றட்டும் எனப் பணித்தார். அரசனும் வெப்புநோயால் பீடிக்கப்பட, மந்திரத்தாலும் மருந்தாலும் சமணர் வைத்தியம் – பார்த்துத் தீராமையால் கைவிட்டனர். அம்மையார் வேண்டுகோளுக்கு இணங்கச் சுவாமிகள் அரண்மனைசென்று பதிகம்பாடி அரசன் மீது திருநீறுபூச, வெப்பநோய் நீங்கியது. சமணர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
இது கண்டு இவர்மீது பொறாமை கொண்டு, நெருப்பில் ஒருவாதம் செய்து தோற்றார்கள். பின்பு நீரில் ஒருவாதம்செய்து தோற்றுத், தாங்கள் சொன்னபடி தங்கள் மானத்தைக் காப்பாற்றவேண்டித் தாங்களே கழுவிலேறி உயிர்நீத்தார்கள். பிறகு நாடு சைவமயமாக மாறியது. பின்னர்ச் சுவாமிகள் தொண்டைநாட்டிற்கு வந்து பலதலங்களைத் தரிசனம் செய்தார். அக்காலம் மயிலாப்பூரில் வாழ்ந்த சிவநேசசெட்டியார் மகள் பூம்பாவை பூக்கொய்யச் சென்றபோது பாம்புகடித்து இறந்தாள். அவள் உடலைத் தகனம்செய்து ஒருகுடத்தில் அதன் எலும்பையும் சாம்பலையும் சேமித்துவைத்துப் பூசித்துவர ஏற்பாடுசெய்தார். திருஞானசம்பந்தர் வரவினை அறிந்த சிவநேசசெட்டியார் அவரை உபசாரமாக உள்ளன்போடு வரவேற்றுத், திருமயிலைக்கு அழைத்துவந்தார். இவர் செய்தியைக் கேட்ட ஞானசம்பந்தர் அவருக்கு அருள்புரிய எண்ணிப் பதிகம்பாடி அவ்வெலும்பும் சாம்பலும் ஒன்று கூடிப் பூம்பாவையாக எழச்செய்தார். இவ்வற்புதத்தைப் பலர் வியந்து பாராட்டினர். பின் சம்பந்தர் கபாலீச்சரப்பெருமானை வணங்கிக் கொண்டு சீர்காழிக்குத் திரும்பினார். பெற்றோர்கள் இவருக்குத் திருமணஏற்பாடு செய்தார்கள். முதலில் இவர் மறுத்தார். பின்பு வேதநெறியை வளர்க்கவந்தவராதலால் இசைந்து, அம்மையாரை மணந்துகொண்டு, அவர் கரத்தைப்பற்றிக்கொண்டு ஆச்சாள்புரம் என்னும் திருநல்லூர்ப்பெருமணம் வந்து, தன்னைத் திருவடியில் சேர்த்துக்கொள்ளுமாறு இறைவனை வேண்டினார். சுவாமி ஆலயத்தின் முன் ஒரு ஜோதியும் அதற்குள்ளே ஒரு வாயிலும் தோன்றின. ஞானசம்பந்தரும் அடியார் கூட்டத்துடன் பதிகம் பாடிக்கொண்டே தம் பதினாறாம் ஆண்டில் ஒரு வைகாசி மூல நன்னாளில் அச்சோதியுள் புகுந்து இறைவனடிசேர்ந்தார்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் வரலாறு

திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் (நடுநாட்டில்) ஆதிசைவர் குலத்தில் சடையனார் இசைஞானியார் ஆகிய தம்பதிகளுக்கு உலகம் உய்யத் திருவவதாரஞ் செய்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் நம்பியாரூரர் என்பதாகும். இவர் கயிலையில் ஆலால சுந்தரராக இருந்தபோது அங்குள்ள அம்பிகையின் சேடியரான அநிந்திதை மற்றும் கமலினி என்பவரைச் சந்திக்கநேர்ந்தது. அதன் காரணமாகத் திருத்தொண்டத்தொகை நமக்குத்தரத் திருவவதாரஞ் செய்தார். இவர் இவ்விரு பெண்களைத் தவிர வேறொரு பெண்ணை மணக்க நேர்ந்தபோது ஆண்டவனாலே தடுத்தாட்கொள்ளப் பெற்றவர். தலயாத்திரைசெய்து ஆங்காங்கே பலப்பல பதிகங்களைப்

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பாடிக்கொண்டே இருந்தவர். திருவாரூரில் பதியிலார் குலத்தில் தோன்றி ஆண்டவனுக்குத் தொண்டுசெய்துவந்த பரவையாரைப் பரமனருளால் மணந்து வாழ்ந்தார். திருவொற்றியூரில், பூமாலைகட்டி இறைவணிக்குத் தொண்டாற்றிவந்த சங்கிலியாரை மணந்தார். தனக்குவேண்டும் போதெல்லாம் பதிகம்பாடிப் பரமனிடம் பொன்பெற்றவர். ஒருசமயம் திருமுதுகுன்றத்தில் தாம்பெற்ற பொன்னை மணிமுத்தாற்றிலிட்டுத் திருவாரூர்க் கமலாலயத்தில் அதனை எடுத்து இறைவனை வணங்கினார்.

"ஏயர்கோன் கலிக்காமரிடம்" நட்புகொண்டு அவருடன் திருப்புன்கூர் சென்று பதிகம்பாடிய புகழுடையவர். பின்பு சேரமான் பெருமான் நாயனார் என்னும் சேரஅரசனுடன் நட்புகொண்டு அவரைத் தன்நாட்டிற்கு வரவழைத்து உபசரித்து அவருடன் பல தலங்களைத் தரிசித்துவந்தவர். பிறகு இவர் மலைநாட்டிற்கு யாத்திரையாகச் சேரர்பெருமானைச் சந்திக்கச்சென்றார். வழியில் அவிநாசி என்னும் ஊரில் சில ஆண்டுகளுக்குமுன் ஒருமடுவில் இருந்த முதலை ஒருசிறுவனை விழுங்கிவிட, அவன் உடன் சென்ற மற்றொருசிறுவன் மீண்டவனுக்கு உபநயனம் நடந்ததைக்கேட்டுச் சிறுவனையிழந்த பெற்றோர்கள் தன்னை வணங்கவந்தபோது அவருக்கு அருள்புரியஎண்ணிப்பதிகம்பாடி அப்பிள்ளையை முதலை வாயினின்றும் மீட்டுக்கொடுத்ததுடன் உபநயனமும் செய்வித்துப் பெருமானை வணங்கினார். இவர் பலமுறை பரமனால் உதவிசெய்யப்பெற்று வாழ்ந்தார். பின் திருவஞ்சைக்களம் என்னும் ஊருக்குச்சென்று பெருமானைத் தன்னையவர் திருவடியில் சேர்த்துக்கொள்ளுமாறு விண்ணப்பம் செய்தார். பரமனும் மகிழ்ந்து ஐராவனம் என்னும் யானையை பிரம்மவிஷ்ணுவுடன் உலகிற்கு அனுப்பித் திருவஞ்சைக்களத்திலுள்ள சுந்தரரை அழைத்துவரக் கட்டளையிட்டார். யானையும் வந்தது, தேவர்கள் வேண்டினர். சுந்தரரும் வணங்கி யானைமீதேறித் தானெனை முன்படைத்தான் எனத் தொடங்கும் பதிகம் பாடிக்கொண்டே ஆகாயவழியாகக் கயிலை சேர்ந்து பெருமானைவணங்கி முன்நிலையைப் பெற்றார். கயிலை சேர்ந்துபோது வயது பதினைட்டு, இவர் அடைந்தநாள் ஆடிச்சுவாதி. அதேசமயம் இருசேடியர்களும் தம்நிலைமாறி அம்பாளிடம் வந்து பழையநிலையை யடைந்தார்கள். இவர்தம்முடன் தமது நண்பரான சேரமான்பெருமான் நாயனாரையும் வெண்குதிரைகாதில் சிவபஞ் சாட்சரம்ஜெபித்து புறவி மீதேறி கயிலைக்கு அழைத்துச்சென்று

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
இறைவனருளைப்பெற்றசெய்த பெருங்கருணையாளராவார். ஈசன் இவரை தோழனாகக்கொண்டபோதும் சுந்தரர் தன்னை அடிமையாகவே எண்ணி அன்புசெலுத்தி நட்புஉரிமையோடு பயனடைந்து பேறுபெற்றார்.

மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு

பாண்டிநாட்டில் திருவாதவூர் என்னும் ஊரில் பிராமணகுலத்தில் ஒருவர் தோன்றினார். அக்காலத்தில் புத்தம் தலைநிமிர்ந்தும் சைவம் தாழ்ந்தும் இருந்தது. சைவத்தை நிலைநிறுத்தவே இறைவனாலே தோற்றுவிக்கப்பட்ட இவருக்கு வாதவூரர் எனப் பெயரிட்டனர் அவரது பெற்றோர். வளந்தார் பதினாறு ஆண்டுகளுக்குள் எல்லா சாத்திரங்களையும் கற்றுவல்லவரானார். இவர் புகழ் எங்கும் பரவியது. அக்காலத்தில் பாண்டிநாட்டை அரிமர்தனபாண்டியன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். இவர் புகழைஅறிந்த அரசன் இவரைத் தன்நாட்டிற்கு அழைத்து மரியாதைகள் செய்து, தன் அரசஅவையில் முதல்அமைச்சராக நியமனஞ்செய்தான். இவரும் அரசியல் காரியங்களைச் செவ்வனே நடத்தி நாட்டில் குடிமக்கள் அனைவரும் நல்ல நிலையில்வாழுமாறு ஒழுங்குகள் செய்தார். இதனுடன் நில்லாமல் தன் ஆன்மா நல்ல நிலையடையவேண்டித் தனக்கு உபதேசிக்க ஒருதக்க ஆசாரியரைத் தேடிக்கொண்டே யிருந்தார். இதனால் இறைவனே இவருக்கு குருவானார். இவருக்கு அருள்புரியும் பொருட்டு ஆண்டவன் எண்ணினான். அச்சமயம் அரசர்கொலுவில் இவர் அமர்ந்திருந்தபோது குதிரைப்படைத் தலைவர் வந்து தங்கள் குதிரைப்படையிலுள்ள குதிரைகள் கிழத்தனமாகவும், நோயுற்றனவாகவும் உள்ளன. ஆதலால் புதிய குதிரைகளை வாங்கித் தங்கள் படையைப் பலப்படுத்தவேண்டும் என்றனர். உடனே அரசனும் முதல்மைச்சராகவிருந்த நம் வாதவூரரைத் திருப்பெருந்துறைக்கு நிறைய நிதி எடுத்துக்கொண்டு சென்று வாங்கிவருமாறு பணித்தான். உடனே முதலமைச்சர் பொக்கிஷத்திலிருந்து ஏராளமான செல்வத்தை எடுத்து ஆட்கள் மூலம் அதனைத் திருப்பெருந்துறைக்கு அனுப்பிவிட்டுத், தான் மீனாட்சிசுந்தரேசர் ஆலயம்சென்று, பொற்றாமரையில் நீராடிச் சுவாமி அம்பாளை வணங்கிக்கொண்டு விருதுகளுடன் திருப்பெருந்துறை நோக்கிச் சென்றார்.

இதற்குள் எம்பெருமான் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் ஆசாரியக்கோலத்துடன் தன் மாணவகுழாத்துடன் இவர் வரவை எதிர்பார்த்திருந்தார். இவர்அங்கு சென்றதும் பரமன்அருட்பார்வை இவர்மீதுபட்டதும் இவர் தன்வசமிழந்து. பக்தியில் பரவசமானார்.

Digitized by Siva Siva Foundation of America. HHFA(USA)

அவரும் அமைச்சரின் பரிபக்குவ நிலையை நன்கு உணர்ந்து, அவருக்கு ஆகமவிதிப்படி தீட்சைசெய்து, பஞ்சாட்சரம் உபதேசம்செய்தார். அமைச்சர் தன்னை மறந்தார், தான் எதற்காகவந்தோம் என்பதையும் மறந்தார். கொண்டுசென்ற ஏராளமான செல்வத்தை எல்லாம் ஆலயத்திருப்பணியிலும், அடியார்திருப்பணியிலும், செலவுசெய்து வந்தார். நாட்கள் சென்றன. அரசன் எதிர்பார்த்தாடி குதிரைகள் வரவில்லை. அமைச்சருடன் சென்ற அரசஅலுவர்களும் அரசனிடம் இவர் பணத்தைத் திருப்பணியில் செலவிடுவதையும் தெவித்தார்கள். அரசனுக்குக் கோபம் வந்து அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதி உடனே குதிரைகளுடன் வரவேண்டும் என்று பணித்தான். அப்போதுதான் நம் வாதவூரர் பெருமானுக்கு உலகநிலையில் கவனம் வந்து தாம் செய்துவந்ததையும் அரசன் கடிதத்தைப்பற்றியும் நினைவுவந்தது. ஆண்டவனிடம் முறையிட்டார். ஆண்டவன் அசரீரியாக நின்று வானொலியாக **"ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் நீ முன்னே செல்க"** என்றார். இவரும் ஆண்டவனை வணங்கிச் கொண்டு மதுரைக்குச் சென்றார். அரசனும் இவரை உபசாரத்துடன் வரவேற்றான். சிலநாட்கள் ஆயின.

ஆவணிமூலம் சமீபித்தும் குதிரைகள்வரும் செய்தி ஒன்றும் தெரியாதபடியால், இவரைத் தண்டிக்கச் செய்தான். இவர் தேகஅபிமானம் இல்லாதவராகவிருந்ததால் அரசன் வேலையாட்கள் செய்த தண்டனையைப் பொருட்படுத்தாமல் சிவத்தியானத்திலே ஈபட்டிருந்தார்.

இதனைப் பொறாத ஆண்டவன், காட்டிலுள்ள நரிகளை எல்லாம் குதிரைகளாகமாற்றிச் சிவகணங்களைக் குதிரை வீரர்களாக மாற்றித், தான் ஓர் குதிரைவியாபாரிபோல் வெள்ளைக்குதிரையின்மீது ஏறிக்கொண்டு, மதுரை வந்தாார். அரசன் குதிரைவெள்ளத்தைக் கண்டான். அளவில்லாத மகிழ்ச்சியடைந்தான். அமைச்சரையும் தண்டனையிலிருந்து விடுவித்துத் தன்னிடம் வரவழைத்து மரியாதைகள் செய்தான். வியாபாரியும் குதிரைகளின் இலக்கணங்களை எல்லாம் அரசனுக்குச் சொல்லிக் கயிறுமாறிக்கொடுத்து வியாபாரத்தை முடித்துக்கொண்டு அரசன் அளித்த சன்மானத்தையும் பெற்றுக்கொண்டு மறைந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
குதிரைகள் லாயங்களில் சேர்க்கப்பட்டன. அரசன் கவலையில்லாமல் மகிழ்ச்சியுடன் தன் அரண்மனை சென்றான். அமைச்சருக்கு ஆசாரியர் உபதேசஞ் செய்தபோது இவர் அழகான சொற்களாலே இறைவனைத் துதித்தார். இதற்கு மகிழ்ந்த இறைவன் இவருக்கு மாணிக்கவாசகர் (மணிவாசகர்) என்று பெயர்சூட்டி மறைந்தார். பிறகு இவர் மணிவாசகர் என்றே அழைக்கப்பெற்று வந்தார். (மணி என்றால் இரத்தினம்) இவர் ஆலயத்திற்குச்சென்று மீனாட்சிசுந்தரேசப் பெருமானை வணங்கித் தன்னை மறந்திருந்தார். அன்று இரவுவந்தது. குதிரைகள் எல்லாம் மீண்டும் நரிகளாக மாறி, ஊளையிட்டுக்கொண்டு, லாயங்களிலிருந்து தப்பி வெளியேவந்து, நகரத்தைக்கலக்கி, மக்களையெல்லாம் நடுங்கச் செய்து, காட்டிற்குள் ஓடிவிட்டன. இதனையறிந்த வேலையாட்கள் அரசனிடம் விண்ணப்பித்தனர். அரசனும் கடுங்கோபம் கொண்டு மாணிக்கவாசகர் சமயம்பார்த்திருந்து தன்அளவிறந்த நிதியத்தைக் கவர்ந்து தன்விருப்பப்படி செலவுசெய்து, தன்னை ஏமாற்றி விட்டார் என எண்ணினான். மீண்டும் அவரைத் தண்டித்துத் தான் கொண்டுபோன பொருளையெல்லாம் மீளவாங்குங்கள் என்று அரசன் ஏவலாட்களுக்கு உத்தரவிட்டான். அவர்களும் அவரைப் பலவிதமாகத் துன்புறுத்தினார்கள். இவர் பொறுத்துக்கொண்டார். ஆனால் ஆண்டவனுக்கு இது பொறுக்காமல் வைகைநதியைப் பெருகெடுத்துவரும்படி சங்கல்பித்தார். வைகை வெள்ளமாக ஊரை அழிக்கும் வகையில் கரைபுரண்டு வந்தது. மக்கள் நடுங்கினர். மாணிக்கவாசகரைத் தண்டித்துக்கொண்டிருந்த ஆட்களும் உயிர்தப்ப எண்ணி இவரை விட்டுவிட்டு ஓடிப்போனார்கள். இவர் ஆலயம் சென்று பரமனை வணங்கிப் பாடினார்.

நகரமக்களைக் காப்பாற்றஎண்ணிய அரசன், ஊரிலுள்ள எல்லா வீட்டுக்காரர்களையும் அழைத்து, வீட்டுக்கு ஒரு நல்லஆளாக அனுப்பி வைகைவெள்ளத்தைத் தடுக்க, இருபுறமும் கரைகட்ட உத்தரவிட்டான். அவ்வாறே எல்லோரும் வேலைசெய்யத் தொடங்கினார். கரையும் அடைபட்டுக்கொண்டுவந்தது. ஆனால் அவ்வூரிலுள்ள பிட்டுவிற்று வாழும் வந்தி என்னும் ஒரு அநாதைக்கு மட்டும் ஆள்கிடைக்கவில்லை. அரசன் தன்னை தண்டிப்பானே என்று கவலைகொண்டு தன் திக்கற்றநிலைமையை ஆண்டவனிடம் முறையிட்டாள். ஆண்டவனும் இவளுக்கு அருள்புரிந்தார். "திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை" என்பது மெய்யாகும் என்று எண்ணித், தான் ஓர் கூலியாளாக வேடம் தரித்துக்கொண்டு, வந்தி இருக்கும் வீட்டிற்குவந்து, தனக்கு ஏதாவது வேலைகொடு என்று கேட்டார். வந்தி மகிழ்ச்சியடைந்து அவருக்குக் கூலியாகப் பிட்டையே கொடுத்து வைகைக்கரைக்கு அனுப்பினாள்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

ஆனும் அங்குசென்று தான் வந்திஆள் என்று அரசர் அலுவலர் பட்டியலில் எழுதிக்கொண்டு கரையை அடைப்பவர்போலப் பாசாங்குசெய்து தானும் வேலைசெய்யாமல், வேலைசெய்யும் பிறரையும் தன்பக்கம் வேடிக்கைகாட்டி இழுத்து, சும்மாவிருக்கச்செய்தார். அரசன் கரையெல்லாம் ஒழுங்காக அடைபட்டுவருவதையும், வந்தி என்பவருக்கு விடப்பட்ட கரைமட்டும் அடைபடாமலிருப்பதையும் கண்டு கோபித்து வந்தியாளாகவந்த இறைவனைத் தன்பக்கம் இழுத்துத் தன்கையிலுள்ள பொற்பிரம்பால் அவர் முதுகில் ஒரு அடி அடித்தான். அவ்வளவுதான். அந்தஅடி சமஸ்தகோடி ஜீவாத்மாக்களின் முதுகிலும் பட்டது. தேவர்கள் மேல்பட்டது. ஓவியங்கள் மீதும்பட்டது. ஆண்டவனும் ஒரு கூடைமண்கொட்டித் திடீரென மறைந்தான். வெள்ளம் நின்றது. கரையும் உயர்ந்தது, கரையும் அடைக்கப்பட்டது. ஆண்டவனும் அசரீரியாக வானில்நின்று அரசனைப்பார்த்து "நாம் இத்தனையும் செய்தது நம் அன்பன் வாதவூரன் பொருட்டு. அவனையின்னான் என்று அறியாமல் தண்டித்ததால் நாம் நரிகளைக் குதிரைகளாக்கியும். மீண்டும் குதிரைகளை நரிகளக்கியும் வைகையைப் பெருக்கெடுத்து வரவும், வந்திக்குக் கூலியாளாக வரவும், வந்து முதுகில் அடிபடவும், பிறகு மறையவும் செய்தோம் அவரைத் தன்னிச்சைப்படி செல்லவிடு" என்று அருள்புரிந்தார்.

உடனே அரிமர்த்தனபாண்டியன், மாணிக்கவாசகரை வணங்கி, மன்னிப்பு கேட்டுக்கொண்டான். பெருமானைவணங்கித் தான் அவர்முதுகில் அடித்ததற்காக வருந்தித், தோத்திரஞ்செய்து, மன்னிப்புபெற்றான். மாணிக்கவாசகரும் மதுரையைவிட்டு நீங்கித் தலயாத்திரை செய்து தில்லைக்கு வந்தார். தம்மோடு வாதம்செய்யவந்த பௌத்தர்களுடன் வாதுசெய்து சைவத்தை நிலைநாட்டினார். பௌத்த அரசனது பிறவி தொட்டு ஊமையாயிருந்து, பேசாமலிருந்த மகளைப் பதிகம்பாடிப் பேசவைத்து, தில்லையில் ஆண்டவனைக் காலந்தோறும் வணங்கிக்கொண்டு இருந்துவந்தார்.

ஒருநாள் இறைவன் ஒரு அந்தணவடிவத்துடன் மாணிக்கவாசகர் இருக்கும் இடத்திற்கு வந்து, அவர் பலதலங்களில் பாடிய திருவாசகப் பாடல்களை வரிசையாகப் பாடச்சொல்லித், தான் ஏடும் எழுத்தாணியும் கொண்டு அவர்பாடிவந்த பாடல்களையெல்லாம் எழுதிக்கொண்டு, அப்பிரதியைச் சிதம்பரம் நடராஜப்பெருமான் திருவடியில் வைத்து, மறைந்தார். மறுநாள் கோயிலுக்குள் புதியதொரு பிரதியிருப்பதைக் கண்ட தீட்சிதர்கள் வியப்புற்று, இது பாடியவரை ஆண்டவனருளால் தேடிப்பிடித்துக் கோயிலுக்குக் கொண்டுவந்து, அந்த நூலின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
பொருளைச் சொல்லவேண்டினர். மாணிக்கவாசகரும் இது திருவாசகம், இதற்கு வாச்சியம் (அதாவது உள்ளே பேசப்பட்டபொருள்) நடராஜரே எனக்கூறி அவரைக்காட்டி, ஒருஆனி மகத்தன்று தன் 32ஆம் வயதில் இறைவன் குஞ்சிதபாதநிழலில் சேர்ந்து, பேரானந்தப் பெறுவாழ்வினைப் பெற்றார்.



ஆசார்யவழியாடு (குருபூசைச்செயல்)

गुरुं प्रकाशयेत् धीमान् मन्त्रं यत्नेन गोपयेत् ।
अप्रकाश प्रकाशाभ्यां रौखं नरकं व्रजेत् ।।
अप्रकाश प्रकाशाभ्यां क्षीयते सम्पदायुषि ।।

புத்திசாலிதனது குருவை ஒருவர்நன்குவெளிப்படுத்த வேண்டும். அவர் உபதேசித்த மந்திரத்தை வெளிப்படுத்தக் கூடாது. இம்முறையை மாற்றி செய்வதனால் ரௌரவம் எனும் நரகத்தை, செல்வம் ஆயுள் இவற்றின் அழிவை அடைவான். குரும்ப்ரகாசயேத் என்பதாக குருவை நன்கு வெளிப்படுத்த வேண்டும். எனவே குருவழிபாடு என்பது, பூஜை, உத்ஸவம் பிரதிஷ்டை தீக்ஷை யாவிலும் முதலிலும் முடிவிலும் செய்யப்படுவதாகும். குருபாதசேவையே பயனளிப்பதாகும். நைமித்திகக்கிரியைகள் அனைத்திலும் முதலில்அழைத்து, கௌரவித்து ஆசாரியவரணம், செய்து நியமிப்பதும், முடிவில் அவரை வெகுமதிகளால் கௌரவித்து நன்குவணங்கி வழிபட்டு

Digitized by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

பயனாய்ப்பெறுவது ஆசார்யோத்ஸவம் என்று இடம்பெற்றுள்ளது. மனிதகுலம் குருவின்அருளின்றி உய்வுபெற இயலாது. உலகில் தேவர்கள், ரிஷிகள், மனிதர்கள், மன்னர்கள், யாவரும் தமக்கென ஒருகுருவைத் தேர்ந்தெடுத்து, போற்றி வணங்கிப் பயனடைந்து வந்துள்ளனர் என்பது நாமறிந்ததே. எல்லாமன்னர்களும் தேவர்களும், குலகுரு, ராஜகுரு, வம்சகுரு, என்று நியமித்து பயன் பெற்றதை புராணங்களால் அறியமுடிகிறது.

முடிவுரை - நமது கடமையும் பயனும்

பெறுதற்கரிய மனிதப்பிறவியைப் பெறும்பேறு நமக்குவாய்த்து விட்டது. அதிலும் மேன்மைகொள் சைவசமயம் சாரும் ஊழைப் பெற்றுவிட்டோம். இப்பிறவியைக் கருவியாகக்கொண்டு, இனி பிறவாத பெருநிலையை அடைய முற்படல்வேண்டும். "இவ்வுடல் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்கே" என்று அறநூல்கள் அறிவுறுத்துகின்றன. இறைவன் தநுகரணபுவன போகங்களை நமக்கு பெருங்கருணையால் தந்துள்ளார். இவற்றை அவர் தந்தது இன்பதுன்பங்களை நுகரும்படிசெய்து, பிராரப்தகன்மத்தை நீக்குதற்காகவும் அவ்வாறு நீக்குதலால் பருவகால பக்வம் வந்தபோது சிவதீட்சைப் பேறுவாய்க்க, அதனால் சஞ்சிதகர்ம ஒழிப்பு ஆகாமியச் சேர்க்கையின்மை நிகழுதற்பொருட்டுமேயாகும். இங்ஙனம் நிகழுவதனால் எல்லாத் தீமைகளுக்கும் காரணமாய் உயிருடன்கலந்துநின்ற ஆணவமலம் அகன்று பேரின்பம் உண்டாகும். இவ்வுண்மைகளை உள்ளவாறு உணர்ந்து நமது ஆன்றோர்களாகிய அருளாசிரியன்மார்கள் உபதேசித்ததும் சென்றதுமாகிய செந்நெறியை கடைபிடித்து ஒழுகுதற்கு, சிவதீட்சைகளை குருவிடம் பெற்று, குருவழிபாடாற்றி சிவஞானம்பெற்று பரகதியான முக்தியை திருவருளால்பெற வேண்டும். ஆகையால் குருபூசையாற்றி வினைநீக்கமும் விடுபேறும் பெறறிட முயல்வோமாக. குருவருளால் இன்புறுவீர்களாக.

வாழ்க சீர்அடியார் எல்லாம்.

சுபம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

குருவே நம

தட்சணாமூர்த்தி திருவருட்பா

தருமை ஆதீன 10வது குருமூர்த்திகள்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
அருளியது.

பூங்கமல வதனமும் பொழிகருணை நயனமும்
புன்முறுவல் நிலவெறிப்பும்
பொலிசடா முடியும் அதில் உறைநிலா மதியும் ஒளி
புனைகுழை இலங்கு காதும்
தேங்கு பரமானந்த சின்மயா காயமாம்
சித்தி அருண் முத்திரையுமேல்
சிவானுபவ நீங்கினோர் சேர அருள் செபமாலை
சிவஞான புத்தகமும் ஓர்
வேங்கையத ளுடையும் சரற்கால மதிகோடி
வெள்ளம்என நிறைவடிவமும்
மேலான தெய்வம் நாம் அன்றி வேறில்லை இது
மெய்யென்று எடுத்த கனலும்
ஓங்கவட ஆலடியில் உறைகின்ற தெய்வமே
உன்னையன்றி வேறு நினையேன்
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 1

சீராரும் நின் சரண தேஜோம யானந்த
தெரிசனங் காட்டுபகலே
தேகாதியாகும் ப்ரபஞ்ச இருளாகியே
திண்டாடும் மும்மலப்பேய்
போராடுது என்னுடன் நான் ஏழை அத்துடன்
போராட முடிவதில்லை
புலையாடல் ஒரு நாள் இரண்டு நாளோ இது
பொறுக்கவும் படுவதில்லை
ஆரொடு சொல்லியென் குறை ஆறுவேன் எனக்கு
அன்னையே அப்பனே உன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆறுதலையன்றிவே றிலைநீ நழுவவிடின் அடியேன்
அலைந்து போவேன்
ஓராலின் நிழலில் உறைந்து சனகாதியர்க்கு
உள்ளபடி அருள் தெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 2

இரவிசதகோடிகள் இருட்டென்ன ஒளிவெயில்
எறிக்கும் ப்ரசண்டபானு
எண்ணிலாமதிவடவை என்னவேகுளிர்நிலா
எழுகின்ற சந்த்ரோதயம்
அரிபிரமர்இந்த்ராதி செல்வம் நல் குரவென்னும்
அளவிலாப் பெரிய செல்வம்
அண்டகோடிகளை அணுஎன்ற குணமேருகிரி
அமுதை வேம்பென்ற அமுதம்
பெரியபிரமப்பிரளயம் சிறியதுளிஎன்று
பேசுங் க்ரு பாம்புராசி
பிரபஞ்சமதனிலுள தெய்வம் எல்லாமும்
பிறந்தலையும் என நகைத்தே
உருவினில் அநாதியே உற்ற சித்ரூபியாய்
உறைகின்ற பர தெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 3

தந்த்ரகலை அறிவனோ மந்த்ரகலை அறிவனோ
சாரும் உபதேசகலையில்
தந்தகயிலாச பாரம்பரியமாகவரு
சம்ப்ரதாயம் அறிவனோ
அந்தரத்து உயர்மலைத் தேனினுக்கோர் முடவன்
ஆசைவைத்தது போலவே
ஐயனேநின்னருளை அடைவதற்காசைவைத்து
அடியன்முகம் வீங்கிநின்றேன்
சந்த்ரசேகர சகள நிட்கள தயாபர
சதாசிவ சிதாகாயமாம்
சபாநாத சுந்தரானந்த கல்யாணகுண
சர்வேச தேவ தேவே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உந்துந் தரங்கமெறி கங்காதரா கயிலை
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 4

பொல்லாத பாவங்கள் கோடானுகோடியிப்
புவிமிசையி லோர் வடிவமாம்
புலையனேன் உனைமறந்தனுதினஞ்செய்துவரு
பொல்லாதவினை யெண்ணிலேன்
அல்லாருமலமாயை கருமங்கள் அணுகாத
அகளநிட்பிரபஞ்சமாம்
அகளங்கசுத்தநித்தியானந்த அனுபவம்
அணுவளவும் வந்ததில்லை
நல்லார் முனணுகாத யமதூதர் கொண்டுபோய்
நரகிலே விடுவரென்று
நடுநடுங்காநின்ற துள்ளம்உனை நம்பினேன்
நம்பினேன் வடகயிலையாய்
உல்லாச பரமகுரு நாதனே ஆலடியில்
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 5

பெரிய பரமானந்த பரமசுகவாழ்விப்
பிறப்பிலே வருவதன்றிப்
பிரபஞ்ச வாழ்க்கையெலாமும் விட்டுதறியே
பெண்ணாசை மண்ணாசையும்
இரணியத் தாசையுஞ் சீயென்று விட்டெறிந்
தேகாந்த மாயிருந்தால்
இவ்வுலகிலிடரேதும் இல்லாமல் வருமின்பம்
யாவர்க்கும் இல்லையென்று
தெரியமறை சொல்லவும் பெரியவர்கள்
சொல்லவுந் தீரத்துறந்திராத
சிறியனிவனென்றோ பராமுகம தாகவே
தேவரீர் நின்றசெய்தி
உரிய துறவுடன் ஞானம் உதவுவதும் நீரன்றி
ஒருதெய்வம் வேறில்லையே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 6

சரியைதனில் வல்லனோ கிரியைதனில் வல்லனோ
தகுயோக மதில்வல்லனோ
தவமதனில் வல்லனோ உபரதியில் வல்லனோ
தருபத்தி தனில் வல்லனோ
அரிபிரமர்காணா அகண்ட பூரணசச்சி
தானந்த சிவஞானமாம்
அதையுணர வல்லனோ ஆகாதபிரபஞ்சம்
அதையுணரும் வல்லமையிலே
பெரியனே ஆயினும் மேலான அனுபவம்
பெற்றவர்கள் போலிருந்து
பெருங்கபடநாடகம் நடிப்பேற்கும் நின்னருட்
பிரகாச மாகுமோசொல்
உரியபரமானந்த நிர்த்தனே வடகயிலை
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 7

மோகந்தரித்தவர்கள் மாதரைக்கூடியே
மோகந்தணிப்பரதுபோல்
முதுபசிதரிதவர்கள் அன்னம்புசித்துலகில்
முதுபசி தணிப்பரதுபோல்
பாகந்தரித்தவர்கள் சற்குருவினோக்கப்
பயோததி படிந்தேபிர
பஞ்ச வெப்பந் தணிப்பார்க ளென்றாகமம்
பலகலைகள் சொல்லவும்கேட்
டாகந்தரித்தமல வடவையாற் சூடுண்டுஎன்
ஐயனே நின்கடைக்கண்
ஆனந்த அருண்மழையின் மூழ்கவழிபாராமல்
அவமாக நாள்கழித்தேன்
ஊகங்கொடுத்தருளை அடையும்வழி அருளுவாய்
ஓங்கு குருபரநாதனே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 8

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொன்னினை விழுங்குமொரு ரசகுளிகை போலவும்
பூதவிருள் தனைவிழுங்கும்
பூர்ணசந்த்ரோதயம் போலவும் சந்திரன்
பொன்னோளியை உள்விழுங்கும்
மன்னும் ஆயிரகோடி சூரியர்கள் போலவும்
வல்இரும் பினைவிழுங்கும்
மண்டுகனல்போலவும் உப்பினைவிழுங்கிடும்
வாரிநீரைப்போலவும்
என்னைநீ உள் விழுங்கிக்கொண்டு இருப்பது இனி
எக்காலம் எக்காலமென்று
ஏழையேன் அழுதழுதுவாடவும்திருவுள்ளம்
இன்னமும் இரங்கவிலையே
உன்னருள் இரங்குநாள் எந்தநாள் ஆல்அடியில்
உறைகின்ற பரதெய்மே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 9

அண்டர்தொழுமிந்த்ராதி வாழ்வையும் விரும்பிடேன்
அட்டசித்தியும் விரும்பேன்
அகிலகலைஞானமும்விரும்பிடேன் உலகுபுகழ்
அரியகீர்த்தியும் விரும்பேன்
பண்டைமலம்எல்லாம் ஒழித்து நின்னருள்பெற்ற
பழைஅடியார்களடியார்
பாததாமரைகள் என்தலையின் மேல்வைத்தருட்
பார்வையால் இருள் அகற்றித்
தொண்டுசெய்தரிய பரமானந்தவெள்ளந்
துதைந்துவிளை யாடிஉலகந்
தோன்றாமல் இறுமாந் திருக்கின்றபெரு வாழ்வு
தொண்டனேன் வேண்டினேன்–வண்டு
உண்டிடுங்கொன்றையணி அண்டர் – நாயக கயிலை
உறைகின்ற பரதெய்மே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 10

தட்சணா மூர்த்தி திரு வருட்பா முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருச்சிற்றம்பலம்

ஓம் ஸ்கந்த குரவே நம:

வேலும் மயிலும் துணை

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அவர்களால் அருளப்பட்ட

மயூரநாத வள்ளல் வடிவேல் முருகன் துதிப்பாடல்

(கந்தகோட்ட மும்மணிக் கோவை – பாடல் 16)

உரை விளக்கம்

சகலாகம பண்டிதர், முனைவர்,
சிவஸ்ரீ சபாரத்தினம் சிவாசாரியார்

இன்று நெருநல் பின்றை எனாநிலை
பிடித்து நின்ற பிரமேந் திரற்கு
நித்தகை வல்லியம் நீட்டி அருளினை;
நித்திய நாதன் எனும்நிரு பற்கு
நின்மல யோக நிலைநன்கு அளித்தனை;
சொன்னகுத் தற்கும் அவனின் துணைவி
என்னும் மகேசை என்பா ளுக்கும்
சுதனா வந்தெதிர் தோன்றினை; அதான்று
நசைஇய வரங்களும் நன்கு நல்கினை;
வசுமந் தற்கு மலர்கதி வழங்கினை;
இடும்பன் என்பான் இகல்இரித்து அருளினை;
சேரர் கோற்குச் சிவகயி லாய
கதிக்கருள் புரிந்தனை; திருப்பரங் குன்றிற்
கரனறுப் புண்ட ஒருமட வரற்கு அக்
கரன்வளர் பாக்குக் கருணைபா லித்தனை;
சுகவிரு டிக்கும் தூய்நால் வாய்க்கும்
வேண்டுன அருளினை; விடைமுக வற்குப்
பதியொள் ளறிவைப் பகுத்தருள் செய்தனை;
வாசுகி என்னும் மாசுணம் அதற்கார்
யாக்கை ஆகுலம் நீக்கி அருளினை;

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சயகீய சவ்விய சாமிமா ணாக்கற்கு
ஐம்பா தகம்தீர்த்து அருளினை; அற்பாற்
கதிர்காம வேலா எனக்கதறு ஒருவற்
புரப்பான் கரியைக் கோறல் புரிந்தனை;
கதிர்கா மத்திற் களிறாத் தொழுவான்
ஒருவன் சாபம் ஒழித்தருள் செய்தனை;
காசிபர் இட்டிக்கு ஊறு காட்டும்
மலயன் மாள் இருவர் மாய்த்தனை;
வாசவன் தூசி மனக்கவல் தீர்த்தனை;
சந்தத் தொடர்பு சால்பொழிந்த
எந்தை அருணா கிரிக்கருள் இசைத்தனை;
பிரமற் குட்டுபு பெரும்புவி படைத்தனை;
பரமற்கு ஓர்உப தேசம் பண்ணினை;
ஆறு முனைவரை ஆட்கொண்டு அருளினை;
முசுமுகற்கு அருளினை; முதுமல யத்துச்
சிறுமுனிக்கு அருளினை; சீரிய புத்தேள்
கோழற்கு அருளினை; யாழற்கு அருளினை;
வாமற்கு அருளினை; இராமற்கு அருளினை;
கீரற்கு ஆய கிருபைசெய்து அருளினை;
இன்னும் எண்ணிலர்ப் புரந்தனை அதனால்
என்னையும் என்போல் வாரையும் இன்னே
ஆண்டு கோடற்கு அருளல் வேண்டும்
கந்த கோட்ட வேளே.

உரை விளக்கம்

இன்று நெருநல் பின்றை எனா நிலை
பிடித்து நின்ற பிரமேந்திரற்கு
நித்த கைவல்லியம் நீட்டி அருளினை;

இன்று, நேற்று, நாளை எனக் காலத்தைத் தள்ளிப்போடாமல், துறவு கொள்ள வேண்டும் எனும் எண்ணம் தோன்றிய கணத்திலேயே துறவுநிலையைக் கொண்டு அந்நெறியில் உறுதியுடன் நின்ற பிரம்மேந்திரர் எனும் ஞானிக்கு நித்தியமான வீடுபேற்று இன்பத்தை வழங்கி அருளினாய்.

Digitized by Harold Heritage Foundation of America. HHFA(USA)

நித்திய நாதன் எனும்நிருபற்கு
நின்மல யோக நிலை நன்கு அளித்தனை;

திரேதா யுகத்தில் நித்தியநாதன் எனும் அரசனுக்கு மாசற்ற, உயர்ந்த சிவயோக நிலைக்கு உரிய நெறிமுறைகளை உணர்த்தி அருளினாய்.

சொன்ன குத்தற்கும் அவன் இல் துணைவி
என்னும் மகேசை என்பா ளுக்கும்
சுதனா வந்து எதிர் தோன்றினை; அதான்று
நசைஇய வரங்களும் நன்கு நல்கினை;

சொர்ணகுப்தன் என்பவனுக்கும் அவன்றன் மனைவி மகேசை என்பவளுக்கும் அவர்களுடைய மகனாக வெளிப்பட்டுத் தோன்றி அருள் புரிந்தாய்; அதுமட்டுமல்லாமல் அவர்கள் விரும்பிக் கேட்ட வரங்கள் அனைத்தையும் நிறைவாக வழங்கி அருளினாய்.

வசுமந் தற்கு மலர்கதி வழங்கினை;
இடும்பன் என்பான் இகல்இரித்து அருளினை;

வசுமந்தன் எனும் அடியவனுக்கு வீடுபேற்று இன்பத்தை வழங்கி அருளினாய்; இடும்பன் எனும் அசுரனை மாய்த்துப் பின் அவனுடைய மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்கி அவனை உயிர்ப்பித்து எழுப்பி, வேண்டிய வரங்களையும் தந்து அருளினாய்.

சேரர் கோற்குச் சிவகயி லாய
கதிக்கருள் புரிந்தனை; திருப்பரங் குன்றிற்
கரனறுப் புண்ட ஒருமட வரற்கு அக்
கரன்வளர் பாக்குக் கருணைபா லித்தனை;

சேரமன்னனுக்கு நீ நேரே காட்சி தந்து அருளி அவன் விரும்பிய வண்ணம் சிவகயிலாயப் பதவியையும் அருள்புரிந்தாய். திருப்பரங்குன்றத்தில் நாள்தோறும் பக்தியுடன் திருமுருகாற்றுப் படையை ஓதி வந்த முருகம்மையாரின் கையை அவளின் கணவன் வெட்டிவிட, அவளது வெட்டுண்ட கரம் நன்கு வளரும்படி அந்த அம்மையாருக்கு அருள் செய்தாய். (வளர்பாக்கு – வளர்வதற்காக)

சுகவிரு டிக்கும் தூய்நால் வாய்க்கும்
வேண்டுன அருளினை; விடைமுக வற்குப்
பதியொள் ளறிவைப் பகுத்தருள் செய்தனை;

சுகரிஷிக்கும் ஐராவதம் எனும் யானைக்கும் அவர்கள் வேண்டிய அனைத்தையும் வழங்கி அருளினாய்; நந்தி பகவானுக்கு சைவசித்தாந்த ஞானபோதத்தை விளக்கமாக உபதேசித்து அருளினாய்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாசுகி என்னும் மாசுணம் அதற்கார்
யாக்கை ஆகுலம் நீக்கி அருளினை;
சயகீய சவ்விய சாமிமா ணாக்கற்கு
ஐம்பா தகம்தீர்த்து அருளினை; அற்பாற்
கதிர்காம வேலா எனக்கதறு ஒருவற்
புரப்பான் கரியைக் கோறல் புரிந்தனை;
கதிர்கா மத்திற் களிறாத் தொழுவான்
ஒருவன் சாபம் ஒழித்தருள் செய்தனை;

அஷ்டநாகங்களுள் ஒன்றாகிய வாசுகி எனும் பாம்பரசனின் உடலுக்கு உற்ற சேதங்களையும் துன்பத்தையும் போக்கி அருளினாய்; ஜைகீஷவ்வியர் எனும் முனிவரின் சீடன் செய்த ஐம்பெரும் பாதகங்களால் நேர்ந்த பெரிய துன்பங்கள் அனைத்தையும் போக்கி அருளினாய்; "கதிர்காம வேலா" என நாள்தோறும் அன்புடன் அழைத்து வந்த ஓர் அன்பனைக் கொல்லவந்த யானையைக் கொன்று அவனைக் காப்பாற்றி அருளினாய்; சாபத்தால் யானை வடிவுடன் உன்னைக் கதிர்காமத்தில் வழிபட்டுவந்த கந்தருவனுக்கு நேர்ந்த சாபத்தைப் போக்கி அவனைப் பழைய நிலையில் அமர்த்தி அருளினாய். (அற்பால் – அன்பால்; புரப்பான் காப்பாற்றும் பொருட்டு; கோறல் கொல்லுதல்)

காசிபர் இட்டிக்கு ஊறு காட்டும்
மலயன் மாரன் இருவர் மாய்த்தனை;
வாசவன் தூசி மனக்கவல் தீர்த்தனை;

காசிப முனிவர் செய்த வேள்விக்கு இடையூறுகள் செய்த மலயன், மாரன் எனும் இருவரையும் கொன்று அந்த வேள்வி நிறைவுறுமாறு செய்து அருளினாய்; சுசீந்திரத்தைச் சார்ந்த வேள்விமலையில் இந்திரனின் குதிரை வழிபட, அதன் உடலில் ஏற்பட்டிருந்த தேகச்சிதைவுகளையும் அதன் துன்பங்களையும் மனக்கவலையையும் போக்கி அருளினாய். (இட்டி – வேள்வி; தூசி – குதிரை)

சந்தத் தொடர்பு சாலப் பொழிந்த
எந்தை அருண கிரிக்கருள் இசைத்தனை;
பிரமற் குட்டுபு பெரும்புவி படைத்தனை;
பரமற்கு ஓர்உப தேசம் பண்ணினை;

மிடுக்கான ஒலிவளம் நிறைந்த சந்தத்தமிழ்ப் பாடல்களை மிகுதியாக வழங்கியருளிய எந்தையாம் அருணகிரிப் பெருமானுக்குப் பேரருள் பொழிந்து உயர்த்தி அருளினாய்; நான்முகனின் நான்கு தலைகளிலும் ஒருசேரக் குட்டிச் சிறையில் இட்டு, அவனது படைப்புத் தொழிலை நீயே ஏற்றுக் கொண்டு பெரிய பெரிய அண்டங்களையெல்லாம் படைத்து

Digitization By Hindu Heritage Foundation of America (HFA)
அருளினாய்; குரு நிலையில் விளங்கி சிவபரம்பொருளுக்கே ஏற்ற வகையில் பிரணவப் பொருளை உபதேசித்து அருளினாய்.

ஆறு முனைவரை ஆட்கொண்டு அருளினை;
முசுமுகற்கு அருளினை; முதுமல யத்துச்
சிறுமுனிக்கு அருளினை; சீரிய புத்தேள்
சோழற்கு அருளினை; யாழற்கு அருளினை;
வாமற்கு அருளினை; இராமற்கு அருளினை;
கீரற்கு ஆய கிருபைசெய்து அருளினை;

பராசர முனிவரின் புத்திரர்களும் வியாசருக்குத் தமையன்மார்களும் ஆகிய தப்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்கிரபாணி, மாலி எனும் ஆறு முனிவர்களுக்கும் தக்ஷிணாமூர்த்தி வடிவம் தாங்கிச் சின்முத்திரை காட்டிச் சிவஞான உபதேசம் செய்து ஆட்கொண்டு அருளினாய்; முசுகுந்த சக்ரவர்த்திக்கு அருள் புரிந்தாய்; பழமையான பொதிகைமலையில் வாழும் அகத்திய முனிவருக்கு அருள் செய்தாய்; சீர்மை வாய்ந்த தெய்வச் சோழருக்கு அருள் செய்தாய்; நாரதருக்கு அருள் செய்தாய்; வாமதேவ முனிவருக்கு அருள் செய்தாய்; தசரத குமாரனான இராமபிரானுக்கு உபதேசம் செய்து அருளினாய்; திருமுருகாற்றுப்படை எனும் தெய்வப்பாடலைப் பாடிய நக்கீர தேவ நாயனாருக்கு உரிய அருட்பேற்றை வழங்கினாய். (தக்ஷிணாமூர்த்தி ரூபமாக இருந்து தப்தர் முதலான அறுவர்க்கும் உபதேசித்த தலம், திருப்பரங்குன்றம்)

இன்னும் எண்ணிலர்ப் புரந்தனை அதனால்
என்னையும் என்போல் வாரையும் இன்னே
ஆண்டு கோடற்கு அருளல்
வேண்டும் கந்த கோட்ட வேளே.

இவ்வாறு மேலும் எண்ணற்றோர்களுக்கு அவரவர்கள் விரும்பிய வண்ணம் திருவருள் பாலித்து அவர்களைக் காப்பாற்றி அருளி உள்ளாய். அதனால், என்னையும் என்போன்று உன் திருவடி துதிப்போர்களையும் ஆண்டுகொள்வதற்குக் கந்தகோட்டத்தில் எழுந்து அருளி விளங்கும் செவ்வேள் முருகனே! நீ திருவுளம் கொண்டருளல் வேண்டும்.

"அடியவர் இச்சையில் எவை எவை உற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே " – திருப்புகழ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

குருவே நம:

முருகன் திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே!
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே!
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே!
குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே!
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே!
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே!
ஆறுமுகம் ஆன பொருள் நீ! அருள வேண்டும்!
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே!

தேவகுரு பிருஹஸ்பதிக்ரஹ துதி

உலகுயிர்க ளாக்குதச பிரமர்களுள் ஒருவனா
முயரங்கி ராவின் மதலாய்
ஓங்குமதி மேன்மையா லிணைசொலற் கருமையா
முத்தமா உம்பரோடு
பலமுனி சிரேட்டரும் புகழ்பரவி யேத்திடும்
பான்மையார் தேவகுருவே
பரமேட்டி யிறையை யதி பதியாக வுற்றுளாய்
பக்தருக்கருள்செய் பகவா
நலமேவு பொன்மேனி யாடையணி யுற்றுளாய்
நவில்சாப. மீனவதிப
நண்ணுசெப மாலைவர தங்கதை கமண்டல
நயந்தொளிர ஏந்து மிறைவ
வலமேவு மாதங்க மூர்ந்தருசெய் யண்ணலே
மலரடிக ளேத்துகின்றேன்
வாக்குவல் லமைகல்வி செல்வமிவை நல்கிமுன்
வந்தெனக் கருள்வாயே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குருவே நம:

ஷண்முக யந்திரம்





Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிற்றம்பலம்

திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ..... எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் ..... அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் ..... இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ..... ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு ..... கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ..... எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ..... முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல ..... பெருமாளே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

குருவே நம:



சிற்றம்பலம்

அமரர்கோ

கங்கையைச் சடையில் பரித்து மறிமழு அம்
கரத்தில் தரித்து ருத்ரம்
காட்டு உழுவை அதள்அசைத்து அணிமன்றில் ஆடு
கங்காளற்கு அபின்னமாய
சங்கரி சடாதாரி சருவாணி சல்யாணி
தற்பரி பவானி தந்த
தந்திமுகனோடு மற்று ஐந்து பெயர் நீர்மையும்
தன்னகத்து உளதெய்வமே
மங்கையர்தம் இன்டெனும் துன்பினை விரும்புமட
மார்க்கத்தை விட்டு அதீதர்
வாழ்வுக்கும் வாழ்வாய் வாழ்வினை அளிக்கும்உன்
மலரடி தியானிக்கவும்
அங்கையினில் நெல்லியம் கனிஎனத் திருவருளை
அடையவும் கருணை நல்காய்
அருமறை புகழ்ந்ததிரு முருகசிவ சரவணத்து
ஆதியே அமரர் கோவே!

– ஸ்ரீமத்பாம்பன் ஸ்வாமிகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாழ்த்து

வாழ்கவே வாழ்க! என்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க! மல மறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க! மெய்ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க! மலமிலாதான் பாதமே. (குருமூர்த்தி)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே. (திருஞானசம்பந்தர்)

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
(கச்சியப்ப சிவாசார்யார்)

ஆறிரு தடந்தோள் வாழ்க, ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானை தன்அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீர் அடியா ரெல்லாம்.
(அருணகிரிநாதர்)

மழை வழங்குக, மன்னவன் ஓங்குக,
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக,
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே. (கோயிற்புராணம்)

வைய நீடுக மாமழை மன்னுக.
மெய் விரும்பிய அன்பர் விளங்குக.
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக.
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

வாழ்க சைவம்! திருச்சிற்றம்பலம்! வாழ்கசீரடியாரெல்லாம்!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீகுருப்யோ நம:

சென்னை சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாச்சார்யார்
தொகுத்து வெளிவந்துள்ள ஸமய நூல்களை
ஆஸ்திக அன்பர்கள் வாங்கிப் பயனடையவும்

வ.எண்	நூல்	பக்கம்-எழுத்து	மொழி	விலை
1.	உருவத்தில் இறைவன்	தமிழ்	தமிழ்	No Stock
2.	விபூதி மஹிமை	தமிழ்	தமிழ்	No Stock
3.	நவராத்திரி தேவியர் துதித்திரட்டு	தமிழ்	தமிழ்	No Stock
4.	புதுக்கோயில் சடங்கு ஐந்து	64-தமிழ்	தமிழ்	Rs.200/-
5.	சிவாகம கட்டுரைத் திரட்டு-1	122-தமிழ்	தமிழ்	Rs.300/-
6.	சிவாகம கட்டுரைத் திரட்டு-2	132-தமிழ்	தமிழ்	Rs.300/-
7.	காக்கும்காளியின் காருண்ய மஹிமை	தமிழ்	தமிழ்	No Stock
8.	சிவாகம கட்டுரைத்திரட்டு-3	தமிழ்	தமிழ்	Rs.300/-
9.	சிவாகம கட்டுரைத் திரட்டு-4	168-தமிழ்	தமிழ்	Rs.300/-
10.	சிவயோகநெறி (சைவாகமத்தில்)	116-தமிழ்	தமிழ்	No Stock
11.	ஆலயாகார அர்த்த விவரணம்	64-தமிழ்	தமிழ்	No Stock
12.	புஷ்பார்ச்சன விதி	124-தமிழ்	தமிழ்	Rs.300/-
13.	திவ்யாபிஷேக விதி	136-தமிழ்	தமிழ்	Rs.300/-
14.	ஹோமலக்ஷண ஸங்கிரஹம்	340-தமிழ்	தமிழ்	Rs.500/-
15.	சண்டீயாக விவேகம்	306-தமிழ்	தமிழ்	Rs.400/-
16.	திவ்ய ஸ்தவ கதம்பம் (கிரந்தம்)	180-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
17.	சிவாகம கட்டுரைத்திரட்டு-5	160-தமிழ்	தமிழ்	Rs.300/-
18.	நக்ஷத்ரசாந்தி விதானம்	124-தமிழ்	தமிழ்	Rs.550/-
19.	உத்ஸவபேத க்ரியாபோதம்	224-தமிழ்	தமிழ்	Rs.350/-
20.	நற்கூற்று மணிமாலை	352-தமிழ்	தமிழ்	Rs.400/-

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ.எண்	நூல்	பக்கம்–எழுத்து	மொழி	விலை
21.	சிவாகம சூக்தி மஞ்ஜரீ	224–தமிழ்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
22.	காளீபூஜாப்ரபாவம்	380–தமிழ்	தமிழ்	Rs.450/-
23.	பிரத்யங்கிரா ஹோமக்ரமம்	48–நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.250/-
24.	புவனேச்வரீ பூஜாகல்பம்	202–தமிழ்	தமிழ்	Rs.350/-
25.	சைவநிர்வசன வசனாமிருதம்	நாகரம்	சம்ஸ்க்ருதம்	No Stock
26.	சிவசக்தி ஸ்தோத்ரமாலா	320–நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.350/-
27.	பத்ரகாளீ தீபபூஜையும் துதிகளும்	124–தமிழ்	தமிழ்	Rs.200/-
28.	பிரத்யங்கிரா ஸபர்யா ஸர்வஸ்வம்	560–நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.600/-
29.	பிரத்யங்கிரா ஸஹஸ்ரநாமம்	150–நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
30.	சிவாகம கட்டுரைத்திரட்டு–6	108–தமிழ்	தமிழ்	Rs.300/-
31.	திவ்யஸ்தவகதம்பம்	180–நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
32.	கோயில்விழாக்களின் வாஹனஉலா	256–தமிழ்	தமிழ்	Rs.400/-
33.	தேர்பவனிப்பெருமை	176–தமிழ்	தமிழ்	Rs.300/-
34.	சிவகாமகட்டுரைத்திரட்டு–13	136–தமிழ்	தமிழ்	Rs.300/-
35.	சிவஸ்தோத்ர முக்தாவளீ	104–கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	No Stock
36.	ஆகமச்சான்றுப் பேழை	186–தமிழ்	தமிழ்	Rs.300/-
37.	சண்டீயாக ப்ரயோகம்	436–கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	Rs.600/-
38.	ஆகமக்கோயில் அமைப்பு முறை	576–தமிழ்	தமிழ்	Rs.750/-
39.	லக்ஷ்மீ ஆராதன சந்திரிகா	528–நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.800/-
40.	லிங்கஸ்தாபனம் & அஷ்டபந்தனம்	572–தமிழ்	தமிழ்	Rs.500/-
41.	பிரத்யங்கிரா ஹோமக்ரமம்	80–கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
42.	திரிகால ஸந்தியாவந்தனம்	கிரந்தம்–24	சம்ஸ்க்ருதம்	Rs.100/-
43.	சிவாகமகட்டுரைத்திரட்டு பாகம்–10	262–தமிழ்	தமிழ்	Rs.300/-
44.	சுப்ரமண்யபூஜா ப்ரயோகசந்த்ரிகா	400–கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	Rs.600/-
45.	சுப்ரமண்யபூஜா ப்ரயோகசந்த்ரிகா	400–நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.600/-
46.	குரு வழிபாட்டுப் பெருமை	176–தமிழ்	தமிழ்	Rs.300/-

யந்திர செப்புத் தகடுகள்

ஆலயதேவதா ப்ரதிஷ்டாயந்திர தகடு ஒன்று கிரந்த எழுத்தில் ரூ.1000/-

சைவ, வைணவக் கோயிலின் அறுசமயத் தெய்வச்சிலைகளுக்கான ஆகம பிரதிஷ்டைக்கான தகட்டு யந்திரங்கள், தாமிரத்தகட்டில் அளவு இஞ்ச் 3×3 அல்லது 5×5ல் ஆகம விதிமுறைப்படி எழுதியவை, உரிய மந்திரவகைகளுடன் கூடியவை உரியவைக்கு மட்டுமே கிடைக்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முருகன் திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே!
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே!
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே!
குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே!
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே!
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே!
ஆறுமுகம் ஆன பொருள் நீ! அருள வேண்டும்!
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குரு வழிபாட்டுப் பெருமை

நூல் தொகுப்பாசிரியர்

சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசாரியார்

சென்னை, மஹரிஷி வேதாகம பாடசாலையின் முன்னாள் ஆகம பண்டிதரும், மகாபலிபுரம் அரசினர் கோயில் கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியின் முன்னாள் ஆகமவிரிவுரையாளரும், கும்பாபிஷேகங்கள், ஆகமகருத்தரங்குகள், விசேஷயாகங்கள், பலவறை பலமுறை தலைமைஏறறு நிகழ்த்தியவரும், கனடாவில் இந்துக்கோயிலின் முன்னாள் தலைமை அர்ச்சகரும், பாடசாலைகளின் ஆண்டுத் தேர்வுகளில் பலமுறை பரிஷாதிகாரியாக பணியாற்றியவரும், சிவாகம வித்யா பீடத்தின் ஸ்தாபகரும், சமய போதகராக இருந்து பல மாணவர்களை உருவாக்கியவரும், சைவநெறி தழைக்கத் தொண்டாற்றி வருபவரும், சென்னை சிவாசாரியார் அறக்கட்டளையின் கௌரவ ஆலோசகரும், அதன் சைவாகம கலாச்சார வித்யா கேந்திரத்தின் குருமுதல்வரும், சென்னையில் 8 ஆண்டுகள் மாதந்தோறும் 96 சிவாகம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தியவரும், சமயம் சார்ந்த 40-க்கும் மேற்பட்ட விளக்க நூல்களை தொகுத்து வெளியிட்டவரும் ஆவார்.

₹ 300/-